கேரளப் பாடநூல்

# தமிழ்

**Kerala Reader**
**Tamil - Advanced Text**

வகுப்பு

**X**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2011

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

---

*Prepared by* :

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala

*Website* : www.scertkerala.gov.in
*e-mail* : scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax : 0471 - 2341869
First Edition : 2011
Typesetting : SCERT
Lay out : SCERT
Cover design : SCERT
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of Education, Government of Kerala

**அன்புள்ள மாணவர்களே,**

*மனிதகுலத்தின் மிகப் பெரிய கண்டுபிடிப்புகளில் ஒன்றுதான் மொழி. விரும்பிச் சேரவும் விலகிச் செல்லவும் சிந்திக்கவும் செயல்படுத்தவும் மொழி வேண்டும். நம்மோடு மொழியும் வளர்ந்துகொண்டிருக்கிறது. ஒரு சமூகத்தின் வாழ்விலும் தாழ்விலும் மொழிக்கும் முக்கிய பங்கு உண்டு.*

*உயர்கல்வி நிலையில் தாய்மொழிக் கல்வியின் தேவையை முழுமையாகக் கண்டறிந்தே மொழிப் பாடநூல்கள் உருவமைக்கப்பட்டுள்ளன. தமிழ் மொழியையும் இலக்கியங்களையும் அறிந்துகொள்ள இவை துணைபுரியும். தன்னுடைய ஆற்றலையும் உலக நன்மையையும் புரிந்துகொள்வதும், அவற்றைச் சமூகத்திற்கு உதவுமாறு பயன்படுத்திக்கொள்வதும் கல்வியின் நோக்கங்களாக அமையவேண்டும். தாய்மொழிக் கல்வி, பண்பாட்டின் அடித்தளத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும். அதன் வழியாக நமது பரம்பரையின் வேர்களைக் கண்டறியவும், வரலாற்றில் நமக்குரிய இடத்தைத் திட்டப்படுத்தவும் இயலும்.*

*மொழியின் தனித்தன்மையையும் வேறுபாடுகளையும் நூல்களிலிருந்து கண்டறியலாம். ஒவ்வொரு காலகட்டத்திலும் மொழியும் இலக்கியமும் கடந்துவந்த பாதையையும், வளர்ச்சியின் பன்முகப் பரிமாணங்களையும் சுட்டிக்காட்டும் படைப்புகள் பாடநூலில் உள்ளன. அன்றாட மொழிப் பயன்பாட்டிற்குத் தேவையான அடிப்படை இலக்கணக் கூறுகளைத் தெரிந்துகொள்ளவும் இப்பாடநூல் வழிவகுக்கின்றது. பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ள அருஞ்சொற்பொருளகராதி மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும்.*

*தேடல்களின் மூலமாக, கலந்துரையாடல்கள் வாயிலாக, வெளியீடுகள் வழியாக மொழிக் கல்வியைப் பயனுள்ளதாக்குங்கள்.*

*வாழ்த்துகளுடன்,*

**பேராசிரியர் எம்.ஏ.காதர்**

இயக்குநர்

எஸ்.சி.இ.ஆர்.டி

# Textbook Development Committee

## Tamil - X

***Advisor***

Dr. Rajaram. S, Professor (Rtd.), School of Indian Languages, Tamil University, Tanjore.

***Chairman***

Dr. Nainar. M, Reader(Rtd.), University College, Thiruvananthapuram.

***Members***

*Agnel Dominic. R, HSA, St. Paul's HS, Kozhinjampara, Palakkad.*

*Dominic Savio. J, HSA, St.Francis Xavier's HS, Parisakkal, Palakkad.*

*Dr. Gomathynayagam. P.G, Teacher (Rtd.), Chennai.*

*Jasmine. J, HSST, Govt. Tamil HSS, Chalai, Thiruvananthapuram.*

*Dr. Jeyakrishnan. P, Asst. Professor, Dept. of Tamil, University of Kerala, Karyavattom, Thiruvananthapuram.*

*Dr. Karthikeyan. A, Professor, Dept.of Tamil Studies in Foreign Countries, Tamil University, Tanjore.*

*Dr. Karunanidhi. M, HSST, Govt.Tamil HSS, Chalai, Thiruvananthapuram.*

*Dr. Kumar. S, HSST, Panchayat HSS, Vandiperiyar, Idukki.*

*Maria John Bosco. A, HSA, St. Paul's HS, Kozhinjampara, Palakkad.*

*Santhi. S, HSST, Panchayat HSS, Elappara, Idukki.*

*Senthil Kumar. B, HSA, Sreekrishna HS, Nallepilli, Palakkad.*

*Dr. Simon. C, Reader (Rtd.), Govt.Victoria College, Palakkad.*

*Singh. M.B, HSA (Rtd.), Govt.Tamil HSS, Chalai, Thiruvananthapuram.*

*Dr. Vijayalakshmi. T, Asst. Professor, Dept. of Tamil, University College Thiruvananthapuram.*

*Vijayan. A, HSST, Govt.Boy's, HSS, Chittur, Palakkad.*

*Vijila Rani. M, HSA, Panchayat HSS, Vandiperiyar, Idukki.*

***Artist***

Mohanan. J, Drawing Teacher, Govt. VHSS, Mancha, Nedumangad.

***Experts***

Dr. Retna Sabapathy. P, Professor (Rtd.), IASE, Chennai.
Dr. Veerappan. P, Prof.& Head, DESSH, RIE, Mysore.

***Academic Co-ordinator***

Dr. Sahaya Dhas. D, Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# உள்ளடக்கம்


பக்கம்

1. **இயற்கை போற்றுவோம்** ........ 7 - 25
   - இயற்கையின் வினோதங்கள் ........ 7
   - அழியும் சுவடுகள் ........ 16
   - பசுமை காப்போம் ........ 21

2. **அன்னை பூமி** ........ 26 - 39
   - நிலமென்னும் நல்லாள் ........ 26
   - உயிர்மண் ........ 30
   - வேண்டாம் வியாபாரம் ........ 34

3. **புதுமைப் பெண்** ........ 40 - 56
   - பெண்ணியம் என்றால் ........ 40
   - விடியலை நோக்கி .... ........ 48
   - பெண் எனும் இரண்டாம் இனம் ........ 52

4. **வெள்ளைப் புறா** ........ 57 - 70
   - தமிழர் மாண்பு ........ 57
   - தியாக பூமி ........ 60
   - அமைதிப் பூங்கா ........ 65

5. **உயரப் பறந்து** ........ 71 - 85
   - வெற்றிப் படிகள் ........ 71
   - எழுக, எழுகவே! ........ 79
   - விழித்திரு! விழித்தெழு! ........ 82

6. **மொழிமுகங்கள்** ........ 86 - 104
   - சொல்லோவியம் ........ 86
   - மொழியும் சமூகமும் ........ 92
   - மொழியின் எதிர்காலம் ........ 98

**அருஞ்சொற் பொருள்** ........ 105 - 108

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

பாகம் 4 அ

## இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலைமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக்கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதினான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

அலகு
1

# இயற்கை போற்றுவோம்

*கொடியநோய்களுக்குக் காரணமான குழுமப் பொருட்கள் (பிளாஸ்டிக்) எந்தத் தடையுமின்றி நாட்டில் பயன்படுத்தப்படுகின்றன. இவை மண்ணின் வளத்தையும் நீர்சேமிப்பு முறைகளையும் பாழடிக்கின்றன. நமது நாட்டைக் குப்பைக் கூடையாக நினைத்து வெளிநாட்டு நச்சுக் கழிவுகள் தங்குதடையின்றி இறக்குமதி செய்யப்படுவதால் நமது சுற்றுச்சூழலும் ஆரோக்கியமும் பாதிக்கப்படுகின்றன.*

## இயற்கையின் வினோதங்கள்

### மவுனம் சுமக்கும் பறவைகள்

குடைகள் போல் நிழல்
பரிமாறிக் கொண்டிருந்த
பெரு மரங்களையெல்லாம்
நான்கு வழிப் பயணத்துக்காக,
பிடுங்கியெறிந்து
பறவைகளையும் பசுமையையும்
விரட்டி அடித்தாயிற்று.

நீள அகலங்களை
அளவு நாடாக்களில் அளந்தும்
தொன்மக் குடிகளின் மீது
அம்புக் குறிகளிட்டும்
அப்பாவி மக்களை
அப்புறப்படுத்தியாயிற்று.

பச்சை வயல்களில்
கட்டிடங்களை விளைவித்துக்கொள்ள
குளிர்சாதன அறைகளில்
தலைவர்களிடையே
கையொப்பங்கள் பரிமாறியாயிற்று.

பூர்வீகத்தைத் தொலைத்த
மண்ணின் மைந்தர்களை
உளைச்சல் மிகுந்த உள்ளத்தோடு
நகர்ப்புறங்களில்
அகதிகளாக்கியாயிற்று.

மரங்களை இழந்த பறவைகளும்
தங்களது மொழியினை மறந்தபடி
பறந்து கொண்டிருக்கின்றது
மவுனத்தைச் சுமந்தபடி

– கதிர்மதி

- *"மரங்களை இழந்த பறவைகளும் தங்களது மொழியினை மறந்தபடி பறந்து கொண்டிருக்கின்றன. மவுனத்தைச் சுமந்தபடி" என ஆசிரியர் ஆதங்கப்படுவதற்கான காரணங்களைக் கலந்துரையாடி நகரமயமாதலின் விளைவுகள் பற்றிக் குறிப்பு தயார் செய்க.*

### முன்னை இட்ட தீ

யாரைக் கேட்டாலும் அக்கறையோடு வழி சொன்னார்கள். ஆகவே, கிராமத்திருந்து வந்திருந்த அந்த இரண்டு இளைஞர்களுக்கும் ஊர் எல்லையைத் தாண்டி ஓர் ஒதுக்குப்புறமான

பகுதியில் இருந்த அவருடைய வீட்டைப் பதற்றமில்லாமல் சுலபமாகக் கண்டுபிடிக்க முடிந்தது.

அதை வீடு என்று சொல்ல முடியாது. ஆசிரமம் மாதிரி பெரிய… அழகான குடிசை.

இளைஞர்கள் தயங்கியவாறு உள்ளே நுழைந்தார்கள். "ஐயா…" என்று லேசாகக் குரலெழுப்பியது கேட்டுச் சத்தியமூர்த்தி வெளியே வந்தார்.

இளைஞர்கள் கை குவித்தனர். "வயலூர் பக்கத்லேருந்து வரோமுங்க…" என்றான் ஓர் இளைஞன். "உக்காருங்க… ஒரு நிமிஷம்…" என்று உள்ளே போனார் சத்தியமூர்த்தி.

வேப்பமரத்துக்குக் கீழே போட்டிருந்த கயிற்றுக் கட்டில் அமர்ந்தார்கள். உள்ளேயிருந்து துறுதுறுவென்று பதினெட்டு வயது இளைஞன் ஒருவன் பிரம்பு நாற்காயைக் கொண்டு வந்து போட்டான். சத்தியமூர்த்தி வந்து அமர்ந்தார்.

"நாங்க வயலூர் பக்கத்துலே தொறவனூர் கிராமம். சுபாஷ் இளைஞர் மன்றம்… இப்ப எங்களுக்கும், பக்கத்துலே இருவது கிராமங்களுக்கும் ஒரு பெரிய பிரச்சனை… எங்க ஊரு பக்கத்திலே பெரிய சாயத்தொழிற்சாலை ஒண்ணு கட்ட ஏற்பாடு நடக்குது…. அவங்களுக்கு அரசாங்கமும் புறம்போக்கு நிலம் ஒதுக்கியிருக்குங்க…. யாரோ ஒரு மந்திரியோட மச்சான்தான் கம்பெனி முதலாளி. பெரிய ஃபாக்டரி…. கட்டிடமெல்லாம் கட்ட இடமெல்லாம் அளக்கத் தொடங்கிட்டாங்க…. பிரச்னை என்னன்னா, எங்க கிராமத்தை ஒட்டி ஓர் ஆறு ஓடுதுங்க…. இந்தச் சாயத் தொழிற்சாலைக் கழிவு நீரை அந்த ஆற்றில்தான் விடப்போறாங்க…. யாரையும் போய்ப் பார்த்துச் சொல்லக்கூட முடியலை. ஒரு முறை ஊர்ப் பெரியவங்க எப்படியோ முரண்டு பிடிச்சு ஃபாக்டரி ஆபீஸருங்க சிலரைப் பார்த்து ஆட்சேபனை தெரிவித்தாங்க. பார்க்கப்போன பெரியவங்களை மரியாதையாக் கூட நடத்தலை! அந்த ஆறு ஒண்ணுதான் எங்க எல்லாக் கிராமத்துக்கும்…. குடிக்கத் தண்ணியில்லாம, பாசனம் பண்ண முடியாம…. பெரிய பிரச்னையாவுதுங்க…. நீங்க வரணும் ஐயா…. ஜனங்க எங்களை நம்பிக்கையோட அனுப்பிச்சிருக்காங்க!."

"எவ்வளவு கிராமங்களுக்குப் பாதிப்பு ஏற்படும்?" சத்தியமூர்த்தி கேட்டார்.

"சுமார் இருபது கிராமம் ரொம்ப மோசமாயிட்டுங்க… நாங்கள் எல்லோரும் நகர்வலம் போகத் தயார்… போராட்டம், உண்ணாவிரதம் எதுக்கும் தயார்…. ஆனால், எல்லாம் கட்டுக்கோப்பா நடக்கணும்… எடுத்த காரியத்துலே ஜெயிக்கணும்…. அதுக்கு நீங்க வந்து எங்களை வழி நடத்தணும்!"

"புகார் ஏதாச்சும் பண்ணீங்களா?" – கேட்டார்.

ஓர் இளைஞன் தான் கொண்டு வந்திருந்த அழுக்குப் பையிருந்து காகிதக் கட்டுகளை எடுத்தான்.

"ஜனாதிபதி வரைக்கும் புகார் கொடுத்தாச்சு. நம்ம அண்ணா ஆரம்பப் பள்ளி வாத்தியாரு அசராமப் புகார் எழுதித் தருவாரு…. விடிமோட்சம் எதுவும் இல்லீங்க…. இதோ படித்துப் பாருங்க…"

"போகும்போது பஸ்ஸில் படிக்கிறேன்…. சரி. நீங்க சாப்பிட்டாச்சா?"

"டவுன்லே சாப்பிட்டுத்தான் வரோமுங்க ஐயா…."

"அப்ப இங்கேயே சின்னத்தூக்கம் போடுங்க…. ராத்திரி பஸ்லேயே கிளம்பிடலாம்." என்றார் சத்தியமூர்த்தி.


மறுநாள் காலை கிராமத்தை அடைந்தவுடனேயே சத்தியமூர்த்திக்கு நம்பிக்கை வந்துவிட்டது. இளைஞர் மன்றத்தினர் சொன்னது சரிதான். கூட்டம் அலையாகக் கூடியிருந்தது. சத்தியமூர்த்தியுடன் இளைஞர்கள் எல்லையில் நுழைந்தவுடனே கிராமம் பரபரத்தது.

"வந்துட்டாங்க…." என்று குரலெழுப்பிக் கொண்டு நிஜாரைக் கீழே விழாமல் கையில் பிடித்தவாறு சிறுவர்கள் ஓடினார்கள். ஊர்ப்பெரியவர்கள் வந்து வணங்கினார்கள். "ஜீவா சவுண்ட் சர்வீஸ்" ஆள் மைக் முன் வந்து "ஹலோ…. ஹலோ…. ஒன்…. டூ…. த்ரீ …." சொன்னான். மைக் கிறீச்சிட்டது. மக்கள் பிறைச்சந்திரன் போல அவரைச் சூழ்ந்துகொள்ள, சத்தியமூர்த்தி உடனேயே பேச ஆரம்பித்தார்.

"பொதுமக்களே! நீங்கள் இத்தனை பேர் இங்கு கூடியிருப்பதே எனக்கு மகிழ்ச்சியைத்

தருகிறது. ஆலைக்கழிவுகளைப் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் நீங்கள் சிந்திக் கத்தொடங்கியிருப்பது நல்ல எதிர்காலத்தின் அடையாளம். இங்கே சாயப்பட்டறை கழிவு நீரைப் பற்றிய உங்கள் அச்சம் நியாயமானது தான். வயல் சூழ்ந்த இந்த ஊரில் இந்தக் கழிவு நீரை அனுமதித்தால் அதன் பின்னர் என்ன முயன்றாலும் விவசாயம் செய்ய முடியாது. அதுமட்டுமல்ல.... உங்கள் உடல்நலமும் அடியோடு கெட்டுப்போகும்".

"நாட்டுக்குத் தொழில் வளம் முக்கியம் தான். ஆனால், அந்தத் தொழில்களை எங்குத் தொடங்குவது என்பதுதான் பிரச்சினை. வளமான இந்த நஞ்சை பூமியில்தான் ஆரம் பிக்க வேண்டுமா? இப்படி 'புத்திசாத்தனத் தோடு' ஆரம்பித்துத்தான் தமிழ்நாட்டில் ஆம் பூர், வாணியம்பாடி, வேலூர், திருப்பூர், ஈரோடு பகுதிகளில் கிணறுகள் முழுவதும் கெட்டுப் போய்க் கிடக்கின்றன. இந்தப் பகுதியும் அது போல் மாற நாம் அனுமதிக்கக் கூடாது...."



அதற்குள் ஒரு பெரியவர் குறுக்கிட்டார். "சாமி! குடும்பத்தில் ஒரு ஆளுக்கு வேலை தர்றதா சொல்றாங்க. அதுபோக போனஸூம் கிடைக்குமாம்...."

"அட.... சும்மா இருங்க தாத்தா!" – சில இளைஞர்கள் அடக்கினார்கள்.

"இல்லை.... பெரியவர் சொல்றதும் ஒரு விதத்துல சரிதான். உடனே வேலை கிடைக் கும்தான்.... ஆனா, நீங்க சுவாசிக்கிற இந்த நல்ல காத்தை உங்க சந்ததியும் சுவாசிக்கணும். நீங்க குடிக்கிற நல்ல தண்ணீரைப் பேரன், பேத்திங்க எல்லாம் குடிக்கணும். வேலைக்கும் போனஸூக்கும் ஆசைப்பட்டா, மூச்சு விடக்கூட நல்ல காத்தில்லாம கஷ்டப்படுவீங்க..."

"வாத்தியார் ஏதோ கேட்கணுமாம்...." சிறு வர்கள் குரலெழுப்பினார்கள்.

ராஜு வாத்தியார் முன்னே வந்தார்.

"ஐயா.... உங்களைப் பத்தி நான் பேப் பர்லே படிச்சிருக்கேன். நீங்க வந்தவுடனே 'விடிஞ்சாச்சு' ங்கற அளவுக்கு எங்களுக்கு நம் பிக்கை வந்திடுச்சு. ஆனா, ஒரு விஷயம்.... தொழிற்சாலை முதலாளிங்க அரசியல் பலம் படைச்சவங்க. செக்யூரிட்டி, ஜீப், அடியாளுங்க.... எல்லாம் வெச்சிருக்காங்க. நாங்கள்லாம் அப்பா விங்க.... அடிதடின்னு வந்துட்டா என்ன செய்யறதுன்னு பயமா இருக்கு.... கலவரமாயி டக்கூடாதுன்னு தாய்மாருங்க கவலைப் படறாங்க...."

சத்தியமூர்த்தி தலையை உயர்த்திச் சொன்னார்.

"நியாயமான கவலைதான்.... ஆனா, அனுபவப்பட்டவன்கிற முறையில சொல்றேன்.... இதைவிட மோசமான பிரச்சினைகளை நான் தனியா சந்திச்சிருக்கேன்.... நாலு பேரு சேர்ந்து குரல் கொடுத்தா ஓடிப் போறவங்க அவங்க.... இத்தனை பேரை எதிர்த்து நிப்பாங்கன்னா பயப் படறீங்க? உங்க சக்தி உங்களுக்கே முழுசா தெரியாது. நீங்க ஒண்ணா குரலெழுப்பினா கோட்டைச் சுவருங்களே பொலபொலன்னு விழுந்துடும். இதை நீங்க முதல்ல தெரிஞ்சுக் கணும். சரி, நாம் உடனே கிளம்பலாம். நான் முன்னாலே போறேன்.... எனக்குப் பத்தடி பின்னாலே நீங்க வாங்க.... என் உடலைத் தாண் டிதான் உங்களை யாரும் நெருங்க முடியும், கவ லைப்படாதீங்க.. என்னை நெருங்க அவங்க ரொம்ப யோசிப்பாங்க!"

பல கிராமங்களிருந்து வந்து குழுமி யிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் உற்சாகமாய் எழுப்பிய கரவொ, ஒரு ராட்சஸ அலை கரை யில் மோதியதைப்போல் எழுந்து அடங்கியது.

சத்தியமூர்த்தியைப் பொறுத்தமட்டில்

ஒரு சராசரி மனிதனுக்கு இருக்க வேண்டிய கொஞ்சநஞ்ச பயம்கூடப் பறந்து போய், அசாத் திய துணிச்சல் பிறந்ததே ஒரு கதை!

பல நாள் கனவான அந்த அரசாங்க வேலை கிடைத்ததும் சத்தியமூர்த்தி மிக மிக மகிழ்ந்து போனான். அவன் வாழ்வின் குறிக் கோளல்லவா அது. தமிழ்நாட்டின் ஆறுகள் அனைத்தையும் மாசில்லாமல் பாதுகாக்க வேண்டியது அவனது கடமை. எந்த ஆலைக ளெல்லாம் கழிவு நீரை ஆற்றில் விடுகின் றனவோ அவற்றையெல்லாம் கண்காணிக்க வேண்டியது அவன் பொறுப்பு.

இப்படித்தான் ஒரு நாள் அந்தப் பெரும் ரசாயனத் தொழிற்சாலைக்கு அவனும், உதவி யாளர் ஜோசப்பும் சென்றார்கள். பி.ஆர்.ஓ-வை முதல் பார்த்தார்கள்.

"உங்க ஈடீபி... அதான் எஃப்ளுயண்ட் ட்ரீட்மெண்ட் பிளாண்ட்டைப் பார்க்கணும்".

"சார், ஈடீபி இன்ஜினியர் வெளியே போயி ருக்கார். கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. வாங்க. கெஸ்ட் ஹவுஸுக்கு போகலாம். காபி சாப் பிட்டுட்டு பேப்பர் படிங்க.... அதற்குள்ளே வந் திடுவார்....".

"காபியெல்லாம் வேண்டாம்.... ஈடீபி இன் ஜினியர் இல்லேன்னா, சீஃப் கெமிஸ்ட்டை வரச் சொல்லுங்க".

"கான்ஃபரன்ஸுக்கு அவர் டெல்க்கு போயிருக்கார்...."

"சரி! வேற யாராவது இது சம்பந்தமா கவனிக்கிறவங்களைக் கூப்பிடுங்க".

"சார்! நீங்க இன்னும் ரெண்டு நாள் பொறுத்து வந்தீங்கன்னா சௌகரியமா இருக்கும்...."

"இதப் பாருங்க மிஸ்டர் பி.ஆர்.ஓ. உங் கிட்ட அட்வைஸ் கேக்க நான் வரலை. உங்க ஜி.எம்-முக்கு போன் பண்ணுங்க நான் பேசிக் கிறேன்...."

"ஸாரி சார். கோபப்படாதீங்க.... க்வா ட்டி கண்ட்ரோல் லேப்ல ஒருத்தர் இருப்பாரு. அவரை அழைச்சுட்டு ஈடீபி போயிடலாம்....'

சத்தியமூர்த்தியைச் சுத்திகரிப்பு பிளாண்ட் ரூமுக்கு அனுப்பியவுடன் ஜி.எம்-மைப் பார்க்க ஓடினார் பி.ஆர்.ஓ.

"என்னய்யா.... இப்படி அரக்கப் பரக்க வர்றே"?

"சார், பொல்யூஷன் கண்ட்ரோல் இன்ஸ் பெக்டர் சத்தியமூர்த்தி இன்னிக்கு கழிவுநீர் சாம்பிள் எடுக்க வந்திருக்கான் சார்?"

"ஏன்யா, சாமர்த்தியமா பேசி அந்த ஆளை உன்னால மடக்க முடியலை... உனக் கெல்லாம் ஒரு பி.ஆர்.ஓ. போஸ்ட்..."

"ஸாரி சார். இவன் ரொம்ப கண்டிப்பா இருக்கான். எதுக்கும் வளைஞ்சு கொடுக்க மாட் டேங்கிறான்".

"என்னய்யா பெரிய கண்டிப்பு... இப்ப தானே இவன் சர்வீஸுக்கு வந்திருக்கான். கவர்ன்மெண்ட் சர்வீஸுக்கு வர்றவனெல்லாம் ஆரம்பத்துல இப்படித்தான் இருப்பான். போகப் போக லஞ்சமில்லாம அவனால காலம் தள்ள முடியாது. போ மேன்.... எங்கிட்ட சமாளிக்கி றதுக்குப் பதிலா, அவன் வீட்டுல போய்ப் பேசி அவனைச் சரிக்கட்ட முடியுமான்னு பார். வேணுங்கற கேஷ் நம்ம அக்கௌண்டண்ட் கிட்ட வாங்கிக்க".

"ட்ரை பண்றேன் சார்...." தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு பி.ஆர்.ஓ வெளியே போக, ஈடீபி இன்ஜினியர் உள்ளே வரச் சரியாக இருந்தது. அவர் முகத்தில் வியர்வை கொட்டிக் கொண்டிருந்தது.

"எக்ஸ்கியூஸ் மீ சார்.... அந்த சத்திய மூர்த்தி...."

"என்னய்யா, அவனோட ஒரே சோத னையா போச்சு. அவனுக்கு என்ன வேணும்? எஃப்ளுயண்ட் வேணும்னா எடுத்துட்டுப் போகச் சொல்லு. இங்கே வந்து என்னை ஏன் அறுக்கறீங்க"?

"இல்லை சார்? இந்தத் தடவை கடுமை யான நடவடிக்கை எடுப்பாங்க போலத் தோணுது".

''ஏன்யா, அவன் வந்து தொலைக் கிறதுக்கு முன்னாடியே பிளாண்ட் ஆபரேட் பண்ண வேண்டியதுதானே...."?

'சர்ப்ரைஸ் 'செக்'னு சொல்த் திடீர்னு வந்து நிக்கறான் சார். எந்த மெஷினும் ஓடலை.

எஃப்ளுயண்ட் சுத்தம் செய்யாம அப்படியே ஆத்துல இறங்குது, நீங்கதான் சார் அவனை டேக்கிள் பண்ணணும்...."

சத்தியமூர்த்தியைத் தன் அறைக்கு அழைத்து ஜி.எம். வய ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டு பேசினார்.

''என்ன மிஸ்டர் சத்தியமூர்த்தி, எஃப்ளுயண்ட் சாம்பிள் எடுக்கணும்னு சொன்னீங்களாமே....?"

''சாம்பிள் எடுத்தாச்சு, நாங்க கிளம்புறோம்''... என்ற சத்தியமூர்த்தி தொடர்ந்து, "மிஸ்டர்" ஜி.எம்., உங்க ஃபாக்டரி மேல் ஏகப்பட்ட புகார் வந்திருக்கு, எங்க டிபார்ட்மெண்ட்லேருந்தும் எவ்வளவோ தரம் நோட்டீஸ் அனுப்பியிருக்கோம். நீங்க கொஞ்சம் கூட கேர் பண்ணலே. இப்பகூட நான் வந்து பார்க்கும் போது, உங்க ட்ரீட்மெண்ட் பிளாண்ட் ஓடலே... கழிவுநீர் அப்படியே போய் ஆத்துல கலக்குது..." என்றான்.

"இதப் பாருங்க மிஸ்டர் சத்தியமூர்த்தி! உங்க ஆங்கிள்லே நீங்க சொல்றது சரியா இருக்கலாம். ஆனா, தொழிற்சாலையோட பொருளாதாரக் கண்ணோட்டத்திலும் நீங்க இதைப் பார்க்கணும். இந்தச் சுத்திகரிப்பு பிளாண்ட் ஆசியாவிலேயே ரொம்பப் பெரியது. ஒரு நாளைக்கு இதை ஓட்ட எலெக்ட்ரிசிட்டி சார்ஜ் மட்டும் பத்தாயிரம் ரூபாய் ஆகும். இதுபோக, சுத்தம் செய்ய கெமிக்கல்ஸ், ஆளு, தேளு, மெயிண்டெனன்ஸ்னு ரெண்டாயிரத்துக்கு மேலே போகுது. இப்படி மாசத்துக்குப் பல லட்சம் ரூபாயை இதுக்காகவே செலவு செய்ய வேண்டியிருக்கு. ஆனா, ஒரு பைசா இதுலே திரும்பி வரப்போறதில்லை, அதனாலதான்...."

''அதுக்காக தினசரி உங்க ஃபாக்டரில வெளிவர்ற பல லட்சம் ட்டர் கழிவுநீரைச் சுத்தம் செய்யாமலே ஆத்துலதான் கலக்கறதா? உங்க ஃபாக்டரியை அடுத்து இருக்கும் கிராம ஜனங்க குடிக்கிறதுக்கு இந்தத் தண்ணியைத்தான் பயன்படுத்தறாங்க. கழிவு நீர்ல இருக்கிற அத்தனை கெமிக்கலும் அவங்க உடம்பில்தான் போய்ச் சேருது. அவங்க நோய் நொடி இல்லாம வாழணும்னா, நீங்க உங்க கழிவுநீரை என்ன செலவு ஆனாலும் சுத்தம் செய்துதான் ஆகணும்!".

"நீங்க சொல்றதுலே நியாயம் இருக்கலாம். இவ்வளவு பிரம்மாண்டமா ஓடக்கூடிய இந்த ஆத்து தண்ணியை எங்க ஃபாக்டரி கழிவுத் தண்ணீர் பாதிச்சுடாது..."

''நீங்க குடிக்கக்கூடிய ஒரு டம்ளர் தண்ணில, ஒரே ஒரு சொட்டு உங்க கழிவுநீரைக் கலந்து தர்றேன். நீங்க குடிச்சிடுவீங்களா"?

"இதப்பாருங்க... உங்களோடு ஆர்க்யூ பண்ண எனக்கு நேரமில்லை. இப்ப என்ன செய்யணும்னு சொல்றீங்க"?

''சுத்திகரிப்பு மெஷினெல்லாம் ஆபரேட் பண்ணி, கழிவு நீரைச் சுத்தம் பண்ணி வெளியே அனுப்புங்க. இப்ப எடுத்திருக்கிற சாம்பிள் டெஸ்டுக்குப் போகுது. டெஸ்ட் ரிசல்ட் வந்ததும் என்ன நடவடிக்கை எடுக்கணுமோ, அதை கவர்ன்மெண்ட் எடுக்கும்...."

"சும்மா மிரட்டாதீங்க மிஸ்டர். உங்களால என்ன செய்ய முடியுமோ அதைச் செஞ்சுக்குங்க.. ஆனா, ஒண்ணு ஞாபகத்துல வெச்சுக்குங்க. இதனால பாதிக்கப்படப் போறது நீங்கதான். பர்சனலா உங்களுக்குத்தான் லாஸ். உங்க டிபார்ட்மெண்ட் மினிஸ்டர் எங்க பாக்கெட்டுல... அதை ஞாபகம் வெச்சுக்கிட்டு என்ன செய்யணுமோ அதைச் செய்யுங்க..."

சத்தியமூர்த்தி செய்ய வேண்டியதைச் செய்தான். அது ஜி.எம். சற்றுகூட எதிர்பார்க்காதது. ஃபாக்டரிமேல், கோர்ட்டில் வழக்குப் பதிவாயிற்று... எம்.டி-யிடம் விசாரணை.... அப்புறம் தீர்ப்பு....

நீதிபதி தனது தீர்ப்பை வாசித்தார்.

நான் தீர்ப்பு கூறப்போகும் இந்த வழக்கு, எனது வாழ்வில் நான் சந்திக்கும் வித்தியாசமான வழக்கு. இந்த ஆற்றுத் தண்ணீரைக் குடிநீராகப் பயன்படுத்தும் அத்தனை மக்களும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே குற்றவாளியான ஆலை அதிபர் ராஜகோபாலுக்கு நூறு ரூபாய் அபராதம் விதிப்பதோடு அடுத்த முறை இவ்வாறு தவறு நிகழக்கூடாது என்றும் கடுமையாக எச்சரிக்கிறேன். இந்த நூறு ரூபாய் அபராதம் என்பது அவருக்கு மிக அற்பத்தொகைதான். இந்த நூறு ரூபாய் அபராதம் என்பது தண்டனையல்ல. தண்டனையின் அடையாளம். இந்த அபராதமும் வழக்கின் முடிவும் ராஜகோ

பாலுக்கு மட்டுமல்ல... சாக்கடை நீரைச் சுத்தி கரிக்காமல் அப்படியே ஆற்றில் விடும் எல்லா மாநகராட்சிகளுக்கும், நகர மன்றங்களுக்கும் பொருந்தும்....

எம்.டி. ராஜகோபாலன், ஜி.எம்-மைப் பார்த்துக் கத்தினார். "என் வாழ்நாள்ல இதுவரை ஒருமுறை கூட கோர்ட்டுக்குப் போனதில்லை... கேவலம், இந்தச் சின்னப் பையன் என்னைக் கூண்டுல நிக்க வெச்சுட்டானே... வயிறு பத்தி எரியுதய்யா..."

"இந்த சத்தியமூர்த்தி இருக்கும் வரை நமக்குத் தொல்லைதான்.... அவனைத் தொலைச் சுக்கட்ட நீங்கதான் ஏற்பாடு பண்ணணும் சார்..."

''சரி.... சரி.... அந்த டிபார்ட்மெண்ட் மினிஸ்டர் நம்ம ஆளுதான்.... நான் ஃபாரின் போயிட்டு வந்ததும் அந்த வேலையைச் செஞ் சிடறேன்....."

கோர்ட் தீர்ப்புக்குப் பின் ஜி.எம். மிகச் சுறுசுறுப்பாகக் காரியத்தில் இறங்கினார். சுத்தி கரிப்பு இயந்திரங்களை இருபத்து நாலு மணி நேரமும் ஓட்டும்படி இன்ஜினீயருக்கு ஆணை பிறப்பித்தார். சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் பளிங்கு மாதிரி இருந்தது. ஆற்றின் கரைப் பகுதியில் எக்ஸ்ட்ராவாக மூன்று செக்யூரிட்டி களை நியமித்தார். கழிவு நீரை சாம்பிள் எடுக்க யார் வந்தாலும் உடனுக்குடன் தனக்குத் தெரி விக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அவர் நினைத்தது வீண் போகவில்லை. சத்தியமூர்த்தி அந்தப் பகுதிக்கு வருவதே இல்லை என செக்யூரிட்டிகளிடமிருந்து அவருக்குச் செய்தி கிடைத்தது.

"ஒரு மாசமா ஈடீபி ஓடுதே.... சுமார் எவ் வளவு செலவாகியிருக்கும்?" - இன்ஜினீயரிடம் விவரம் கேட்டார் ஜி.எம்.

''கிட்டத்தட்ட நாலு லட்சம் ஆகியி ருக்கும் சார்...."

"இது தாங்காதப்பா.... இனி ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஈடீபி ஓட்டினா போதும்.... இனிமே சத்தியமூர்த்தி இந்தப் பக்கமே வரமாட் டான் பாரு...."

"சரி சார்...."

சிலருக்கு நாக்கில் சனி இருக்கிறது என்பது உண்மைதான் போலும். சொல் வைத் தாற்போல் ஈடீபி ஓடாத ஒரு நாள் சத்தியமூர்த்தி சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷனுக்கு வந்துவிட்டான். செக்யூரிட்டி மூலம் தகவல் வந்ததும் ஜி.எம்-க்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. அவசரமாகத் தன் அறையைவிட்டு மெயின் கேட்டுக்கே வந்தார். சத்தியமூர்த்தி ஜீப்பிருந்து இறங்கி நின்று கொண்டிருந்தான்.

''சர்ப்ரைஸ் விசிட்னு சொல்கிட்டு நீங்க அடிக்கடி இங்கே வர்றது சரியில்லே மிஸ்டர் சத்தியமூர்த்தி...."

"மன்னிக்கணும் மிஸ்டர் ஜி.எம்! நாங்க எந்தத் தொந்தரவும் உங்களுக்குக் கொடுக்கப் போறதில்லே... ஈடீபி வொர்க் பண்ணுதான்னு பார்க்க போறோம். ஆத்துல நீங்க விடப்போற கழிவு நீரை சாம்பிள் எடுத்திட்டு போகப் போறோம். இது எங்க கடமை".

''ஸாரி மிஸ்டர்! நெனச்ச நேரத்துல நெனச்சபடி நான் யாரையும் அனுமதிக்க முடியாது. செக்யூரிட்டி, கேட்டை மூடுப்பா".

அடுத்த நிமிடம் அந்த ஆலையின் கத வுகள் மூடிக் கொண்டன. ஆனால், சத்திய மூர்த்தி கோபமாகப் பேசுவது மட்டும் கேட்டின் மறுபுறம் நின்றிருந்த ஜி.எம்- க்குத் தெளிவாகக் கேட்டது.

"இந்தா கருப்புசாமி, வண்டியை எடு... வலதுபக்கமா போய் ஆத்து ஓரத்துல வண் டியை நிறுத்திக்க... நானும் ஜோசப்பும் பரிசல்ல போய் சாம்பிள் எடுத்துட்டு வந்திடறோம்".

ஜி.எம். சும்மா இருப்பாரா? உடனே, எல்லா செக்யூரிட்டிகளுக்கும் தகவல் பறந்தது. "அவனை சாம்பிள் எடுத்துக்கிட்டுப் போகாம தடுக்க வேண்டியது உங்க பொறுப்பு.... ஏதாச்சும் தகராறு செஞ்சா லேசா தட்டி வையுங்க...."

ஆற்றங்கரை மண்ணில் அரை கிலோ மீட்டர் நடந்து சென்ற பிறகு ஒரு பரிசல் பிடித்து ஃபாக்டரியின் கழிவுநீர் கொட்டும் குழாயை அடைந்து சத்தியமூர்த்தியும் ஜோசப்பும் தேவை யான கழிவுநீர் சாம்பிள்களை எடுத்துக்கொண்டு திரும்பினர்.

அதற்குள் பக்கத்தில் குரல் கேட்டது. மூன்று பேர் அரிவாளோடு நின்று கொண்டி ருந்தனர்.

"டேய்.... மரியாதையா எல்லாத்தையும்

கொட்டிட்டுத் திரும்பிப்போ. இல்லேன்னா உயிரோட திரும்பமாட்டே!"

"இந்த மிரட்டலுக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்...."

அவ்வளவுதான்... அவன் மீது பாய்ந்தார்கள்.... சத்தியமூர்த்தியின் உடல் அரிவாள்கள் புதைந்தபோது வ தாங்காமல் ஓ வென அலறினான். தூரத்தில் சிறு சலசலப்பு.... கிராமத்து மக்கள் ஓடிவரும் காலடியோசை.... மறுகணம் அந்த மூவரும் புதர் தாண்டிக் குதித்து ஓடிப்போனார்கள். கண்கள் இருண்டு மயங்கிக் கரையோரத்தில் சாய்ந்த அந்த இளம் ஆபீஸரை ஓடிவந்த ஊர் ஜனங்கள் ஐயோ என்று குரல் கொடுத்தவாறு தாங்கிப் பிடித்துத் தூக்கினார்கள்.

சத்தியமூர்த்தி ஓரளவு குணமடைந்து நடமாட ஆரம்பிக்க, ஆறு மாதங்களானது. பெரிய ஆஸ்பத்திரியில் படுத்துக்கொண்டிருக்கும்போதும் அசராமல் அன்று எடுத்த கழிவுநீர் சாம்பிளைப் பரிசோதனைக்கு அனுப்பி, அந்த தொழிற்சாலைக்குத் தற்காகமாக சீல் வைக்கச் செய்தான். வன்முறையில் இறங்கிய அந்தக் கூட்டத்துக்கு – அதை இயக்கிய ஜி.எம் உட்பட – சிறைத்தண்டனை கிடைத்தது. ஒரு வழியாகச் சத்தியமூர்த்தி உயிர்பிழைத்துக் குணமானதும், வாலண்டரி ரிட்டையர்மெண்ட் பெற்று முழு நேர சமூக சேவையில் இறங்கியதும், குறிப்பாகச் சுற்றுப்புறச் சூழல் அக்கறை எடுத்துக் கொண்டு பல போராட்டங்களில், செமினார்களில் கலந்துகொண்டு உலக ரீதியில் விருதுகள் வாங்கியதும் கடந்த இருபது வருடக்கதை.

கிராமவாசிகள் அன்புடன் தந்த ஒரு டம்ளர் நீர்மோரை அருந்தினார் சத்தியமூர்த்தி. பல இளைஞர்கள், ஊர்வலத்தில் ஏந்திச் செல்லத் தட்டிகள் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். "கொல்லாதே, கொல்லாதே, அப்பாவி மக்களைக் கொல்லாதே...." என்பது போன்ற கோஷங்களைத் தட்டிகளில் கறுப்பு பெயிண்டால் சிலர் எழுதிக் கொண்டிருந்தார்கள்.

சத்தியமூர்த்தி வானத்தை ஒருமுறை அண்ணாந்து பார்த்தார். "போகலாம். வாங்க!" என்று மட்டும் சொல்விட்டு வேகமாகக் கிளம்பினார். கூட்டம் ஜிவ்வென்று கிளம்பிய புழுதி மண்டலம். அந்தப் பேரணி கிளம்பிவிட்டது என்பதைக் கம்பீரமாக உறுதிப்படுத்தியது.

"சார்...." என்று தயக்கத்துடன் ஒரு பிஞ்சுக் குரல் கேட்டு சத்தியமூர்த்தி நின்றார். அவர் அருகில் எட்டு வயதுச் சிறுவன் ஒருவன். அவன் கையில் ஒரு தட்டி.

சிறுவன் கூச்சமாக, "சார்.... நான் கிளாஸ்ல டிராயிங்லே ஃபர்ஸ்ட். எங்க டிராயிங் டீச்சரோட உட்கார்ந்து, உங்களுக்காகவே கலர் கலரா எழுதினேன்... நீங்க இதை கையிலே தூக்கிக்கிட்டு வருவீங்களா...." என்றான்.

ஒரு விநாடி சத்தியமூர்த்தி ஆணியடித்தாற்போல் அங்கு நின்றார். பிறகு மண்டியிட்டு உட்கார்ந்து அந்தச் சிறுவனை ஆதரவோடு பார்த்து "ரொம்ப ஜோரா இருக்கு!" என்றார்.

தட்டியை நீட்டி, ''பிடிங்க கையிலே!'' என்றான் சிறுவன் பெருமையுடன்.

"கையிலேயா....? முடியாது.... அது மட்டும் நான் செய்ய முடியாது...."

இதற்குள் கூட்டம் அவரைச் சூழ்ந்து கொண்டது. ''என்னங்க ஐயா?'' என்று கவலையுடன் விசாரித்தது.

சத்தியமூர்த்தி எழுந்து நின்றார். "ஒண்ணுமில்லே... இருபது வருஷத்துக்கு முன்னாலே தனியா ஒரு துவந்த யுத்தம் பண்ணப்ப, சண்டையிலே நான்தான் ஜெயிச்சேன்.... ஆனா, என் வலது கையைத் தோள்பட்டையிருந்து வெட்டித் தள்ளிட்டாங்க.. என் இடது கையிலேயும் பாதிப்பு.... உங்களை மாதிரி நானும் ஒருதட்டி பிடிச்சுகிட்டு வரணும்னு ஆசைதான்.... முடியலே.... மன்னிக்கனும்!" என்ற சத்தியமூர்த்தி தொளதொளவென்று அணிந்திருந்த ஜிப்பாவின் கைகளை உயரத் தூக்கினார். அது தளர்ந்தபோது வலது கையில் செயற்கையாக பொருத்தப்பட்ட மரத்தினால் ஆன கை தெரிந்தது. இடது கையில் உள்ளங்கையும் கட்டை விரலும் மட்டும்தான்.... நான்கு விரல்கள் வெட்டப்பட்டிருந்தன.

கூட்டம் திகைத்துப்போய் நின்றது. சில பெண்கள் கலங்கிய சத்தம் கேட்டது.

சத்தியமூர்த்தி "சரி.... சரி.... என்ன இப்போ? என் கை போனா என்ன.... என் பின்னாலே இப்ப எவ்வளவு ஆயிரம் கைகள் பார்த்தீங்களா? உம்.... வாங்க நேரமாவுது...." என்றவர் அந்தச் சிறுவனைப் பார்த்து 'நீ என்கூடவே ஒட்டிக்கிட்டு

வருவியாம்.... எனக்கு பதிலா அந்தத் தட்டியைப் பிடிச்சுக்கிட்டு.... என்ன...." என்றார்.

சிறுவன் மறுவிநாடி அவரிடம் நெருக்க மாகத்தாவி, விறைப்பாகத் தட்டியைத் தூக்கிப் பிடித்தவாறு நின்றான்.

உணர்ச்சிகள் கொப்பளிக்க, மேலும் உத் வேகத்துடன் கோஷங்களை எழுப்பிக் கொண்டு கிளம்பியது அந்தப் பெரும் கூட்டம்....

இந்தக் கிராமத்துப் படையை இனி எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது!.

**- விஞ்ஞானி**

- *இக்கதையின் மையக்கருத்து, பாத்திரப் படைப்பு, மொழிநடை குறித்து விமர்சன நோக்கில் கட்டுரை ஒன்று தயார் செய்க.*

## பயமல்ல... நிஜம்!

'பசுமைஇல்ல' வாயு பற்றியும், புவி வெப் பமடைதல் பற்றியும் யாராவது எழுதினாலோ, பேசினாலோ அவர்கள் தேவையில்லாமல் மக்களைப் பயமுறுத்தும் எதிர்மறைச் சிந்தனை யாளர்கள் என்பதுபோல மிகவும் சாதுர்யமாகத் தங்களது விளம்பர யுக்திகளின் மூலம் வர் ணிக்க முற்படுகின்றன பல்லாயிரம் கோடி ரூபாய் லாபமீட்டும் எண்ணெய் நிறுவனங்கள். பெட்ரோல், டீசல் பயன்பாட்டைக் குறையுங்கள் என்று எச்சரித்தால், மனித இனம் வசதியாக வாழ்வதைப் பார்க்கப் பிடிக்காத வயிற்றெரிச்சல் வாதிகள் என்பது போன்ற தோற்றத்தை உரு வாக்க முயற்சிக்கிறார்கள்.

இயற்கையுடன் விளையாடத் தொடங்கி இருக்கிறோம். ஒருசில தலைமுறைகள் மனித இனம், அதிலும் ஒரு சிறிய விழுக்காடு மட்டும், வசதியாக வாழ்வதற்காக வருங்கால உலகத் தையே பாலைவனமாக்கும் முயற்சி அரங்கேறி வருகிறது. இதன் விளைவுகள் தெள்ளத் தெளி வாகத் தெரியத் தொடங்கிய பின்னும்கூட மனி தன் சுதாரித்துக் கொண்டு, வசதிகளைச் சுருக்கிக் கொண்டு வருங்காலத் தலைமுறையினரைக் காப்பாற்ற முன்வராமல் போனால் அதை என் னென்று கூறுவது?

இந்த ஆண்டு ரஷியா இதுவரை காணாத வெப்பத்தால் பாதிக்கப்பட்டது. கடந்த 130 ஆண்டுகளில் இல்லாத வறட்சியால் பாதிக்கப்ப ட்ட ரஷிய நாட்டு மக்கள், ஏரிகள், நதிகள் என் று பெரும் திரளாகப் படையெடுத்துக் கோடை வெயின் வெப்பத்தை எதிர்கொள்ள முற்பட் டனர். கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 233 பேர் நீரில் மூழ்கி இறந்திருக்கிறார்கள். பூமி வெப் பமடைதல் பொய்யென்றால், ரஷியாவில் 105 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் தாக்குவானேன்?

இந்தியாவுக்கு வருவோம். இமயமலை யில் பனிப்பாறைகள் உருகி, பனிச் சிகரத்தின் உயரம் கணிசமாகக் குறைந்து வருகிறதே, அது ஏன்? டேவிட் ப்ரிஷியர்ஸ் என்கிற அமெரிக்கர் 1983-ருந்து ஐந்து தடவை எவரெஸ்ட் சிக ரத்தில் ஏறிச் சாதனை படைத்தவர். எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியபோதெல்லாம் இமயமலை யையும், அதன் பனிப்பாறைகளையும், சிகரங் களையும் தனது கேமராவில் பதிவு செய்து வைத்திருப்பவர். பனிச்சிகரங்களின் உயரம் குறைந்து வருவது அவருக்கு அதிர்ச்சி அளித் ததால், முன்பு எந்த இடத்திருந்து, ஒரு சிகரத் தைப் படம் பிடித்தாரோ அதே இடத்திருந்து மீண்டும் படமெடுத்துப் பதிவு செய்து பார்த்த வருக்கு ஒரே அதிர்ச்சி.

சுமார் நாற்பது மாடிக் கட்டிடம் நான்கு மாடிக் கட்டிடமாகச் சுருங்கினால் எப்படி இருக் கும், அதுபோல பல பனிச் சிகரங்கள் சுருங்கி இருப்பதை டேவிட் ப்ரிஷியர்ஸ் ஆவணங்க ளுடன் பதிவு செய்திருக்கிறார். ருங்பெக் பனிச் சிகரம் செங்குத்தாகச் சுமார் 330 அடி உயரம் குறைந்திருக்கிறது என்பதை நிரூபித்திருக்கிறார்.

இமயமலையிலுள்ள பல பனிச் சிகரங் கள் அசுர வேகத்தில் சுருங்கத் தொடங்கி இருப் பதைச் சீன ஆய்வு மையம் உறுதிப்படுத்தி இருக்கிறது. இப்படியே போனால் கைலாயம் கூடக் காணாமல் போனாலும் ஆச்சரியப்படுவ தற்கில்லை.. எவரெஸ்ட், கஞ்சன் ஜங்கா போன்ற பனிச் சிகரங்கள் ஆண்டுக்கு 26 அடி உயரம் குறைந்து வருவதாகத் தெரிகிறது.

இதற்கு மூல காரணம் அளவுக்கு அதி கமாகக் கட்டுப்பாடற்ற முறையில் வெளி யேற்றப்படும் கரியமில வாயுவாகும். வளர்ச்சி

என்கிற பெயரில் காடுகள் அழிக்கப்படுவதால் வெளியேற்றப்படும் கரியமில வாயுவை உள் வாங்க இயற்கையால் முடியாமல் போகிறது. காற்று மண்டலத்தில் வியாபித்துவிட்டிருக்கும் கரியமில வாயுவால் வானமண்டலமே வெப்ப மடைந்திருக்கிறது.

மேலும், காடுகள் அழிக்கப்படுவதால் மழையின் அளவு குறைந்து விட்டிருக்கிறது. பருவநிலையிலும் மாறுதல்கள் ஏற்பட்டிருக் கின்றன. இதன் விளைவாக, உருகும் பனியை ஈடுகட்டும் அளவுக்குக் குளிர்காலத்தில் பனி உறைவது இல்லை. மேலும், பெட்ரோல், டீசல் புகையிருந்து வெளியேறும் கரியமில வாயு பனிச்சிகரங்களில் படர்வதால் வழக்கத்தைவிட அதிகமாக பனிச்சிகரம் உருகிவிடுகிறது. பனி உறைவதும் இல்லை.

புவி வெப்பமடைதல், பனிச் சிகரங்கள் உருகுதல் போன்றவைகளின் தொடர்ச்சியாக நாம் சந்திக்கப்போகும் சவால் இன்னொன்றும் இருக்கிறது. விவசாயம் பெரிய அளவில் பாதிக்கப்பட இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. கடந்த மாதம் வெளியாகி இருக்கும் ''சயின்ஸ்' இதழ், இதன் தொடர்விளைவுகள் சிந்து, பிரம்மபுத்ரா நதிகளைப் பெரிய அள விலும், கங்கை, சீனாவில் பாயும் மஞ்சள் நதி, யாங்க்டஸ் நதிகளை சிறிய அளவிலும் பாதிக்கக் கூடும் என்று எச்சரிக்கிறது.

சிந்து, பிரம்மபுத்ரா சமவெளிப் பகுதி களில் வாழும் ஏறத்தாழ 60 கோடி மக்களின் உணவுப் பாதுகாப்பை அச்சுறுத்தும் தன்மையது, இந்தப் பனிச் சிகரங்கள் உருகும் போக்கு என் பதை நாம் உணர்வதாகவே தெரியவில்லை. எண்ணெய் நிறுவனங்களின் செயல்பாடுகளை யும், குறிக்கோளையும் நிர்ணயிப்பது பல பில் யன் டாலர் லாபம் மட்டுமே. பெருவாரியான மத்தியதர, மேல் மத்தியதர, பணக்கார மக்களின் எண்ணப்போக்கை நிர்ணயிப்பது இன்று அனு பவிக்கும் கார், ஏ.சி. குளிர்பதனப்பெட்டி, விமா னம் போன்ற வாழ்க்கை வசதிகள் மட்டுமே.

“எப்போதோ வரப்போகும் ஆபத்தைப் பற்றி இப்போதே சிந்தித்துக் கவலைப்படுவது போன்ற முட்டாள்தனம் இருக்க முடியுமா? புவி வெப்பமடைதல், கரியமில வாயு, பனிச்சிகரங் கள் உருகுதல் என்றெல்லாம் இந்த எதிர்மறைச் சிந்தனையாளர்கள் ஏன் பயமுறுத்த வேண் டும்? நாம் அப்போது உயிரோடு இருக்கப் போகிறோமா? இருப்பதுவரை சுகமாக வாழ் வதை அனுபவிப்பதை விட்டு விட்டு ஏன் நாளையைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்” என்று கேட்பவர்களிடம் ஒரு கேள்வி.

உங்களுக்கெல்லாம் குழந்தைகள், பேரக் குழந்தைகள் கிடையாதா? வருங்காலச் சந்ததியினரைப் பற்றிய கவலையே உங் களுக்கு இல்லையா?

**– தலையங்கம்.**

தினமணி. 2010

- *இந்தத் தலையங்கம் குறித்து உங்கள் கருத்துகளைத் தொகுத்து வாசகர் கடிதமாக எழுதுங்கள்.*
- *நீர்நிலைகள் தொடர்பாகக் களப்பயணம் மேற் கொண்டு, தகவல்கள் சேகரித்து அவற்றின் அடிப்படையில் உங்கள் ஊரில் அமைந்துள்ள நீர்நிலைகளின் அன்றைய, இன்றைய நிலை குறித்து அறிக்கை ஒன்று தயாரிக்க.*

# அழியும் சுவடுகள்

## அறிவியல் முன்னேற்றமும் சவால்களும்

கற்கால மனிதன் சமூகத்தோடும் இயற்கையோடும் ஒன்றி வாழ்ந்த காரணங்களினால், நோய் நொடி இல்லாத அமைதியான எளிமையான வாழ்க்கையைப் பல நூற்றாண்டுகள் இப்புவியில் மிக்க மகிழ்ச்சியுடன் தன் உறவுகளுடன் வாழ்ந்திருக்கின்றான் என்பது யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மை. ஆனால் இன்றைய மனிதன் கணினி யுகத்தில் வாழ்ந்தாலும் இயற்கையோடு ஒன்றி வாழாத காரணத்தினால் அது விடுக்கும் சவால்களைச் சமாளிக்கும் திறன் இல்லாது தத்தளித்துக் கொண்டிருக்கின்றான். அறிவியல் வளர்ச்சியும் தொழில்நுட்ப முன்னேற்றமும் மனித வாழ்க்கையை மாற்றியதுடன் அல்லாமல் எதிர்கால மனிதகுலத்திற்கு ஏற்படுத்தியுள்ள சவால்கள் சிலவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

கடந்த ஒரு நூற்றாண்டுக்குள் (1901–2000), நமது பூமியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஏராளம். இதற்கு முக்கியக் காரணம் மனிதன் தனது வாழ்க்கையைச் செயற்கை முறையில் வாழ ஆரம்பித்ததுதான். இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கு அறிவியல் வளர்ச்சி மிகமிக அவசியமான ஒன்றுதான். ஆனாலும் நம்முடைய தொழில்நுட்ப வளர்ச்சி இன்றைய கணப்பொழுது வாழ்க்கையை மட்டும் மகிழ்ச்சியாக வைத்திருக்கின்றது. எந்த ஒரு செயலுக்கும் அதற்கு இணையான – எதிர்மறையான செயலும் உண்டு என்பதைப் பல நேரங்களில் நாம் மறந்துவிடுவதுதான் இன்றைய பிரச்சினைகளுக்கு முக்கியக் காரணம்.

இந்தியா சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டபொழுது அன்றைய மக்கள் தொகை முப்பதுகோடி இருந்ததாகப் பாரதி தன் பாடல் பாடியுள்ளார் (முப்பது கோடி முகமுடையாள், செப்புமொழி பதினெட்டுடையாள்..) ஆனால் இன்றைய இந்திய மக்கள் தொகை நூறு கோடியைத் தாண்டிவிட்டது. அத்தனை மக்களும் இன்புற்றுவாழ அவர்களுக்குத் தேவையான வாழ்க்கை வசதிகளைப் பெறத் தொழில்நுட்ப வளர்ச்சி பேருதவியாக உள்ளது என்றால் மிகையாகாது. திரைகடலோடியும் திரவியம் தேடு என்ற வரிகள் இன்று நூற்றுக்கு நூறு உண்மையாகி உள்ளது. வெளிநாடுகளுக்குச் சென்று பொருள் ஈட்டி அதனை நமது நாட்டில் முதலீடு செய்பவர்கள் பலர் இன்று உள்ளனர். உலகின் ஏதோ ஒரு மூலையில் நடைபெறும் நிகழ்ச்சியை இன்று நம் இல்லத்தில் அமர்ந்தபடியே சிறிய தொலைக்காட்சியில் காண்பது அறிவியல் முன்னேற்றத்தால் தான். இதேபோல் தகவல் தொழில்நுட்பமும் அதிக வளர்ச்சி அடைந்துள்ளது. அனைத்து வகையான போக்குவரத்துத் துறைகளும் முன்னேற்றம் கண்டுள்ளன. ஆனால் இத்துணை வசதிகளும் மனித வாழ்க்கையைப் போயானதாகவும், இயந்திரத்தனமாகவும் மாற்றியுள்ளன என்பதுதான் உண்மை.

மனிதனின் அறிவியல் கண்டுபிடிப்புகள் பல விளையாட்டுப்பொருளான பூமராங் போல ஆகிவிட்டது. அதேபோல் பல அறிவியல் கண்டுபிடிப்புகள் நமது அன்றாட வாழ்க்கைக்கு உதவியாக இருந்தாலும், அதனால் ஏற்படும் தீமைகள் நம்மை மட்டுமல்லாது அடுத்து வரும் நம் சந்ததியினரையும் தாக்கக் கூடியதாக உள்ளன.

### பெருகிவரும் பாத்தீன் பைகளும், பிளாஸ்டிக் பொருட்களும்

இப்பொருட்கள் பல நேரங்களில் நம் வாழ்க்கைக்கு அவசியமானதாக உள்ளன. என்றாலும் அதன் உபயோகத்திற்குப்பின் அப்பொருட்கள் எப்படி அப்புறப்படுத்தப்பட வேண்டுமென்ற விழிப்புணர்வு மக்களிடையே இல்லாத காரணத்தால் இப்பொருட்களின் உபயோகம் எல்லையில்லா அளவில் நமது சுற்றுச்சூழலைப் பாதித்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம் இப்பொருட்கள் மண்ணுடன் மக்கும் தன்மையில்லாததுதான். மழைநீர் நிலத்தடியில் சென்று சேமிப்பாவதைத் தடுக்கிறது. இதனை எரிக்கும்போது உண்டாகும் வேதிப் பொருட்கள் சீதோஷ்ண நிலையையும் மாற்றி

அமைத்து வருகிறது. மேலும் இவ்வேதிப்பொருட்கள் நம் உடலுக்குள் சென்று பலவிதமான நோய்களை உண்டுபண்ணுகின்றன என்பதைப் பல அறிவியல் கண்டுபிடிப்புகள் நிரூபித்துள்ளன. உடனடியாக இதிருந்து விடுபட்டுமக்கும் தன்மையுள்ள அதேபோன்ற காகிதப் பைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருவதை மக்களுக்குத் தெரியப்படுத்துதல் நம் முக்கியக் கடமையாகும். இதே போல் பிளாஸ்டிக் பொருட்களும் அதன் உபயோகத்திற்குப் பின் குப்பைகளாக மாறும்போது எரிக்கப்படுவதால் உண்டாகும் டையாக்சேன் போன்ற வேதிப்பொருட்கள் கருவில் உள்ள குழந்தைகளையும் பாதிக்கக் கூடியவை. இன்று பல குழந்தைகள் குறைபாடுகளுடன் பிறப்பதற்கும் இதுவே காரணமாகும்.

**பெருகிவரும் வாகனப்போக்குவரத்து ஊர்திகள்**

இன்றைய தனிநபர் வருமானம் என்பது நகரங்களில் அதிகரித்து வருவதன் எதிரொயாக நான்கு சக்கரவாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் பெட்ரோல் டீசல் போன்ற எரிபொருட்களின் பயன்பாடும் அதிகரித்துள்ளது. இதன் விளைவு இன்று வாயுமண்டலத்தில் கரியமில வாயுவின் செறிவானது அதிகரித்துப் புவியின் சராசரி வெப்பநிலை அதிகரித்துள்ளது. இதே வேகத்தில் நாம் சென்றால் இன்னும் ஒரு நூற்றாண்டைக் கடக்கும் முன்னரே புவியின் சராசரி வெப்பநிலை தற்போது இருப்பதை விட 5 டிகிரி சென்டிகிரேட் அதிகரிக்கக்கூடும் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வெப்பநிலை மாற்றத்தால் துருவப்பகுதிகளில் உள்ள பனிக்கட்டிகள் உருகிச் சிறு ஏரிகளை உண்டுபண்ணுவதுடன் கடல் கலந்து அதன் மட்டத்தை ஒரு மீட்டர் அளவாவது அதிகப்படுத்தும். அத்தகைய நிலைமை ஏற்பட்டால் மிகவும் பாதிக்கப்படப்போவது ஆஸ்திரேயா கண்டமும் சில சிறிய தீவு நாடுகளும் ஆகும். இதில் இந்தியாவின் கடலோர மாநிலங்களின் பரப்பளவும் சிறிது குறையலாம். பல முக்கியக் கடற்கரைப்பகுதிகள் முற்றிலும் மூழ்கி இருந்த இடம் தெரியாமல் போகலாம். இத்தீய விளைவுகளைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு அளித்தால் மட்டும் போதாது. இவ்விளைவுகளை எந்த முறையில் கட்டுப்படுத்தலாம் என்பது பற்றியும் இத்தருணத்தில் எடுத்துரைப்பது நமது கடமையாகும். முடிந்த வரையில் இயற்கைச் சக்திகளின் (வாயு, சூரிய ஒளி) மூலம் கிடைக்கும் பயன்களைப் பெறுவதைப் பற்றி



எடுத்துரைக்கலாம். சூரிய எரிசக்தியை எந்த வகையில் பயன்படுத்தினால் நமது மின்சாரச் செலவைக் குறைக்கலாம், அதன் மூலம் வாயு மண்டலத்தில் உள்ள கிரீன் ஹவுஸ் வாயுக்க ளைக் குறைக்க முடியும் என்பது பற்றியும் விளக்கிக் கூறுதல் அவசியமாகும்.

மேலும் அயல்நாட்டு அறிஞர்கள் இன்று பூமியில் நிகழும் காலநிலை மாற்றங்க ளுக்கு இயற்கையைக் காட்டிலும் மனிதனின் செயல்கள் தாம் மிக முக்கியக் காரணமாக உள்ளன என்று கூறி அதைத் தவிர்க்க எத்த கைய நடவடிக்கைகளை இத்தருணத்தில் கையாள வேண்டும் என்பதைப் பற்றியும் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்.

**ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள துளை**

மனிதனின் கண்டுபிடிப்புகளில் ஒன் றான குளிர்சாதனப்பெட்டி, அதற்காக உபயோ கப்படுத்துகின்ற வேதிப்பொருட்கள் வாயு மண் டலத்திற்குச் சென்று அங்கு நிகழ்த்திய வேதி வினையின் விளைவு தான் ஓசோன் துளை. சூரி யக்கதிர்கள் இப்புவியில் உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாத ஒன்று. அதே சமயத்தில் சூரியனின் அதிகமான வெப்பம் நம்மைத் தாக் காமல் இருப்பதற்கு இயற்கை அளித்த குடை தான் இந்த ஓசோன் படலம். இது பூமியின் மேற் பரப்பில் சுமார் 10 கி.மீ. தொலைவில் ஒரு போர்வை போன்று பூமியைச் சூழ்ந்துள்ளது. ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள துளையினால் நம்மைத் தாக்கும் சூரியனின் ஒளிக்கதிர்கள் அதிகரித்துள்ளன. இன்று பலர் கண், தோல் சம் மந்தப்பட்ட வியாதிகளினால் அவதியுறுவதும் மேற்கூறிய இயற்கை மாற்றத்தினாலாகும்.

**எலக்ட்ரானிக் கழிவுகளும் அதன் தாக்கங்களும்**

இன்றைய யுகம் எலக்ட்ரான் யுகம் என்று கூறினால் அது மிகையாகாது. அனைத் துக் கண்டங்களிலும் உள்ள மக்களை ஒரே தளத் தின் கீழ் இணைத்து அவர்களுக்குள் ஒரு தொடர்பை ஏற்படுத்தியுள்ளது இந்த எலக்ட்ரா னிக் சாதனங்கள்தான். உலக மக்கள் அனைவ ரும் ஒரே வானத்தின் கீழ் ஒரே பூமியில் வசிக் கின்றோம் என்ற நினைவை எடுத்துரைப்பது இக்கருவிகள் தாம் என்றால் அது மிகையாகாது. ஆனால் அனைத்து வகையான எலக்ட்ரானிக் பொருட்களும் அதன் முழுப்பயன்பாட்டிற்குப் பிறகு உபயோகமில்லாமல் போகும்போது அத னையும் ஒரு கழிவுப்பொருளாக நினைக் கின்றோம். மற்ற கழிவுப்பொருட்களுடன் இணைத்து வெளியேற்றும்பொழுது, அப் பொருட்கள் எம்மாதிரியான விளைவுகளை ஏற் படுத்தியுள்ளன என்பதை அறிந்தால் அனை வரும் ஆச்சரியப்படக்கூடும்.

எலக்ட்ரானிக் கழிவுகளில் உள்ள நச்சுப் பொருட்கள், மனித வாழ்க்கைக்கு மிக முக்கிய மாகத் தேவைப்படும் நிலம், நீர், காற்று ஆகிய மூன்றையும் மாசுபடுத்திக்கொண்டு வருகின்றன. இதனால் அடுத்த சந்ததியினரின் வாழ்க்கை ஒரு கேள்விக்குறியாக மாறினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. அறிவியல் வளர்ச்சியும் தொழில் நுட்பமும், தொழிற்சாலைகளும் இன்றைய வாழ்க்கை முறைக்கு ஏற்றவையாக இருந்தாலும் அதனை எத்தகைய முறையில் கையாள வேண்டும் என்பது அனைத்துத் தர மக்களும் அறிந்திருக்க வேண்டும் என்பதுதான் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மை யாகும்.

நமது சிறுவயதில் தமிழ் ஆசிரியர்கள் நமக்குச் சொல்த் தந்த பாடம் இயற்கைக்கு எதிர்ச்சொல் செயற்கை என்பது. அதை இன்று உணரும் நிலையில் நமது செயற்கையான வாழ்க்கை முறை அமைந்துவிட்டது. மனித வாழ்க்கைக்கு மாற்றங்கள் அவசியம்தான். ஆனால் மனித வாழ்க்கையையே மாற்றக் கூடிய மாற்றங்கள் அவசியமா? சிந்திப்போம். செயல்படுவோம். மேலும் இத்தருணத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு நம்மால் இயன்ற அளவிலான நற்செயல்களை மேற் கொள்வோம்

**– இரா. மலர்விழி**

- *உலக வெப்பமயமாதல் எனும் பிரச்சினை யைக் கருத்தில் கொண்டு மக்களிடையே விழிப்புணர்வைத் தூண்டும் வகையில் துண்டுப் பிரசுரம் தயாரித்து வெளியிடுக.*
- *அறிவியல் வளர்ச்சியால் ஏற்படும் ஆக்கமும் அழிவும் குறித்து விவாதித்துக் குறிப்பு தயாரிக்கவும்.*

## எல்லாம் தொலைத்து

காய்கறி வாங்க
எடுத்துச் சென்ற மஞ்சள் பை

இறைச்சி வாங்க
எடுத்துச் சென்ற ஓலைப்பை

எண்ணெய் வாங்கப்
பாதுகாத்த கண்ணாடிக்குப்பி

தேநீர்க்கடையில்
வெந்நீர் விட்டுக்
கழுவச் சொன்ன
ஈயக் குவளை

பதப்படுத்தி
பார்த்துப் பார்த்துப்
பின்னப்பட்ட கோரைப்பாய்

பக்குவமாய்த் தேர்ந்தெடுத்த
மரத்தில் செய்துதந்த
நாற் கா

தண்ணீருக்கு இல்லாத
தனி மணம் தரும்
பித்தளைச் சொம்பு
அத்தனையும் தொலைத்து
உயிர்வாழத் தொடங்கிவிட்டோம்
பிளாஸ்டிக் இதயத்தோடு

**– சோம. இராசேந்திரன்**

- *சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டுக் குழைமப் (பிளாஸ்டிக்) பொருட்கள் பயன்பாட்டிற்கு எதிராக நடைபெறும் விழிப்புணர்வு ஊர்வலத்தில் ஏந்திச் செல்வதற்கான ஊர்வல அட்டைகள் தயாரிக்க.*
- *'எல்லாம் தொலைந்தது' என்ற கவிதையை வாசித்து ரசனைக் குறிப்பு எழுதுக.*

## ஏரியின் ஏக்கம்

"செம்பாக்கம் ஏரி... கொஞ்ச காலத்துக்கு முன்னாடி வரைக்கும் இதுதான் எம்பேரு. தாம்பரத்தைச் சுத்தி இருக்குற செம்பாக்கம், பள்ளிக்கரணை, குரோம்பேட்டைன்னு பல ஊர்களுக்கும் நீர் ஆதாரமா இருந்த பெருமை எனக்கு



உண்டு. ஒரு காலத்துல இந்த ஏரியாவே என்னைத் தலையில் தூக்கி வெச்சிக் கொண்டாடி இருக்கு. ஆனால், இப்ப என்னை ஏரினு சொல்க்க முடியுமானு எனக்கே சந்தேகம் வந்திடுச்சு. அந்த அளவு நாறிப்போய் கிடக்கு என் நிலைமை!

மூச்சுக்கு முந்நூறு முறை எம் பேரை சொல்க் கொண்டாடுன சாதிசனம், அதே வாயால் இன்னிக்கு எனக்குக் கொடுக்குற அர்ச்சனையும், வசவும் இருக்கே, அப்பப்பா... அதைக் காது கொடுத்துக் கேக்க முடியலை. அவங்க வூட்டுக்கு வர்ற கிணத்துத் தண்ணியும், போர் வாட்டரும் கலங்கிப்போய் சாக்கடை நாத்தத்தில் வருதாம்... அதுக்கு நான்தான் காரணம்னு நினைக்கிறாங்க..." கண்களில் நீர் வடிய செம்பாக்கம் ஏரி புலம்புவதை, ஏரியா மக்கள் கொஞ்சம் காது கொடுத்தால் கேட்கலாம்! ஏரியின் சீரியஸ் புலம்பலை இங்கேதான் முழுசாகக் கேட்போமே..

"செம்பாக்கம், பள்ளிக்கரணை ஏரியாவில் முச்சந்தியில் இருக்குற தண்ணிக் குழாய் பக்கத்தில் நாலு பொம்பளைங்க கூடினாலே, அன்னிக்கு எம்பேரை டேமேஜ் பண்ணாம வீடு திரும்பமாட்டாங்க. ஆமா… நார்நாரா நம்மளைக் கிழிச்சுட்டுத்தான் அடுத்த ஜோ அவங்களுக்கு. அந்த அளவுக்கு எம்மேல் என்ன கோவம்னு கேக்குறீங்களா?

என்னாலதான் அவக வூட்டுல இருக்கிற குழந்தைகளுக்கு அடிக்கடி உடம்பு சரியில்லாம போயிடுதாம். நான் ரொம்பத்தான் கெட்டுப் போயிட்டேனாம். ஆனா, என்னை இந்த நிலைமைக்கு ஆளாக்குனவங்களைப் பத்தி நான் சொன்னா, அதைக் காது கொடுத்துக் கேட்க யாரு இருக்கா!

யானை தன் தலையில் மண் அள்ளிப் போடுற மாதிரி, இந்த ஏரியாவ சுத்தி இருக்குற நீங்களும், லோக்கல் அரசியல்வாதிகளும்தான் இந்த நிலைமைக்குக் காரணம். அஞ்சு வருசத்துக்கு முன்னாடி வரைக்கும் நான் சுத்தமா இருந்து, உங்க எல்லாருக்கும் குடி தண்ணி கொடுத்துட்டுதானே இருந்தேன்? உங்க வீட்டுலயும், தெருவுலயும் அள்ளுற மொத்த குப்பைகளையும் செம்பாக்கம் பஞ்சாயத்து நிர்வாகம், சத்தமில்லாம வந்து எம்மேலதான் கொட்டிட்டுப் போகுது. போதாக்குறைக்கு, உங்க வீட்டு சாக்கடைத் தண்ணிய எல்லாம் என்மீதே கலக்க விட்டு அசிங்கப்படுத்துனீங்க. வசதி இருக்குற அபார்ட்மென்ட்காரங்க புல்டோசர்ல பெரிய குழிதோண்டி, அவங்க சாக்கடையை உங்க வீட்டுக்குக்கீழ் கொண்டுவந்துவிட்ட கதையெல்லாம் உங்களுக்குத் தெரியாதா என்ன? பூமிக்கு அடியில தண்ணியே ஊறவிடாத அளவுக்கு எனக்குள்ளே நாலஞ்சு வருஷ பிளாஸ்டிக் பேப்பரும், காகிதமும், கண்ணாடி பாட்டிலுமா கிடக்குதே… அதையெல்லாம் கொண்டாந்து போட்ட புண்ணியவானுங்க யாரு? உங்களாலதானே நான் கலங்கி கப்பெடுத்துக் கிடக்குறேன்.

கோடி கோடியா பணத்தைக் கொட்டி ஏதேதோ காண்டிராக்ட் வேலைகள் நடக்குதே… அந்த மாதிரி என்னைத் தூர் எடுக்கவும், ஒரு ஏற்பாடு பண்ணச் சொல், என்னைச் சுத்தி இருக்கிற மூணு லட்சம் ஜனங்களும் அரசாங்கத்துக்கிட்டே கேட்க வேண்டியதுதானே… நாங்க உசுரோட இருக்கணும்னா, செம்பாக்கம் ஏரி சுத்தமா இருந்தாகணும்னு போராட வேண்டியது தானே.

சீக்கிரமா உங்க ஊரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் போடச்சொல்லுங்க. என்னது? பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடங்கறதுக்காக செம்பாக்கம் பஞ்சாயத்தில் 60 கோடி ஏற்கெனவே ஒதுக்கியிருக்காங்களா? நாலு மாசம் ஆகியும் இன்னும் வேலை தொடங்கலையா? அதற்கு நான் என்னங்க பண்ணுவேன். ஊர்க் கழிவையெல்லாம் வாங்கிச் சுமந்துகிட்டு நிக்குற பாவத்தை மட்டும்தான் நான் பண்ண முடியும். இந்த மாதிரி திட்டங்களை நிறைவேத்தப் போராடுற புண்ணியம் உங்களைத்தானே சேரணும்? இதையெல்லாம் போனவாரம் ஏரிப் பக்கம் ஒதுங்க வந்த ரெண்டு பேரு பேசிக்கிட்டாங்க. ஆத்தீ! அவுக சொன்னது நெசந்தான் போல இல்லன்னா, பாதாளச் சாக்கடைத் திட்டம் லேட் ஆகுமா?

ரீசன்ட்டா பெருங்குடி பக்கத்தில் உள்ள ஏரியெ தூர்வாரி அழகுபடுத்தி, சுத்திலும் காம்பவுண்ட் சுவர் கட்டி இருக்காங்கன்னு நஞ்சு போன பழைய இங்கிலீஷ் பேப்பர்ல பாத்தேன். எல்லாம் உங்களை மாதிரி யாரோ பக்கோடா தின்னுட்டு வீசியெறிஞ்ச காகிதம்தான்! எனக்கும் அதுமாதிரி சுத்தமாகிற கொடுப்பினை எப்ப வாய்க்குமோ.. அப்பத்தான் உங்களுக்கும் விடிவு காலம்..!

கால்ல முள்ளு குத்திடுச்சு… வாசக்கால் தலையில் இடிச்சிடுச்சு… சட்டை சின்னதாகிப் போச்சுன்னு உங்க செயலுக்கும் மாறுதலுக்குமான பழியை இடம் மாத்திப் போடுற வழக்கத்தை என் விஷயத்துலயாவது விடுங்க. ஏரித் தண்ணி கெட்டுப் போச்சுன்னு புலம்பறதை நிறுத்திவிட்டு என்னை அழுக்காக்குறபாவத்தை நீங்க முதல்ல நிறுத்துங்க! இல்லாட்டி, செம்பாக்கம் நாளுக்கு நாள் கண்ணீர்பாக்கமா மாறத்தான் செய்யும்.

**– தி. கோபி விஜய்**

- *ஏரியின் ஏக்கத்திற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கூறுக.*

# பசுமை காப்போம்

## வனம்மாள்

சூரியன் பொயும் தூரத்துப் பார்வை வரைக்கும் வெள்ளை வெள்ளையாய் குத்துக் கற்களும், சரளைக் கற்களுமாக நிரவி, நட்சத்திரங்களுடன் சிவந்த வானமாக அந்தச் செம்மண் பிரதேசம் இருந்தது. எங்கோ ஒன்றாய் தோழமையற்றுத் தனித்து தவிப்புடனிருந்தன பனை மரங்கள்.

சாலம்மாளுக்கு கானல் மருட்டியது. அவளின் மோட்டாங்காட்டில் கடக்காலே எழும்பிச் சரிந்திருக்கும் சிறு குன்றின் பாறைக் கூட்டங்களுக்கிடையிலே நீர் வறளக் கிடக்கும் குட்டையை நோக்கி, தலையில் குடத்துடன் போய்க்கொண்டிருந்தாள் அவள். கூப்பாடுடன் விருட்டென்று அவளைக் கடந்த பறவையொன்றின் திசையிலே அலையலையாய் எழுந்து ஆடும் கருஞ்சுவாலைக் கூட்டம் போல தூரத்தில் ஊசிமலை அவளுக்குத் தென்பட்டது.

வயோதிகத்தின் நியதிகளைத் தட்டாமல் ஏற்றிருந்த சாலம்மாளின் தேகம், ஒரு யுகத்தின் நகர்வுபோல இயங்கியது. முந்தானையைச் சுருட்டித் தலைச்சும்மாடாகவும், முக்காடாகவும் மாற்றிக்கொண்டு பெருமூச்சுக்களுடனும் தனக்குத்தானே பேசியபடியும் போய்க்கொண்டிருந்த அவள், இரண்டு மூன்று குடங்கள் சுமந்து வந்ததற்குள் களைத்து ஒரு மரத்தடியில் ஓய்ந்து உட்கார்ந்துவிட்டாள்.

வெப்பக்காற்று மாந்தளிர்களில் பட்டு தணிந்து வீசியது. கருகும் தளிர்களின் வாசம் போல மாம்பூக்களின் வாசம் மெல்ல காற்றிலே பரவி அடங்கியது. அவளைப் போலவே பக்கத்துத் துண்டுகளிலும் சிலர் மாஞ்செடிகள் வைத்திருந்தனர். சிலர் அப்படியே தரிசாகவிட்டு வைத்திருந்தனர்.

ஒரு நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பிருக்கும். அப்போது சாலம்மாளுக்கு நல்ல புத்தி இருந்தது என்றே சொல்ல வேண்டும். அந்த ஊரிலும், சுத்துப்பட்டிலும் இருக்கிற வானம் பார்த்த பூமி கொண்ட ஏழை விவசாயிகள் சிலருக்கு இயேசுகாரர்கள் இலவசமாகவே மாங்கன்றுகளைத் தருவதாகக் கேள்விப்பட்டாள். உடனே முந்திக்கொண்டாள் சாலம்மாள். அவளுக்கிருந்த கையளவு நிலத்துக்கு அவர்கள் கொடுத்த சில செடிகளே போதுமானதாக இருந்தன. கிடைத்த மாஞ்செடிகள் எல்லாமுமே பெங்களூரா, நீலம் வகைகளாகவே இருந்துவிட்டதால் சாலம்மாளின் மனசு கேட்கவில்லை. மேல் ஆலத்தூர் அரசாங்கப் பண்ணைவரை போய் காதர், பீத்தர், பங்கனப்பள்ளி, மல்கோவா என்று வகைக்கொன்றாகவும் சில வற்றை வாங்கி வந்து வைத்தாள். செடிகளின் ஒட்டு பிரிந்துவிடாமல் தொட்டிகளைக் கவனமாக உடைத்து பச்சைப்பிள்ளைகளைக் கையாள்வதுபோல் நட்டு, குளம் குட்டை என்று விடாமல் அலைந்து நீர் ஊற்றினாள் சாலம்மாள். புதிய இடத்தில் பொருந்தாமல் இருப்பவர்களைப் போல இருந்த செடிகள் பச்சை பிடித்ததும்தான் அவளுக்கு உயிரே வந்தது. மரஞ்செடிகள் என்றாலே சாலம்மாவுக்கு உயிர்தான். கையில் கிடைப்பதையெல்லாம் கொண்டுவந்து வைத்து அவள் வீட்டை நந்தவனமாக்கியிருந்தாள். கொத்திக்கொண்டும், நீர்வார்த்துக்கொண்டும், சருகுகளை அள்ளிக்கொண்டும் இருப்பதுதான் அவள் வேலை. பூத்துக் குலுங்கும் அவள் தோட்டத்துப் பூக்கள் ஊர்ப் பெண்களின் தலைகளிலெல்லாம் சிரிக்கும். அவள் தோட்டத்துக் காய் கனிகளுக்கே தனி ருசிதான் என்று சொல்வார்கள்.

“மரம், மரமின்னு பைத்தியமாகிறாளே! காட்டுலேர்ந்து எறங்கிவந்துட்டாளா”.

“புள்ளைங்க, திக்குதெச இல்லாததுக்கு எதுமேயாவது ஆச இருக்க வேண்டியதுதான். ஆனாலும் இப்பிடியா?”

“நம்ம வேலூர் பக்கமா யாரோ ஒருத்தரு வீட்டு மரங்களுக்கு பத்திரிக்க அடிச்சு கல்யாணம் செஞ்சி வெச்சாராமே. அப்பிடி இவுளும் செய்வாளோ எனுமோ?’’. ஊரார் பேசிக்கொள்வதும் உண்டு.

சாலம்மாளின் மரப்பிரியத்தை எவராலும் புலங்காண முடிந்ததில்லை. ஊரிருக்கும் அத்தனை மரங்களும் அவளுக்குத் தாய்மடிதான். தினமும் ஒன்றின் நிழலாவது

செத்த நேரம் ஒக்காந்து மனக்குறைகளைத் தானே புலம்பியபடி இருப்பது வாடிக்கையாயி ருந்தது சாலம்மாளுக்கு.

காற்றும் மழையுமாக இயற்கை ஒருமுறை சாடிவிட்டுப் போய்விட்டபோது வானத்தைப் பார்த்து நெட்டி முறிப்பதும், மழையைச் சபிப்ப துமாக இருந்தாள் சாலம்மாள். கொய்யாவின் இளங்கிளையையும், முருங்கையையும் பேய்க் காற்று பதம் பார்த்து விட்டுச் சென்றிருந்தது. முறிந்த கிளைகளைச் சேர்த்து செம்மண் துணி சுற்றிவிட்டாள் சாலம்மாள். சிரித்துவிட்டுப் போனவர்களையெல்லாம் சட்டை செய்ய வில்லை அவள். இப்படித்தான் போன மாதம் கிராம அபிவிருத்தித்திட்டம் ஒன்று அவர்கள் ஊருக்கு வந்து சேர்ந்தது. ஊர் ரச்சையருகே கிளை விரிந்திருந்த அரசமரத்தையும் ஊர் எல் லையிருக்கும் நாக மரத்தையும் படிப்பகம் கட் டவும் நீரேற்று அறை, தொலைக்காட்சிப் பெட்டி அறை கட்டவும் வெட்டிவிடுவது என்று தீர்மா னமாகி விட்டது. சாலம்மாளுக்கு இது தெரிய வந்ததும் ஆங்காரியாகிவிட்டாள். மரத்தின் மீது முதல் வெட்டு விழுந்த போது தலைவிரி கோல மாய் குறுக்கே மறிந்து விழுந்தாள் சாலம்மாள். ஓடி வந்ததில் அவளுக்கு மூச்சிரைத்தது.

“டேய். நாங்க அக்கா தங்கச்சிங்க தங் கியிருக்கிறண்டா இதுல. எங்களெ ஓட்டப்பாக் குறவன் எவன்டா?”

“தாயே பொறுக்கனும். நீ யாரு?”



“நாகலம்மா, பூவுலம்மா, எல்லம்மாடா எங்க இருப்பிடம்ன்டா இது. நாங்க எடுத்த அடி வெக்கிறது எல்ல நாக மரம்டா. நாங்க இருக் கிற மரங்களெ வெட்டி எங்கள ஓட்டப்பார்த்தா ஊரையே துவசம் பண்ணிடுவம்டா”.

கத்திகளும், வாள்களும் கீழே விழுந்து விட்டன. மரங்களை வெட்டுவதில்லை என்று பதில் பெற்றவுடன் மலையேறிவிட்டது சாமி. மரங்களைக் காப்பாற்றி அன்றெல்லாம் சாலம் மாள் அரசமரத்தடியிலேயேதான் கிடந்தாள். சாலம்மாள் தனிக்கட்டை. பிள்ளையில்லாததால் புருஷன் துரத்திவிட வாழாமல் வந்து ஊரோடு தங்கிவிட்டவள். நாதி என்றிருந்த ஒரே அண் ணனும் வேலை, வாழ்க்கை என்று ஊரைவிட் டுப் போய் விட்டான். கிராமத்து வீடும் கொஞ் சம் மேட்டு நிலமும் அவள் பாடு என்றாகிவிட் டது. யாரும் கண்டுகொள்ளாத அந்த மேட்டு நிலத்தில் வலு இருக்கும்வரை விழுந்து எழுவது என்ற அல்லாடி வந்தாள். சும்மாடைப் பிரித்து முகம் துடைத்துக் கொண்டாள் சாலம்மாள். நேற் றுதான் நட்ட மாதிரி இருக்கிறது. அதற்குள் வளர்ந்துவிட்டன. பூவெடுத்திருக்கும் கவை களை உடைத்துவிட வேண்டும். காப்புக்கு விட இன்னும் கொஞ்சம் போகட்டும் என நினைத் துக் கொண்டாள். கானன் ஊடாக சுழன்ற அவள் பார்வை கிழக்காக இருந்த வெற்றிடத் தில் நிலைகுத்தித் தவித்தது. அங்கிருந்த கான லும் வெம்மையும் அப்படியே பெயர்ந்து அவள் மனதுக்குள் வந்து இறங்கியது. பழசை நினைத்துக்கொள்ள கண்கள் மடை திறந்து கொண்டன. கேட்க நாதியில்லை என்பதால் ஊரிலே சாலம்மாள் என்றாலே இளக்காரந்தான். நடுத்தெரு இடைச்சி ரங்கமணிக்கும், அவள் மச் சினன்மார்களுக்கும் ரொம்பவுமே கிண்டல்தான். ஒருநாள் விறகு பொறுக்கிக் கொண்டு தன் நிலத் தின் வழியே வந்த ரங்கமணி மாவிலைகளைப் பிய்த்து கசக்குவதைப் பார்த்து விட்டாள் சாலம் மாள். வேர் கிளம்பிவிடுமே என்று பதை பதைத்து திட்டித் தீர்த்துவிட்டாள் ரங்கமணியை. கன்றுகளை வைத்து கொஞ்ச காலம்தான் ஆகி யிருந்தது. மறுநாள் சாலம்மாள் நிலத்துக்குப் போனபோது பாதி மாஞ்செடிகள் வெட்டிச் சாய்க் கப்பட்டிருப்பதைப் பார்த்தாள். தன் கழுத்தை யாரோ அறுத்துவிட்டது போல வத்தது அவ

ளுக்கு. "அய்யோ எம் புள்ளங்களே! என் செல் லங்க போச்சே", வயிற்றிலும் மார்பிலும் அடித் துக்கொண்டு, வீழ்ந்திருக்கும் செடிகளை ஓடி ஓடி எடுத்து அழுதாள் சாலம்மாள். சாலம் மாளின் பக்கத்து நிலம் ரங்கமணியுடையது. இவளின் நிலம் மீது ஒரு கண் ரங்கமணிக்கு இருந்தே வந்தது. "சின்னதுக்குதான் சின்னங் கொலையறதுன்ற மாதிரி ஆயிடுச்சே. அய்யோ எங் கொறையே. கௌம்பிடுமே, ஏன்டி இப்ப செய்யறதுன்னதுக்கேவா இப்படி பன்னிர்றது? ஒந் திமிர எஞ் செடிங்க மேயா காட்டறது?'', ஊர்ப் பஞ்சாயத்துக்குப் பிராது கொடுத்துவிட்டு அன்று முழுவதும் இழவு வீட்டுக்காரி மாதிரி இருந்தாள் சாலம்மாள். மரங்களுக்குப் போய் இப்படி மாரடிக்கிறாளே என்று சொல்க் கொண்டனர் ஊரார். பொழுது அமர கூடிய பஞ் சாயத்தில் வெட்டியது யார் எனத் தெரியாமல் பேச முடியாது என்று தீர்ப்பு வந்தது. இவரிவர் கள்தான் வெட்டியிருப்பார்கள். தாட்டிமமான, அரக்கி அரக்கி நடந்திருக்கும் காலடித் தடங் கள் ரங்கமணியினுடையதுதான் என்று சாலம் மாள் சொன்னதை யாரும் எடுத்துக் கொள்ள வில்லை.

அவுக்கென்றாகிவிட்டது சாலம்மாளுக்கு. மனசு ஆறாமல் மறுநாள் காலம்பரமே மாஞ் செடிகள் தந்த இயேசுக்கார அய்யா வீட்டுக்குப் போய் ஒப்பாரி வைத்தாள் சாலம்மாள்.

"நீ இப்படி அழ வேண்டியதே இல்ல. வேற செடிகளுக்கு ஏற்பாடு பண்ணுவேன்", என் றதும் வேகமாய்த் தலையசைத்தாள் சாலம்மாள்.

''வெட்டினவங்களுக்கு நீ தண்டென வாங்கித்தரணும் சாமீ. பாதி புள்ளைங்க களுத்த அறுத்துப்புட்டாங்களே,,.

''சரி. நீ போயி போசுல சொல்லு. நான் பின்னாடியே வரேன்".

இயேசுக்கார அய்யா சொன்னதும் காவல்நிலையம் போய்விட்டாள் சாலம்மாள்.

"மரம் வெட்டின கேசெல்லாம் இங்க எடுத் துக்கிறதில்ல பாட்டி" பதிலெல்லாம் அவளை அச ரச் செய்யவில்லை. காவல் நிலைய வாசலே மூக்குச் சிந்திக் கொண்டிருந்தாள் அவள்.

சரி உன்னெ அடிச்சிப்பூட்டு, மரத்தெ வெட்டிப்புட்டாங்கன்னு ஒரு மனு எழுதி வா.

மனுகொடுத்த பிறகு காவல்நிலையத்துக் கும், இயேசுக்கார அய்யா வீட்டுக்கும் நடந்தப டியே இருந்தாள். வழக்கு பதிவாகி முதல் சம் மன் வந்தபோதுதான் அவளது மனம் ஆறியது. ''என்னாதான் காலங்கெட்டு கெடந்தாலும் நியாயஞ் செத்துப் போகுமா? இருங்கடி இருங்க. துள்ளத்துடிக்க எஞ்செடிகளெ வெட்டினதுக்கு இன்னிக்கு இருக்குது உங்குளுக்கு"

சம்மன் வந்து நாளெல்லாம் கோர்ட்டு வாசல் தவம் கிடந்தாள். ஆனால் அவள் நினைத்தபடியெல்லாம் எதுவுமே நடக்காமல் அவளுக்கு ஏமாற்றமாய்ப் போனது.

"ஒன்றிரண்டு நாட்களுக்குள்ளாகவே, தப்பு தப்புத்தான்னு சொல்ப்புட மனுசங்க ளுக்கு இத்தினி தயக்கமா?" எனப் புலம்பிக் கொண்டே அண்ணன் தம்பிதுரை வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள் சாலம்மாள்.

அவள் அண்ணன் போனபிறகு அவ ளுக்கென்று இருந்த ஒரே ஆள் தம்பித்துரை தான். அவன் தூரத்தில் இருந்தாலும் மாதத்துக்கு ஒரு கால் பிடித்துபோய் பார்த்து விட்டு வந்து விடுவாள் அவள். அவனின் எட்டு பிள்ளைக ளையும் மார்மேல்போட்டு சாலம்மாள் தான் வளர்த்துவிட்டாள். அதில் சின்னவள் சிவப்பி என்றாள் சாலம்மாளுக்கு கொள்ளை ஆசை. தம் பிதுரை அரசு வழக்கறிஞரைப் போய்ப் பார்க் கச் சொன்னான். மறுநாளே விசாரித்துக் கொண்டு வழக்கறிஞரிடம் போய்ச் சேர்ந்தாள். ஒப்பாரியும், முறையிடலுமாக நெளியவைத்து விட்டாள் அவரை.

"ஏம்பாட்டி, தேக்கு மரத்தெ வெட்டிட் டாப்பில ஏன் அழற? மரந்தானெ பாக்கவுடு".

"அய்யா அதுங்க மரம் இல்லய்யா. என் வயித்துல பொறந்த பொறப்புங்க மரம். அந்தக் கொலகாரப் பாவிகளுக்கு நீதான் தீர்ப் புச் சொல் லணும்".

வாய்தாவுக்கு வாய்தா சாலம்மாளின் ஒப் பாரி அதிகமாகிக் கொண்டே போக. இனிமேல் அலுவலகம் பக்கம் வந்தால் கேசை தோற்கடித் துவிடுவேன் என்று சொல் அனுப்பிவிட்டார் வழக்கறிஞர்.

பிராது கொடுத்து மறுநாளே ரங்கமணி யின் கூட்டாளிகளுக்குத் தண்டனை கிடைத்து

விடும் என்று நினைத்தவளுக்கு இன்னும் எதுவுமே நடக்காதது அதிர்ச்சியாக இருந்தது. நடையாய் நடந்து யார் யாரையோ பார்த்துவிட்டாள். எத்தனையோ வாய்தாக்களுக்கும் போய்விட்டாள். வேறு செடிகளுக்காக இயேசுக்கார அய்யா பலமுறை சென்று பார்த்ததிலும் ஒன்றும் நடக்கவில்லை. சாலம்மாள் ஓய்ந்து விட்டாள்.

செங்கம்புதரிருந்து காடை ஒன்று புர் என பறந்து போனதும் தான் சாலம்மாளுக்கு நினைவு திரும்பியது. வெயில் உச்சிக்கு ஏறியிருந்தது. காற்றில் சலசலக்கும் மாஞ்செடிகளைப் பார்த்தபோது அவளுக்கு ஆயாசமெல்லாம் மறைந்து போனது. மிச்சமிருக்கும் மரங்களைப் பராமரிப்பதும், தண்ணீர் விடுவதும், நெட்டி முறிப்பதும், அவைகளுடன் பேசுவதுமாக இத்தனை நாட்களைக் கழித்துவிட்டாள். வயல் வரப்புகளிலும், தண்ணீர் தொரவுகளிலும் ரங்கமணியைப் பார்த்துக் கொள்ளும்படி நேர்ந்துவிடும் போதெல்லாம் அவளின் ஏளனச் சிரிப்பில் சருகுகள் மிதிபடுவதுபோல் ஆகிவிடும் சாலம்மாளுக்கு. அதைத் தவிர்க்கவும் இந்த மோட்டாங்காடே கதியென்றும் ஆகிவிட்டது அவளுக்கு. அடுத்த வருடம் மகசூலுக்கு விடும்படி மரங்கள் ஆகிவிட்டிருப்பது சாலம்மாளுக்கு சந்தோஷத்தைத் தந்தது. நாளைக்குதான் கடைசி வாய்தா, தீர்ப்பு வந்துவிடும் என்று வக்கீல் சொன்னதும் ஞாபகத்துக்கு வந்து மேலும் சந்தோஷம் தந்தது. முந்தானையால் முக்காடு போட்டுக் கொண்டு குடத்தைத் தூக்கியபடி, வீட்டுக்குப் போகும் சரிவில் இறங்கினாள் சாலம்மாள்.

கோர்ட்டு வாசல் பூவெடுத்துக் குலுங்கும் மாமரத்தின் கீழே சாலம்மாள் உட்கார்ந்திருந்தாள். வெய்யில், குட்டிகளைக் கவ்வும் பூனையென பாரித்திருந்தது. சாலம்மாளின் தேகக் கூட்டினுள் இருந்த இதயம் சிறு பிராயத்துப் பிள்ளையென ஓடியாடிக் கொண்டிருந்தது. மாமரத்தின் குதியாட்டத்தைக் கண்டதும் அடிவயிற்றில் நீர்சுழித்துப் புரள்வதுபோல் அவளுள் பொருமல் எழுந்தது. அந்த மரத்தை அவள் கைகள் மிகுந்த வாஞ்சையுடன் தழுவி நெகிழ்ந்தன. கண்களில் நீர் ஊற்றெடுத்து சொட்டிவிடத் திரண்டு தயங்கியது.

கோர்ட்டுக் கட்டிடம், மனிதர்களின் புழக்கத்துடன் களைகட்டியிருந்தது. வக்கீல்களும், காவலர்களும், மக்களும் ஓடியாடிக் கொண்டிருந்தனர். ரங்கமணியும் அவள் மச்சான்மார்களும் தூரத்தில் அமர்ந்து பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் இருப்பதை சாலம்மாள் பார்த்தாள். அவர்கள் பேசிச் சிரிப்பது தன்னைப் பற்றித்தான் என நினைத்துக் கொண்டாள் சாலம்மாள். கோபம் அவளின் வறண்ட திரேகத்துள் பரவியது. முகத்தைத் திருப்பிக் கொண்டாள். தன்னுடைய நடுவயது முதல் இந்த நாள் வரையிலாக கோர்ட்டு வாசலேயே தவம் கிடந்து விட்டது போல் எண்ணி மலைத்துக் கொண்டாள். சாலம்மாளுக்கு என்று வானத்திருந்து கூப்பிடும் குரல் போல டவாயின் அழைப்பு அப்போது கேட்டது. உள்ளே ஓடினாள் சாலம்மாள். நீதிபதி பேசினார். மரங்களை, குற்றம் சாட்டப்பட்டவர்கள்தான் வெட்டினார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அவை புதிதாக நடப்பட்டிருந்த மாஞ்செடிகள் என்பதனால் வேர் பிடிக்காமலும் செத்திருக்கலாம்.

அதைக் கேட்டதும் சாலம்மாளிடம் பேச்சில்லை. அவளின் குரல்வளை உள்ளிழுத்து கேவ ன் அவல ஓ கேட் ட து.

''அதுங்க செடிங்க இல்லய்யா. எம் புள்ளைங்க இந்த கொட்டி நம்பியிருந்தது அதுங்களைத்தான்யா".

பைத்தியமாய் பிதற்றியபடி கோர்ட்டு வாசல் மாமரத்தின் அடியிலே இருந்தாள். அவமானமும், கோபமும், துக்கமுமாக இருந்தது அவளுக்கு. அந்தச் செடிகளுக்காக எத்தனை நடை, எத்தனை படியேறல், எத்தனை முறையிடல், வயிறு பற்றிக்கொண்டது.

"ஒரு பாவமும் அறியாத பாலகனுங்க. என்ன பண்ணுச்சிங்க அதுங்களெ வெட்ட? அதுங்களுக்கு வாயிருந்தா என்னா பேசியிருக்குங்க" வீட்டுக்கு வந்தும்கூட சோறும் பொங்காமல் நடுராத்திரிவரை ஒப்பாரி வைத்துச் சன்னமாகப் பாடி அழுது கொண்டிருந்தாள்.

காலையில் எழுந்த கையோடு அடுக்களைப் பானைகளைத் தூர எடுத்துவைத்து விட்டுப் பிரிமணைகளை நகர்த்தினாள். அடியில் புதைத்திருக்கும் உண்டியல்களைத் தோண்டி எடுத்தாள். ஐந்து உண்டியல்களும் நிரம்பியும் நிரம்பாமலுமாக இருந்தன. எல்லா

வற்றையும் போட்டு உடைத்து காசுகளைச் சேர்த்தாள் சாலம்மாள். மூட்டையாக முந்தானை யில் முடிந்து கொண்டபோது பாரத்தினால் அவள் உடலே கீழ் நோக்கிக் குஞ்சியது. நேராய்ப் பக்கத்து ஊர்ப் பண்ணைக்கு விறுவிறு வென்று நடந்தாள். மாங்கன்றுகளுக்குச் சொல் விட்டுத் தன் நிலத்திற்குத் திரும்பினாள்.

வெய்யில் சுள்ளென்று உறைப்பதற்குள் பத்துப் பதினைந்து குழிகளைத் தோண்டிவிட் டாள் அவள். மண் ஆவியடித்து வாசம் கிளம்பி யது. திடீரென சாலம்மாளுக்குப் பேத்தி சிவப்பி யின் ஞாபகம் வந்தது. ஒவ்வொரு வருசமும் கோடை விடுமுறையில் சிவப்பி சாலம்மாவுடன் வந்து இருந்து போவாள். கூ நாழி என்று வருச மெல்லாம் சேர்த்த பணத்தில் சிவப்பி போகும் போது, துணிமணி என்று ஆனதைச் செய்து அனுப்புவாள் சாலம்மாள். இந்த வருசம் உண்டி யல்களை உடைத்து மாஞ்செடிகளுக்குச் சொல் விட்டது சாலம்மாளுக்கு மனம் பாரமாய் இருந்தது.

“ராசாத்தி புள்ளெ வந்து ஏமாறுமே”

ஆற்றாமையோடு தோப்பைப் பார்த்தாள் சாலம்மாள். சிலுசிலுவென்று காற்றுக்குத் துளிர் கள் ஆடிக்கொண்டிருந்தன.

“போட்டும், இந்த ஒரு வருசம். பொறகால எம்புள்ளிங்க நீங்களே பாத்துக்க மாட்டீங்களா ராசாத்தியெ”.

மாமரங்கள் காற்றுக்கு மேலும் குலுங்கின. அவள் பேச்சை கேட்டபடியே குழிந்துகொண் டிருந்தது மண்.

**- அழகிய பெரியவன்**

- மரங்கள் அழிந்து வரும் தற்போதைய சூழலில், மரங்கள் தமது அவல நிலையயை எடுத்துரைப்பது போன்று தன் வரலாறு எழுதவும்.
- சாலம்மாள் பாத்திரப்படைப்பினைத் திறனாய்வு செய்க.

## உலகின் எதிர்காலம்

நன்னீர் குறைந்து, கடல்நீர் உயர்ந்து
உலகம் மூழ்கிப்போகிறதே!
துருவங்கள் உருகி, எரிமலை கருகி
ஒன்றாய் வெடிக்கப்போகிறதே!
ஓசோன் சிதைந்து, ஓட்டைகள் நிறைந்து
அரண்கள் உடைந்து போகிறதே!
காட்டின் இடம் அழிந்து, கட்டிடங்கள் நிறைந்து,
நிலங்கள் நடுங்கிப்போகிறதே!
மண்வளம் குறைந்து, மழைவளம் குறைந்து
பூமி ஒன்றுமில்லாமல் ஆகிறதே! மனிதா!
வயல்வெளி அழித்து விண்வெளியில் வீடுகள்
கட்டுகின்றாய்!
பூமியின் நிலத்தைச் சிதைத்துவிட்டு, பிற கோள்களில்
நிலத்தை வாங்குகின்றாய்!
உலகின் நீரைக் குறைத்துவிட்டு, செவ்வாயில் நீர்வளம் தேடுகின்றாய்!
இன்னுமொரு பூமி கண்டுபிடித்து அதையும் அழிக்க முயல்கின்றாய்!
இயற்கை அளித்த உலகை நீ, செயற்கையாய்
சிதைக்க முனைகின்றாய்!
விழித்துக் கொள் மனிதா! இப்பூவுலகம் கண்மூடும்முன்பு!

**- ல.ம. ஸ்ரீராமகிருஷ்ணன்**

- *பள்ளியில் மரம் நடுவிழாவையொட்டி நடை பெறும் கவிதைப் போட்டிக்கு ‘மண்ணுக்குமர மழகு’ எனும் தலைப்பில் கவிதை ஒன்று எழுதுக.*
- *‘உலகின் எதிர்காலம்’ என்னும் கவிதையின் நயம் பாராட்டுக.*
- *நகர நாகரிகத்தில் பலியாகும் கிராமங்கள் எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.*
- *நாகரிகம் எனும் பெயரால் இயற்கையை அழித்து, வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வது குறித்து உங்கள் கருத்துகளைப் பத்திரிகைத் தலையங்கமாக எழுதுங்கள்.*
- *புவிவெப்பமடைதல், பனிச்சிகரங்கள் உருகுதல் போன்றவற்றால் ஏற்படும் பிரச் சினைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் கருத்தில் கொண்டு கருத்தரங்க அறிக்கை ஒன்று தயாரிக்க.*

அலகு
2

# அன்னை பூமி

*வம்சம் வளர்த்த மண்ணு*
*வகுத்துப் பசி தீத்த மண்ணு - இது*
*இல்லேன்னு போகுமுன்னே*
*என்னுசுரு போனாலென்ன*

## நிலமென்னும் நல்லாள்

### குறிஞ்சி

கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை
முந்து விளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல் வரை ஏறி,
அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டு, தன்
திரை அணற் கொடுங் கவுள் நிறைய முக்கி,
வான் பெயல் நனைந்த புறத்த, நோன்பியர்
கை ஊண் இருக்கையின் தோன்றும் நாடன்
வந்தனன்; வாழி - தோழி! - உலகம்
கயம் கண் அற்ற பைது அறு காலை,
பீளொடு திரங்கிய நெல்ற்கு
நள்ளென் யாமத்து மழை பொழிந்தாங்கே.

(வரைவு மந்த தோழி தலைமகட்குச் சொல்யது.)

**- நற்றிணை : 22**

- *பாடலை வாசித்துக் குறிஞ்சி நிலமக்களின் வாழ்க்கைப் பற்றிக் கலந்துரையாடிக் கருத்தை வெளியிடுக.*

### முல்லை

கார்பயம் பொழிந்த நீர்திகழ் காலை,
நுண்அயிர் பரந்த தண்அய மருங்கின்,
நிரைபறை அன்னத்து அன்ன, விரைபரிப்
புல்உளைக் கமா மெல்தின் கொளீஇய,
வள்பு ஒருங்கு அமையப் பற்றி, முள்கிய,
பல்கதிர் ஆழி மெல்வழி அறுப்ப,
கால்என மருள, ஏறி, நூல் இயல்
கண்நோக்கு ஒழிக்கும் பண்அமை நெடுந்தேர்
வல்விரைந்து ஊர்மதி - நல்வலம் பெறுந!
ததர்தழை முனைஇய தெறிநடை மடப்பிணை
ஏறுபுணர் உவகைய ஊறுஇல உகள,
அம்சிறை வண்டின் மென்பறைத் தொழுதி
முல்லை நறுமலர்த் தாதுநயந்து ஊத,
எல்லை போகிய புல்லென் மாலை,
புறவுஅடைந் திருந்த உறைவுஇன் நல்ஊர்.
கழிபடர் உழந்த பனிவார் உண்கண்
நல்நிறம் பரந்த பசலையள்
மின்நேர் ஓதிப் பின்னுப்பிணி விடவே.

**- பேயனார்.**

அகநானூறு : 234

தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்யது.

- *முல்லைநில வருணனையை வெளிப்படுத்துக.*

### மருதம்

அங்க ணகல்வய லார்ப்பிசை வெரீஇய
பைங்க ணெருமை படுகன் றோம்பிச்
செருத்தல் செற்றிய தீம்பா லயல
உருவ வன்னமொடு குருகு பார்ப்பெழப்
பாசடைப் பிற்றும் பழனப் படப்பை
அறையுறு கரும்பி னணிமடற் றொடுத்த
நிறையுறு தீந்தே னெய்த்தொடை முதிர்வை

உழைக்கவின் றெழுந்த புழற்காற் றாமரைச்
செம்மல ரங்கட் டீயெடுப் பவைபோல்
உண்ணெகிழ்ந் துறைக்குங் கண்ணகன் புறவிற்
பாளைக் கமுகும் பணையும் பழுக்கிய
வாழைக் கானமும் வார்குலைத் தெங்கும்
பலவும் பயினு மிலைவுளர் மாவும்
புன்னையுஞ் செருந்தியும் பொன்னிணர்
ஞாழலும்
இன்னவை பிறவு மிடையற வின்றி
இயற்றப் பட்டவை யெரிகதிர் விலக்கிப்
பகருள் பயக்கும் படிமத் தாகி
அகல மமைந்த வயிர்மண லடுக்கத்துக்
காறோய் கணைக்கதிர்ச் சாறோய் சா
வரம்பணி கொண்ட நிரம்பணி நெடுவிடை
உழவ ரொயுங் களமர் கம்பலும்
வளவய டையிடைக் களைகளை கடைசியர்
பதலை யரியல் பாசிலைப் பருகிய
மதலைக் கிளியின் மழலைப் பாடலும்
தண்ணுமை யொயுந் தடாரிக் கம்பலும்
மண்ணமை முழவின் வயவ ரார்ப்பும்
மடைவாய் திருத்து மள்ளர் சும்மையும்
இடையற வின்றி யிரையாறு தழீஇ
வயற்புலச் சீறூ ரயற்புலத் தணுகி
மருதந் தழீஇய மல்லலம் பெருவழி

**– கொங்குவேளிர்**
பெருங்கதை
(உஞ்சைக்காண்டம் : 141 – 170)

- *வயலும் வயல்சார்ந்த இடமுமாகிய மருத நிலக் காட்சிகளை விவரிக்க.*

## நெய்தல்

வேழம் நிரைத்து, வெண்கோடு விரைஇ,
தாழை முடித்து தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பை பறியுடை முன்றில்,
கொடுங்காற் புன்னைக் கோடுதுமித்து இயற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்தர்,
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி,
புலவுநுனைப் பகழியும் சிலையும் மான,
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்
மையிருங் குட்டத்து மகவொடு வழங்கி,
கோடை நீடினும் குறைபடல் அறியாத்
தோள்தாழ் குளத்த கோடு காத்திருக்கும்
கொடுமுடி வலைஞர் குடி........

**– கடியலூர் உருத்திரங்கண்ணனார்**
(பெரும்பாணாற்றுப்படை : 263 – 274)

***செயல்பாடு***

- *நெய்தல் பாடலில் இடம்பெறும் வலைஞர் வாழ்விடங்களை வருணிக்கவும்.*

### பண்புத்தொகை

செந்தாமரை, வட்டக்கல்
நெடுந்தூண், இன்சொல்

இவ்வெடுத்துக்காட்டுகள் பண்பின் அடிப் படையில் பிறந்த பெயர்களாகும். வண்ணம், வடிவம், அளவு, சுவை போன்ற பண்புகளை இவை முறையே கொண்டுள்ளன.

இவை விரியுமிடத்துச் செம்மையாகிய தாமரை, வட்டமாகிய கல், நெடியதாகிய தூண், இனிமையாகிய சொல் என விரியும். இவ்வாறு பண்படிப்படையில் விரியும் தொகைச் சொற்களைப் பண்புத் தொகைச் சொற்கள் எனலாம்.

- *பாடப்பகுதியில் இடம்பெறும் பண்புத்தொகைச் சொற்களைத் தொகுத்து எழுதுக.*

## புனித பூமி

''வானத்தையும் பூமியின் கதகதப் பையும் எப்படி உங்களால் வாங்கவோ விற்கவோ முடியும்? இந்த எண்ணமே எங்க ளுக்கு விநோதமாக இருக்கிறது.

''காற்றின் புத்துணர்வும் நீரின் மினு மினுப்பும் நமக்குச் சொந்தமில்லாதபோது அவற்றை நீங்கள் எப்படி வாங்க முடியும்?"

"இந்தப் பூமியின் ஒவ்வொரு அம்சமும் என் மக்களுக்குப் புனிதமானது. ஒளிரும் ஒவ்வொரு ஊசியிலையும், மணல் பரந்த ஒவ் வொரு கரையும், இருண்ட காடுகளில் கவியும்

பனிமூட்டமும், காட்டுக்குள் இருக்கும் ஒவ்வொரு வெட்டவெளியும், ரீங்காரமிடும் ஒவ்வொரு வண்டும், என் மக்களின் நினைவிலும் அனுபவத்திலும் புனிதமானவை. மரங்களுக்குள்ளே ஓடும் ஜீவரசம், சிவப்பிந்தியனின் நினைவுகளைச் சுமந்து செல்கிறது."

"இறந்துபோன எங்களவர்களின் ஆவிகளோ இந்த அழகான பூமியை ஒருபோதும் மறப்பதில்லை. ஏனென்றால் இந்தப் பூமி சிவப்பிந்தியனின் தாய். நாங்கள் இந்தப் பூமியின் ஓர் அங்கம். அது எங்களில் ஓர் அங்கம். வாசம் மிக்க மலர்கள் எங்கள் சகோதரிகள். மானும், குதிரையும் பெருங்கழுகும் எங்கள் சகோதரர்கள். பாறை மலைமுகடுகள், புல்வெளிகளில் படிந்திருக்கும் பனித்துளிகள், குதிரைக் குட்டியின் உடல்வெப்பம், மனிதன் எல்லாமே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை."

"ஆகவே, எங்கள் நிலத்தை வாங்க விரும்புவதாக வாஷிங்டனில் இருக்கும் பெருந்தலைவர் சொல்யனுப்பும்போது எங்களிடம் மிக அதிகம் எதிர்பார்க்கிறார். நாங்கள் சௌகரியமாக வாழ்வதற்கென்று எங்களுக்கு ஓர் இடத்தை ஒதுக்கித் தருவதாகப் பெருந்தலைவர் சொல்யனுப்புகிறார். அவர் எங்கள் தந்தையாகவும் நாங்கள் அவருடைய குழந்தைகளாகவும் இருப்போமாம். ஆகையால், எங்கள் நிலத்தை வாங்குவதென்ற அவரது யோசனையை நாங்கள் பரிசீக்க வேண்டுமாம். ஆனால் அது ஒன்றும் எளிதானதல்ல. ஏனென்றால், இந்த நிலம் எங்களுக்குப் புனிதமானது.

"ஓடைகளிலும், ஆறுகளிலும் பளபளத்து ஓடும் நீர், வெறும் நீரல்ல, அது எங்கள் மூதாதையரின் ரத்தம். நாங்கள் உங்களுக்கு எங்கள் நிலத்தை விற்பதானால் அது புனிதமானது என்பதை நீங்கள் நினைவிருத்த வேண்டும். அது புனிதமானது என்பதையும், ஏரிகளின் தெளிந்த நீரில் விழும் ஒவ்வொரு நிழலும் எங்கள் மக்களின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளையும் நினைவுகளையும் சொல்கிறது என்பதையும் உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் சொல்த்தர வேண்டும். நீரின் முணுமுணுப்பு என் தந்தையின் குரலாகும்."

"ஆறுகள் எங்கள் சகோதரர்கள்; அவை எங்கள் தாகத்தைத் தணிக்கின்றன. ஆறுகள் எங்கள் தோணிகளைச் சுமந்து செல்கின்றன; எங்கள் குழந்தைகளைப் போஷிக்கின்றன. நாங்கள் எங்கள் நிலத்தை உங்களுக்கு விற்பதனால் ஆறுகள் எங்களுக்கும் உங்களுக்கும் சகோதரர்கள் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். உங்கள் குழந்தைகளுக்கும் கற்றுத்தர வேண்டும். ஒரு சகோதரனிடம் நீங்கள் காட்டும் பாசத்தை இப்போதிருந்து நீங்கள் ஆறுகளிடமும் காட்ட வேண்டும்."

"எனக்குத் தெரியவில்லை. எங்கள் வாழ்க்கை முறைகள் உங்களுடைய வாழ்க்கை முறைகளிருந்து மாறுபட்டவை. உங்கள் நகரங்கள் சிவப்பிந்தியனின் கண்களைக் குத்துகின்றன. ஒருவேளை சிவப்பிந்தியன் காட்டாள், அவனுக்கு இதெல்லாம் புரிவதில்லை என்பதால் இப்படி இருக்கலாம்."

"நகரங்களில் அமைதியான இடமேதும் இல்லை. வசந்த காலத்தில் இலைகள் துளிர்ப்பதையோ ஒரு வண்டின் சிறகு சரசரப்பதையோ கேட்கக்கூடிய இடமேதும் இல்லை. ஒருவேளை இதுவும், நான் ஒரு காட்டாள், எனக்கு இதெல்லாம் புரிவதில்லை என்பதாலோ! நகரங்களின் இரைச்சல் செவிகளையே அவமானப் படுத்துவதாக இருக்கிறது. ராக்குருவியின் ஏகாந்தக் குரலையோ, இரவில் குளத்தைச் சுற்றித் தவளைகள் நடத்தும் வாக்குவாதங்களையோ கேட்க முடியாத மனிதனின் வாழ்வென்ன வாழ்வு? நான் ஒரு சிவப்பிந்தியன், இதெல்லாம் எனக்குப் புரிவதில்லை. குளத்து நீரைத் தொட்டபடி விரையும் காற்றின் மென்மையான ஒயும் நண்பகல் மழையினால் கழுவப்பட்ட அல்லது பைன் மரத்தினால் மணமூட்டப்பட்ட காற்றின் கந்தமும் சிவப்பிந்தியனுக்கு விருப்பமானவை."

"காற்று, சிவப்பிந்தியனுக்கு அருமையானது. ஏனெனில் விலங்கு, மரம், மனிதன் எல்லாமும் பகிர்ந்து கொள்வது ஒரே காற்றைத்தான். ஆனால் நாங்கள் எங்கள் நிலத்தை உங்களுக்கு விற்பதானால், இந்தக் காற்று எங்களுக்கு அருமையானது என்பதையும், அது, தான் வாழ வைக்கும் எல்லா ஜீவராசிகளுடனும் தன் ஆன்மாவைப் பகிர்ந்து கொள்கிறது என்பதையும் நீங்கள் நினைவில்கொள்ள வேண்டும். எங்கள் பாட்

டனாருக்கு அவருடைய முதல் மூச்சைத் தந்த காற்று, அவருடைய இறுதி மூச்சை வாங்கிக் கொள்ளவும் செய்கிறது. நாங்கள் உங்களுக்கு எங்கள் நிலத்தை விற்பதானால், புல்வெளியின் மலர்களால் இனிமையாக்கப்பட்ட காற்றை அனுபவிப்பதற்கு, வெள்ளைக்காரனும் போகக் கூடிய ஒரு தனியான, புனிதமான இடமாக நீங்கள் அதனை வைத்துக்கொள்ள வேண்டும்."

''ஆக, எங்கள் நிலத்தை வாங்கும் உங்கள் யோசனையை நாங்கள் பரிசீப்போம். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடிவு செய்தால், நான் ஒரு நிபந்தனை விதிப்பேன். இந்த மண்ணிலுள்ள விலங்குகளைத் தனது சகோதரர் களாக நடத்த வேண்டும்."

''நான் ஒரு காட்டாள்; வேறு எந்த வழியும் எனக்குப் புரிவதில்லை. ஓடும் ரயில் இருந்து வெள்ளைக்காரன் சுட்டுக்கொன்ற ஓராயிரம் எருமைகள் புல்வெளியில் கிடந்து அழுகுவதை நான் பார்த்திருக்கிறேன். நான் ஒரு காட்டாள்; உயிர் வாழ்வதற்காக மட்டுமே நாங்கள் கொல்லும் எருமையைவிடப் புகை கக்கும் இரும்புக் குதிரை எப்படி அதிக முக்கி யத்துவம் பெற்றிருக்கும் என்பது எனக்குப் புரி யவில்லை."

"விலங்குகள் இல்லையேல் மனிதன் எங்கே? விலங்குகள் எல்லாம் மறைந்து விட்டால், மனிதன் மிகுந்த தனிமைக்குள்ளாகி மடிந்துவிடுவான். ஏனென்றால், விலங்குகளுக்கு என்ன நேர்கிறதோ அது விரைவில் மனிதனுக் கும் நேரும். எல்லாமே ஒன்றோடொன்று இணைந்தவை."

"உங்கள் குழந்தைகளின் பாதங்களின் கீழ் உள்ள நிலம் எங்கள் பாட்டனாரின் சாம்பல் என்பதை அவர்களுக்கு நீங்கள் சொல்த்தர வேண்டும். எங்கள் இனத்தவரின் ரத்தத்தாலும் சதையாலும் செழுமை பெற்றது இம்மண் என் பதை உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். அப்போது அவர்கள் இம்மண்ணை மதித்து நடப்பார்கள். இப்பூமியே நம் தாய் என்பதை நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்த் தருகிறோமே, அதுபோல நீங்களும் உங்கள் குழந்தைகளுக்குச் சொல்த்தாருங்கள். பூமிக்கு என்ன நேர்கிறதோ, அது பூமியின் மைந்தர்களுக்கும் நேரும். பூமியின் மீது மனி தர்கள் காறி உமிழ்வது தங்கள் மீதே காறி உமிழ்ந்து கொள்வதாகும்."

"நாங்கள் இதனை அறிவோம்; பூமி மனி தனுக்குச் சொந்தமல்ல, மனிதன்தான் பூமிக்குச் சொந்தம். நாங்கள் இதனை அறிவோம். ஒரு குடும்பத்தை ஒன்றிணைக்கும் ரத்தத்தைப்போல் எல்லாப் பொருட்களும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. பூமிக்கு நேர்வதெல்லாம் பூமி யின் மைந்தர்களுக்கும் நேரும். மனிதன் பின் னவில்லை உயிர்களாகிய வலையை, அவன் அதில் ஓர் இழையே, வலைக்கு என்ன செய்கிறானோ அதைத் தனக்கும் செய்து கொள்கிறான்."

"எங்கள் எருமைகளெல்லாம் கொல்லப் படும்போதும், காட்டுக்குதிரைகள் அடக்கப்படும் போதும், காட்டின் அந்தரங்கப் பகுதிகள் ஏரா ளமான மனிதர்களின் வாடையால் நிரப்பப்படும் போதும், செழிப்பான மலைகளின் காட்சி, பேசும் கம்பிகளால் மறைத்துக் கெடுக்கப்படும்போதும் எங்களுக்குப் புரிவதில்லை. புதர்க்காடு எங்கே? மறைந்துவிட்டது! கழுகு எங்கே? மறைந்து விட்டது! வாழ்வின் முடிவு; உயிர்ப் பிழைப்பின் தொடக்கம்..."

**மொழிபெயர்ப்பு- கவிஞர் புவியரசு**

மறுபடியும் (கட்டுரைகள்)

- *"உங்கள் குழந்தைகளின் பாதங்களின் கீழ் உள்ள நிலம் எங்கள் பாட்டனாரின் சாம்பல்" - இக்கூற்று மண்ணுக்கும் மனித னுக்குமுள்ள உறவை எவ்வாறு விளக்கு கிறது?*

# உயிர் மண்

## வயலும் வயல் சார்ந்த இடமும்

தண்டலை மயில்கள் சாக
தாமரைக் குளங்கள் காய
கொண்டலும் பயிர்கள் வாழக்
கொடுத்தநீர் குறைந்து போக
வண்டிகள் சுமக்க வாரி
வழங்கிய வயல்கள் இன்று
அண்டிய உழவன் வீட்டு
அடுப்புபோல் காய்ந்த தம்மா!

கய னம் சுமந்த ஓடை
கழிவுநீர் சுமக்க லாச்சு
வயல்களில் மேய்ந்த மாடு
வண்டியில் ஏற லாச்சு
கரைமரம் நிறைந்த ஏரி
கட்டிட மனைகள் ஆச்சு
உரைதிணை மருதம் இங்கு
உருத்தெரி யாமல் போச்சு!

நெற்களம் மட்டைப் பந்தின்
நேர்திடல் ஆன திங்கே
புற்களைச் சுமந்த பூமி
புதுப்புது நோய்க்குள் ளானாள்
சொற்களால் பெருமை யன்றி
சோகமே உழவன் சொத்து
தற்கொலை மூன்று போகம்
தவறாமல் விளையு தம்மா!

விலங்குகள் பறவை மற்றும்
விரிபுவி உயிர்கள் எல்லாம்
தொலைந்துதான் போன தன்றி
தோற்றது உழவர் வாழ்வும்

மலர்ந்திடும் அணுஒப் பந்தம்
மாறிடும் நூறு ஆட்சி
உலர்ந்திடும் மருதம் கண்டு
உணர்ச்சி நீ கொள்வாய் தோழா!

**- பாவலர் வையவன்**

- *இக்கவிதையின் மையக்கருத்தை எடுத்துரைத்து நயம் பாராட்டுக.*

## மண்ணின் மகன்

வெறிச்சோடிய விரிந்து பரந்த இந்த வானும் கரையில் வந்து மோதித் திரும்பிச் செல்லும் அலைகள் எழும்பும் ஓசையும் இதற்கு முன்பே பழக்கப்பட்டிருப்பதைப் போன்ற ஒரு பிரமை...

வேலை மாற்றலாகி, முதல் முறையாய் வந்திருக்கும் இந்த இடம் முன்பே பரிச்சயமான தாய்த் தோன்றும் இந்த விசித்திர மனமயக்கம்...

பஸ்ஸிருந்து இந்தக் கடற்கரையில் இறங்கி ஆபீஸும் குவார்ட்டேர்ஸும் ஒன்றாய் இயங்கும் அதோ தெரியும் சிறு கட்டிடத்தில் போய்ப் பெட்டி படுக்கையைப் போட்டு விட்டு இங்கே வந்து இப்படி உட்கார்ந்திருக்கையில்...

மனதில் வந்துகவியும் இன்னதென்று தெரியாத அந்நியமான உணர்வுகள்.

நாளைக் காலையில் எட்டுமணிக்கு வேலையில் டியூட்டி ரிப்போர்ட் பண்ணி விட்டால், பிறகு மீண்டும் யந்திர வாழ்க்கை.

தொலைவில் மும்முரமாய் இயங்கிக் கொண்டிருக்கும் யந்திரங்கள், ஆழத்தில் மணலை வாரி வரிசையாய் நிற்கும் லாரிகளில் நிறைக்கும் க்ரேன்கள்.

இதோ நான் உட்கார்ந்திருக்கும் இந்த இடம் மட்டுமே இந்தக் கடற்கரையில் கடன் மட்டத்தில் இப்போது மிஞ்சியிருக்கிறது. மீதி இடத்திருந்தெல்லாம் மணல், ஏற்கனவே அப்புறப்படுத்தப்பட்டு விட்டது.

இன்னும் சில நாட்களில் இதுவும்...!

நீர்த்திவலைகளை அள்ளிக்கொண்டு வரும் காற்றின் குளிர் உடம்பில் உறைக்கத் தொடங்கிவிட்டது. அறைக்குப்போய் முடங்கி விடக் கெஞ்சும் உடம்பு... எழுந்திருக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது மீண்டும் வீசியடிக்கும் வாடைக்காற்று.

கம்மென்று வந்து கமழும் பாலைப் பூ மணம்.

இந்தக் கடற்கரையில் இவ்வேளையில் இந்த மணம்?

யாரோ பின் பக்கம் வந்து நிற்பதைப் போன்ற உணர்வு...

திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தபோது, ஊமை நிலவில் ஓர் இளைஞன்.. முகம் சரிவரத் தெரியவில்லை.

"சார்! நீங்கதான் அற்புதராஜ் சாரின் இடத்திற்கு புதுசா வந்திருக்கும் சயன்டிபிக் ஆபீசரா?"

"ஆமா நீ யாரு?"

"இங்கே பக்கத்தில்தான் இருக்கிறேன்."

சற்று நீங்கி அவன் உட்கார்ந்து கொண்டான்.

"ஏன் சார்! இந்தக் கடற்கரை மணல் முழுவதையும் இப்படிப் பதினைஞ்சடி ஆழத்தில் தோண்டியெடுத்து வாரிக்கொண்டு போறீங்களே, இந்த ஜனங்களின் பரிதாப நிலைமையை மட்டும் நீங்க யாரும் நினைச்சுப் பார்க்காமல் இருக்கீங்களே, இது நியாயம்தானா?"

"என்ன தம்பீ. பக்கத்தில்தான் இருக்கேண்ணு சொல்றே. அப்படியிருந்துமா ஒண்ணும் தெரியாதது போல் இப்படிக் கேக்கிறே? எத்தனையோ மாசங்களா சர்வே ஆராய்ச்சி எல்லாம் நடந்து முடிஞ்சு அப்புறம் இங்கேயிருந்து மணல் வாரத் தொடங்கி இப்ப ரெண்டு வருஷத்துக்குமேல் ஆயிடுச்சு. ஊருக்குப் புதுசான ஆளுபோல நீ இப்படி எங்கிட்டே கேட்டால்?"

இந்தக் கடற்கரை மணன் மகிமை, சீமையைப்போய்ச் சேர்ந்தது பற்றிக் கர்ண பரம்பரையாய்க் கேட்க நேர்ந்த செய்தி ஞாபகம் வருகிறது.

செழிப்பாய் வளரும் தென்னை மரங்களுக்குப் பெயர்போன இந்த ஊரிருந்து முன்பு ஏற்றுமதி செய்யும் வடத்தின் கயிற்றின் எடையைக் கூட்டிக்காட்ட உள்ளூர் வியாபாரிகள் இந்த மணல் புரட்டியெடுத்து அனுப்ப, யதேச்சையாய் சீமையில் கப்பருந்து இறக்குகையில் நடத்திய பரிசோதனையில் கதிரியக்க உலோகம் அடங்கியிருப்பது கண்டுபிடிக்கப் பட்டு, பிறகு இந்த மண்ணுக்கு வந்தயோகம்...

"சார், நீங்க சொல்றாப்போல் இந்த ஊருக்கு யார் யாரெல்லாமோ புதுசு புதுசா... ஆளுங்க வந்து மணலை அள்ளிக்கிட்டுப் போனாங்க. ஆழமாத் தோண்டிப் பாத்தாங்க. அதையெல்லாம் இந்த ஊர்வாசிக, ஏழைக் குடியானவங்க, செம்படவங்க நாங்க பாத்துக்கிட்டுத் தான் இருந்தோம். இல்லேண்ணு சொல்லலே. ஆனா, யாருமே விஷயம் என்னாண்ணு நெஜத்தை எங்ககிட்டெ வாயைத் தொறந்து சொல்லலே. சாக்குப் போக்குச் சொல் சமாளிச்சாங்க. கடைசியில் க்ரைன், மெஷீன் லாரி வந்து மணலை வாரத்தொடங்கின அப்புறம்தான் உள்ளதைப் புரிஞ்சுக்கிட்டோம்."

அதன்பின் 'நெடுநாள்' இங்கே நடந்த ரகளை இலாகாவில் எல்லோருக்கும் தெரிந்தது தானே! ஒன்று சேர்ந்து மறியல் செய்தார்கள். ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கடைசியில் இலாகா அதிகாரிகள், அரசியல்வாதிகள், உள்ளூர் மக்கள் பிரதிநிதிகள் இவர்களின் இடையில் பல நாட்கள் நடந்த பேச்சுவார்த்தையின்படி எல்லாம் சுபமாய் முடிவு பெற்றது. அதன்படி, இந்த மணல் வாரலால் இடம் இழந்தவர்களுக்குப் பதிலுக்கு வேறு இடம் கொடுப்பது, தொழிலும் வேறு வருமான மார்க்கங்களும் இழந்து போனவர்களுக்கு இங்கே இது சம்பந்தமான வேலைகளில் முதடம் கொடுப்பது போன்ற விதிகள் இரு தரப் பாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப் பட்டுக் கொண்டிருக்கிறதே..

இப்போது, பக்கத்து மாதாகோயில் மணியோசை திடீரென்று கேட்ட ஒ வீச் சினாலா, இல்லை வெடவெடக்கும் குளிர் காரணமாகவா இந்த இளைஞரின் நடுக்கம்...?

சற்றுத் தொலைவில் நிழல் கோலமாய் ஒண்டியாய்த் தலை தூக்கி நிற்கும் மாதா

கோயின் மங்கிய தோற்றம் ஊமை நிலவில்...

நான் அறிஞ்ச வரையில் இந்த சர்ச் சைக் கூட அப்படியே விட்டு வைக்கவும் அப்ப டீண்ணு நீங்க போட்ட கண்டிஷனைக் கூட சம் மதிச்சிருக்கோமே, அப்புறம் என்ன?

அவன் சிரிப்போசை...

வீடும் குடியுமெல்லாம் குளம் தோண்டப் பட்டு, இழந்து, செனங்க குடிபெயர்ந்து போன பிறகு இங்கே மிஞ்சியிருக்கும் சாமிக்கு பாதிரி யார் மட்டும்தான் தொணை.

ஏன்...? ரொம்பப் பேருங்களுக்கு இங்கேயே வேலை கொடுக்கப்பட்டிருக்குதே... அவுங்களுக்குப் பிரார்த்தனை செய்ய வசதியா இருக்காதா?

இப்போது, பிரமாண்டமான ஒரு கறுத்த விலங்காய் நீண்டு நிமிர்ந்து கிடக்கும் சமுத்திரத் தின் மறுமுனையில் தொடுவான விளிம்பில் மின்னல் வெளிச்சம், கூட ஓடி வரும் இடி யோசை...

மழை பெய்யப்போகுது போருக்குது. அதுதான் இத்தனை குளிர்.

நான் எழுந்தேன்.

அவனும் எழுந்தான்.

இப்போதும், முகம் இருளில் தெரிய வில்லை. ஆனால் நல்ல ஆஜானுபாகு என்பது மட்டும் தெரிகிறது.

மெல்ல நடந்து கொண்டிருந்த என் பின்னால், சற்று நீங்கிக் கூடவே வந்து கொண் டிருக்கும் அவன் குரல்.

“கடற்கரை மணலையெல்லாம் இப்படி பத்து பதினைஞ்சடிக்குத் தோண்டி லாரியில் அள்ளிக் கிட்டுப் போனா கடல் ஊருக்குள்ளையே ஏறி வருவதை உங்க இலாகா ஏன் புரிஞ்சுக்க மாட் டேங்குது? குறிப்பா, மழைக் காலத்தில் இந்த ஊரே கடலுக்குள்ளே போய்விடுதே...”

அவன் குரல் கோஷமாய் உயர்ந்தது போல்...

‘‘தம்பீ... இந்த மண்ணின் மகன் உன் கோபத்தையும் தாபத்தையும் புரிஞ்சுக்க என்னால் முடியுது. ஆனா... இந்த ஊரைச் சேர்ந்த உங்க ளுக்கு நேர்ந்த இந்த கஷ்ட – நஷ் டங்களிலும் நாட்டுக்குச் சில நன்மைகள் விளைந்திருப்பதை நீ ஏன் எண்ணிப் பார்க்கவில்லை?”

மீண்டும் இருளில் அவன் சிரிப்பு.

‘‘நீங்க எதைச் சொல்லுறீங்கண்ணு எனக்குத் தெரியும். உங்களுக்கு முந்தி இங்கே இருந்த அற்புதராஜூம் அவன் கூட்டாளிகளும் அதைச் சொல்த்தான் எங்களை வஞ்சித் தாங்க...”

“அவுங்க என்ன சொன்னாங்க?”

அணுசக்தி நம் நாட்டில் தொழில் கூடங்களை உருவாக்கும், வெளிச்சம் தரும், நோய் சிகிச்சைக்குப் பயன்படும்.

அதெல்லாம் மொத்தத்தில் நம் நாட்டுக்கு! ஆனா, குறிப்பா இந்த ஊருக்குக் கிடைக்கும் பெரிய ஒரு நன்மை இருக்கு! இங்கே இருக்கும் இந்த மணல் கதிரியக்க லோகம் கலந்திருந்த தால் இந்த ஊர் குழந்தைங்க, பெரியவங்களில் பர வலாய்த் தென்பட்ட ஊனம், புற்றுநோய் போன் றவை இனி நாளாவட்டத்தில் குறைந்துவிடும். கார ணம், இப்ப நாங்க இங்கிருந்து அள்ளிக்கொண்டு போகும் மணல் இருந்த அந்தக் கதிரியக்க லோகம் மோன சைட்டை அப்புறப்படுத்தி விட்டு மறுபடியும் இதே மணலை இதே இடத்தில் கொண்டு போட்டு விடுவோம். அப்புறம் இந்தப் பள்ளங் கள் நிரம்பிவிடும். கதிரியக்க அபாயமும் நீங்கி விடும்.

சார், நீங்க சொல்ற இந்த நன்மை யெல்லாம் எத்தனை வருசங்களுக்கு அப்புறம் நடக்கபோகும் காரியங்க. அதுவரை ஏழை சனங்க இந்தக் கொடுமையெல்லாம் தாக்குப் பிடிச்சு உயிரோட இங்கே இருக்கணுமே.... அதை என்னான்னு கேட்டா அப்படிக் கேட்ட வனையும் விட்டுவைக்கமாட்டீங்க...

சர்ச்சின் முன் ஒரு கணம் நின்று உள்ளுக்குள் இறைவா என்று பிரார்த்தித்துக் கொண்டேன்.

மீண்டும் நடந்தேன். இப்போது மௌ னம். அவன் குரல் கேட்கவில்லை. திரும்பிப் பார்த் தபோது புதைகுழிக் கல்லறைகள் மட்டும் மங் கிய நிலவில்...

அவனைக் காணோம்...

சற்றுக் கூட நடந்தபோது எதிரில் வாட்ச் மேன் சாமுவேல் வந்து கொண்டிருந்தான்.

''அதுக்குள்ளே எங்கே சார் போயிட்டீங்க... பக்கத்து ஊரில் போய் டிபன் வாங்கிட்டு வந்திருக்கேன். மழைவேறு பெய்யப் போகுது. சீக்கிரம் வாங்க..."

அறைக்கு வந்து டிபன் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் சாமுவேல் சொன்னான்.

''சார் நீங்க டியூட்டியில் சேர வந்த உடனேயே சொல்ல வேணாமுண்ணுதான் இருந்தேன். ஆனா கடற்கரையில் நீங்க ஒண்டியா ஒக்காந்திருந்த எடத்தை நான் இங்கேருந்து பார்த்தேன். அதுதான் அங்கே ஓடியாந்து கொண்டிருந்தேன்."

"ஒண்டியாகவா? கூட இருந்த ஆளை நீ பார்க்கல்லையா?"

அவன் முகத்தில் ஓர் மிரட்சி.

"சார்... எதுக்கும் இனி இப்படி ஒண்டியா அங்கே போய் ஒக்கார வேணாம்?"

என் முகத்தில் த்வனித்த கேள்விக் குறியைப் பார்த்துவிட்டு அவனே குரலைத் தாழ்த்திச் சொன்னான்.

இந்த ஊரில் மணல் வாருவதை எதிர்த்து ரகளை நடந்துகிட்டிருந்தது உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். அதில், முக்கியப் பங்கு வகிச்சவன் அந்தோணி, இந்தக் கிராமத்திலேயே நாலு எழுத்து படிச்ச அவன் மீது எல்லோருக்குமே ரொம்ப மதிப்பு, மரியாதை, அன்பு.... ரகளை முடிஞ்சபிறகு அவனுக்கு இங்கேயே வேலை கொடுத்தாங்க... ஆனா... அதன் பிறகும்... இங்கே அப்படி வேலை பார்க்கும் மத்தவங்களையும் சேத்துக்கிட்டு அடிக்கடி மோதல்கள். அப்போதுதான், ஒருநாள் ராத்திரி ஷிப்ட்டு மணல் ஏத்திக்கிட்டு இருந்த லாரி ஏறி, இப்ப நீங்க ஒக்காந்திருந்தீங்க இல்லையா, அந்த இடத்தில் வைச்சு அவன் மரணம். அதில் அற்புதராஜ் சாரின் கை உண்டுண்ணு சொல்க்குறாங்க. அந்தோணியை அந்தச் சர்ச்சின் பக்கத்தில்தான் சார் ஊர் ஜனங்க எல்லோரும் கண்ணீர் விட்டபடி பொதைச்சாங்க. சரிங்க சார். ரொம்ப நேரமாச்சு. படுத்துக்குங்க...

**– நீல. பத்மநாபன்**

- *'மண்ணின் மகன்' எனும் இச்சிறுகதையை வாசித்து உங்கள் கருத்துகளைத் தொகுத்துக் குறிப்பு தயார் செய்க.*

## தொலைந்த மண்

எங்கே சென்றது ஈர மண்?

நூற்றாண்டுகளின் செயலால்
நதிகளின் நீரோட்டம்
குவித்துச் சேமித்த
மணற் பெருக்கம்
எங்கே சென்றது?

வானளாவி நிற்கும்
உயர் கட்டடங்களின்
உறுதியற்ற அடித்தளத்தில்
அமுங்கியதோ?

வடித்து வைக்கப்பட்ட
நதிப் படலத்தினின்றும்
அத்துமீறி
வார்க்கப்பட்டதோ?

வறண்ட நிலங்களின்
பிடிப்பற்ற பரப்பெங்கிலும்
பாகாய்த் தகிக்கிறது
மஞ்சள் பூமி
இயற்கை நீர்நிலைகள்
சீர்குலைத்த
மனிதச் செயல்பாட்டால்
இன்று
தூர்த்துவிட்ட நீரூற்றுகளும்
நதி தேடிக் கலக்கவரும்
காட்டாற்று வெள்ளமும்
ஈர மண்ணின் ஈர்ப்பற்று
மெல்ல
நகர்ப்புறம் நோக்கிய
முற்றுகை துவங்கும்
ஏய்க்கப்பட்ட கடுஞ்சினத்துடன்.

**– விஜய் கங்கா**

- *கவிதையை வாசித்து, "நிலத்தின் வாழ்வாதாரங்கள்: நேற்று! இன்று! நாளை!" என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்று நிகழ்த்துக.*

# வேண்டாம் வியாபாரம்

## வானம் பார்த்த பூமி

வஞ்சிமுத்துவிற்கு எப்பொழுதும் சரசு நினைவுதான். சரசுவின் நினைவு நாளுக்கு மகள், மருமகன், பேரன், பேத்திமார்கள், உறவினர்கள் எல்லாரும் வந்து சாமி கும்பிட்டனர். முன்னோர் வழிபாடு என்பதை நல்ல முறையில் செய்து வந்தார் வஞ்சிமுத்து. வழிபாட்டிற்குப்பின்பு எல்லாரும் சாப்பிடச் சென்றனர். வஞ்சி முத்துவை அழைத்து 'நீங்க முதல் சாப் பிடுங்க' என்று குப்பண கவுண்டர் சொன்னார். 'நீங்க எல்லாரும் சாப்பிடுங்க. நான் பிறகு சாப் பிடுகிறேன்' என்றார் வஞ்சிமுத்து. அனைவரும் சாப்பிட்டு முடிந்து வாசல் அமர்ந்தனர். அப் பொழுது ரேவதியை அழைத்தார் வஞ்சிமுத்து.. ஓடி வந்த மகள் 'என்னுங்க அப்பா' என்றாள். வமாக நீ வைச்சுக்கோ. 'மண்தான் என் உயிர்' என வருந்திப் புலம்பினார். 'நீங்க கவலைப்பட வேண்டாம் அப்பா. நான் எல்லாத்தையும் பார்த்துக்கிறேன். நீங்க ஆஸ்பத்திரிக்குப் போகலாம் புறப்படுங்க, டாக்டரிடம் உங்க உடம் பைக் காட்டலாம். உங்க உடல் பலவீனம் அடைந்துவிட்டது அப்பா. நீங்க நல்ல முறையில் சாப்பிடணும். உடம்பைக் கவ னித்துக்கொள்ள வேண்டும். இனிமேல் உங்க ளைத் தனியாக விட்டுட்டுப் போக மாட்டேன்' என மகள் ரேவதி தந்தைக்கு ஆறுதல் கூறி னாள். வஞ்சிமுத்து வாழ்க்கையில்தான் எத் தனை சோதனைகள், இடைஞ்சல்கள், ஏமாற்றங் கள், கஷ்டங்கள். ஆனால் இப்போதைக்கு உள்ள கஷ்டம்தான் அவருக்கு மிகுந்த வேத



'மயக்கம் வருவதுபோல இருக்குது. என்னை கட் டில் படுக்க வைத்துவிடு' என்றார். உடனே குப்பண்ணகவுண்டர் கைத் தாங்கலாக அழைத் துச் சென்று கயிற்றுக் கட்டில் படுக்க வைக்க, சில நிமிடங்களில், 'உங்க அம்மா என்னைக் கூப் பிடறா. நானும் போகலாம் என்று நினைக்கிறேன்' என மகளிடம் கூறினார் வஞ்சிமுத்து. 'ஆனால் நான் போயிட்டா வானம் பார்த்த பூமி விலைக்கு விற்றுப்போடாதையம்மா. என் நினைவுச் செல் னையாக இருந்தது. பேரன் பேத்திமார்கள் விளையாடிக்கொண்டிருக்க அதைப் பார்த்துக் கொண்டே யாருடனும் பேசாமல் உறங்கிக் கொண்டிருந்தார் வஞ்சிமுத்து. சரசுவின் நினைவு நாளுக்கு வந்தவர்கள் எல்லாரும் சாப்பிட்டுச் சென்றனர். சிலர் வஞ்சிமுத்துவிடம் நலம் விசாரித்துச் சென்றனர். இப்படி அன்றைய நாள் போய்விட்டது. நாட்களைக் கழிப்பது என்பதே மிகவும் கஷ்டமாக உள்ளது.

வஞ்சிமுத்து மனவேதனையில் பாதிக் கப்பட்டுக் காலத்தைக் கழித்து வந்தார். சில தினங்களில் இறந்துபோக வேண்டும் என்ற நினைவில் வாழ்ந்து கொண்டிருந்தார். வஞ்சி முத்து 'மயக்கம் வருகிறது' என்றார். குப்பண்ண கவுண்டர், மகள், மருமகன் எல்லாரிடமும் 'வானம் பார்த்த பூமியை வித்துப்போடாதீங்க. இதுதான் என் நினைவில் நிழலாடும் மண்' என்று சொல்க்கொண்டே அவர் உயிர் பிரிந் தது. ரேவதி, அப்பாவின் இறப்பை நினைத்து அழுதுகொண்டே இருந்தாள். ஊரே மிகவும் துயரத்தில் கிடந்தது. ரேவதி, அப்பாவை நினைத்து ஒப்பாரி பாடினாள்.

பெண்கள் எல்லாம் ஒப்பாரி வைத்து அழுதுகொண்டிருந்தனர். நல்லதுக்குப் போகாட் டியும் கெட்டதுக்குப் போக வேண்டும் என்று வஞ்சிமுத்துவின் பங்காளிகள், உறவினர்கள் எல்லாரும் வந்துவிட்டனர். வஞ்சிமுத்து இறந்தவு டன் கட்டி ருந்து இறக்கித் தரையில் போட்டுத் தேங்காய் பழம் உடைத்து வைத்துச் சாமி கும்பிட்டுப் பின்னர் இழவு கண்டார்கள். தூய ஆடை உடுத்தி வாய்ப்பூட்டுக் கட்டினார் கள். பின்னர் கண் இமையை மூடி வைத்தார் கள். அதன்பிறகு உற்றார், உறவினர் எல்லாரும் கதறி அழுதார்கள். ரேவதியைப் பெண்கள் ஒரு வருக்கொருவர் கட்டிப்பிடித்து ஒப்பாரி வைத்து அழுதனர்.

வஞ்சிமுத்துவின் வீட்டாரும் பங்காளி கள் அனைவரும் வரிசையாக நின்றனர். உற வினர் அனைவரும் வந்து துக்கத்தில் பங்கெ டுப்பதன் அடையாளமாய் அவர்களது கையைத் தொட்டுச் சென்றார்கள். இறந்த உடனே பிணத்தை எடுக்கவில்லை. இரவெல் லாம் போட்டிருந்து உற்றார், உறவினர் எல்லோரும் அழுது தீர்த்த பின் அடுத்த நாள் பிணத்தை எடுத்தனர்.

ரேவதி, அப்பாவிற்குத் தேர்கட்ட ஆசைப்பட்டாள். அப்பொழுது ஊரில் உள் ளவர், அம்மாவுக்குத் தேர் கட்டவில்லை அத னால் இவருக்கும் தேர் கட்டக்கூடாது என்று கூறினார்கள். வஞ்சிமுத்துவின் பங்காளிகள் வெள்ளாடையால் பந்தம் பிடித்தனர். பங்காளி களை எல்லாம் வரச் சொல்யும், பேரன் பேத்தி மார்களை அழைத்தும் நாவிதன் எல்லாரையும் எண்ணெய் வைக்கச்சொன்னான். அவர்களை எல்லாம் வாக்கரிசி போடச்சொல்யும், பொட்டு வைத்தும், இந்தச் சீர்கள் நடக்கும்போது யாரும் அழக்கூடாது என்றான். அதன் பின்பு அரப்புத் தேய்த்துக் குளிப்பாட்டிவிட்டான். பின்னர் கிணற்று நீரைக் கொண்டு வந்து வஞ்சிமுத்து உடல் ஊற்றிக் குளிப்பாட்டினர். உடன் அர ணாக்கயிறு உட்பட எல்லாவற்றையும் அகற்றி விட்டனர். பின்பு கோடிபோட்டு 'நெற்றியில் சந் தனப் பொட்டு வைத்துக் காலணாவைப் பதித் து அப்பொழுது காசுபணம் ஈட்டியவர் கால் ரூபா யுடன் சுடுகாடு வரை போகட்டும்' என வைத்து வஞ்சிமுத்து உடலை எடுத்தனர்.

அதை எல்லாம் பார்த்துக்கொண்டு இருந்த ரேவதி வருந்தி அழுதாள். பின்னர் மூன்றாவது நாள் கருப்பு நடைபெறுகிறது. அதற்கு உற்றார் உறவினர் எல்லோரையும் அழைத்திருந்தனர்.

ரேவதி அப்பாவை நினைத்து அழுது கொண்டே இருந்தாள். 'தாயும் இல்லை. தந்தை யும் இல்லை. நான் அனாதையாகிவிட்டேன்', என்று கூறி அழுதாள். அப்பொழுது லட்சுமி 'நாங்க எல்லாம் இருக்கிறோம், குழந்தைகள் இருக்குது நீ எதுக்கு அண்ணி இப்ப அழுகிறே? சும்மா இரு' என்று ஆறுதல் கூறினாள்.

எங்க அப்பா வானம் பார்த்த பூமி வித்துப் போடாதே என்று சொல்விட்டு உயிர் விட்டார் என்று கூறிக்கொண்டே தந்தையை நினைத்து அழுதாள். அருகில் உள்ளவர்கள் ஆறுதல் கூறினர்.

**– வஞ்சி நாயகன்**

- *'வானம் பார்த்த பூமி' என்னும் புதினப் பகுதி உணர்த்தும் கருத்தைக் கலந்துரையாடி விமர்சனக்குறிப்பு எழுதுக.*

### மண்வளம்

வளமான மண்ணே வளமான வாழ்வுக்கு அடிப்படை. 'மனித குலத்துக்கு மட்டுமல்ல'. இவ் வுலகின் நிலப்பரப்பில் உள்ள அனைத்து உயிர் களின் வாழ்வுக்கும் மண் இருப்பிடமாய் அமை வதோடு, அவைகளுக்கான உணவையும், நோயற்ற வாழ்வையும் அளிக்கின்றது. வளமான மண்ணும் நன்னீருமே பயிர்த் தொழிலுக்கு இன் றியமையாத ஆதாரங்கள் இவ்விரண்டும் இணைந்தே உணவாகின்றன.

உணவெனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரி யோரீண்டு
உடம்பு முயிரும் படைத்திசினோரே

– புறநானூறு: 18

குடபுலவியனார் இயற்றிய இப்புற நானூற்றுப் பாடல் உணவுக்குங்கூட இலக்கணம் வகுத்த பண்டைத் தமிழர்களின் அறிவுச் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது. நிலமும் நீருமே உணவாகின்றது. நிலத்தையும், நீரையும் ஒன்றிணைத்து உணவைப் படைத்தவர்களே உடம்பையும் உயிரையும் படைத்தவராகின்றார்.

**முன்னோர் அறிவு**

பயிர்த்தொழிலை மேற்கொள்ளும் உழவர்கள் நிலத்தின் இயல்பைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். நம் முன்னோர்கள் அப்படி அறிந்திருந்தார்கள். மண்ணின் இயல்பை அறிந்திருப்பதுவும், மண்ணை வளப்படுத்துவதும் நுட்பங்களைத் தெரிந்திருப்பதுவுமே பயிர்த்தொழின் அடிப்படை. இந்த அடிப்படையில் நம் முன்னோர்கள் மண்ணை வளப்படுத்தும், பல்வேறு நுட்பங்களை உருவாக்கியிருந்தனர். தோட்டக்கால் நிலங்களுக்கு, நன்செய்நிலங்களுக்கு, மானாவாரி நிலங்களுக்கு என்று தனித்தனியாக மண் வள, நீர் வள மேலாண்மை நுட்பங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இந்த அறிவு தலைமுறை தலைமுறையாகக் கை மாற்றப்பட்டுச் செழுமைப்படுத்தப்பட்டது. எனவேதான், பல்லாயிரம் ஆண்டுகளாக வேளாண்மை நடைபெற்று வந்த போதும் மண் களைத்துவிடவில்லை. தொடர்ந்து நிலவளம் குன்றாமல், குறையாமல் பேணிக் காக்கப்பட்டது. எனவே நிலம் இன்னும் பல்லாயிரம் ஆண்டு வேளாண்மைக்கும் கூடத் தயாராக இருந்தது.

**இன்று நடப்பது என்ன?**

மரபு வழிப்பட்ட வளம் குன்றா, நீடித்த வேளாண்மை முறைகளை நிலவளத்தைப் பேணிக் காத்தனர். ஆனால், பசுமைப் புரட்சி என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டபல் வேறு நவீன வேளாண்மை நுட்பங்கள் முப்பதே ஆண்டுகளில் நிலவளத்தை முற்றாகச் சூறையாடிவிட்டன. வணிக நோக்கங்களுக்காக உருவான நவீன வேளாண்மை நுட்பங்கள் விளைச்சல் ஒன்றிலே மட்டும் கவனம் செலுத்தியது. மண் வளத்தைப் பேணிக் காக்கும் நுட்பங்கள் கைவிடப்பட்டன. நிலம் பற்றிய மரபு வழிப்பட்ட அடிப்படை அறிவியல் உண்மைகள் புறக்கணிக்கப்பட்டன. மேலை நாட்டு வணிகச் சிந்தனை சார்ந்த நவீன வேளாண்மை முறைகளால் மண் தொடர்ந்து வளமிழந்ததால் பயிர்த்தொழில் மிகப்பெரும் பின்னடைவும் நெருக்கடியும் உருவானது. வேளாண்மையை வாழ்க்கை முறையாக ஏற்றிருந்த நம் உழவர் பெருமக்களின் வாழ்க்கையே கேள்விக்குறியாக மாறிவிட்டது.

**உழவர்களின் கடமை**

மரபு வழிப்பட்ட உயிரிய வேளாண்மை முறைகளைக் கடைப்பிடிப்பதுடன் வேளாண்மையின் அடிப்படை அறிவியல் உண்மைகளையும் நுட்பங்களையும் தெரிந்துகொள்வதும் உழவர்களின் பெரும் கடமையாகும். இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புக்களோடு, நம் பாரம்பரிய நுட்பங்களை இணைத்துச் செழுமைப்படுத்த வேண்டும். குறிப்பாக, மண்ணைப் பற்றிய அடிப்படை அறிவியல் செய்திகளையும், மண் வளத்தைத் தொடர்ந்து பேணி வந்த நம் பாரம்பரிய நுட்பங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

**மண் உயிர் நிறைந்தது**

மண்ணில் உள்ள கரிமப்பொருளின் அளவும், மண்ணில் வாழும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையும், வகைகளுமே மண்ணின் வளத்தைத் தீர்மானிக்கின்றன. இந்த அடிப்படையில்தான் மண், மணல் என்ற இரு பெரும் கூறுகள் அமைந்தன. மட்குப் பொருள் மிகக் குறைவாகவே மணல் உள்ளது. எனவே மண்வாழ் உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற சூழலும், நீரைப் பிடித்து வைத்துக்கொள்ளும் திறனும் மணல் மிகக் குறைவாகவே உள்ளன. வேறு வகையில் சொல்வதானால் மணல் வளமற்றதாக உள்ளது. மண் உயிர்த்தன்மை கொண்டது என்பது நெடுங்காலமாகவே உணரப்பட்டிருந்தாலும், அதை அறியும் முயற்சிகள் அண்மைக் காலத்தில் அறிவியலாளர்களால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. நுண்ணோக்கிகளால் கண்டுபிடிக்கப்பட்ட ஆய்வுகளில், கண்ணுக்குப் புலப்பட்ட மண்வாழ் உயிரினங்களே கணக்கில்

எடுத்துக் கொள்ளப்பட்டன. மண்புழுவும் மரவட்டைகளும் உண்ணிகளும் எறும்பும் கரையானும் வண்டினங்களும் பூரானும் தேளும் இன்னும் பல்வேறுபட்ட கண்ணுக்குத் தெரியும் மண்வாழ் உயிரினங்களும் ஆயிரக்கணக்கில் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றைப் பற்றிய ஆய்வுகள் பெரும் வியப்பை அளித்தன. வெப்ப மண்டலக் காடுகளில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு தேக்கரண்டி அளவுள்ள மண்ணில் மட்டும் ஏறத்தாழ 500 கோடி நுண்ணுயிர்களும், இரண்டு கோடி ஆக்டினோமைசீடுகளும், 10 இலட்சம் புரோட்டோசோவாக்களும், இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட பாசிகளும், பூசணங்களும், வைரசுகளும் இருப்பதைக் கண்டறிந்தனர். வெப்ப மண்டலக் காடுகளில்தான் என்றில்லை, எஸ்கிமோ இனத்தவர் வாழும் பனி சூழ்ந்த அலாஸ் காப்பகுதியில் உள்ள மண்ணில்கூட ஒரு தேக்கரண்டி அளவு மண்ணில் ஒன்பது கோடிக்கும் அதிகமான பல்வேறுபட்ட நுண்ணுயிர்கள் இருந்தன. இவை தவிர, இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட பூச்சியினங்களில் ஏறத்தாழ 90 விழுக்காடு பூச்சியினங்கள் தங்கள் வாழ்க்கைப் பருவத்தின் ஏதோ ஒரு பகுதியையாவது மண்ணில் கழிக்கின்றன.

இவ்வளவு நுண்ணுயிர்களும் பெரும்பாலும் ஓர் அடி உயர மேல் மண்ணிலேயே வாழ்க்கை நடத்துகின்றன. எனவேதான் மண்ணின் மேற்பகுதி கூடுதல் உயிரோட்டமுள்ளதாகவும், வளம் நிறைந்ததாகவும் உள்ளது.

**அழிந்து வரும் மண்வளம்**

கரிமப் பொருள் தொடர்ந்து நிலத்தில் சேருவதாலும், மண்வாழ் உயிரினங்களின் தொடர்ந்த செயல்பாட்டினாலும் மண்ணின் வளம் நிலைத்துள்ளது. ஆனால், தவறான மண் மேலாண்மை உத்திகளும், பயிர் வளர்ப்பு முறைகளும், நீர் மேலாண்மை நுட்பங்களும் மண்ணின் வளத்தைச் சூறையாடி வருகின்றன. குறிப்பாக, மண்ணின் உயிரியல் தன்மைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ள விரும்பாத 'நவீன' வேளாண்மை முறைகள் மண்ணின் வளத்தைக் கெடுக்கின்றன. மண்ணைத் தொடர்ந்து வளப்படுத்தும் வழிமுறைகளுக்கு மாறான வகையில், செயற்கை வேதி உப்புக்களை மண்ணில் இட்டுப் பயிர் வளர்க்கும் முறையே இன்று நடைமுறையில் உள்ளது. நிலத்தில் வளரும் களைகளைக் கட்டுப்படுத்த களைக்கொல்கள் என்ற பெயரில் வேதி நஞ்சுகள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், சிலவகை நூற்புழுக்களைக் கட்டுப்படுத்த மண்ணில் மிகக் கொடிய நச்சுத் தன்மை கொண்ட வேதிக் குருணைகள் இடப்படுகின்றன.

இவைகளெல்லாம், எதிர்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. மண்வாழ் உயிரினங்கள் தொடர்ந்து அழிவுக்குள்ளாகின்றன. வேதி உப்புக்கள் இடும் பழக்கம் நிலைபெற்று, நிலத்திற்குக் குப்பைக் கூளங்களையும், ஏரி வண்டலையும், தொழு எருவையும் இடும் பழக்கம் மறைந்துவிட்டது. இவைகளால் மண்ணின் இயற்பியல் தன்மை சீர்குலைந்துவிட்டது. பொலபொலப்புடன், கரிமப் பொருள் நிறைந்து நீர் பிடிப்புத் தன்மையுடன் இருந்த மண் இறுகிப் போய் வளமிழந்து நீர்ப் பிடிப்புத் தன்மை அற்றுக் கிடக்கின்றது. தொடர்ந்து நிலத்திற்கு இடப்படும் வேதி உப்பு உரங்களும், மற்ற நச்சுப் பொருட்களும், பயிரின் நீர்த்தேவையைக் கூட்டிவிட்டன. எனவே, கூடுதல் நீரைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் நிலத்தின் வேதியல் தன்மையும் கெட்டுவிட்டது. வேதியியல் தன்மைகளில் விரும்பத்தகாத மாறுதல்கள் ஏற்பட்டு மண் தன் வளத்தை இழந்து விட்டது.

இதன் விளைவாகப் பயிரில் பூச்சி நோய்த் தாக்குதல் அதிகரித்து விட்டது. இதோடு, பயிரின் நீர்த்தேவை அதிகரிப்பு, விளைச்சல் குறைவு ஆகியவைகளும் சேர்ந்து வேளாண்மையைக் கேள்விக்குறியாக்கி விட்டன. எனவே, இழந்துவிட்ட மண் வளத்தை மீட்பதற்கு வேண்டிய தேவை உருவாகியுள்ளது.

இழந்துவரும் மண்வளத்தை மீட்பதற்கு முதல் நாம் தவறான மண் மேலாண்மை நுட்பங்களையும், நீர் மேலாண்மை, பயிர் வளர்ப்பு முறைகளையும் கைவிட்டாக வேண்டும். உழவியல் முறைகளும், மூடாக்கு முறைகளும், கரிமப் பொருட்களைத் தொடர்ந்து மண்ணில் சேர்க்கும் முறைகளும் மண் மேலாண்மை உத்தியில் அடங்கும். அதேபோல், கலப்புப் பயிர் சாகு

படியும் வேதி உப்புக்களைத் தவிர்த்து இயற்கை வழிப்பட்ட எருவை, ஊட்டங்களை, ஊக்கிகளைப் பயன்படுத்துவதும், பயிர் வளர்ப்பு உத்திகளில் அடங்கும். மேல் மண் அரிமானத்தைத் தடுப்பது பற்றிய முறைகளையும் கையாண்டாக வேண்டும்

**- செ. வேலுச்சாமி**

ஸ்பை ஸ் இந்தியா, பெப் .: 2010

- *'நவீன வேளாண்மை' எனும் இதழில் வெளியிடுவதற்காக 'மண்வளம், மனித வளம்' எனும் தலைப்பில் கவிதை ஒன்று எழுதுக.*
- *'மண்வளம்' என்னும் கட்டுரையை வாசித்துக் கட்டுரை ஆசிரியருக்கு விமர்சனக் கடிதம் ஒன்று எழுதுக.*

## சிட்டுக்குருவிகளும் சில நதிகளும்

ஏகாதிபத்தியங்கள்
தின்று தீர்த்த
காலணிகளாய்
வெறுமையாய்க் கிடக்கின்றது
வானம்!

உலகமயம்
உடைத்தெறிந்த
உரிமைச் சிற்பமாய்
உருக்குலைந்து
போயின அவை
ஆண்டைகளின்
அடி ஓசைக்கு
அஞ்சி ஒடுங்கிய
ஏவல் சாதியாய்
ஒழிந்துபோயின
அவை

சிட்டுக்குருவி! சிட்டுக்குருவி
சேதி தெரியுமா? என
எம் பெண்கள்
துயர் பகிர்ந்த
சிறகு முளைத்த சொந்தங்கள்
எங்கு போயின?

அந்திவானம் தூவிய
அர்ச்சனைப் பூக்கள்
எங்கே?

பாரதியின்
விடுதலைப் பறவைகள்
ஏதுமின்றி
தவித்துக்கிடக்கின்றது
தமிழர் நிலம்!

சாதிகள் இல்லையடி
பாப்பா - ஆம்
குருவி சாதியே
இல்லாமல் போனது!

ஏதித் தமிழனின்
தாய் நிலக் கனவாய்
இல்லாது போனதோ
குருவிகள்?

குளத்தங்கரைகளில்
ஓடைகளின் நீராடைகளில்
ஏரிகளின் விரிமார்பில்
நதிகளின் நாணல் பொந்துகளில்
அருவிகளின் அடிமடியில்
சிறுவர் பூங்காக்களில்
சிகரக் காடுகளில்
எங்கும் காணவில்லை
குருவிகள்!
எங்கும் கேட்கவில்லை
அதன்
விடுதலைக் குரல்கள்!
நீரும்
நிழலும்
இல்லாத பாலையாய்
தகிக்கும்
தமிழர் வாழ்வில்
இல்லாது போயின
சிட்டுக்குருவிகள்!

வைகறையில்
அந்தியில்
இரவில் - என

எல்லாப் பொழுதுகளிலும்
எல்லாத் திசைகளிருந்தும்
ஆதி சிட்டுக்குருவிகள்
சேர்ந்திசைக்கின்றன.

தமிழர்களே! தமிழர்களே!
சேதி தெரியுமா?
தற்காத்துக் கொள்ளுங்கள்
நிலத்தை - நீரை - வாழ்வை
இல்லையெனில்
இனமென நீங்கள்
இருந்த வரலாறே
இல்லாது போகும்
சிட்டுக்குருவிகளாய்
சில நதிகளாய்....

**- கவிஞர் இராஜாரகுநாதன்**

தமிழர் கண்ணோட்டம்,

- *'சிட்டுக்குருவிகளும் சில நதிகளும்' என்ற கவிதையில் கவிஞர் விடுக்கும் செய்தி யாது?*
- *சுற்றுச்சூழல் தினத்தையொட்டி நடைபெறும் மண்ணின் மீதான மனிதனின் ஆக்கிரமிப்பிற்கு எதிரான விழிப்புணர்வு முகாமில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு தயாரிக்க. இது தொடர்பான சுவரொட்டிகளையும், முத்திரை வாக்கியங்களையும் உருவாக்குக.*
- *இயற்கைக்கு எதிரான மனிதனின் பல்வேறு ஆக்கிரமிப்புகளைக் காட்டும் படங்களையும் செய்திகளையும் தொகுத்து* ***இயற்கையும் மனித வாழ்க்கையும்*** *என்ற தலைப்பில் ஒப்படைப்பு ஒன்று உருவாக்குக.*

அலகு
3

# புதுமைப் பெண்

*பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்*
*எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்*
*இளைப்பில்லை காணென்று கும்மியடி . . . . . . . . .*

- பாரதியார்

## பெண்ணியம் என்றால்...

### பெண்ணியம் - ஓர் அறிமுகம்

**பெண்ணியம் - விளக்கம்**

சமூகத்தின் ஆதிக்கத் தளைகளிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு பெண்கள் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடும் தன்மையே பெண்ணியம் ஆகும். தம்மை அடிமைப்படுத்தும் மரபுக் கூறுகளை உடைத்து, புதிய பாதைகளைப் படைக்கத் துடிக்கும் பெண்ணினத்தின் சுதந்திரக் குரல்கள் இந்தப் பெண்ணியத்தில் ஒக்கின்றன. பெண்களின் சமத்துவத்தையும் முன்னேற்றத்தையும் பெண்ணியம் வரவேற்பதோடு, தடையாக இருப்பவர்களை விமர்சிக்கவும் செய்திருக்கிறது.

உலகளாவிய பெண்களின் உரிமைப் பிரச்சனைகளைப் பேசுவதும், பிரச்சினைகளுக்கு எதிராகப் போராடுவதும் பெண்ணியம் ஆகும். இது பெண்ணினத்தின் மாற்றத்திற்கும் வளர்ச்சிக்குமான காரணி மட்டுமல்ல; சமூக மாற்றத்திற்கும் சமூக வளர்ச்சிக்குமான காரணியும் ஆகும்.

பெண்ணின் வாழ்வியல் சிக்கல்களுக்குப் பெண்ணியம் தீர்வு காண்கிறது. இது தந்தைவழிச் சமூகத்தில் இழந்ததை மீட்கும், தாய்வழிச் சமூகத்தாரின் போராட்டமாகும். தம்மை அடக்கி ஆள நினைக்கிறவர்கள்தாம் எதிரிகளே அன்றி, ஆண்கள் எதிரிகள் அல்ல என்னும் தெளிவான நிலைப்பாட்டினைப் பெண்ணியம் கொண்டுள்ளது. ஆணைப் போலவே பெண்ணும் தன் எண்ணங்களுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்பச் சுதந்திரமாக வாழும் வாழ்வியல் முறையே பெண்ணியம்.

பெண்ணியம், எல்லையில்லாத இவ்வுலகில் உள்ள மானுட இனத்தின் முன்னேற்றத்திற்கான படிக்கட்டாக விளங்குகிறது.

பெண்ணியம் ஒரு பொதுத் தன்மையையும், சமூக நோக்கையும் கொண்டிருக்கின்றது. பெண்களின் வாழ்வியல் போக்குகளை உள்ளடக்கியுள்ள உலகளாவிய இலக்கியப் போக்காகத் திகழ்கிறது.

பெண்ணின் வாழ்வியல் சிக்கல்களையும், இன்னல்களையும் பெண்ணியம் எடுத்துரைக்கிறது.

சமூகத்தில் பெண் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எடுத்துரைத்து, விழிப்புணர்வினை ஊட்டி, ஆதிக்கப்பிடியிருந்து பெண்கள் தம்மை விடுவித்துக் கொள்ளும் போராட்டங்களுக்குப் பெண்ணியம் வழிவகுக்கிறது.

ஆண்களுக்கு இணையான சமூக மதிப்பைப் பெண்களும் பெற்றுச் சிறக்க பெண்ணியம் விழிப்புணர்வை ஊட்டுகிறது என்கிறார் இரா. பிரேமா.

> **"காலம் காலமாக அடிமைப்பட்டு, வதைபட்டு வாழும் பெண்களை அடிமைத் தளையிருந்து மீட்டு அவர்களுக்குக் கல்வியின் மூலம் விழிப்புணர்வை ஊட்டி, சமூகத்தில் ஆண்களுக்கு இணையான மதிப்பினைப் பெற்றுத் தருவது..."**

பெண்ணியமானது, அடிமைகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு விழிப்புணர்வையும் சுதந்திர வேட்கையையும் ஊட்டுகிறது.

பெண்ணியம் என்பது பெண்ணொருத்தியின் சிக்கல்களை மட்டும் ஆராயாமல் ஒட்டு மொத்தப் பெண்ணினத்தின் சிக்கல்களை ஆராய்கிறது. ஒரே மாதிரியான பாதிப்புகளுக்கு ஆளான பெண்ணினத்தின் குமுறல்களை இதில் உணரலாம்.

பெண் இனத்தின் சிக்கல்களையும் துன்பங்களையும் பதிவு செய்து, குழுப்போராட்டங்களுக்குப் பெண் வர்க்கத்தைத் தயார் செய்கிறது. இந்தச் சமூகத்தில் பெண்ணின் சமூக அங்கீகாரத்திற்கான போரட்டமாகவே பெண்ணியம் இருக்கிறது.

குடும்பம், சமூகம் என்னும் இருவேறு நிலைகளில், பெண்களின் பின்னடைவுகளைப் போக்கிப் பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் அமைந்துள்ள தன்மையே பெண்ணியம் என்று அரங்க மல்கா விளக்கமளிக்கிறார்.

**"பெண்களுக்கு எதிரான குடும்ப – சமூக நிறுவனங்களில் அரசியலாகிவரும், ஆண் அதிகாரத்தை, ஆளுகையை எதிர்த்துச் செயல்படும் உணர்வு நிலை.'**

பெண்களைக் குறிவைத்து, நிகழ்த்தப்படும் அடக்கு முறைக்கும், பான அரசியலுக்கும் எதிரான போராட்டமே பெண்ணியம்.

பொருளாதார நிலையிலும் மரபுத் தளத்திலும் துன்புறுத்தலுக்கு ஆளாகும் பெண்ணினத்தின் அவலங்களையும், அதிருந்து மீள்வதற்கான விடுதலை வழிகளையும் பெண்ணியம் முன்வைக்கிறது.

எல்லாவிதமான பெண்களின் உரிமைக்காகப் போராடுதல், விடுதலைக்கான வழிவகைகளைக் கண்டறிதல் ஆகியவை பெண்ணியத்தின் தலையாயப் பணியாகும்.

பெண்ணியத்தின் வரையறையானது இடம், காலம், சமூகம் ஆகியவற்றிற்கேற்ப மாற்றம் பெற்றுக்கொண்டே இருக்கும் தன்மையுடையது என்பதை,

**"பெண் அடிமை நிலையும், இதற்கான காரணங்களும் விடுதலைப் போராட்ட நோக்கங்களும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. ஆதலால் பெண்ணியம் என்ற சொல்ன் பொருள் காலத்திற்குக் காலம் வேறுபடுவதுடன், அவ்வவ் நாட்டுச் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்றவாறு வரையறை செய்யப்படுகிறது"**

என்ற இராம குருநாதனின் கூற்றின் மூலம் அறிய முடிகிறது.

சமூகத்தின் பொதுவான சிக்கலைப் பேசும் பெண்ணியமானது மண்ணோடும் மனிதர்களோடும் நெருக்கமான உறவுடையது. இவ்வாறு சமூகத்தோடு தொடர்புடையதாகப் பெண்ணியம் திகழ்வதால் பெண்களின் பங்களிப்பும் ஆண்களின் ஒத்துழைப்பும் இதற்கு அவசியமாகிறது. ஆண், பெண் என்னும் பேதங்களற்ற குழு நடவடிக்கைகளே பெண்ணியத்தை வெற்றி கொள்ளச் செய்யும்.

**பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

பெண்ணியத்தின் தோற்றம் சுமார் அறு நூறு ஆண்டு காலப் பழமை வாய்ந்தது. பெண்கள், தங்களைத் துன்புறுத்தும் ஆண்களை எதிர்த்துப் பாயல் உறவுமுறையை நாகரிகமானதாகக் கருதியது, சமூகத்தில் அங்கீகாரத்தையும், மதிப்பையும் பெற வேண்டும் என்று விழைந்ததுமே பெண்ணியத்தின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணிகளாகும்.

கி.பி. 1408 ருந்து கி.பி. 1700 வரையில் 300 ஆண்டுக் காலம் உருவாக்கப்பட்ட பெண்ணியச் சிந்தனைகள் 1800களில் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவின. 1900களில் பெண்ணியம் உலக நாடுகள் முழுக்கப் பரவியது. 21– ஆம் நூற்றாண்டில் பெண்ணியம் புதிய பரிமாணங்களைப் பெற்றுச் சிறக்கிறது.

**இந்தியப் பெண்ணியம்**

பெண்ணியம் என்பது மேலைநாட்டுக் கோட்பாடாகப் பலரால் கருதப்பட்டாலும், நீண்ட பாரம்பரியத்தையும் கலாச்சாரப் பெருமையையும் கொண்ட இந்திய மண்ணில் பெண்ணியத்திற்கான விதையை இந்தியப் பெண்ணியச் சிந்தனைவாதிகள் விதைத்திருக்கிறார்கள் என்பதே உண்மையாகும். பெண் விடுதலை, பெண் முன்னேற்றம், பெண் சுதந்திரம் குறித்து முற்போக்குச் சிந்தனைகளை நீண்ட வருடங்களாக

நம் சீர்திருத்தவாதிகள் வயுறுத்தி வந்திருக்கிறார்கள். இந்நிகழ்வுகளே இன்று பெண்ணியமாக உருவெடுத்துள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ராஜா ராம்மோகன் ராய், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், வேதநாயகம்பிள்ளை, இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மகாத்மா காந்தி, பாரதியார், பெரியார், பூலே போன்றோரின் பெண்விடுதலைச் சிந்தனைகளும் செயல்பாடுகளும் பெண்ணியத்திற்கான அடித்தளத்தை வலுவாக அமைத்துத் தந்துள்ளன.

பால்யமணம், உடன்கட்டை ஏறுதல், கைம்மை மேற்கொள்ளுதல், பர்தா முறை, தேவதாசி முறை போன்ற சமூகக்கொடுமைகளுக்கு எதிரான போர்களைப் பலரும் நடத்தினர். அவர்களில் பெரியார், பெண்ணை அடிமைப்படுத்தும் மூடப் பழக்கவழக்கங்கள் திருமணத்திருந்து தொடங்குகின்றன என்று நம்பினார். இதனால் திருமணச் சடங்குகளை எதிர்த்து, சீர்திருத்தத் திருமணத்தைக் கொண்டு வந்தார். மராட்டியத்தைச் சேர்ந்த பூலேயும், தமிழ்நாட்டுப் பெரியாரும் பெண்கள் உரிமையை வயுறுத்தினர்.

இச்சீர்திருத்தவாதிகள் தந்தை, கணவன், மகன் ஆகியோரைச் சார்ந்து வாழுகின்ற, அடிமையாகக் கருதப்பட்டு இல்லத்தில் சிறைவைக்கப்பட்ட பெண்களுக்குக் கல்வியை வழங்கி வெளியுலகிற்கு அழைத்து வந்தார்கள்.

கற்பு என்பது பெண்களை அடிமைப்படுத்துகிற தன்மையாகும் என்ற உண்மையை இவர்கள் எடுத்துரைத்தனர். இதனால் விதவை மறுமணத்தை எல்லாச் சமூக சீர்திருத்தவாதிகளுமே ஆதரித்தனர். சுதந்திரத்திற்குப் பிறகு வரதட்சிணையானது மிகப் பெரிய சமூக நோயாகப் பரவியது. படித்த பெண்கள் சமூகச் சீர்திருத்தவாதிகளுடன் இணைந்து வரதட்சிணைக்கு எதிராகப் போராடினர். பெண்ணுக்கு எதிரான வன்மம் மிகும்போது பெண் சங்கங்களும் இயக்கங்களும் தீவிரமான கண்டனக் குரல்களை ஒத்து எதிர்வினைபுரிந்தன.

இந்திய தேசத்தைப் பொறுத்தவரையில் பெண்ணியம் என்ற கருத்தாக்கம் மண்ணோடும், மக்களோடும் கலந்த இயக்கமாக விளங்குகிறது. துன்பப்படும் பெண்களின் மீட்சிக்காகவும் இந்தியப் பெண்ணிய இயக்கங்கள் இன்றும் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன.

**பெண்ணியத்தின் நோக்கம்**

மேலைநாட்டுப் பெண்ணியச் சித்தாந்தங்களைக் கண்மூடித்தனமாக மேற்கொள்ளாமல் தமிழ் மண்ணுக்கும் தமிழர் வாழ்வியலுக்கும் பயனளிக்கும் வகையில் இயல்பான பெண்ணியக் கருத்தாக்கங்களின் துணைகொண்டு பெண்ணின் முழுமையான சுதந்திரத்தைப் பெறுவதை இந்தியப் பெண்ணியம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

காலம் காலமாக அடிமை வாழ்வில் சுகம் காணும் பெண்ணின் பிற்போக்குத்தனங் களைப் புரியவைத்து, விழிப்புணர்வு ஏற்படுத்துதல் பெண்ணியத்தின் முதல் பணியாகும். பெண்ணடிமைத்தனத்தைப் பாதுகாக்கும் நீண்ட வரலாற்றைக் கொண்ட ஆதிக்கச் சமூகத்தினைக் கட்டுடைப்பது அடுத்த நிலையாகும்.

குடும்பம், சமூகம் என்னும் இரு வேறு உலகங்களில் ஆணுக்கு இருக்கும் எல்லா உரிமைகளையும் பெண்ணுக்கும் சொந்தமாக்குவதே பெண்ணியத்தின் நோக்கம். பெண்ணுக்கெதிராக நிகழும் அடக்குமுறை, சுரண்டல் முறைகளை எடுத்துரைத்தலும், பெண்களின் வளங்கள் சுரண்டப்படாமல் பாதுகாத்தலும் பெண்ணியத்தின் முக்கிய நோக்கங்களாகும். ஆதிக்கச் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டு, இருட்டடிப்புச் செய்யப்பட்ட பெண்ணினத்தின் மனித வளங்களை வெளிக்கொணர்ந்து அவ்வளங்களால் பெண்ணும் சமூகமும் பயன் பெறும்படியாகச் செய்தலைப் பெண்ணியம் தன் முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.

பெண்ணின் இயலாமையை இலக்கியங்களின் மூலம் போயாகப் பிரச்சாரம் செய்யும் ஆண் படைப்பாளிகளின் சூழ்ச்சியை வெளிச்சம் போட்டுக்காட்டி, பெண்மை குறித்த சரியான புரிதலை ஏற்படுத்தி, பெண்ணைச் சிறைபிடிக்கும் தந்தையாளுமை சமூக மரபை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும் என்பதைப் பெண்ணியம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

பெண்ணின் இயல்புகளை இலக்கியங்களில் புகழ்ந்து பாராட்டி, அவளை ஓர் இன்பப் பொருளாகப் பாடுபொருளாக்கும் போக்கினை

பெண்ணியம் விமர்சனத்திற்கு உள்ளாக்குகிறது.

சமூகம், அரசியல், குடும்பம் மற்றும் பொருளாதார நிலைகளில் பெண் எல்லா உரிமைகளையும் பெறும்படிச் செய்வதே பெண்ணியத்தின் நோக்கம் ஆகும். பெண்ணினத்தின் வளங்களைச் சுரண்டி அவர்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக விளங்கும் ஆதிக்கவர்க்கத்தின் ஆதிக்கப் பிடியிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு 'விழிப்பு நிலை' பெண் விடுதலைக்கு வெற்றியாக அமையும்.

சமூகத்தில் பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாத வரையில் பெண் விடுதலை குறித்த விழிப்புணர்வு பெண்களிடம் ஏற்படாது.

கல்வியின் மூலம் பெண் விழிப்புணர்வைப் பெறுவதோடு, தன் தேவைகளைத் தானே நிறைவு செய்யும் நிலையையும் அவளால் அடையமுடிகிறது. ஆணுக்கு இணையாக எல்லா நிலைகளிலும் பெண் பணிபுரியும் போது பெண்ணுக்கான சமூக மதிப்பு உயரும்.

"**மனித இனத்தின் பால் தன்மைகளையும் மனிதஉறவுகளையும் மறு மதிப்பீடு செய்ய வேண்டும்**".

மனித உறவுகளை மறு மதிப்பீடு செய்வதன் மூலம்தான் பெண்மைக்கான புதிய உலகை உருவாக்க முடியும் என்பதைக் கோவிந்தசாமி ராஜேந்திரன் உணர்த்துகிறார்.

ஆணைப் புறக்கணித்து விட்டுப் பெண் விடுதலையை வேண்டுவதும், ஆணை எதிரியாக நினைத்துக்கொண்டு சமூகப்போர் நிகழ்த்துவதும் முரணானது. ஆகவே சமூக விடுதலைக்கு ஆண், பெண் பேதமற்ற கூட்டணி முக்கியமாகிறது.

"**ஒருபாதியாகிய பெண், மற்றொரு பாதியுடன் கூடி இன்பவாழ்வை உலகில் பெருக்கி, உலகை வளர்க்கும் நெறியில் நிற்றல் அறம். பெண்மக்கள் ஆண் மக்கட்கு அடிமைப்பட்டு வாழ வேண்டுவதில்லை. அவர்களுடன் உரிமை கொண்டு வாழலாம்**"

என்றார் திரு.வி.க. இது சமூகத்திற்கு ஆண்-பெண் பங்களிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. பெண்ணியமானது பெண்ணுக்கான சுதந்திரத்தை மட்டும் முன்னிலைப்படுத்தாமல் சமூக விடுதலையையும் நோக்கிப் பயணிக்கிறது.

பல்வேறு ஆராய்ச்சியாளர்களின் கருத்துகளைக் கூர்ந்து நோக்கும் பொழுது ஆண்கள் பெண்களைப் போகப் பொருளாகவே கருதியிருந்ததோடு, அவர்களின் வளங்களையும் சுரண்டியுள்ளனர் என்று அறியமுடிகிறது. பெண்களின் அறிவு, பெண்களின் பொருளாதாரம் ஆகியவை ஒடுக்கப்பட்டுள்ளன. உறவுமுறையில் கூட ஆண் – பெண் உயர்வு தாழ்வு நிலை இருந்துள்ளது. பெண்களின் கல்வியின்மை அடிமைத்தளையில் சிக்குண்டு அவர்கள் துன்புறுத்துவதற்குக் காரணமாக இருந்தது. பெண்களுக்குச் சம உரிமை அளிக்கப்படுவதால் விழிப்புநிலை ஏற்பட்டு, சமுதாயத்தில் ஆணுக்கு இணையாக மதிக்கப்படுவார்கள் என்ற எண்ணம் ஆண்களிடம் ஓங்கியிருந்தது. எனவேதான் பெண்களுக்குரிய அடிப்படை உரிமைகளை மறுத்தனர். இதனை உணர்ந்த பெண்ணியச் சிந்தனையாளர்கள் கல்வி, விழிப்புணர்வு, பொருளாதாரச் சுதந்திரம், ஆண் பெண் என்ற பேதமற்ற தன்மை, மனித உறவுகளில் உயர்வு தாழ்வு இன்மை ஆகியவை பெண் விடுதலைக்கு இன்றியமையாதவை என்று கருதினர்.

பெண்ணியமானது பெண் விடுதலை, பெண் முன்னேற்றத்தை முன்னிறுத்திப் பயணம் செய்து கொண்டிருக்கிறது. ஆதிக்கத்தனத்திற்கு எதிராகப் பெண்ணிய நிகழ்வுகள் இடம், காலம், சூழலுக்கேற்பப் பெண்ணிய வகைகளாகக் கிளைத்துள்ளன. இது பெண் விடுதலையைத் தன் நோக்கமாக முன்வைக்கிறது. மேலும், பெண்ணியம் குறித்த திறனாய்வுகள் பெண்ணியம் சார்ந்த இலக்கியக் கோட்பாடுகளைச் செம்மைப்படுத்துவதோடு பெண்களின் சமூகப் போராட்டங்களுக்கும் வழிகாட்டுகின்றன. பெண்ணியமானது பெண்களின் சுயத்தைப் பாதுகாப்பதற்கான பெண்களின் கூட்டு நடவடிக்கையாகும். இது நீண்ட ஆதிக்கத்தளையின் கீழ் வாழ்ந்த பெண் தலைமுறையினரின் விடுதலை வேட்கையின் வெளிப்பாடாகும். பெண், அடிமைத்தளையிருந்து விடுபட வேண்டும் என்ற நோக்கத்தைப் பெண்ணியம் முன்வைக்கின்றது. பெண்ணியத் திறனாய்வுகள்,

பெண் விடுதலைக்கு வழிகாட்டுவதோடு சமுதாயத்தில் உயர்நிலையை அடையப் பெண்ணினத்திற்குத் துணை செய்கின்றன.

**- முனைவர் போ. மணிவண்ணன்**


- *கட்டுரையை வாசித்துக் கலந்துரையாடிப் பெண்ணியம் பற்றிக் குறிப்புத் தயாரிக்க.*

## பெண்கள் விடுதலைக் கும்மி

1. கும்மியடி! தமிழ்நாடு முழுதும்
   குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
   நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
   நன்மை கண்டோ மென்று கும்மியடி!

2. ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
   றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;
   வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
   விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்

3. மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
   மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
   வீட்டினில் எம்மிடங் காட்ட வந்தார், அதை
   வெட்டி விட்டோமென்று கும்மியடி!



4. நல்ல விலை கொண்டு நாயை விற்பார், அந்த
   நாயிடம் யோசனை கேட்ப துண்டோ?
   கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
   கூட்டிவைத் தார்பழி கூட்டி விட்டார்.

5. கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு
   கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்,
   வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
   வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்



6. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
   பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
   எட்டு மறிவினில் ஆணுக் கிங்கே பெண்
   இளைப்பில்லை காணென்று கும்மியடி!

**- பாரதியார்**

- *பெண்ணியம் பற்றிய பாரதியின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.*

# பெண்கள் நேற்று... இன்று... நாளை...!

பெண்கள் நாட்டின் கண்கள்; மனித வாழ்வின் இணைகோடுகள் என்றெல்லாம் பெண்களின் சிறப்புகள் பேசப்படுகின்றன. காரணம், ஒரு நல்ல சமூகத்தை – குடும்பத்தை உருவாக்குவது பெண்தான். ஒரு பெண் சகோதரியாக, மனைவியாக, தாயாகடச் சமூகத்தில் தன் கடமையை ஆற்றுகிறாள். அதுபோலத் தன் குழந்தையின் முதலாசிரியராக அவளே தொண்டு புரிகின்றாள். எனவேதான் மொழியைத் தாய்மொழியாகவும், இயற்கை அழகுகளையெல்லாம் பெண்ணாகவும் உருவகிக்கின்றனர். ஆண், பெண் இருபாலரும் சமுதாயத்தின் அங்கங்களாக இருப்பினும் பெண்தான் சமூகத்தின் ஆணிவேராக இருக்கின்றாள். இன்று சமூக மதிப்பீடுகளாலும், பழைமைவாதச் சிந்தனையாலும், தனக்குரிய இடத்தை விட்டுப் பெண் தாழ்வுற்று இருப்பினும் குடும்ப அமைப்புக்கு அவளே முதன்மையாவாள். பெண்கள் இயக்கமாக இணைந்து உரிமைக்காகப் பெண்ணியம் பேசும் இத்தருணத்தில் இக்கட்டுரையானது பெண்கள் நேற்று இன்று நாளை என மதிப்பீடு செய்வதாக அமைகிறது.

**பெண்கள் நேற்று**

வரலாற்றின் தொடக்கக் காலத்தில் பெண்ணடிமைத்தனம் இல்லை; நிலமும் அதன் வளங்களும் பொதுமையில் இருந்தன. ஆண்களும் பெண்களும் உழைப்பில் ஒன்றாக ஈடுபட்டு வந்தனர். அக்கால மக்கள் கூட்டு வாழ்வில் குடும்பமாக வாழாமல் கூட்டங்கூட்டமாகத் தாங்கள் விரும்பிய இடத்தில் வாழ்ந்து வந்தனர். குழந்தைகள் தங்கள் தகப்பனை அறிந்திருக்கவில்லை. தாயை மட்டுமே அறிந்திருந்தனர். பெண்களும் ஆண்களைப் போல் வேட்டையாடுதல், பயிர்த்தொழில் போன்றவற்றில் ஈடுபட்டாலும் குழந்தைகள் தகப்பனை அறியாத சூழ்நிலையில் தாயை அறிந்திருந்ததால் அவளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். எனவே, சமுதாயத் தலைமை அவள் வசமானது. இதுதான் ஆதிகாலத் தாய்வழிச் சமுதாயம் எனச் சமூகவியலாளர்களால் அழைக்கப்பட்டது. மானிடவியலாளர் இச்சமூகத்தைப் புராதனப் பொதுவுடைமைச் சமூகம் என்றனர்.

காலப்போக்கில் உற்பத்தி முறையில் மாற்றம் ஏற்பட்டது. கால்நடை வளர்ப்பு, பயிர் வளர்ப்பு இவை நிலையான வாழ்வைக் கொண்டு வந்தன. மக்களிடம் சேமிப்பு எண்ணம் உருவாகியதால் சொத்துடைமை உருப்பெற்றது. சொத்து என்ற உணர்வு வந்தபின் அதனை அடுத்த தலைமுறைக்கு விட்டுச்செல்லும் நிலை உருவானது. எனவே, அடுத்த தலைமுறை தன்னைச் சார்ந்ததாக இருப்பது விரும்பப்பட்டது. தனது குழந்தைதான் தனது சொத்து என்பதை உறுதிப்படுத்தப் பெண்ணை ஒருதார மணத்திற்கு உட்படுத்துவது அவசியமாயிற்று. இதனால், குடும்பம் என்ற அமைப்பு உருவானது. இதனால் பெண்கள் சமூக உழைப்பிருந்து பிரிக்கப்பட்டு வீட்டுக்குள் சிறை வைக்கப்பட்டனர். அவர்களது தலைமையும் உரிமையும் பறிக்கப்பட்டன. இந்நிலையால்தான் பெண் சகல பரிமாணங்களிலும், ஆணைவிடத் தாழ்ந்தவளாகவும், அவனால் பாதுகாக்கப்பட வேண்டியவளாகவும் ஆணிற்குத் துணை நிற்பவளாகவும் கருதப்பட்டாள். அதுவே சமூக ரீதியாகவும் கடைபிடிக்கப்பட்டதால் பெண்கள் நிலை தாழ்வடைந்தது.

**பெண்கள் இன்று**

தொடர்ந்து வந்த காலக்கட்டத்தில் பெண் தன் விருப்பப்படி எதுவும் செய்யக் கூடா தெனச் சாத்திரங்களும் சட்டம் வகுத்தன. பெண்ணை மேலும் ஒடுக்கும் வகையில்தான் இலக்கியச் சிந்தனைகளும், வாழ்வியல் நெறிகளும் அமைந்தன. பெண்ணின் சுற்றுச்சூழல் சிந்தனைகள் இப்படி அமைந்ததால் அவ ளும் அதைப் பற்றிக்கொண்டு, அமைதியாக அடிமைப்பட்டு வாழத் தொடங்கினாள்.


எதிர்த்துப் பேசாதே, அடக்கமாயிரு, துள்ளாதே, பின்தூங்கி முன் எழு, வீட்டு வேலைகளை முடித்துவிட்டுப்படி என்ற தாய் தந்தையின் பொன்மொழிகளும், பாடசாலையில் தொடரும் “தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள் பெய் எனப் பெய்யும் மழை” என்று கூறப்பட்டு, சீதையும் கண்ணகியும் மாதிரி உருவங்களாக முன் வைக்கப்பட்ட இப்போதனா முறை பெண்ணை மேலும் அடிமையாக்கியதோடு, அதற்கு அவளைப் பழக்கப்படுத்தவும் செய்தது.

இன்று பெண்கள் அங்கொன்றும் இங் கொன்றுமாகச் சிறப்புப் பெற்று விளங்கு கின்றனர். ஆனால் இதை வைத்துப் பெண்கள் சுதந்திரமும் சமத்துவமும் பெற்று வாழ்கிறார்கள் என்று கூறுவது பயனற்ற ஒன்று. பெண்களில் சிலர் மட்டுமே படித்தும் பட்டம் பெற்றும், பத விகள் பெற்றும் சாதனைகள் படைத்தும் வாழ் வதை வைத்துப் பெண்மை வாழ்கிறது என்று பூரிப்படைவதில் அர்த்தமில்லை. இன்னும் உலகம் அறிய முடியாமல் பிறர் உள்ளமும் அறிய இயலாத வகையில் இரவும் - பகலும் சமையலறைகளிலும், தொழிற்சாலைகளிலும், வயல்களிலும் உழைத்து அலுத்து ஓய்ந்து மடியும் பெண்களே பெரும்பான்மையான வர்கள். பெண் சிசுக்கொலை, இளவயதுத் திரு மணம், பெண்களைத் தனிமைப்படுத்துதல், கல்வி மறுக்கப்படல், பலதார மணம், கைம்மை நிலை, வரதட்சிணைக் கொடுமை, பாயல் கொடுமைகள் போன்ற பல அநீதிகள் பெண்க ளுக்கு இன்றும் இழைக்கப்படுகின்றன. எனவே சாதனை படைக்கும் பெண்களை விட வேத னையடையும் பெண்கள் அதிகம் என்பதே இன்றைய எதார்த்த நிலை எனலாம். இந்நிலை தற்போது ஓரளவு மாறினாலும் முற்றிலுமாகக் களையப்படவில்லை.

இன்றைய சமுதாயத்தில் ஆணுக்கு ஒரு நீதியும், பெண்ணுக்கு ஒரு நீதியும் நிலவுகிறது. பெண்ணை அடக்கி ஆளப்பிறந்தவன் ஆண் என்பது எழுதாச் சட்டமாக உள்ளது. இச்சமூ கத்தில் ஆணுக்குச் சொத்துரிமையும், வேலைக் குத் தகுந்த கூ பெறும் உரிமையும் உள்ளன. அவன் வியாபாரப் பொருளாகப் பார்க்கப்படு வதில்லை; அடிமை நிலை இல்லை. அவன் ஈட் டிய பொருளில் அவனுக்கு உரிமை உண்டு. கற்புத் தவறிய போது, நெருப்பில் குதிக்க வேண்டியதில்லை. தகவல் தொடர்பு சாதனங் கள் அவனைக் கவர்ச்சிப் பொருளாகக் காட்டு வதில்லை. ஆண் குழந்தை கருவில் சிதைக் கப்படுவதில்லை. பிறந்த பின் கொல்லப்படுவ துமில்லை. வரதட்சிணை கொடுக்க வேண்டிய தில்லை. பிறந்த வீட்டில் அவன் சுமை தாங்கி இல்லை. புகுந்த வீட்டில் கொடுமை இல்லை. மனைவி இறந்தால் கைம்மைநிலை தேவையில் லை. வயதில் மூத்தவர்களையும் தட்டிக் கேட் கும் உரிமையுண்டு. ஆனால் இத்தனை உரிமை களும் பெண் களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. சமூ கத்தில் ஆண்களுக்கு இயல்பாகவே வழங் கப்படுகின்ற உரிமைகளைப் பெண்கள் போரா டிப் பெற வேண்டியுள்ளது. இந்நிலையினைப் பெண்கள் கல்வியறிவு பெற்றதால் இன்று உணர்ந்துவிட்டனர். அவர்கள் தங்கள் உரிமை களைப் போராடிப் பெறப் ‘பெண்ணியம்’ என்ற கருத்துருவாக்கத்தை உருவாக்கி அதன் மூலம் பெண் விடுதலையை வேகப்படுத்துகின்றனர்.

**பெண்கள் நாளை**

பெண்கள் தங்கள் வளர்ச்சிக்குத் தாங்களே தடையாக இல்லாமல் விழிப்புணர் வடைவதுடன் ஆண், பெண் பேதமின்றிச் சம மாக வாழ்வர். அனைத்து உரிமைகளையும் பெற்றுத் தங்களின் வளர்ச்சிக்குத் தடையாக



இருக்கும் சமுதாய அவலத்தை அறிந்து ஆண்களை அல்ல ஆணாதிக்கத்தை எதிர்த்து எங்கும் சமநிலை பெற்றுத் திகழ்வர். அப் போதே வரதட்சிணை, பாயல் பாகுபாடு, சிசுக் கொலை, போகப்பொருள் போன்ற பெண் சிக்கல்கள் அற்ற சமுதாயம் உருவாகும்; புதிய கலாச்சார மாற்றமும், மாந்தர் தம் பண்பும் பார்வையும் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டு ஆண்களைப் பற்றியும், பெண்களைப் பற்றியும் கொண்டுள்ள கருத்துகளில் மாற்றம் ஏற்படும்;

பெண்ணின் அறிவும் ஆற்றலும் கவனிக்கப்படும். இல்லற வாழ்வுக்கு ஆணும் பெண்ணும் தேவை. எனவே ஆண் ஆதிக்கத்தை ஒழித்துப் பெண் ஆதிக்கம் பெறுவதும் சரியல்ல. ஆதலால் ஆணும் பெண்ணும் அன்பில் இணைந்து வாழும் புதிய மனித சமுதாயம் உருவாக வேண்டும்.

ஆதிகாலத்தில் பெண் முதன்மையானவளாகக் கருதப்பட்டாள். பின்னர் பெண்ணடிமைத்தனம் கால்கொண்டு பெண் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டாள். ஆண் முதன்மை பெற்று ஆணாதிக்கச் சமுதாயம் மலர்ந்தது. இக்காலத்தில் பெண் ஓரளவு சுதந்திரம் பெற்றாலும் அடிமையாகவே வாழ்கிறாள். எனவே, பெண்கள் தங்களின் உரிமைகளைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டால் பெண்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும். அப்போதுதான் 'ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லை காண்' என்ற பாரதியின் கனவும், மங்கையராகப் பிறப்பதற்கு – மாதவம் செய்திடல் வேண்டுமம்மா என்ற கவிமணியின் கூற்றும் நனவாகும்.

**முனைவர் தே. பெனினா.**

- *மகளிர் தின விழாவை ஒட்டிப் 'பெண் முன்னேற்றம் சமூக முன்னேற்றம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவதற்கான உரை தயாரிக்க.*
- *இக்கட்டுரையின் அடிப்படையில் 'பெண்கள் நேற்று- இன்று- நாளை'' என்னும் தலைப்பில் விவாதக் கருத்தரங்கம் நடத்துக.*

# விடியலை நோக்கி...

## உடையும் கண்ணாடிக் கூரைகள்

பெண்களுக்கென்று தனியாக ஓர் அமைப்பை உருவாக்கியிருக்கிறது ஐ.நா. சபை. பெண்களின் உரிமைக்கு ஆதரவாகவும், அவர்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராகவும் செயல்படவிருக்கிறது இந்த அமைப்பு. எப்படி இருக்கிறது நம் நாட்டில் பெண்களின் நிலைமை?

இந்தியாவின் குடியரசுத் தலைவர் ஒரு பெண். ஆளும் கட்சியின் தலைவர் ஒரு பெண். மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு பெண். மக்களவை சபாநாயகர் ஒரு பெண். இப் படி அரசியல் உள்ள எல்லா முக்கியப் பதவி களிலும் பெண்கள். இதுபோன்ற ஒரு நிலை இந் திய வரலாற்றில் இதுவரை இருந்ததில்லை. மக் களவையில் உள்ள பெண் எம்.பி.க்கள் 58 பேர். சுதந்திரம் கிடைத்து இத்தனை ஆண்டுகளில் இப்போதுதான் முதன்முறையாக மக்களவை யில் பெண் எம்.பி.க்களின் எண்ணிக்கை 50 ஐத் தாண்டுகிறது.

இதனால் பெண்களுக்கு அரசியல் முக் கியத்துவம் கிடைத்துவிட்டது என்று சொல்ல முடியுமா?

அப்படிச் சொல்ல முடியாது. சட்ட மன்றத்தில் கூடப் பானப் பாகுபாடு பார்க்கப் படுகிறது. ஸீரோ அவர், கேள்வி நேரத்தின் போது எழுப்ப வேண்டிய துணைக்கேள்விகள், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் போன்றவற்றிற்காகப் பெண் எம்.எல்.ஏக்கள் கை உயர்த்தினால் அவர் களைப் பேச அழைப்பதே இல்லை. ஆண்கள் தான் பேச அழைக்கப்படுகிறார்கள். இது குறித்துச் சட்டமன்றத்திலேயே நான் புகார் எழுப்பினேன் என்கிறார் திண்டுக்கல் சட்ட மன்ற உறுப்பினர் பாலபாரதி.

இந்த ஆண்டு ஜனவரியில் முதன்முறை யாகப் பெண் ஒருவர் தமிழகக் காவல்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்தியாவில் காவல்துறையில் தலைமைப் பொறுப் பில் இருக் கும் பெண் அதிகாரிகள் மிகக் குறைவு (இந்தி யாவில் தமிழகத்தைத் தவிர, அருணாச்சலப் பிரதேசத்தில்தான் பெண் அதிகாரி ஒருவர் காவல்துறைத் தலைவராக இருக்கிறார்). இது நிச்சயம் தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் விஷயம்தான். ஆனால் காவல்நிலையங்களில் நம் பெண்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள்?

நம் பெண்களுக்குக் காவல் நிலையத்திற் குச் செல்வது என்பதே ஒரு கௌரவப் பிரச்சி னையாய் இருக்கிறது. அதையும் மீறி அவர்கள் புகார் கொடுக்கச் செல்லும்போது அவர்கள் நடத்தப்படும் விதம் சரியானதாக இல்லை. வழக் கைப் பதிவு செய்ய வைக்கவே போராட வேண்டி இருக்கிறது. எப்.ஐ.ஆர். போடாம லேயே கட்டப் பஞ்சாயத்து செய்வது போன் றவைதான் காவல்நிலையங்களில் நடக்கின்றன. விசாரணைக்காகக் காவல்நிலையத்திற்குக் கொண்டுவரப்படும் பெண்கள் வசைச் சொற்க ளுக்கும் வன்முறைக்கும் ஏன் பாயல் துன்பு றுத்தல்களுக்கும் கூட உள்ளாகிறார்கள். அனைத்து மகளிர் காவல்நிலையங்கள் தொடங் கப்பட்ட புதிதில் பெண்களுக்குப் புகார் கொடுப் பது என்பது எளிதாக இருந்தது. ஆனால், அவற் றிலும் இப்போது கட்டப்பஞ்சாயத்து செய்வது அதிகமாகி விட்டது என்கிறார் எழுத்தாளரும் பெண்ணியவாதியுமான வ.கீதா.

நீதித்துறையில் பெண்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள்?

வழக்கறிஞராக இருக்கும் கீதா ராமசேஷன், ''இந்தியச் சமூகத்தில் பான ஏற்றத்தாழ்வுகள் அதிகமாகவே இருக்கின்றன. அவை கண்டிப்பாக நீதிமன்றத்திலும், காவல் நிலையத்திலும் பிரதிபக்கும். இங்கெல்லாம் ஒரு பெண், ஒரு புகாரோடு நுழையும்போது முதல் எந்தச் சிக்கலும் வராது. ஆனால், போகப்போக அந்தப் பெண் சார்ந்திருக்கும் சாதி, அவளின் பொருளாதார நிலை, திருமண உறவுகள் போன்றவை அவள் நடத்தப்படு வதில் முக்கியப் பங்குவகிக்கும். ஆணுக்கு இருப்பதை விடப் பெண் இன்னும் அதிகமான பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும்” என்கிறார்.

சமூகத்தைப் பிரதிபக்கும் கண் ணாடிகள் எனப் பெருமைப்பட்டுக் கொள்ளும் ஊடகங்களிலும் நிறைய மாற்றங்கள் நேர்ந்தி

ருக்கின்றன. இருபதாண்டுகளுக்கு முன்பு, தமிழ்ப் பத்திரிகை உலகில் முழுநேரப் பத்திரிகையாளர்களாக இருந்த பெண்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணிவிடலாம். பெண்கள் பத்திரிகைகளுக்குக் கூட ஆண்களே ஆசிரியர்களாக இருந்திருக்கிறார்கள். ஆண்களே பெண்கள் பெயரில் எழுதினார்கள். கதைகள் எழுதும் பெண்களைப் பெண் எழுத்தாளர்கள் எனப் பானத்தின் அடிப் படையில் அடையாளப்படுத்தும் நிலை இருந்தது. திரைப்படத் துறையில் முழுநேரமாகப் பங்கேற்ற பெண் கவிஞர்களோ வசனகர்த்தாக்களோ தொழில் நுட்பக் கலைஞர்களோ அநேகமாக இல்லை. ஆனால், இன்று எல்லாம் மாறியிருக்கிறது. நிறைய இளம் பெண்கள் பத்திரிகை, தொலைக்காட்சி, திரைப்படம் என ஊடகங்களில் பணியாற்றுகிறார்கள். கௌதம் மேனனிடம் இணைஇயக்குநராகப் பணியாற்றும் ரேவதி, “ஒரு பத்தாண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட இப்போது நிறைய பெண்கள் டெக்னீஷியன்களாக இருக்கிறார்கள். ஆனாலும் கூட மொத்தமாகப் பார்த்தால் அது பத்து சதவிகிதத்திற்கும் குறைவானதே. எங்கள் யூனிட்டில் பெண்களுக்கென்று சலுகை களும் இல்லை; பாரபட்சமும் இல்லை. அனை வரும் சமமாகவே நடத்தப்படுகிறோம்” என்கிறார். இது வரவேற்கத்தக்க ஒரு மாற்றம்.

ஷோ கேசில் கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்திருக்கும் அலங்காரப் பொம்மைகளைப் போல பெண்கள் சமூகத்தில் நடத்தப்படுகிறார்கள் எனப் பெண்ணியவாதிகள் குறைப்பட்டுக் கொள்வதுண்டு. ஆனால், அந்தக் கண்ணாடிப் பெட்டியின் கூரையை உடைத்துக்கொண்டு நிறையப் பெண்கள் வெளியே வந்து ஜீவனோடு இயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அப்படி உடைத்துக் கொண்டு வரும்போது அவர்கள் அடைந்த காயங்களிருந்து இன்னமும் ரத்தம் கசிந்து கொண்டிருக்கிறது என்பதும் உண்மை. அதற்கு நம் சமூகம், பெண்களைப் பார்க்கும் பார்வையில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துவிடவில்லை என்பதும் ஒரு காரணம்.

**– புதியதலைமுறை**

ஜூலை 2010

- *பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான முத்திரை வாக்கியங்கள் அடங்கிய ஊர்வல அட்டைகள் தயார் செய்யவும்.*

## குறுந்தொகை

**யாரும் இல்லை தானே கள்வன்**
**தான்அது பொய்ப்பின் யான் எவன் செய்கோ**
**தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால**
**ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்**
**குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே.**

**– கபிலர்**

– குறுந்தொகை : 25 (குறிஞ்சி)

- *பாடலின் நயம்பாராட்டுக.*



## காண்கிரீட் மனசுகளில் - பெண்ணுரிமை மீட்பு

தமிழில் சிறுகதை இலக்கியம் அறிமுகமாகி எழுபத்தைந்து ஆண்டு காலம் கடந்து விட்டது. இன்று கருப்பொருளிலும் உள்ளடக்கத்திலும் பரிணாம வளர்ச்சி பெற்றுத் திகழ்கிறது. உலகச் சிறு கதைகளின் தரத்திற்கு இணையாக இன்றைய தமிழ்ச் சிறுகதைகள் விளங்குகின் றன. அவ்வகையில் வித்தியா சுப்பிரமணியத்தின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பான 'காண்கிரீட் மனசுகள்' மாறுபட்ட கருப்பொருள்களைக் கொண்டுள்ளது. இத்தொகுப்பில் உள்ள ஒவ்வொரு சிறுகதையும் இயல்பு வாழ்வின் வெளிப்பாடாகப் படைக்கப்பட்டுள்ளது.

பெண்கள் மீதான வரலாறு, பொருளாதார, பண்பாட்டு வழியான ஒடுக்கு முறையின் உண்மையை ஆராய்வது, அதற்கான தீர்வளிப்பது பெண்ணியமாகும். கலைகள், சமூகத் தன்மைக்கும் சமூக விதிகளுக்கும் சமூக மாற்றத்திற்கும் உட்பட்டு இயங்குகின்றன. இலக்கியமும் இத்தகைய மாற்றத்தை எதிர்கொள்கிறது. அவ்வகையில் பெண்ணியக் கோட்பாடுகள் தமிழிலக்கியங்களில் எண்பதுகளில் இடம்பெறத் தொடங்கி தொண்ணூறுகளில் எழுச்சி பெற்று நவீன இலக்கியத் திற னாய்வுப் பார்வையாக ஆக்கம் பெற்றுள்ளன. பெண்ணியச் சிந்தனைகளையும் கோட்பாடுகளை யும் தமிழ்ப்படைப்பாளிகள் தம் படைப்புகள்வழி தொடர்ந்து விவாதித்தும் வெளிப்படுத்தியும் வரு கின்றனர். காண்கிரீட் மனசுகள் சிறுகதைத் தொகுப்பில் 'சூர்யபுத்ரி', 'சாத்திரம் ஏதுக்கடி', 'ஏணிகளும் பாம்புகளும்', 'தொப்புள் கொடி' ஆகிய சிறுகதைகள் பெண்ணுரிமையை மையப்படுத்தும் கருப் பொருள்களைக் கொண்டனவாகும்.

காதத்து ஏமாற்றப்பட்ட ஒரு பெண்ணின் நிலையையும் அவள் பத்து ஆண்டு தனிமையில் போராட்டத்தோடு வாழ்ந்ததையும் "சூர்யபுத்ரி" சிறுகதை காட்டுகிறது. ஏமாற்றி விட்டுச் சென்ற காத லன் குழந்தைப் பேறு இல்லாததால் பத்து ஆண்டு கழித்துத் திரும்ப வந்து தன் குழந்தையை மட் டும் அழைத்துச் செல்ல விழைகிறான். அவனுடைய சுயநல நோக்கையும் சந்தர்ப்பவாதத்தையும் விமர்சிக்கும் இக்கதையின் நாராயணி பாத்திரம் காதலனான சேதுவிற்குச் சரியான பாடத்தைக் கற் பிக்கிறது. தனிமையின் சித்ரவதைகளை நினைத்துச் சிந்தித்து, சேதுவை நிராகரிக்கும் நாராயணி பாத்திரம் உரிமை மீட்பின் வெளிப்பாடாகும்.

**"ஒரு சந்தர்ப்பவாதி என் பெண்ணுக்குத் தகப்பனாக ஆவதை நான் விரும்பவில்லை சேது...." பற்ற வைத் துக்கொள்ள வேண்டும் போருக்கிறது. ஆனால் அப்படிச் செய்யமாட்டேன், நீ செய்த தவறுக்கு நான் ஏன் எரிய வேண்டும். அதனால்தான் உன்னை எரித்து விட்டேன். நான் சொன்ன பொய்யில் எரிந்து போயிருப்பாயே, பெண்ணின் சக்தி புரிகிறதா சேது?**

தன் குழந்தையின் தந்தை சேது இல்லை என்ற துணிச்சலான முடிவைப் பஞ்சாயத்தில் நாரா யணி கூறியதன்வழி ஆசிரியர் பெண்களின் சுயமாய் முடிவெடுக்கும் உரிமையை வயுறுத்தியுள் ளார். அத்துடன் சந்தர்ப்பவாத ஆணாதிக்கத்தை எதிர்க்கும், கண்டிக்கும் போராளியாக நாராயணி பாத்திரத்தைப் படைத்துள்ளார்.

'சாத்திரம் ஏதுக்கடி',பெண்ணுரிமை மீட்பிற்கான களனாக அமைந்த சிறுகதையாகும். தன் தந் தையின் ஈமச்சடங்குகளைச் செய்ய முனையும் சாரு பாத்திரத்தின் துணிவு பாராட்டுதற்குரியது. சடங்கு நிகழ்த்தவரும் சாஸ்திரிகளிடம் 'சாரு' நிகழ்த்தும் வாதப் போராட்டம் ஆசிரியரின் உரிமை மீட்புச் சிந்தனையை அடையாளப்படுத்துகிறது.

**"நான் பொண்ணாப் பொறந்துட்டதாலேயேஎன்னோட உரிமையை நான் இழக்கத் தயாரல்ல'**

**"பெண்மைக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டா ஒதுங்கிப்போக, வேடிக்கை பார்க்க என்னால முடியாது'.**

என்னும் சிறுகதை அடிகளில் பெண்ணுரிமையைத் தூக்கி நிறுத்தும் ஆசிரியரின் பெண்ணியச் சிந்தனை வெளிப்படுகிறது. **"எங்களைக் காலடியில் போட்டு நசுக்கும் சாத்திரங்கள் எங்களுக்குத் தேவையில்லை"** என்று சாரு மனத்திற்குள் பேசுவதாய் அமைந்த தொடரில் **"தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்"** என்னும் பாரதியின் பெண்ணுரிமைச் சிந்தனை மிளிர்கிறது. இறைவனுக்குமுன் அனை வரும் சமம் என்ற அடிப்படையில், பெண்ணுக்கும் ஆணைப் போல் எல்லா நிலைகளிலும் சமத் துவம் வேண்டும் என்ற மிதவாதப் பெண்ணியக் கோட்பாட்டை ஆசிரியர் இக்கதையின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். திருமணங்களில் பெண்ணின் தனிப்பட்ட உணர்வுகளுக்கும் விருப்பங்க

ளுக்கும் தகுதிகளுக்கும் திறமைகளுக்கும் மதிப்பளிக்கப்படுவதில்லை. அயல்நாட்டு வரன் என்பதற்காகப் பெண்ணைத் திருமணத்திற்குக் கட்டாயப்படுத்தும் சமூகப் போக்கைத் "தொப்புள்கொடி", "ஏணிகளும் பாம்புகளும்" என்னும் இரண்டு சிறுகதைகள் பதிவுசெய்துள்ளன. யமுனா, வினயா பாத்திரங்களின் வழி ஆசிரியர் பெண்களின் சுயமரியாதையை- சமஉரிமையை வயுறுத்தியுள்ளார். பிருத்திவியின் தாயார் கேட்ட வரதட்சிணையும் அதனை நியாயப்படுத்தும் தந்தையின் போக்கையும் ஏற்கமுடியாத யமுனா நிச்சயத்தை நிறுத்த பிருத்திவிக்குக் கடிதம் எழுதுகிறாள். அதில், **"உங்களைப் போலவே நானும் புத்திசாதான். நான் முயற்சி செய்திருந்தால் என்னாலும் யு. எஸ். வந்து உங்களைவிட அதிகமாகச் சம்பாதிக்க இயலும். நம் இருவருக்கிடையில் சரீர வேற்றுமை மட்டுமே உள்ளது. அந்த ஒரு சின்ன வேற்றுமை உங்களை உயர்வாகவும் என்னைத் தாழ்வாகவும் ஆக்கிவிட்டது என்று நினைக்கும்போது எனக்கு மிஞ்சுவது அதிர்ச்சியும் வேதனையும்தான்".**

**"நேற்றுவரை ஆணும் பெண்ணும் சமம் என்றுதான் நினைத்திருந்தேன். இன்று கல்யாணச் சந்தை உங்களுக்கொரு விலையும் எனக்கொரு விலையும் நிர்ணயித்து விட்டதைக் காணும்போது அப்படியாகும் கல்யாணம் அவசியம்தானா என்று தோன்றுகிறது"** என்றும், **"நாட்டில் இன்னமும் உங்களைப்போல் பெரும்பாலான ஆண்கள் கல்யாண விஷயத்தில் கூட அம்மா மூலம்தான் சௌகர்யங்களைத் தேடிக் கொள்கிறார்கள்"** என்றும் குறிப்பிடுகிறாள். யமுனாவின் கடிதம்வழி எதிர்ப்பார்ப்புகளைப் பெண்கள் பின்நின்று நிவர்த்தி செய்து கொள்ளும் ஆண்களின் மனப்பான்மையை நாசூக்காக விமர்சனம் செய்யும் ஆசிரியர், பெண்ணின் சுயஉரிமையைச் சிந்தித்துத் தெரிவுசெய்யும் திறனை அழுத்தமாகப் பதிவுசெய்துள்ளார்.

பெண்கள் திருமணமான பிறகு தங்களது திறமை, சுயமரியாதை உள்ளிட்ட சிறகுகளை இழக்கின்றனர். இத்தகைய பெண்ணடிமைத்தனத்தை எதிர்க்கும் பாத்திரமாகவும் தன்னைத்தானே சுய விமர்சனம் செய்துகொள்ளும் புதுமைப்பெண்ணாகவும் வினயா பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. திருமணத்திற்குப் பிறகு வினயா இருக்க வேண்டிய நிலை குறித்து விஷ்வா **"எனக்குப் பணத்துக்கு பஞ்சமில்லை. மனைவி, வேலைக்கு போறது எனக்கு விருப்பமில்லை, என் ஸ்டேட்டஸ்சை கீப்அப் பண்ணினா போதும் என்று கூறுகிறான்"**.இதற்குப் பதிலளிக்கும் வினயா, **"அதாவது உங்கள் ஸ்டேட்டஸ் சிம்பலா இருக்கணும். விதவிதமாக உடுத்திக்கொண்டு உங்களுக்குச் சரியான ஜோடின்னு ஊர்மெச்சனும்'. "கரெக்ட்".**

**"அதுக்கு நீங்க நல்லா ஷோகேஸ் பொம்மையா பார்த்து கல்யாணம் பண்ணிக்கலாமே, நான் எதுக்கு?'** என்ற சுயஉரிமையை வயுறுத்தும் வினயா.

**"நான் கனவு காண்ற ரகமில்ல. வெளிநாட்ல வேலை பார்க்கிற ரொமான்டிக் ஹீரோவைக் கைபிடிச்சு அவன் தோள்ல தொற்றிக்கொண்டு அப்ராட் போய் ஹைகிளாஸ் ஹவுஸ் ஒய்பா வாழனுங்கற கனவோ, லட்சியமோ, ஆசையோ, எனக்குக் கிடையாது. புக்கு வாலா இருக்கிறதைவிட எக்குத் தலையா இருக்கிறது பெருமைக்குரியதுன்னு நெனைக்கிறேன்".** எனத் தன் நிலையைப் 'பளிச்' எனப் பதியவைக்கிறார்.

**"ஆணும் பெண்ணும் சமம் என்பது இருவரும் ஒத்த மதிப்பினர் என்பதையே சுட்டவேண்டும். ஒத்த இயல்பினர் என்பதையல்ல. வேறு சொற்களில் கூறினால், உடலமைப்பும் வமையும் இயல்புகளும் சமூக கடமைகளும் உயர்வானவை என்றும் பெண்ணின் உடலமைப்பும் மென்மையும் பண்புகளும் சமூகப் பொறுப்புகளும் தாழ்வானவை என்றும் கருதுவதையே பெண்ணியம் எதிர்க்கிறது"** என்னும் மீனாட்சி முருகரத்தினத்தின் கூற்று, வித்தியா சுப்பிரமணியத்தின் சிறுகதைப் பாத்திரங்கள் வழியே புலனாகிறது.

பெண்ணை உணர்வும் உள்ளமும் உடைய ஒரு மனுசியாக, தனித்துச் சிந்தித்து முடிவெடுக்கக்கூடிய பகுத்தறிவு உடையவளாகக் "கான்கிரீட் மனசுகள்" சிறுகதைத் தொகுப்பு காட்டியுள்ளது. சிறுகதைகளில் பெண்ணுரிமை மீட்புக்கான தனது உரத்த குரலை ஆசிரியர் பாத்திரங்கள்வழி பதிவுசெய்துள்ளார். ஆண், பெண் சமத்துவம் பேசும் இன்றைய சூழலுக்கு ஏற்ற பொருத்தமான பாடுபொருளை வித்தியா சுப்பிரமணியத்தின் சிறுகதைகள் கொண்டுள்ளன.

**– முனைவர் கி. மைதி**

- *பெண்ணுக்கு எதிரான கொடுமைகள் பற்றிய பத்திரிகைச் செய்திகளைத் தொகுத்து வகைப்படுத்தவும்.*
- *'ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்' என்ற தலைப்பில் அரசியல், விளையாட்டு, கலை, தொழில்நுட்பம் முதலான துறைகளில் பெண்களின் நிலை குறித்து விவாதம்செய்க.*

# பெண் எனும் இரண்டாம் இனம்

## இல்லத்தரசிகள் என்றால் இளக்காரமா?

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்றுதான் கவி மணி தேசிக விநாயகம் பிள்ளை சொன்னாரே தவிர, "வேலைபார்க்கும் மாதராய்ப் பிறப்பதற் குத்தான் மாதவம் செய்திட வேண்டும்" என்று சொல்லவில்லை. வேலை பார்க்காமல், வீட்டை நிர்வகிக்கும் இல்லத்தரசிகளை, சற்று மாற்றுக் குறைவாகத்தான் இந்தச் சமுதாயம் பார்க்கிறது. ஆங்கிலத்தில், வேலைக்குச் செல்லாமல் வீட்டை நிர்வகிக்கும் பெண்களை 'ஹோம் மேக் கர்ஸ்' என்ற அழகான வார்த்தையைக் கொண்டு அலங்கரிக்கிறார்கள். ஆனால், நாட்டு நடப்பில் வேலை பார்க்காத பெண்களுக்கு அவ்வளவு மரியாதை இல்லை என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. பல நேரங்களில், சமுதாய அவ லங்களை, நீதிதேவதைகள் குடியிருக்கும் நீதி மன்றங்களில் கோலோச்சும் நீதி அரசர்கள்தான் தோலுரித்துக்காட்டுவது மட்டுமல்லாமல், என்ன செய்ய வேண்டும் என்பதையும் உத்தரவாகக் கூறுகிறார்கள்.

நம் சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதிகள் ஏ.கே. கங்கு, ஜி.எஸ். சிங்வி ஆகியோர் வழங்கிய ஒரு தீர்ப்பு, நமது மாதர்களின் மரியாதையை உயர்த்தும் விதமாக அமைந்துள்ளது. ரேணு என்ற ஒரு இல்லத்தரசி சாலை விபத்தில் மரணம் அடைந்தார். அவரது கணவர் அருண் அகர் வால் இழப்பீட்டுத்தொகைக்காக மோட்டார் வாகனச் சட்டப்படி வழக்குத்தொடர்ந்தார். ஆனால், விபத்துக்கான தீர்ப்பாயம், ரேணு எந்த வேலையும் பார்க்கவில்லை என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி மோட்டார் வாகனச் சட்டப்படி ரேணுவின் குடும்பத்தாருக்கு ஒரு குறைந்த தொகையை வழங்கித் தீர்ப்பு அளித்தது.

இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு வந்தது. சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் நெற்றிக் கண்ணைத் திறந்து பார்த்தனர். "இல்லத்தரசிகள் வேலை பார்க்காவிட்டாலும், அவர்கள் ஒரு வீட்டில் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் தேவையான சமையலை முடித்து, அவர்களின் துணி மணிகளைத் துவைத்து, வீட்டைச் சுத்த மாக வைத்து இருப்பது, குழந்தைகளைப் பரா மரிப்பது போன்ற அனைத்துப் பணிகளையும் அர்ப்பணிப்பு உணர்வோடு, காலநேரம் பார்க் காமல், ஒரு விலைமதிப்பற்ற வேலையாகச் செய்கிறார்கள்". அது தாயாக இருந்தாலும் சரி, மனைவியாக இருந்தாலும் சரி தாங்கள் செய்யும் வேலைகளை ஒரு கடமையாகக் கருதாமல் 24 மணி நேரமும் உண்மையான அன்பு, பாசத்தைக் கலந்து தன் குழந்தைகள், தன் குடும்பத்தினர் என்று அனைவருக்கும் செய்யும் பணிகளைச் சரியானபடி அங்கீகரிக் கும் வகையில், இல்லத்தரசிகளுக்கு ஒரு உயர்ந்த இடத்தைக்கொடுப்பதற்கு ஏற்றவகை யில் நம் சட்டத்தைத் திருத்த வேண்டும். அதற்கான நேரம் வந்துவிட்டது. பாராளுமன்றம் இதைப் பரிசீக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு நீதிஅரசர்கள் தீர்ப்பு வழங்கி உள் ளனர்.

அவர்களின் அக்னிப்பார்வை மக்கள் தொகைக் கணக்கெடுப்புத்துறை மீதும் விழுந்து விட்டது. வேலைபார்க்கவில்லை, வருமானம் ஈட்டவில்லை என்ற ஒரு காரணத்துக்காக, 2001-ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக் கெடுப்பில் "இல்லத்தரசிகள் எல்லாம் வேலை செய்யாதவர்கள் என்று பொருளாதார ரீதியிலாகப் பயன்தரக்கூடிய பணி செய்யா தவர்கள்" என்ற பிரிவில் பிச்சைக்காரர்கள், கைதிகளோடு சேர்த்து இருப்பதைக் கண்டு கோபக்கனலை வீசி இருக்கிறார்கள். இதை மிக வும் இரக்கமற்ற ஒரு உணர்ச்சியற்ற அணுகு முறை என்றும், தடாலடியாகக் கண்டித்து உள் ளனர். எவ்வளவோ மாதர் சங்கங்கள், சமூக சேவை அமைப்புகள் இருந்தாலும் அவற்றின் கண்களுக்குத் தெரியாத ஒன்றை சுப்ரீம் கோர்ட்டு எடுத்துக்காட்டியிருப்பது, "இல்லத்

தரசிகள் என்றால் இளக்காரமா?" என்று ஆத்தி ரத்தோடு கேட்கும் வகையில் அமைந்துள்ளது. நிச்சயமாக நீதிபதிகளுக்கு சபாஷ் போட வைத் துவிட்டார்கள்.

நமது நீதிஅரசர்களுக்கு நன்றியோடு இருக்கிறார்கள் இல்லத்தரசிகள். சமுதாயக் கண்ணோட்டத்தில் உள்ள இந்தக் குறைகளை உடனடியாக நீக்கி, பெண்மையைப் போற்றும் நடவடிக்கைகளை நமது ஆட்சியாளர்களும், துறைகளும் எடுப்பார்களா என்று எதிர்பார்க் கிறார்கள்.

**தலையங்கம்.**

தினத்தந்தி 26-07-2010

- *இப்பாடப் பகுதியில் வரும் தீர்ப்பாயம் மற் றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை ஒப்பிட்டு உமது கருத்துகளை வெளியிடுக.*

## புகுந்த வீடு

கான மிளகா வச்சு
கறிக்கு மசால் அரைச்சுக்கூட்டி
குழம்பு ஒரைச்சுதுண்ணு
கொல்லுதாரே கதவடைச்சு
காளான் குழம்பு வச்சு
களியவே கிண்டி வச்சு
துரந்து வச்சு ஆறித்திண்ணு
துடுப்பெடுத்துக் கொல்லுதாரே
படிச்சவண்ணு தெரிஞ்சிருந்து
பாவிமகன் என்னைக்கூட்டி
கூழுக் காச்சத் தெரியலேண்ணு
குறுக்கொடியக் கொல்லுதாரே
சுண்டச் செவப் பிண்ணுல்ல
சொக்கியவர் என்னைக் கட்டி
சோறு காச்சத் தெரியலேண்ணு என்
சொகுசைக் குறைக்காரே
அறியாத ஊரிலேயும்
தெரியாம வாக்கப்பட்டேன்
அடியாதங்க புடியாதங்க
விடியாம ஓடிப்போரேன்.

**நா. வானமாமலை.**

- நாட்டுப்புறப்பாடல்கள் தொகுப்பு

- *பெண்ணுக்கு எதிரான பழமொழி, விடு கதை போன்றவற்றைத் திரட்டுக.*

## சக்தி ! சக்தி !

"டாக்டரம்மா.... எனக்கு ரொம்பப் பயமா இருக்குதுங்க.... நல்லபடியா பெத்துப் பொழைப் பேனுங்களா?'' சரசுவின் குரல் தீனமாய் ஒத்தது.

"என்னங்கம்மா செய்யறது! சரியா சாப் பி டாம கொள்ளாம இரத்தசோகை வர்ற அள வுக்கு உடம்பைக் கெடுத்து வெச்சிருக்கீங்க. இனிமேலாவது சத்தான ஆகாரமா சாப்பி டுங்க...."

வெளியே வராண்டா பெஞ்சுகளில் பூஞ்சை உடம்பும், ஜீவனற்ற கண்களும் சரிந்த வயிறுமாய் இன்னும் பல சரசுகள் காத்திருந் தார்கள். இவர்களே இப்படி என்றால் இவர்க ளின் வாரிசுகள் எப்படி இருக்கும்? வெறும் வறு மைத் தீயில் காயப்பட்டுப் போனவர்களா இவர் கள்? இல்லை.... அது மட்டும் காரணம் இல்லை! ஆண்களைப் பாதிக்கின்ற அதே வறுமை இரண்டாந்தரமாகிப்போன பெண்களை அதிக விகிதத்தில் பாதித்திருப்பது கண்கூடான உண்மை. இந்தக் கொடுமை அவர்களோடு முடிந்து போகிற விஷயமில்லை. ஒரு சமுதா யத்தையே ஆரோக்கியமற்றதாக்கிவிடும் நச்சு வளையமாய்ப் படர்ந்திருக்கிறது.

கிணற்றில் தண்ணீர் இழுத்துக் கொண்டி ருந்த பொன்னிக்கு அம்மா செய்யும் மீன் குழம் பு வாசம் பசியைத் தூண்டியது. உடனே போய் சாப்பிட்டுவிட முடியாது. மில் வேலை பார்க் கும் அப்பாவும் கல்லூரியில் படிக் கும் அண் ணன்களும் சாப்பிட்டான பிறகுதான் அம்மாவும் பொன்னியும் சாப்பிடுவார்கள். அதற்குள் தண் ணீர் இறைத்து, துணி துவைத்து, பாத்திரங்க ளைத் தேய்த்து வைக்கவேண்டும். வீட்டு வேலைக்கென்றே இவளைப் பள்ளியிருந்து பாதியில் நிறுத்தியிருந்தார்கள்.

வேலை செய்த களைப்பு உடலை அழுத்த, தட்டை எடுத்து வைத்துத் தனக்குத் தானே பரிமாறிக் கொண்டாள். பாத்திரத்தில் அரைக்கரண்டி குழம்புதான் மிஞ்சியிருந்தது. துக்கமும் ஆத்திரமும் பொங்கியது. இது தினமும் நடக்கிற சங்கதிதான். அம்மாவிடம் கேட்டாள்,

“சரிதாண்டி..... பொம்பளக்கி நாக்கு ருசி அவ்வளவு கேக்குதா? ஆம்பளப் பசங்க நாளைக்கு உத்யோகத்துக்குப் போய் ஒழைச்சி கொட்டப்போறவங்க. அவங்களுக்கு வயிறாரப் போட வேணாமா? வீட்டோட இருக்கிற நமக்குக் கொஞ்சம் கொறஞ்சாத்தான் என்ன?”

வருமானத்தின் அடிப்படையில் பெண்ணின் உழைப்பு அலட்சியப்படுத்தப் படுகிறது. துன்பப்பட்டாலும் கௌரவமில்லை.

செலவுக்கென்றே பிறந்த சுமையாகக் கருதப்படும் பெண்ணுக்கு முதல் தரமான கவனிப்புத் தட்டிப் பறிக்கப்படுகிறது.

பொருளாதார நோக்கு மட்டுமே பெண்ணின் உணவுத் தேவையைப் பாதிக்கிறது என்று சொல்லிவிட முடியாது. வேறு சில காரணங்களும் உண்டு.

“கல்யாணம் கூடி வரலேன்னு சும்மா இருந்தா எப்படி? செவ்வா, வெள்ளியில் அம்மனுக்காக விரதம் இருக்கணும்; பச்சத் தண்ணி கூடப் பல்லுல படக்கூடாது. தானாகவே வரன் தகையாமயாப் போயிடும்?” என்ற உபதேசத்திற்கு அபார சக்தி.

திருமணத்திற்காகக் காத்திருக்கும் பெண்கள் இதைச் சிரத்தையாகக் கடைப்பிடிக்கிறார்கள். இப்படி ஆரம்பிக்கப்படும் விரதங்கள், பிள்ளைக்கு நோவு நொடி என்று வந்தால், புருஷனுக்குப் பிரமோஷன் கிடைக்க வேண்டுமானால் என்று தொடரும். மனக் கட்டுப்பாட்டுக்கு உதவும் வகையில் விரதமிருப்பது நல்ல பழக்கம்தான். என்றாலும், தங்கள் துன்பங்களுக்கு அதன் மூலம் பரிகாரம் தேட நினைத்து, தீவிரமாய்க் கடைப்பிடித்தால் உடல் பலவீனப் பட்டுப் போகாமல் இருக்குமா?

வேறு, எதற்காக இல்லாவிட்டாலும் மெந்த இடையைக் காப்பாற்றிக் கொள்ளவாவது நுனி விரல் சாப்பாட்டை அளைந்து கொண்டு சாப்பிட்டதாகப் பேர் பண்ணுவது டீன் ஏஜ் பெண்களின் பழக்கமாக இருக்கிறது. உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு என்பதைப் பின்பற்றுகிறார்கள் போலும்!

வெளி வாழ்க்கைக்குப் பெண் முனைய ஆரம்பித்து முன்னேறிக் கொண்டிருந்தாலும் இன்னமும் ஒரு ஆண், பசிக்கின்ற நேரத்தில் ஓட்டலுக்குப்போய்ச் சாப்பிடுவதைப்போல் பெண்கள் முன்வருவதில்லை. துணை இல்லாமல் எப்படிப் போவது என்ற தயக்கத்தில் பசியை அடக்கப் பழகிக்கொள்கிறார்கள்.

நமது பண்பாடும் இந்த விஷயத்தில் தன் பங்கை ஆற்றி வந்திருக்கிறது. கணவனுக்குப் பரிமாறி, அவன் சாப்பிட்ட பிறகுதான் இவள் சாப்பிட வேண்டும். கணவன் மட்டுமன்றி, குழந்தைகள், மாமியார், மாமனார் என்று எல்லோரையும் உபசரித்துவிட்டுத் திடீர் விருந்தாளிகளையும் சமாளித்த பிறகு இவளுக்கென்று எதுவும் மிஞ்சுவது சந்தேகம்தான்.

மனைவி கவனித்துப் பரிமாறுவதில் திருப்தியடையும் ஆண்களில் எத்தனை பேர் தாங்களும் பரிமாறி மனைவியை சந்தோஷப் படுத்த முடியும் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்? இன்னும் பழைய எஜமான - சேவக பாவங்கள் தேவைதானா? சமமாக அமர்ந்து உணவைப் பரிமாறிக் கொள்வதில் நேயம் மிளிர்கிறது. அதை அனுபவிக்கத் தெரியாதவர்களாகவே இருக்கிறோம்.

உடற்கூறு ரீதியாகப் பெண் குழந்தைகள்தான் ஆண் குழந்தைகளைவிட விரைவில் தவழும்; உட்காரும்; நடை பழகும்; பேசும். ஆண் குழந்தைகளுக்கு இந்த வளர்ச்சி நிலைகள் தாமதமாகவே இருக்கும். வேகமான முன்னேற்றம் காட்டும் பெண் குழந்தைகள் ஏதோ ஒரு கட்டத்தில் வளர்ச்சி முடக்கப்பட்டவர்களாய் ஆக்கப்படுவதுதான் உண்மை.

உடல் பலமே தன்னம்பிக்கைக்கு ஆதாரம். அது நம் பெண்களுக்குக் கிடைக்காமல் போவதற்கு உணவு ஒரு காரணம் என்றால் மற்றொரு முக்கியமான காரணம், விளையாட்டும் உடற்பயிற்சியும் மறுக்கப்படுகின்றன என்பதாகும்.

டென்னிசில் அதிகமாய் ஆர்வம் உடையவள் பிரியா. பள்ளியில் வகுப்புகள் முடிந்து மாலை நேரத்தில் மாணவிகளுக்குப் பயிற்சி தர ஒரு 'கோச்சை' நியமித்திருக்கிறார்கள். வீட்டில் தான் அனுமதி கிடைக்கவில்லை. "விளையாடிட்டு நீ தினமும் லேட்டா வந்தால் சரிப்படாது, விளையாட்டும் வேணாம்... ஒண்ணும் வேணாம் சீக்கிரம் வந்து வீட்டு வேலைகளைச் செஞ்சாலே உடம்புக்கு நல்ல எக்ஸர்சைஸ்தான்". அப்பாவின் கண்டிப்புக்கு முன்னால் பிரியாவின் கெஞ்சல் எடுபடவில்லை. 'பெண்' என்பதையே காரணம் காட்டி ஆர்வங்கள் நிராசைகளாக்கப் படுகின்றன.

வீட்டிலேயே உடற்பயிற்சி செய்வது ஆண்களுக்குச் சாத்தியமாகிறது. ஆனால் பெண்களுக்கு? குழந்தைப் பராமரிப்பும், சமையலும் அவளுக்கென்று ஒதுக்கப்பட்ட பிறகு உடற்பயிற்சிக்கெல்லாம் நேரம் எப்படி இருக்கும்?

பாத்திரம் தேய்ப்பது, மாவு அரைப்பது; துணி துவைப்பது போன்ற உட்கார்ந்த நிலையில் செய்யப்படும் வீட்டு வேலைகளில் ஈடுபடும் பெண்களுக்கு நாளடைவில் சதை திரண்டு போய் அதன் சங்கித் தொடராய் ரத்தக் கொதிப்பும் வாய்வுக் கோளாறுகளும் ஏற்பட்டுச் சீக்கிரமே முதுமையை நோக்கித் தள்ளி விடுகிறது. பல கணவர்கள் நாற்பது வயதுக்கு மேலும் இளைஞர்களாய்க் காட்சியளிக்க, மனைவிகள் உடல் தளர்ந்து, முதுமையை எதிர்கொண்டு விடுகிறார்கள். இதனால் தாழ்வு மனப்பான்மையும் சுய பச்சாத்தாப உணர்வும் காளானாய் மனசில் படர; எப்போதும் சிடுசிடுத்த முகத்துடன் காட்சியளிக்கிறார்கள்.

ஆரோக்கியமான உடல்நலம் அமைய, சத்தான உணவும் உடற்பயிற்சியும் ஒரு சேரப் பெண்களுக்கு வாய்க்க வேண்டும். உடல் ஆரோக்கியமே மன ஆரோக்கியத்திற்கான நுழைவாயில். இவற்றை அவர்களுக்கு மறுக்கும் போது, சந்தோஷமான வாழ்க்கையைத் தட்டிப் பறிக்கும் தவறு அது!

ஆகவேதான் இந்தப் பலவீனத் தோற்றமும் வளைந்த முதுகுகளும் குறுகிய தோள்களும்கொண்டு, எதையுமே சாதிக்க முடியாதவர்களாய்ப் பல பெண்கள்....

உடல் பலம்தானே தன்னம்பிக்கைக்கு அஸ்திவாரம்? அஸ்திவாரமே இங்கே சரியாகப் போடாமல் "பாவம் பொம்பளை.... என்ன செய்ய முடியும்?" என்ற பச்சாத்தாபத்திற்கு ஆளாக்கப்படுகிறாள் பெண்! சலுகைகள் தரும் சந்தோஷத்தில் "நீ பலவீனமானவள்தான்" என்று குத்தப்படும் முத்திரைகூட இவளுக்கு உறைப்பதில்லை.

**– திருமதி பாரதி**

- *சமூக மேம்பாட்டில் ஆண்களுக்கு நிகரான கடமையும் உரிமையும் பெண்களுக்கும் உண்டு. இருப்பினும் பெண்கள் அனைத்து நிலைகளிலும் ஒடுக்கப்படுவது ஏன்? கலந்துரையாடவும்.*
- *ஊடகங்கள் அல்லது விளம்பரங்களில் பெண்கள் எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றனர் என்பது குறித்து ஒரு தலையங்கம் தயார்செய்யவும்.*
- *பெண் சமத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் துணுக்குச் செய்திகளைப் பத்திரிகை/ இதழ்களிலிருந்து திரட்டி வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.*
- *சாதனை மகளிரின் படங்களையும் செய்திகளையும் சேகரித்து ஒரு செய்தித் தொகுப்பு தயார்செய்க.*

## சொல்

**வினைச்சொல்**

தமிழில் ஒரு செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும். இவ்வினைச் சொல் இருவகைப்படும். அவை 1. முற்றுவினை 2. எச்சவினை என்பன.

**முற்றுவினை**

சரவணன் படித்தான்

இவ்வாக்கியத்தில் படித்தான் என்னும் சொல் படித்தல் என்னும் செயல் முடிந்த நிலையை உணர்த்துகிறதல்லவா? இவ்வாறு ஒரு செயல்(வினை) முற்றுப்பெறுவதை முற்றுவினை அல்லது வினைமுற்று எனலாம்.

**எச்சவினை**

படித்த பாடம்

ஓடிப் போனான்

இச்சொற்றொடர்களில் படித்த, ஓடி என்பன செயல் முற்றுப்பெறுவதை உணர்த்தவில்லை. இவை முறையே பாடம் என்ற பெயரையும் போனான் என்ற வினையும் கொண்டு முடிகின்றன. இவ்வாறு தொடர்களில் பொருள் முடிவு பெறாது எஞ்சி நிற்கும் வினைகளை எச்ச வினைகள் எனலாம். இவை பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும்.

**1. பெயரெச்சம்**

வந்த மனிதன்

வரைந்த ஓவியம்

பார்த்த திரைப்படம்

இவ்வெடுத்துக்காட்டுகளில் வந்த, வரைந்த, பார்த்த என்னும் சொற்கள் அவற்றின் செயல் முற்றுப்பெறாமையை உணர்த்துகின்றன. அவை முறையே மனிதன், ஓவியம், திரைப்படம் என்னும் பெயர்ச்சொற்களை ஏற்று வந்துள்ளன. இவ்வாறு ஒரு செயல்(வினை) முற்றுப்பெறாமல் எஞ்சி நின்று பெயர்ச்சொல்லைத் தழுவி அமையும் தொடரைப் பெயரெச்சம் எனலாம்.

**2. வினையெச்சம்**

வந்து சாப்பிட்டான்

எழுந்து சென்றான்

இவ்வெடுத்துக்காட்டுகளில் வந்து, எழுந்து என்பன செயல் முற்றுப்பெறாமையை உணர்த்துகின்றன. இவை முறையே சாப்பிட்டான், சென்றான் எனும் வினைச் சொற்களைக் கொண்டு முடிகின்றன. இவ்வாறு வினைச்சொல்லைக் கொண்டு அமையும் தொடரை வினையெச்சம் எனலாம்.

- *பாடப்பகுதியில் இடம்பெறும் பெயரெச்சத் தொடர்களைத் தொகுத்துத் தருக.*
- *பாடப்பகுதியில் இடம்பெறும் வினையெச்சச் சொற்களை இனங்காண்க.*

அலகு 4

# வெள்ளைப் புறா

*புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட*
*போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்!*

## தமிழர் மாண்பு

### போரும் வாழ்வும்

மனிதனுக்கு மண்ணாசையும் பதவி ஆசையும் ஏற்பட்ட காலத்திருந்தே போர்களும் ஆரம்பித்துவிட்டன என்றுதான் கூற வேண்டும். இதற்காக மண்ணுலகில் மட்டுமன்றி விண்ணுலகிலும் போர்கள் நடந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. பெரும்பான்மையான புராணங்களும் தேவாசுரப் போர்கள் பற்றியவைதாம். இராமாயணம், மகாபாரதம் முதலான இந்தியப் புராண இதிகாசங்கள் மட்டுமன்றி, பிற உலகமகா காப்பியங்களும் போரின் அடிப்படையில் எழுந்தவைதாம். எனவேதான் "ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவது அன்று, இவ்வுலகத்து இயற்கை" எனப் புறநானூற்று ஆசிரியர்(பாடல்: 76) பாடியிருக்க வேண்டும். பகைவர்களிடமிருந்து நாட்டைக் காப்பதும், தம் நாட்டின் எல்லையை விரிவுபடுத்துவதுமே அக்கால மன்னர்களின் முக்கிய நோக்கமாக இருந்துள்ளது. இந்நிலையில் சங்க காலத்தில் எழுந்த பெரும்பான்மையான புறப்பாடல்களும் கடும்போர்களையும் போர் தொடர்பான செய்திகளையும் பாடுபொருளாகக் கொண்டுள்ளன.

**ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கி**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே**

(புறம்: 312)

என்பது புறநானூற்றுப் பாடல். இப்பாடல் தாய், தந்தை முதலான ஒவ்வொருவரின் கடமை பேசப்படுகின்றது. நாட்டுக்காக வீரப் போர் புரிந்து, வாள் வீசி யானையைக் கொல்வதுதான் ஒரு ஆண்மகனின் கடமை என்று கூறப்படுவது, போரின் முக்கியத்துவத்தையே காட்டுகின்றது. ஒவ்வொரு நாளும் போர்க்களத்தில் போராடி வீரப் புண்ணை ஏற்றுக்கொள்ளவேண்டும்; அவ்வாறு விழுப்புண் படாத ஒரு நாள் வாழ்க்கையில் வீணாகிப்போன ஒரு நாளாகக் கருதப்படும் அளவுக்குப் போர் பற்றிய சிந்தனைகளை மக்களிடையே பரப்பியிருந்தனர். போர்க்குறி காயங்களைப் புகழின் காயங்களாகப் பெருமைப்படுத்தும் நிலையில் போர்களுக்குப் புனிதத்தன்மை வழங்கப் பட்டது. தன்னை மறந்து, தன் குடும்பத்தை மறந்து நாட்டுக்காகப் போராடுவதுதான் நாடாளும் மன்னனின் தலையாய கடமையாகக் கருதப்பட்டது.

**நகு தக்கனரே நாடு மீக்கூறுநர்**
**இளையன் இவன் என உளையக் கூறி**
**படுமணி இரட்டும் பாஅடிப் பணைத்தாள்**
**நெடுநல் யானையும் தேரும் மாவும்**
**படைஅமை மறவரும் உடையம் யாம்என்று**
**உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கி**
**சிறுசொல் சொல்ய சினம்கெழு வேந்தரை**
**அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு**
**ஒருங்கு அகப்படேஎன் ஆயின் பொருந்திய**
**என்நிழல் வாழ்நர் செல் நிழல் காணாது**
**கொடியன் எம்இறை எனக் கண்ணீர் பரப்பிக்**
**குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக**

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . (புறம்: 72)

என்று கூறும் பாண்டியன் தலையாலங்கானத்துச்

செருவென்ற நெடுஞ்செழியனின் வஞ்சினப் பாடல் அக்கால மன்னர்களின் போர் ஆற்றலுக் குத் தக்கதோர் எடுத்துக்காட்டு.

அக்காலத்தில் ஆண்களுக்கும் மேலான ஒரு வீர உணர்வைப் பெண்களும் கொண்டிருந் தனர் என்பதற்குச் சான்றாகச் சில சங்கப்பாடல் கள் அமைந்துள்ளன. இரு நாடுகளுக்கு இடையே போர் நடைபெறுகின்றது. முதல்நாள் போரில் ஒரு பெண்ணின் தந்தை போர்க்களத் தில் யானையுடன் போராடி வீர மரணம் அடை கின்றான். அடுத்தநாள் அந்தப் பெண்ணின் அன்புக் கணவனும் வீரப்போர் புரிந்து இறந்து படுகிறான். போர் நின்றபாடில்லை. எனவே அதற்கு அடுத்தநாள், உறவென்று சொல்க் கொள்ளத் தனக்கு இருந்த ஒரே மகனையும் அழைத்து, விளையாட்டுப் பருவத்தில் இருந்த அவனது கையில் வேல் ஒன்றை எடுத்துக் கொடுத்து, “போர்க்களம் நோக்கிச் செல்” என்று அனுப்பி வைக்கின்றாள்.

**கெடுக சிந்தை கடிதிவள் துணிவே**
**மூதின் மகளிர் ஆதல் தகுமே**
**மேல்நாள் உற்ற செருவிற்கு இவள்தன்னை**
**யானை எறிந்து களத்து ஒழிந்தனனே**
**நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்**
**பெருநிரை விலங்கி ஆண்டுப் பட்டனனே**
**இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி**
**வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇ**
**பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி**
**ஒருமகன் அல்லது இல்லோள்**
**செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே**

**(புறநானூறு: 279)**

என்பது அப்பாடல்.



போருக்குச் சென்ற இளைஞன் ஒருவன் பகைநாட்டு வீரர்களுடன் கடும்போர் புரிந்து வீர மரணம் எய்துகின்றான். அச்செய்தியைக் கேட் டதும் அவனைப் பெற்ற தாயின் வற்றிய மார் பில் பால் ஊறிச் சுரந்ததாக இன்னொரு பாடல் (புறம்: 295) உரைக்கின்றது. இத்தகைய வீரம் மிக்க பெண்கள் ‘மறக்குடி மங்கையர்’ என அறியப்பட்டனர்.

ஒருவரை ஒருவர் தாக்கிக் கொல்லுகின்ற கடுமையான போரிலும் சில தர்மங்கள் கடைபிடிக்கப்பட்டன. போருக்கான நாளும் இடமும் குறித்தே போருக்கு ஆயத்தமாயினர். பகல் நேரங்களில் மட்டுமே போர் நிகழும், பகைவர்நாட்டு ஆநிரைகளைக் கவர்தல், கவர்ந்த ஆநிரைகளை மீட்டல், பகைநாட்டுக் கோட்டைகளை முற்றுகை இடுதல், முற்று கையை நீக்க முனைதல் முதலான போருக்கான சூழல்களை உருவாக்கிய பின்னரே போரில் ஈடுபட்டனர்.

போரில் பசுமாடுகள், பார்ப்பன மக்கள், பெண்கள், நோய்வாய்ப்பட்டோர், இறுதிக்கடன் செய்யப் புதல்வர்கள் இல்லாதோர் ஆகியோர் எக்காரணம் கொண்டும் தாக்கப்படாமருக்க எச்சரிக்கையாகவும் கவனமாகவும் இருந்தனர். ‘எங்கள் மன்னன் போர்தொடுக்கத் தயாராக உள்ளான், எனவே பசு, பார்ப்பனர், பெண்கள் முதலானோர் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுங்கள் என எச்சரிக்கை விடும் புற நானூற்றுப் பாடல் ஒன்று (புறம்: 9) இதற்குச் சான்றாக அமைகின்றது.

**ஆவும் ஆன் இயற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போல் புதல்வர்ப் பெறாஅதீரும்**
**. . . . . . . . நும் அரண் சேர்மின்**

என்பது அப்பாடற்பகுதி.

இவ்வாறு சில போர்தர்மங்கள் பாதுகாக் கப்பட்டாலும், பகைநாடுகள் பெரும் அழிவுக்கு ஆளாக்கப்பட்டன என்பது இன்னொரு செய்தி. பகைநாட்டை வென்றபின் அந்நாட்டை அழிக்க முனைவது போர் மரபாகவே இருந்துள்ளது. பகைநாட்டு விளைநிலங்களைக்

கழுதைகளை விட்டு உழச்செய்து பாழ்படுத்து வது குறிப்பிடவேண்டிய ஒன்று. 'வெள்வாய்க் கழுதைப் புல் இனம் பூட்டி பாழ் செய்தனை' (புறம்: 15) என அச்செய்தி வருகின்றது. கழுதை உழுத நிலம் வளம் குன்றி பாழ்பட்டுவிடும் என்பதால் இவ்வாறு செய்தனர். நல்ல விளைச் சல் தரும் வேளாண் நிலங்களில் வெள்ளை வரகு, கொள்ளு முதலான தானியங்களை விதைத்து அந்நிலங்களை வளம் குன்றச் செய்து பாழ்படுத்தினர் (புறம் 392). மேலும் பகைநாட்டு விளைநிலங்களில் குதிரைகளை ஓடவிடுவதும், வேளாண்மைக்கு ஆதாரமான நீர்நிலைகளில் யானைகளை இறக்கிக் கலக்கு வதும் (புறம்: 15) வழக்கமாக இருந்துள்ளது. தோல்வியடைந்த நாடுகளை எரியூட்டி அழியச் செய்யும் நிகழ்வுகளும் நடந்துள்ளன (புறம் 15). 'ஏம நல நாட்டை ஒள் எரி ஊட்டிய' மன்னனைப் புகழும் செய்தி இன்னொரு பாட்டில் வருகின்றது (புறம்16).

அன்றைய மக்கள் வாழ்க்கையின் அடிப் படை ஆதாரமாக விளங்கியது நெல்லாகும். எனவே நெல் வயல்களை அழித்தும் பாழ்படுத் தியும் பகைநாடுகளை வறுமைக்குள் வீழ்த் தினர். கோடரியால் பகைநாட்டுக் காடுகளை அழித்த செய்தி 'வடிநவில் நவியம் பாய்தன் ஊர்தொறும் கடிமரம் துளங்களிய காவும்' (புறம்: 23) எனவரும் பாடலடியால் அறிய முடி கின்றது. போரின் இத்தகைய தீய விளைவுகள் யாவும் சிந்திக்கற்பாலது.

நாடாளும் மன்னர்களின் தலையாய கடமையாகவும், ஆண்மக்களின் வீரத்தின் விளைநிலமாகவும் போர் கருதப்பட்டது. எனினும், போரின் விளைவுகள் பொதுமக் களைப் பெரிதும் பாதித்தன என்பது உண்மை.

**– திங்கள் மைந்தன்**

- *போரினால் ஏற்படும் இழப்புகளையும், அழிவுகளையும் பற்றிய செய்திகளைப் பத்திரிகைகளிலிருந்து திரட்டிப் "போரும் அமைதியும்" என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.*

## புறநானூறு

இரும்பனை வெண்தோடு மலைந்தோன்
அல்லன்;
கருஞ்சினை வேம்பின் தெரியலோன்
அல்லன்;
நின்னகண்ணியும் ஆர்மிடைந் தன்றே;
நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்
தன்றே;
ஒருவீர் தோற்பினும், தோற்பநும் குடியே;
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே;
அதனால்,
குடிப்பொருள் அன்றுநும் செய்தி;
கொடித்தேர்
நும்மோர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்ம உவகை செய்யும் இவ் இகலே

**(புறம் : 45)**

**திணை** : வஞ்சி, **துறை** : துணைவஞ்சி

உறையூர் முற்றி இருந்த, சோழன் நலங் கிள்ளியையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளி யையும் **கோவூர் கிழார்** பாடியது.

- *'ஒருவர் தோற்பினும் தோற்பது நும்குடியே' எனும் கோவூர்கிழாரின் கூற்றிற்கான காரணத்தைக் கலந்துரையாடி விமர்சனக் குறிப்பு தயார்செய்க.*

## மனோன்மணீயம்

**பலதேவன் :**

உதியனும் செழியனும்
போர்தனி புரியில் யார்கொல் பிழைப்பர்?
பங்கமில் இரவியுந் திங்களுந்துருவி
எதிர்படுங் காலை, கதிர்க்கடுங்கடவுள்
மறைய இவ்வுலகில் வயங்கிருள் நிறையும்
அவரந் நிலையில் அமர்ந்திடில்
அவ்விருள் தவறாத் தன்மை
போல் நீவிர் இருவருஞ்
சமர்செயி லுலகம் தாங்காது

**– பேரா. பெ. சுந்தரம் பிள்ளை**

- *புறநானூறு, மனோன்மணீயம் பாடல் கருத்துகளை ஒப்பிடுக.*

# தியாக பூமி

## அன்னையின் ஆணை

**சாம்ராட் அசோகன் நாடகம்**

ஓ : போர் வெறியனாயிருந்த அசோகன் புத்த தர்மத்தைப் புவனமெங்கும் எடுத்து ஓது வதற்கு முன்னால் இமயம் முதல் குமரி வரை பரவியுள்ள இதே உபகண்டத்தை ஒரு குடைக் கீழ் கட்டியாள நினைத்தான். அதனால் கங்க மென்னும் சின்னஞ்சிறிய ஆனால் சுதந்திரமான நாட்டினை நோக்கி அடிபணியச் சொன்னான். ஆனால் கங்கமோ அடிமைப்படுவது ஆகாத காரியமென்று ஆர்ப்பரித்து நின்றது. அதன் பிறகு.

### காட்சி 1

**(அசோகன் அவை)**

**அசோகன்** : என்ன சொன்னான் கங்க நாட் டான்? நந்த வம்சத்தைப் பூண்டோடு துவம்சம் செய்த அந்தண குலசிரேஷ்டராம்... அவனி யெங்கும் தேடி அலைந்தாலும் காண முடியாத அரும்பெரும் பண்டிதராம் சாணக்கியரின் ராஜதந்திர மூளையிலே ஊறி வளர்ந்த இந்த அசோக வர்த்தனனுக்கா அடிபணிய மறுத் தான்? பேதமை! பேதமை!

தானைத் தலைவரே! தகுதி சிறிது மில்லாத தருக்கர் கூட்டத்தை இடுப்பொடித்துப் போடும் எனதருமை தளபதியே! என் தோள் கள் தினவெடுக்கின்றன; எனது வாளும் வேலும் இரத்தத்தை ருசி பார்க்கத் துடிக்கின்றன! போர் திமிர்பிடித்த என் புஜபல பராக்கிரமம் அந்தக் கங்க பூமியை எனது பாதத்தடியிலே போட்டு மிதித்துத் துவைத்து நசுக்கி, அமிழ்த்தி, சந்த னமாக எடுத்து என் மார்பிலே பூசிக் கொள்ளத் துடிக்கிறது.

அமைச்சரே! ஆரிய வர்த்தத்தின் அருந்திறற் காவலரே! போர்ப்பறை முழங்க வேண்டும். தென்னகத்தின் வாயில் இரத்தத் தடாகம் உடைப்பெடுத்து ஓட வேண்டும். அது கண்டு இமயத்தின் பிடரியிலே இலச்சினை யைப் பொறித்த தமிழகத்து வேந்தர்கள் நம் காலடியில் முடி கழற்றி வைத்து அடி பணிந்து வணங்க வேண்டும்! ஆஹா! என் சொல்லுகி றீர் என் சொல்லுகிறீர்?

**அமைச்சர்** : சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? விந்தியத்தின் விளிம்பிலே ஆரிய வர்த்தத்தார் அடியெடுத்து வைத்ததில்லை என்ற மாபெரும் பழியைப்போக்குவதற்கு இதைவிட்டால் வேறு சந்தர்ப்பமில்லை சக்கரவர்த்தி.

**தளபதி** : அசோக மன்னா! ஆணையிடுங்கள்; வெட்டிவா! என்றுரைத்தால் பகைவர் கூட்டத்தைக் கூண்டோடு கட்டி வந்து உங்கள் காலடியில் குவிக்கிறோம்.

**அசோகன்** : சபாஷ்! சபாஷ்! யுத்த பேரிகை முழங் கட்டும்! அதுவே விரைவிலே ஜெயபேரிகை யாக மாறி ஒக்கட்டும்! வெற்றி...! வெற்றி...! அதைத்தவிர இந்த அசோகனின் வாழ்க்கை அகராதியிலே வேறு வார்த்தைகளே இடம் பெறக் கூடாது. முழங்கட்டும் போர் முரசம்! அணி வகுத்து நிற்கட்டும் ரதகஜதுரகபதாதிகள்; புறப்படுங்கள்; புறப்படுங்கள்!

(அப்போது புத்த பிட்சு அங்கு வருகிறார்.)

**பிட்சு** : நிறுத்து! நிறுத்து! அசோகவர்த்தனா என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? வாப முறுக்கும் வாழ்நாளிலே எதையாவது சாதிக்க வேண்டும் என்ற நினைப்பும் ஒருங்கே கொண்ட நீ எப்போதப்பா இப்படிக் கொடுங்காலனாக மாறினாய்?

**அசோகன்** : புத்த பிட்சுவே! என்ன சொல்கிறீர் இப்போது?

**பிட்சு** : கங்கத்தோடு யுத்தம் கூடாது என் கிறேன் நான்.

**அசோகன்** : அதை யாராவது புடவைக் கட்டிக் கொண்டிருக்கும் புத்திசாயிடத்தில் சப்தம் போட்டுச் சொல்லும்.

**பிட்சு** : அசோகா, நீ அறியாமல் பேசு கிறாய். கங்கம் என்னவோ கீரைப்பாத்தி நாடு தான்! ஆனாலும் அது உன் வம்சத்தவர் யாரா லும் நெருங்க முடியாத கீர்த்தி வாய்ந்தது என் பதை மாத்திரம் மறந்து விடாதே.

**அசோகன்** : அதை மறக்காததால்தான் இப்படி மறக்கோலம் பூண்டிருக்கிறேன் நான். என் தாத்தா விந்தியம் தாண்டி காலெடுத்து வைக்க விரைந்தார். புறமுதுகிட்டு ஓடிவந்தார். என்

தந்தை பிந்துசாரரும் படைகொண்டு சென்றார். ஆனால் தோல்விப் புயலைத் தாங்காமல் திரும்பி வந்தார். இதோ வில் ருந்து புறப் பட்ட அம்புபோல புறப்பட்டு விட்டான் அசோகன். இனி அவன் முன் நின்று உபதேசம் செய்வோர் தூசுக்குச் சமானம். எட்டி நின்று எள்ளி நகை யாடுவோர் புழுதிக்குச் சமானம், அஞ்சா நெஞ்சு படைத்த அசோக வர்த்தனன் ஆணையிடுகிறான், கோழைகளே, விலகிப் போங்கள்! இரத்தம் கண்டு அச்சம் கொள்ளும் கோழைகளே ஓடிப்போங்கள்! 'வாழ்வா சாவா பார்த்துவிடுவோம் ஒருகை.' என்று வஞ்சினம் கூறும் வீரர்களே! என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள்!.

**பிட்சு** : அசோகா! அசோகா! (என்று அழைக்க அசோகனும் தளபதியும் வீரர்களும் திரும்பிப் பாராது செல்கின்றனர்.)

### காட்சி – 2

**(போர்க்களம்)**

**ஒ** : போர்! போர்! உக்கிரமான போர்! ஒரு நாள் அல்ல இருநாள் அல்ல மாபெரும் மகதத்தின் மானம் பறிபோகும் விதத்தில் சின்னஞ்சிறு கங்கத்தில் நூற்றிருபது நாட்கள் போர் நடந்ததன் முடிவு. இமயம் எதிர்த்தால் எறும்பு என்னாவது? கங்கம் வீழ்ந்தது! கங்கம் வீழ்ந்தது! ஆனால் விளைவு? பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடின. இலட்சோப இலட்சம் பேர் போரிலே கலந்து, மார்பிலே வேல்தாங்கி சாவிலே சேர்ந்தார்கள். தொற்று நோய் வேறு ஆயிரக்கணக்கானோரைக் கொத்திச் சாப்பிட்டது.

ஆனால் அன்று அசோகன் வாழ்நாளில் முதல் தடவையாக அமைதியின்றி அலைந்தான்; சாந்தியின்றி சஞ்சலப்பட்டான். நிம்மதியின்றி நிலை தடுமாறினான். அந்த நேரம்.

(போர்க்களத்தைச் சுற்றி வருகிறான் அசோகன். ஒரு பிணத்தை அணைத்துக் கொண்டு கிழவி ஒருத்தி அழுது கொண்டிருப்பதைக் காண்கிறான்).

**அசோகன்** : தாயே தாங்கள் யார்?

**கிழவி** : என் மகன் இறந்துவிட்டான். கதறி தொண்டை வறண்டுவிட்டது. தண்ணீர்! தண்ணீர்! (அசோகன் தண்ணீர்ப்பையை எடுத்து)

**அசோகன்** : இதோ இருக்கிறது தாயே!

**கிழவி** : இந்த அகால நேரத்தில் மறைந்துவிட்ட என் மகனே வந்தது போல் வந்திருக்கிறாய். யாரப்பா நீ? (அவள் கைகளை குவிக்க அசோகன் தண்ணீர் ஊற்றிக்கொண்டே)

**அசோ** : சாம்ராட் அசோகன்!

(அந்தப் பெயரைக் கேட்டதும் திடுக்கிட்ட அந்த வயோதிகத்தாய், தொண்டைக்குள் விழுங்க இருந்த நீரை அவன் முகத்திலே உமிழ்கிறாள்).

**கிழவி** : சாம்ராட் அசோகன்! சாம்ராட் அசோகன்! சாம்ராஜ்ய வெறி பிடித்த சாம்ராட் அசோகன்! எங்கள் வருங்கால சந்ததிகளை வெடுக்கென்று வாயில் போட்டு விழுங்கிக்கொண்ட வெறி பிடித்த அசோகன்! பூவும் மஞ்சளுமாய் இருந்த பெண்களை விதவையாக்கிப் புலம்பித் தவிக்க வைத்த அசோகன்! அய்யய்யோ! அவசியமின்றிப்போர் நடத்தி இத்தனை பேரை பழி வாங்கி இருக்கிறாயே உனக்கு இதயம் என்பதே கிடையாதா? நீ அண்ணன் தம்பி அக்காள் தங்கை இவர்களோடு பிறக்கவே இல்லையா? நீ மனிதன்தானா? அல்லது மரத்தால் செய்த உணர்ச்சியற்ற பதுமையா? அய்யோ! நீ கொலைகாரன், இரத்த வெறிபிடித்த வேங்கையிலும் கொடியவன், உன் கையால் தண்ணீர் குடிப்பதை விடச் சாவதே மேல்!

(அசோகன் திரும்புகிறான். முன்பு அவைக் கூடத்தில் அறிவுரை கூறிய அதே புத்த பிட்சு வருகிறார்)

**பிட்சு** : புத்தம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி!


**அசோ** : துறவியே! ஆந்தையும் வௌவாலும் கழுகும் கோட்டானும் குடியிருக்கும் இந்த இடத்தில் நீங்களா?

**பிட்சு** : ஆமாம், நோயிருக்கும் இடத்தில் தானே வைத்தியனுக்கு வேலை. அதனால் தான் மண்ணாசை என்னும் தொழுநோய் பிடித்துத் தேம்பி அலையும் உன்னைத் தேடி வந்திருக்கிறேன்.

**அசோ** : புத்த பிட்சுவே, ஏற்கனவே ஏர்முனைப்பட்ட நஞ்சை நிலம் போலப் புண்ணாகி இருக்கிறது என் உள்ளம். தயவுசெய்து மீண்டும் என்னைக் கெடுத்துவிடாதீர்கள்.

**பிட்சு** : அசோகவர்த்தனா, இந்த ஆழிசூழ் உலகத்தில் கெடுக்க முடியாத நபர்களே இல்லை;

க்ஷத்ரிய குலதிலகா! கொஞ்சநேரம் உன் காதுகளை எனக்குக் கடன் கொடு, ஒரே



ஒருமுறை சிந்தித்துப்பார். எப்படிப் பெற்றாய் இந்த கங்க பூமியை? அடுக்கடுக்காய் கபால ஓடுகளைக் கொட்டி நிறுத்தி, ஆயிரமாயிரம் வீரர்களைக் கொன்று குவித்து, அவர்களது விதவை மனைவிமார்கள் அறுத்தெறிந்த அழகுமிகு கூந்தலைக் கயிறாகக் கத்திரித்து இரத்தம் தோய்ந்த கரங்களால் உன் வெற்றிக் கொடியைப் பறக்கவிட்டிருக்கிறாய்.

இதுவா வீரம்? இதுவா வெற்றி?

இதுவா விவேகம்? இதுவா மானம்?

இல்லை, அவமானம்! அவமானம்!

**அசோ** : போதும் பூஜ்யரே! தெளிந்த நீர் போல் இருந்த என் சித்தத்தை அறிவுக்கல் எறிந்து குழப்பி விட்டீர்கள். ஐயோ! எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போல் இருக்கிறதே. என்முன்னால் நில்லாதீர்கள், போங்கள், போய் விடுங்கள், இந்த இடத்தை விட்டு.

**பிட்சு** : போகிறேன்; ஆனால் அசோகவர்த்தனா மறந்து விடாதே! அன்புதான் இன்ப ஊற்று! அன்புதான் உலகஜோதி!

அன்புதான் உலக மகாசக்தி!

(பிட்சு போகிறார். அன்புதான் இன்ப ஊற்று , அன்புதான் உலக மகாசக்தி என்ற வாசகங்கள் அசோகன் முகத்தில் எதிரொக்கின்றன.)

**அசோ** : அன்புதான் இன்ப ஊற்று! அன்புதான் உலக ஜோதி! அன்பு தான் உலக மகா சக்தி, ஆம். என் கண்கள் திறந்தன. பூட்டிய சிந்தனைக் கூட்டின் இரும்புக் கதவுகள் உடைந்தன.

**அசோ** : நீ அருள் பெற்றாய், மருள் துடைத்தாய் ஐயோ; இந்த அநாகரிக மனிதப்பதரின் அற்ப ஆசையால் வெற்றிப் பித்தத்தால் நூறாயிரம் பேர் உயிரைத் தத்தம் செய்திருக்கின்றனரே, நூற்றி ஐம்பதாயிரம் பேர் கையிழந்து, காழந்து, கண்ணிழந்து, மெய்யெல்லாம் புண்ணாகிப் புலம்பித் தவிக்கின்றனரே! என்ன செய்வேன்? இந்த பாவத்தைக் கழுவினால் கங்கை நீரும் களங்கப்பட்டு விடுமே, இத்தனைக்கும் காரணம்? இந்த வாள், வில், வேல், ஆகா! இந்தக் கொலைக்கருவியினால் எத்தனை ஆயிரம் உயிர்களைக் கிள்ளி எறிந்திருக்கிறேன்? இந்த வில்னால் எத்தனை இளம் இதயங்

களை வகிர்ந்திருக்கிறேன்? இந்த வில்னால் எத்தனை மனித இதயங்களைக் கீறி எறிந்திருக் கிறேன்? ஐயோ கொடுமை! இனிமேல் இந்த நிலை நீடிப்பது மடமையிலும் மடமை. ஆமாம். ஆயிரக்கணக்கிலே எதிரிகள் வந்து குவிந்தா லும் தொகை தொகையாய் அவர்களை எதிர் நிறுத்தி ஒரே வீச்சில் வெட்டி வீழ்த்திய என் வீர வாளே, இனி ஒழிந்து போ! என் உறையை விட்டு! தாவி வரும் வேல் தடுத்து என் ஆவிக்காக்கப் பயன்பட்ட என் வீரக் கவசமே! இனி ஓடிப்போ, என் உடலைவிட்டு!

கடும் புயலாய்ச் சீறி வந்த காட்டானை பலவற்றைக் கூறுபோட்டு என் அங்கத்தில் வீற் றிருக்கும் வீரக்கங்கணமே! கழன்று விடு என் கையைவிட்டு. குபு குபு வெனக் குருதி கொட்டி, குள்ளநரிக் குணம் கொண்டோரைக் குப்புற வீழ்த்தி வீரத்திற்கு விளம்பரமாகநின்ற வீர வடுக்களே, மறைந்து போங்கள் என் மார்பை விட்டு.

இனிமேல் இந்த அசோகன் மாறி விட்டான்; தலைகீழாக மாறி விட்டான். ஏ! கங்கமே, தென்னகத்தின் வாயில்புறமே! இன்று முதல் எனக்குப் பொன் வேண்டாம். இன்று முதல் நான் உருவத்தில் தான் சக்ரவர்த்தி, உள்ளத்தில் பிட்சுமூர்த்தி, போதிமரத்துப் புத்த னே, ஆண்பெண் தவிர வேறில்லை என்று மேதினிக்குச் சாற்றிய புத்துலகச் சித்தனே! நீதான் வேண்டும். உன் அன்புதான் வேண்டும். அறம் தான் வேண்டும். என்னை ஏற்றுக்கொள்.

(என்று சொல்க்கொண்டே புத்தர் சிலையின் காலடியில் வீழ்கிறான் அசோகன். புத்தம் சரணம் கச்சாமி என்ற பாடல் பின்னணி ஒக்கிறது).

**– அன்னையின் ஆணை**

(திரைப்படம்)

- *எழுச்சியும் உணர்ச்சியும் மிக்க வசனங்கள் நாடக இலக்கியங்களுக்கு வலுசேர்க்கின்றன எனும் கருத்தை சாம்ராட் அசோகன் எனும் நாடகம் மூலம் தெளிவுபடுத்துக.*
- *இந்நாடகத்தை வாசித்துக் கதைவடிவில் எழுதுக.*
- *இந்நாடகத்தின் மொழிநடைச் சிறப்பினை விளக்குக.*

## கங்கத்துப்பரணி

**தலைபெற்ற மனைவி செயல்**

பொருதடக்கை வாளெங்கே மணிமார்
பெங்கே
போர்முகத்தி லெவர்வரினும்
புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே யெங்கே யென்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்!
காண்மின்!

**கருமேகம் செம்மேகத்தை ஒத்திருத்தல்**

ஆடற்று ரங்கம்பி டித்தாளை யாளோட
டித்துப்பு டைத்தவ்வி ரும்புண்ணினீர்
ஓடித்தெ றிக்கக் கருங்கொண்டல் செங்கொண் டல்
ஒக்கின்ற விவ்வாறு காண்மின்களோ!

**கருங்காகம் வெண்காகத்தை ஒத்திருத்தல்**

நெருங்காக வச்செங் களத்தே
தயங்கும் நிணப்போர்வை மூடிக்கொளக்
கருங்காகம் வெண்காக மாய்நின்ற
வாமுன்பு காணாத காண்மின்களோ.

**– சயங்கொண்டார்**

- *கலிங்கத்துப்பரணியில் போர்க்களக் காட்சியை விவரிக்க.*
- *போரின் கொடுமைகளைக் கூறும் துண்டுப் பிரசுரம் தயாரிக்க.*

## யாப்பு

**முரண்**

காலையும் மாலையும் கைகூப்பி கால் தொழுதால் மேலை வினைகளெல்லாம் கீழவாம்.

இப்பாடல் வரிகளில் காலை, மாலை, மேல், கீழ் என்ற சொற்கள் பொருள் முரண்பட்டு வரும் சொற்களாகும். இவ்வாறு செய்யுளில் இடம் பெறும் சொற்கள் முரண்(எதிர்) பொருளில் அமைக்கப் பெற்றால் அது முரண் எனப்படும்.

- *பாடல் பகுதியில் இடம்பெறும் முரண் பொருள் தரும் சொற்களைக் கண்டு பிடித்து எழுதுக.*

### கம்பராமாயணம்

**போர்க்களத்தோற்றம்**

ஆடுகின்றன கவந்தமும் அவற்றொடும் ஆடிப்
பாடுகின்றன அலகையும் நீங்கிய பனைக்கைக்
கோடு துன்றிய கரிகளும் பரிகளும் தலைக்கொண்டு
ஓடுகின்றன உலப்பில உதிர ஆறு உவரி.

அற்ற ஆழிய அறுப்புடை அச்சின அம்போடு
இற்ற கொய் உளைப் புரவிய தேர்க் குலமெல்லாம்
ஒற்றை வாளியோடு உருண்ட கருங்களிற்று ஓங்கல்
சுற்றும் வாசியும் துமிந்தன அமர்க்களம் தொடர்ந்த.

தேர்இழந்து வெஞ் சிலைகளும் இழந்து செந்தறுகண்
கார்இழந்து வெங்கன மாக் கால்களும் இழந்து
சூர்இழந்து வன் கவசமும் இழந்து துப்பிழந்து
தார்இழந்து பின் இழந்தனர் நிருதர்தம் தலைகள்

**– கம்பர்**

- *கலிங்கத்துப்பரணி, கம்பராமாயணத்துள் காட்டப்படும் போர்க்களக் காட்சிகளை ஒப்பிட்டுக் கலந்துரையாடி உம் கருத்துகளை வெளிப்படுத்துக.*

# அமைதிப் பூங்கா

## எல்லைக்குள் நடக்கும் பயங்கரவாதம்

உலகைக் குலுக்கும் பயங்கரவாதம்
ஒவ்வொரு நாட்டிலும் தொடர்கதையாகிறது
பயங்கரவாதத்தை ஒழிக்க
உலக நாடுகளின் ஒருமித்த குரல்
காலம் கடந்த ஞானோதயம் தான்.

அடக்குமுறையும் வன்முறையும் கூட
பெரிய இடத்தைப் பாதிக்கிற போதுதான்
சமூகத்திற்கே விடிவு பிறக்கிறது.
மாதம் மும்மாரி மழை கூட
மந்திரி வீட்டில் பெய்தால் தான்
நாட்டில் பெய்ததாக அரசனும் நம்புவான்.
அடக்குமுறையும் வன்முறையும் கூட
அப்படித்தான் போலும்!
அடிபட்டதும்
உலகநாடுகளிருந்தே வன்முறையை
ஒழித்துக் கட்டவும் ஓரம் கட்டவும்
எல்லா வேலைகளையும் ஒதுக்கிவைத்து
விட்டு
ஓடி வருகின்றது அமெரிக்கா ஒவ்வொரு
நாட்டிற்கும்

பயங்கரவாதம் இருவகையானது
தேசங்களின் எல்லைகளைக் கடந்து
உலகைக் குலுக்கும் பயங்கரவாதம்,
மன எல்லைக்குள்ளே ஊறிக்கிடந்து
உள்ளத்தைக் கொல்லும் பயங்கரவாதம்

பெண், சாதி, மதம், தொழில், பதவி என்று
வாழ்க்கைப் பாதையின் ஒவ்வொரு
நிலையிலும்
வதைக்கப்படுகிறது மனித மனம்
கருவிலேயே வதைப்படுகிற பெண்
பிறந்த பின்னும் வதைக்கப்படுகிறாள்
சமம் என்பதும் சரிசமம் என்பதும்
யாருக்கும் இங்கே சாத்தியமில்லை.


உலக வர்த்தகக் கட்டிடத்தை விடவும்
உருவாக்கி எழுப்பியுள்ள கோயில்களை
விடவும்
மானுட மனங்கள் உன்னதமானவை
எனவே
ஒழிக்கப்பட வேண்டியது
உலகைக் குலுக்கும்
எல்லைகடந்த பயங்கரவாதம் மட்டுமன்று
உள்ளத்தைக் கொல்லும்
எல்லைக்குள் நடக்கும் பயங்கரவாதமும் தான்.

**– தமன் பிரகாஷ்**
**மா.ராஜேந்திரன்**
(தலையங்கம்)

- *பெருகிவரும் பயங்கரவாதத்திற்கான காரணங்களை விவரித்துக் குறிப்பு எழுதுக.*

# இமயத்தின் உச்சியில்...

1999 ஆம் ஆண்டு... அன்றைய பாரதப் பிரதமர் நல்லெண்ணப் பயணமாகப் பாகிஸ்தானுக்குச் சென்றார். அவரைப் பாகிஸ்தான் அதிபர் புன்னகை தவழ வரவேற்றார். இந்திய, பாகிஸ்தான் தேசியக் கொடிகள் மக்கள் நெஞ்சங்களில் வரையப்பட்டன. இதை இரண்டு நாட்டு நட்பை நேசிக்கும் உள்ளங்கள் கண்டு மகிழ்ந்தன. இரு நாட்டுத் தலைவர்களும் கைகுலுக்கிப் புகைப்படங்களுக்குப் போஸ் கொடுத்துக் கொண்டிருக்கும் அதேவேளையில், பாகிஸ்தான் தீவிரவாதிகளும் இராணுவத்தினரும் இந்திய இராணுவத்திற்குத் தெரியாமல் இந்தியப் பகுதிக்குள் நுழைந்தனர்; மறைவிடங்களை அமைத்தனர். தேவையான ஆயுதங்களையும் உணவுப் பொருள்களையும் பதுக்கினர். பதுங்கு குழிகளை அமைத்து ஒத்திகை பார்த்தனர். அந்தப் பகுதிக்கு ஆடு மேய்க்கச் சென்ற இந்தியச் சிறுவர்கள் பாகிஸ்தானியர் நடமாட்டத்தைப் பற்றி சொல்ய பின்புதான் இந்திய இராணுவம் எழுந்தது! பகைவர்களைத் தாக்க மலையில் ஏறிய இந்திய வீரர்களை மறைவிடத்தில் இருந்து எதிரிகள் எளிதில் கொன்றனர். விமானத் தாக்குதலால் இந்திய வீரர்கள் எதிரிகளின் மறைவிடங்களைத் தகர்த்தனர். சிலர் எதிரிகளின் குண்டுக்கு மாண்டனர். ஆம்! இதுதான் கார்கில் போர் என்று அழைக்கப்பட்டது.



கார்கில் பகுதியில் ஓர் இந்திய இராணுவ முகாம். 23 வயது தமிழக இளைஞன். யுத்தம் தொடங்கிய நாளிருந்து அவனுக்கு அயராப் பணி. அண்ணன் எழுதிய கடிதத்திற் குப் பதில் கடிதம் எழுதக்கூட அவனுக்கு நேரமில்லை. ஏன்? அண்ணன் கடிதத்தைப் பிரித்துப் படிக்கக்கூட வாய்ப்பில்லை. 1999 ஜூலை 8 இரவு. அன்றுதான் அவனுக்குச் சிறிது ஓய்வு. அண்ணன் கடிதத்தைப் பிரித்துப் படித்தான். அவன் முகத்தில் ஆயிரம் சூரியன்! ஆம்! தங்கை திருமணம் பற்றி அண்ணன் கடிதம் பேசியது. உடனே அண்ணனுக்கு அவன் பதில் எழுதத் தொடங்கினான்.

“அண்ணா! உன் கடிதம் 5 ஆம் தேதி மாலை கிடைத்தது. அண்ணா! இன்று 15 பேர் கொண்ட குழு Raiding பண்ணுவதற்காகக் காட்டுக்குள் போயிருந்தோம். திடீரென்று தீவிரவாதி எங்கள் மீது Firing Shoot பண்ணிவிட்டான். இப்போது நினைத்தாலும் உடம்பு சிர்க்கின்றது. அண்ணா! உங்கள் எல்லோரின் ஆசீர்வாதம் இருப்பதால்தான் மயிரிழையில் உயிர் தப்பினோம். சிறிது நேரம் ஒன்றும் புரியவில்லை. பின்னர் எல்லோரும் சுதாரித்து அவனை ஓட... ஓட... விரட்டிச் சுட்டுக்கொன்று விட்டோம். இறந்தவன் பாகிஸ்தானில் ஓர் உயர் அதிகாரி.

அண்ணா! அப்புறம் ராதிகாவின் விசயத்தைப் பற்றி லெட்டர் மூலம் தெரிந்து கொண்டேன். ராதிகாவிற்கு இதில் விருப்பம் தானே. ராதிகாவின் விருப்பம் அதுவே என்றால் நமக்கும் ஓ.கே. அண்ணா! எனக்கு டிசம்பர் மாதம் என்றால் 15 நாள் கூட லீவு கிடைக்காது. இந்த வருடம் லீவு இந்த வருடமே முடிக்க வேண்டும். இதில் என்ன பிரச்சினை என்றால், இந்திய இராணுவத்தில் இந்த 2 மாதமாக யாருக்கும் லீவு கொடுக்கவில்லை.

அதனால் ஒரு மாதம் லீவு கொடுக்க வாய்ப்பில்லை. அதனால் நான் நவம்பர் மாதம் விடுமுறையில் வருகின்றேன். நீங்கள் நவம்பர் 15-க்கு மேல் திருமணம் வைத்துக் கொள்ளுங்கள். நான் எப்படியும் 10ஆம் தேதிக்குள் வந்து விடுகிறேன்.” என்று கடிதத்தை எழுதி முடித்து விட்டு, த. கண்ணன், கரியணம்பட்டி, பண்ணைபுரம் (அஞ்சல்), தேனி மாவட்டம் என்று முகவரியை எழுதி முடிக்கிறான். அந்தக் கடிதத்தையே அவன் விழிமூடாமல் பார்க்கிறான்... அதில் அவனுடைய தங்கை ராதிகா முகம் தெரிகிறது.... சின்னஞ்சிறு வயதில் சேர்ந்து விளையாடியது நினைவுக்கு வருகிறது. ஒரு



முறை அவளை அவன் கீழே தள்ள, விழுந்தத் தங்கை தாயிடம் முறையிட... இவனை அடிக்கத் தாய் ஓடிவர... தப்பித்து ஓடியதை நினைத்து, சிரித்துக் கொள்கிறான்! இந்த நினைவுகளோடு அவன் தூங்கிவிட்டான்.

அதிகாலையில் எழுந்தான். எழுதிய கடிதத்தை அஞ்சல் சேர்த்தான். இதோ! எதிரிகளை நேர்கொள்ளக் களம் நோக்கிச் செல்கிறான். ஓரிடத்தில் எதிரிகள் முகாம்... அப்போது காலை 11 மணி. எதிரிகள் முகாமில் புகுந்து தாக்கினான். அவனை எதிர்கொள்ள இயலாமல் சிலர் தப்பி ஓடினர். மறைந்திருந்த ஒரு பகைவன் வீசிய குண்டு அவன் கால்களைச் சேதப்படுத்தியது. அப்போதும் அவன் துப்பாக்கி எதிரிகளைத் துவம்சம் செய்தது.

ஒரு கட்டத்தில் நிற்க முடியாமல் அவன் கீழே சரிந்தான். இராணுவ அதிகாரிகள் அவனை மருத்துவ முகாமுக்குக் கொண்டு சென்றனர். அவனைப் பரிசோதித்த மருத்துவர்கள் வழியிலேயே அவன் இறந்துவிட்டான் என்று சொல் வருந்தினர். இராணுவ வீரர்களும் அதிகாரிகளும் கலங்கிய கண்களுடன் அவனுக்கு அஞ்ச செலுத்தினர்.

1999 ஜூலை 8 இரவு அண்ணனுக்கு அவன் கடிதம் எழுதினான்! இதோ! மறுநாள் பகல் 11 மணிக்கு எதிரிகள் குண்டுக்கு அவன் இரையாகிறான். அன்று மாலையே கரியணம் பட்டியில் இருக்கும் அவனுடைய பெற்றோருக்குத் தொலைபேசி வழியாக இராணுவ அதிகாரிகள், அவன் மறைந்த துயரச் செய்தியைச் சொல் வருந்தினர். செய்தி கேட்டு உறவுகள் அழுதன. அதன்பின் ஊரே அழுதது. பக்கத்துக் கிராமங்களும் இந்தச் சோகத்தில் மூழ்கியது. ஜூலை 10 அன்று அவன் பெற்றோருக்கு வந்த தந்தி அவன் மரணத்தை உறுதி செய்தது!

1999 ஜூலை 13 அன்று அவனுடைய உயிரற்ற உடலை இராணுவ அதிகாரிகள் பெற்றோரிடம் ஒப்படைத்தனர். அன்றே அவனுடைய இறுதிப் பயணம் முடிந்து அவன் மேனி தீக்குத் தீனியானது. மறுநாள் இராணுவ முகாமிருந்து அண்ணனுக்கு அவன் எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது! ஆம்! அவன் எழுதிய கடிதம் கிராமத்திற்கு வருவதற்கு முன்பே அவன் கிராமத்தின் மயான மண்ணில் கலந்துவிட்டான்!.

சிறிது நாட்கள் கழித்து இராணுவ அதிகாரிகள் அவனுடைய துணி வைத்திருந்த சூட்கேஸைக் கொண்டு வந்து பெற்றோரிடம் கொடுத்தனர். அதில் அவனுடைய துணிகளுடன் தங்கை திருமணத்திற்காக அவன் சேர்த்து வைத்திருந்த 20 ஆயிரம் பணமும் இருந்தது. அதைக் கண்டு அனைவர் விழிகளும் அழுது தீர்த்தன. தங்கையின் திருமணத்தைக் காணாமல் தேசத்திற்காக மரணத்தைத் தழுவிய அந்த மாவீரன் செந்தில் என்ற ஜெகன்!.

**– கே. ஜீவபாரதி**

வாழும் வரலாறு

- *'இமயத்தின் உச்சியில்' போன்று உங்கள் உள்ளத்தை உருக்கிய நிகழ்ச்சி ஒன்றினை எழுதுக.*

## மனிதநேயக் காவலர்

அன்பும் அறனும் பின்னிப் பிணைந்த ஒரு பெரும் உணர்வே மனித நேயம். அறம் என்றால் என்ன? மனத்துக்கண் மாசிலனாதல் – தூய மனம் உடையவராயிருத்தல். இது உலகப் பொதுமறை அறத்துக்கு வகுத்த இலக்கணம். தூய மனத்தினின்று வெளிப்படும் உன்னத உணர்வே உண்மையானது. அதுவே மனித நேயம் என்பது. அது அன்பு, அறம் ஆகிய இரு பெருங்கூறுபாடுகளைக் கொண்டது. புத்தர், இயேசு, இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், காந்தியடிகள் போன்ற இவர்கள் எல்லாம் மனித நேயக் காவலர்களே என்பதனை வள்ளுவர் அறுதியிட்டுச் சொல்லாமற் சொல்லுகின்றார்.

**பொதுமறை கண்ட புலவன்**

மனிதநேய உணர்வு காக்கப்பட வேண்டும் என்பதற்காகவே 1330 கருத்து அரண்கள் அமைத்தார் வளர்தமிழ்ப் புலவர் வள்ளுவர்.

ஒருவன் செய்கின்ற செயல்களால்தான் பெருமையும் சிறுமையும் அவனைச் சென்றடையும் என்றும் ,பிறப்பினால் உயர்வுத் தாழ்வு கிடையாது என்றும் வயுறுத்தும் வள்ளுவர்,

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்**
**சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்**

என்று கூறி மனித நேயத்துக்குப் பொருளுரையானார். மனித நேயத்துக்கு மறு பெயரே சான்றாண்மை என்பதை மிகத் தெளிவாகவே எடுத்துச் சொல்கிறார்.

**அன்பு நாண், ஒப்புரவு, கண்ணோட்டம்,**
**வாய்மையொடு**
**ஐந்து சால்பூன்றிய தூண்**

எனச் சான்றாண்மைக்கு இலக்கணம் வகுக்கின்றார் பொய்யாமொழிப் புலவர். எடுத்த எடுப்பிலேயே மனித நேயத்துக்கு அடிப்படையாக அமைவது அன்பே என்று அழுத்தமாகக் கூறுகின்றார் எனலாம்.

தன்னலமின்மையும், தூய அன்புள்ளமும் கொண்டவரே மனிதநேயம் கொண்டவர் என்னும் வள்ளுவர் கருத்தைப் பறைசாற்றும் பாடல்களுக்குப் பஞ்சமே இல்லை இங்கே.

**திருமூலர் – மனித நேயக் கருவூலம்**

மனிதகுலம் என்றும் வியந்து பாராட்டும் முத்தமிழ்த் தேனூற்றாம் திருமூலர் மனித நேயத்தின் மிகச் சிறந்த படைப்பாளியாகத் தோன்றினார். அவர்,

**படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங்(கு) ஆகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்**
**படமாடக் கோயில் பகவற்கு தாமே**

என்னும் பாடல் மனித நேயத்தைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லுகின்றனர்.

கோயில்களிலுள்ள திருவுருவங்களுக்குத் திருவமுது படைக்கப்படும் பொழுது அது இறைவனுக்குச் சென்று சேர்வதில்லை. ஆனால் நடமாடும் கோயிலாக உள்ள மனிதர்க்கு ஒன்று அளிக்கப்படும்பொழுது அது இறைவனுக்குச் சென்று சேர்கின்றது என்று திருமூலர் குரல் ஒக்கும்போது தேம்பியழும் மனித நேயத்தைத் தேற்றுகின்ற தேன் தமிழ்க் குரலாய் உள்ளதை அறியமுடிகின்றது.

**மனித நேயத்திற்கு ஒரு பெரும் உரைகல்**

மன்னர் குலத்தில் பூத்த பூந்தமிழாம் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி தனிச்சிறப்புடன் திகழ்கின்றார் என்கின்றது புறநானூறு. நாடே போற்றிய அவன் இளமையில் மறைந்தான் ஆயினும், ஈடில்லா இலக்கிய ஏடு போற்றும் இன்பத் தமிழானான்.

தன்னலமற்றவர் என்பதற்கு அன்றே அவன்தந்த விளக்கம் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

இந்த உலகம் அழியாமல் இருப்பதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அதுதான் தன்னலமற்றவரைப் பெற்றிருப்பது என்று அறுதியிட்டுக் காட்டுகின்றான் இளம் பெருவழுதி.

தேவர்களுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அது மிகுந்த இனிமை உடையதென்று தனித்து உண்ணமாட்டார்கள். இது தன்னலமற்றவர்க்குரிய முதல் தகுதியென வரிசைப்படுத்து

கின்றது. ஆக, பிறர் நலத்தையே நாடும் உள்ளம் தூய உள்ளம் என்கின்றார்.

பொதுநலம் பேணும் பெருந்தகை யானுக்கு இலக்கணம், எவரோடும் வெறுப்பற்ற தன்மை கொண்டிருத்தல் என்று கூறுகின்றார், இங்கும் அன்புதான் அச்சாணியாய் அமைந் துள்ளது.

மேலும், சுயநலமற்றவர்க்குரிய தகுதி பிறர்படும் துன்பம் துடைத்தலே என்கின்றார். பிறருக்காக வாழ்பவர் புகழ் பெற உயிரையும் கொடுப்பர். பழி வரும் செயனால் உலகம் முழுவதையும் பெறலாம் என்றாலும் அதனைக் கொள்ளமாட்டார் என்று விளக்குகின்றார். அத் தகையோரையே தியாகிகள் என்று உலகம் கொண்டாடுகின்றது. தியாக உணர்வின் தாயகம் தானே அன்பு.

தமக்கென வாழாதவரே அயர்விலர் என்று கூறுகின்றான். அதாவது மற்றவர் நலம் நாடுவோர் எதற்குமே மனம் தளராதவர் என்ற சிறப்புக்குரியவன் என விளக்குகின்றான். சுருங்கக் கூறுமிடத்து பிறர்நலம் பேணும் பெரு மைக்குரியவர் அனைவரும் அன்பின் பிறப் பிடங்களே; பண்பாட்டின் நிலைக்களங்களே எனப் படிப்படியாக விளக்கி அத்தகை யோராலேயே இவ்வுலகம் உள்ளதென முடிக்கின்றான்.

#### ஒருமைப்பாட்டு உணர்வுக்கு ஒரு திறவுகோல்

கன்னித் தமிழ் அளித்திட்ட மற்றும் ஒரு மணிச்சுடர் விளக்கு கணியன் பூங்குன்றனார். மனிதநேயம் வளர அன்றே அவர் அளித்திட்ட ஒரு பெருங்கருத்துச் செல்வமன்றோ 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது.

#### பார்வேந்தனைத் திருத்திய பாவேந்தன்

மனித நேயத்தின் மற்றுமோர் வடிவா கக் கோவூர்கிழார் என்னும் புலவரை அறிமு கப்படுத்தி மகிழ்கின்றது புறநானூறு. கிள்ளி வள வன் என்ற மன்னன், மலையமான் என்ற பகை மன்னன் மக்களை யானையின் கான் கீழிட்டுக் கொல்லமுற்பட்டபொழுது, கோவூர் கிழார் அவன் செயல் ஏற்புடைத்தன்று எனத் தடுத்து நிறுத்தினார். இங்கு மனித நேயத்தின் கோட்பாடுகளாம் அன்பும் மாசற்ற மனமும் வெளிப்படுவதைக் காணலாம்.

#### பரந்த மனப்பான்மைக்குச் சிறந்த நிலைக்களன்

இளங்கோவடிகள் சேரநாட்டினராயினும் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் சேரநாடு மட்டு மல்லாது சோழ, பாண்டி நாடுகளையும் சிறப் பாகப் பாடுகின்றார். திங்கள், ஞாயிறு, மழை என இயற்கைச் செல்வங்களையே போற்றித் தம் நூலைத் தொடங்குகின்றார்

அப்பொழுதே சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் புகழ் பாடுகின்றார். சோழ நாட்டுக் குடிமகளாம் கண்ணகியைக் காப்பியத் தலை வியாக்கி மகிழ்கிறார். சுருக்கமாகச் சொன்னால் அவரது பெரும் படைப்பாம் சிலப்பதிகாரம் பெண்மை போற்றும் பெருங்காப்பியமே என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. நூல் முழு மையும் பரந்த மனப்பான்மையே பளிச்சிடக் காண்கின்றோம். மனிதநேயத்தின் அடித்தள மாகப் பரந்த மனப்பான்மை உள்ளதென உணர் கின்றோம்.

சிறந்த சிந்தனையாளராம் விவேகானந்தர். தூய் மையுடன் இரு, தன்னலமற்றிரு – இதுவே சம யமாம் என்று கூறும் கருத்து இங்குச் சிந்திக் கத்தக்கது. இந்தக் கருத்து இன்றைய இந்தியத் துணைக் கண்டத்துக்கு மிக மிக இன்றிய மையாக் கருத்து ஆகும். மேலும்,

தியாகத்தாலும், தொண்டாலுமே இந்த உலகம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்ற உத்தமர் காந்தியடிகளின் கூற்று இங்கு நினைவு கூரத்தக்கது.

**பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்.**

என்ற குறள் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

#### எம்மதமும் சம்மதம் என்றொளிரும் அருள் விளக்கு

இடைக்காலத்தில் சாதிசமய வேறு பாடுகள் தலைவிரித்து ஆடத்தொடங்கின; மனித நேய உணர்வுகள் மறுக்கப்பட்டன. அக் காலக் கட்டத்தில் மனித நேயத்தின் மற்றும் ஒரு காவலராக வடலூர் வள்ளலார் தோன்றினார். அவர், எம்மதமும் சம்மதமே என்னும் குறிக் கோளுக்காகவே வாழ்ந்தவர்.

**கலையுரைத்த கற்பனையே நிலை எனக்**
**கொண்டாடும்**
**கண்மூடிப்பழக்கமெலாம் மண் மூடிப்போக**

என்று முழக்கமிட்ட அந்த மறுமலர்ச்சியாளர், காலம் நமக்களித்த சிந்தனையாளர் அன்றோ, சிந்தித்து நோக்குமிடத்து இவர் போன்ற அனைவருமே மனித நேயத்தின் காவலரே என அறிகின்றோம்.

**புத்தமுதக் கலைஞனும் புதுவைக் குயிலும்**

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களான பாரதியும் பாரதிதாசனும் அன்பையும் அறனையும் காக்கவந்த காவலர்கள் எனலாம்.

பாரதி கண்ட பேருலகத்திலும் எம்மதமும் சம்மதமே என்பதே அடிநாதமாகும்.

**பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்**
**ஒன்றே அதனியல் ஒளியுறும்அறிவாம்.**

என்ற பாரதியின் புதிய ஆத்திசூடி அதனை வ யுறுத்துகின்றது.

பைந்தமிழ்த் தேர்ப்பாகனாம் பாரதியின் முரசுப்பாட்டு மனித நேயத்துக்கு ஒரு திருக்காப்பகம். இதனை,

**அன்பென்று கொட்டு முரசே - மக்கள்**
**அத்தனைபேரும் நிகராம்**
**இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு**
**யாவரும் ஒன்றென்று கொண்டால்** - என்னும் பாரதியின் பண்பட்ட முழக்கத்தின் வாயிலாக அறிகிறோம். ஆம், அப்பெருமகனது படைப்புக்கள் அனைத்துமே மனித நேயத்தின் இதய கீதங்களே.

அவனது அடியொற்றி வந்த பாரதிதாசனின்,

**புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்**

என்ற மனித நேய உணர்வின் புனிதகீதத்தை எதிரொப்போம்.

இதுவரை கண்டவற்றிருந்து மனித நேயக்காவலர் என்போர் இம்மாநிலம் அனைத்தும் மகிழ்ச்சியில் திளைக்க வழிகாட்டும் புனித உயிர்த்துடிப்புக்களே எனலாமன்றோ!

**- பா. கோமளீஸ்வரி**

- மனித நேயமிக்க சான்றோர்களைப் பேட்டி காண்பதற்கான வினாநிரல் தயார்செய்க.
- போர்க் காலங்களில் ஏற்படும் அழிவுகளையும் இழப்புக்களையும் சித்திரிக்கும் படங்கள், செய்திகள், சொற்சித்திரங்கள், பாடல் வரிகள், திரைப்படக்காட்சிகள், சொல்லோவியங்கள் போன்றவற்றைத் திரட்டிப் போருக்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படும் வகையில் கண்காட்சி ஏற்பாடுசெய்க.

அலகு
5

# *உயரப் பறந்து*

*உலக நாகரிக வளர்ச்சியின் அடிப்படையே உழைப்பாகும். ஆனால் உழைப்பாளர்கள் நிலை இன்றும் போதுமான அளவு உயரவில்லை. அவர்கள் வாழ்க்கை மேம்பாடு அடையும் வரையில் சமூகமும்/நாடும் முழுமையாக வளர்ந்து விட்டன என்று சொல்ல இயலுமா? இந்நிலை இனிமேலும் இவ்வாறு நீண்டு போகலாமா? சற்றுச் சிந்திக்கலாம்.*

## வெற்றிப்படிகள்

### மனித வளம்

சமீப காலமாகத் தொழில் சம்பந்தப்பட்ட கருத்தரங்குகளிலும், தொழில் நிர்வாக மட்டத்திலும் ஹெச். ஆர். டி. (HRD) என்ற மூன்றெழுத்துக் குறிப்பு அதிகமாக உச்சரிக்கப்பட்டு வருகிறது.

ஹெச்.ஆர்.டி. என்பது ஹியூமன் ரிசோர்ஸ் டெவலப்பெண்ட் (Human Resources Development) என்பதன் சுருக்கம்தான், தமிழில் மனித வள மேம்பாடு' என்று சொல்லலாம்.

நாம் தினசரி காணுகின்ற முன்னேற்றங்களுக்கும் வளர்ச்சிகளுக்கும் மனித சக்திதான் அடிப்படைக் காரணமாகத் திகழ்கிறது. எந்த முன்னேற்றமும் மனிதனுடைய சிந்தனையிருந்து, மனிதனுடைய உழைப்பிருந்து, மனிதனுடைய திறமையிருந்துதான் புறப்படுகிறது என்பதை மறந்து விடக்கூடாது.

மனித சக்திதான் எந்த முன்னேற்றத்திற்கும் அடிப்படை என்கிற கருத்தை நினைவிலே நிறுத்த வேண்டிய இந்தக் கட்டத்தில், ஒன்றைத் தெளிவுபடுத்தியாக வேண்டும்... வெறும் மனிதர்கள் மட்டுமே, 'மனித சக்தி' ஆகிவிட முடியாது.

இந்த அலுவலகத்தில் பத்து பேர் இருக்கிறார்கள்; இந்தத் தொழிற்சாலையில் இருபது பேர் இருக்கிறார்கள் என்று சொல்லும்போது பத்தும் இருபதும் எண்ணிக்கையைக் குறிக்கலாமே தவிர எவ்வளவு சக்தி, என்ன திறமை என்பதை எல்லாம் அது வெளிப்படுத்துவதில்லை.

நம்மிடம் பத்து ஏக்கர் பூமி இருக்கிறது என்று சொல்வதில் எதுவும் பெருமை இல்லை. அந்தப் பத்து ஏக்கர்.. நல்ல விளைநிலமாகப் பயன்படுகிறதா? பொட்டல் காடாகக் கிடக்கிறதா? என்பதைப் பொறுத்துத்தான் நாம் மதிப்பிடப்படுகிறோம்.

நம்முடைய நாட்டில் எண்பது கோடிப் பேர் இருக்கிறார்கள் என்று சொல்வது மட்டுமே நமக்குப் பெருமை தராது. எண்பது கோடியில் எத்தனைபேர் நாட்டு முன்னேற்றத்திற்குப் பயன் படக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பது தான் முக்கியம்.

மக்கள் பயன் உள்ளவர்களாக இருக்கிறார்களா? பாரமாக இருக்கிறார்களா? என்பது தான் இன்றைக்கு நம் பிடரியைப் பிடித்து இழுக்கின்ற வினாக்குறி.

மனிதவள மேம்பாட்டில் தனிமனித முன்னேற்றத்திற்கும் நிறுவனங்களின் முன்னேற்றத்திற்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது.

மனித வளத்தைப் பெருக்குவது அல்லது மனித வமையைக் கூட்டுவது என்பது, தொழிலாளர்களுக்கு மட்டும்தான் என்றோ ஊழியர்களுக்கு மட்டும்தான் என்றோ எண்ணுவது கூடாது, உண்மையில் இது, மேலாளர் முதல் தொழிலாளர் வரை அனைத்துத் தரப்பினருக்கும் எல்லா மட்டத்தினருக்கும் பொருந்தும்.

மனித வளத்தை மேம்படுத்தல் பற்றி அமைதியாக யோசித்துப் பார்த்தால் மூன்று கருத்துகள் முன்னணியில் நிற்பது புலப்படும்... கல்வி, திறமை, மனப்பாங்கு,,,, இம்மூன்று முக்கிய காரணிகளாக முகிழ்க்கின்றன.

கல்விதான் எல்லாவற்றுக்குமே அடிப்

படை, கல்வியின் மூலம், புதிய செய்திகளைத் தெரிந்து கொள்வதன் மூலம் ஒவ்வொரு மனித னுக்கும் கணிசமான அறிவு வளர்ச்சி ஏற்படுகி றது. தாங்கள் ஈடுபட்டிருக்கும் துறைகளின் வளர்ச்சி பற்றிய அறிவு, பணி புரிபவர்களுக்கு இல்லை என்றால் இவர் 'பழைய காலத்து ஆசாமி' என்கிற முத்திரை குத்தி ஒதுக்கி வைத்து விடுவார்கள். எனவே மனிதவள மேம் பாட்டில் கல்விதான் அடிக்கல்லாகத் திகழ்கிறது.

இரண்டாவது காரணியான திறமையை ஒவ்வொருவரும் கண்டிப்பாக வளர்த்தே தீர வேண்டும். இதனைப் பயிற்சிகள் மூலம் வளர்த்துக் கொள்ளலாம். பயிற்சிகள் பலவிதங் களில் தரப்படுகின்றன. சொற்பொழிவுகள், கருத் தரங்குகள், திட்டங்களில் பங்கேற்றல், குழுக்க ளில் இடம்பெறுதல், நடைமுறைப் பிரச்சினை களை ஆராய்தல், செயல்முறையைக் காணுதல், பொறுப்பேற்றல்... எனப் பல வகைகளிலும் பயிற்சிகள் தரப்படுகின்றன.

நல்ல பயிற்சிகள் மூலம் உற்பத்தித் திறனை உயர்த்த முடிகிறது. பணியாளர்களின் ஈடுபாட்டினையும் நம்பிக்கையையும் உயர்த்த முடிகிறது.

அடுத்தது மனப்பாங்கு, புதியனவற்றை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு உடையவர்கள் தான் சமுதாயத்திலே முன்னேற முடியும். மனப் பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது எளி தான காரியமல்ல. சாதாரணமாகப் பழைய வழி முறைகளில் பலகாலம் ஊறிப் போனவர்கள் எந்த மாற்றத்தையும் ஏற்கத் தயங்குவார்கள். புதி யனவற்றை ஏற்றுக்கொண்டால் தனது வேலைக்கு ஆபத்து வருமோ என்கிற அச்சம் எத்தனையோ பேரை வாட்டி வதைக்கிறது. புதி யதை ஏற்றுக்கொண்டால் திறமையில் பின்தங்கி விடுவோமோ என்கிற தயக்கம் தயாராக மனக் கதவுகளின் ஓரத்தில் உட்கார்ந்து கொள்கிறது.

'கம்ப்யூட்டர்' நமக்கு முதன்முதல் அறிமுகம் ஆகும் போதே அது பலபேரை வீட் டுக்கு அனுப்பி விடும் என்ற அச்சத்துடன் தான் அறிமுகம் ஆனது. அது நமக்கு எப்படி உதவும்; நம் முன்னேற்றத்திற்கு எப்படிப் பயன் படும் என்பதைப் பற்றி எல்லாம் தெரிந்துகொள் ளவே நாம் விரும்பவில்லை. இன்றைக்குக் கம்ப் யூட்டரின் பயனைப் பலதுறைகளிலும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நிறுவனங் களில் பணிபுரிபவர்கள், நிறுவனத்தின் லட்சத் தியத்திற்காக, முனைப்புடன் பாடுபடுபவர்களாக இருக்க வேண்டும். (இதனை ஒரு பலகையில் எழுதி வைத்தால்... பலகையும் அப்படியே இருக் கும், பணியாளர்களும் அப்படியே இருப்பார் கள். எந்த மாற்றமும் இருக்காது). முனைப்புடன் உற்சாகத்துடன் பாடுபடக்கூடிய சூழலை நிர்வா கங்கள் ஏற்படுத்த வேண்டும்.

......... இயந்திரங்கள் முக்கியம், சந்தேகமில் லை. கட்டிடங்கள் முக்கியம், அதில் ஐயமில் லை. ஆனால் இவை எல்லாவற்றையும் விட அங்கே பணிபுரிகின்ற மனிதர்கள் முக்கியம் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஈடுபாட்டுடன் பாடுபடக்கூடியவர்கள் எங் கேயும் ரெடிமேடாகக் கிடைப்பதில்லை. இதற் கான சூழலை நிறுவனங்கள் ஏற்படுத்தித் தந் தால்தான் தனிமனித ஆற்றல்கள் சிறப்பாக வெளிப்படும். அறிவு, ஆற்றல், அணுகுமுறை, இவைகளில் கவனம் செலுத்தினால் மனிதவளம் மேம்படும். சிறந்த சூழல் என்றால் நிச்சயம் நிறைந்த பலன்.

மனித வளத்தின் மேம்பாடு

முன்னேற்றப் பயணத்தின் புறப்பாடு,

வமையே வாழ்வு என்றார் விவே கானந்தர்.

ஆம், மனித வமையே வாழ்வு.

**– கே.ஜெகதீசன்**

- ***தொழில் துறையில் நவீன தொழில் நுட்பத்தின் ஆதிக்கம் மனித ஆற்றலைப் பலப்படுத்துகிறது! பலவீனப்படுத்துகிறது!***

  *- வழக்காடு மன்றம் நடத்துக.*

## ஓரடி முன்னே....

பொள்ளாச்சி செல்லும் அந்த மெயின் ரோட்டை அடைந்ததும், தலையில் இருந்த கோரைப் புல்கட்டை 'பொத்' என்று கீழே போட்டாள். "ஸ் ஸ அப்பாடி, என்ன கனம்! தண்ணி கொஞ்சம் அதிகமா தொளிச்சிட்டேன் போருக்கு. என்ன பண்றது. தண்ணி தெளிக்கலேன்னா இந்த வேகாத வெயிலுக்கு கோரை காஞ்சு போயிடும்; அப்புறம் அநியாய விலைக்கு கேப்பானுக".

மண்சாலையில் நடந்து வந்ததால் கை, கால், முகம் எங்கும் புழுதி அப்பி இருந்தது. சேலைத் தலைப்பில் முகத்திலும், கழுத்து பிடரியிலும் வழியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அவளுக்கு முன்னதாகவே இரண்டொருவர் நின்று கொண்டிருந்தார்கள்.

"உம், கிராமம் பூராவும்... மூலை முடுக்கெல்லாம் மின்சாரம் போட்டாச்சுன்னு மீட்டிங்கு போட்டு பேசரானுங்க. வால்போஸ்ட் அடிச்சு ஒட்டரானுங்க. இந்த கிராமத்துக்குள்ளே ஒரு பஸ் விட்டா என்ன கேடு?"– நீண்ட நேரம் காத்திருந்ததாலோ, அல்லது நீண்ட தூரம் நடந்து வந்ததாலோ, அவர்கள் பேச்சில் ஆத்திரம் தொனித்தது.

''இன்றைக்கு புதன்கிழமை வேறே. நாளைக்கு பொள்ளாச்சி சந்தைக்கூட்டம், பஸ்காரன், இன்றைக்கு பஸ்ஸை இங்கே நிறுத்துவது சந்தேகம்தான். சிரமத்தைப் பார்க்காமல், நாலு பர்லாங் நடந்துபோயி அம்பராம்பாளையத்திலே பஸ் ஏறிக்கலாம் வாங்க" – அவர்கள் கிழக்கு நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டார் கள்.

அவள் அப்பொழுதுதான் சுமையுடன் வந்திருந்ததால், உடனே புறப்பட முடியவில்லை. அங்கு வீசிய வேப்பமரக் காற்றில் சற்று நின்று விட்டுப் போகலாம் போருந்தது. வியர்வை உலரும் மட்டும் நின்றுவிட்டுச் சுமையைத் தூக்கிக் கொண்டு கிழக்கே நடந்தாள்.

அம்பராம்பாளையம் பஸ் ஸ்டாப்பிங் வந்தடைந்த போது, அவளுக்கு முன்னால் வந்தவர்களைக் காணவில்லை. அவர்கள் பஸ் ஏறிச் சென்றுவிட்டார்கள் போலும், ஆனால் வேறு கூட்டம் பஸ்ஸிற்காக காத்துக் கொண்டிருந்தது. அதில் இரண்டொருவர் அவளுக்குத் தெரிந்தவர்களாக இருந்தார்கள்.

வெற்றிலை பாக்கு எச்சில் தாடையில் வழிவது மட்டுமின்றி, அவரது சட்டையிலும் ஸ்பிரே பண்ணிக் கொண்டிருந்த அவர்-கிராமத்து சின்னவீட்டுக் கவுண்டர்-கிட்டத் தட்ட கால்அடி நீட்டமிருந்த மூக்குப்பொடி மட்டையைத் திறந்து, ஒரு மாபெரும் "சிட்டிகை" பொடியை எடுத்து மூக்கிலே ஏற்றிவிட்டு, சட்டையிலேயே மூக்கைத் துடைத்துக்கொண்டு, அவர்கள் அருகில் புல்லுக்கட்டுடன் நிற்கும் அவளைப் பார்த்து "ஏலே புள்ளேய், நாங்கெல்லாம் ஏறின பிறகு நீ ஏறு. எங்களோட உன்னோட புல்லுக்கட்டை எடுத்துக்கிட்டு இடிச்சிக்கிட்டு ஏறாதே, எங்க வேட்டி துணி மணியெல்லாம் கெட்டுப்போகும்" என்றார்.

நான்கைந்து பஸ்கள் வந்து நிற்காமல் சென்று விட்டன. கடைசியாக ஒரு பஸ் நின்றது. கூட்டம் குறைவாகவே இருந்தாலும் முண்டியடித்துக் கொண்டு ஏறியது. கடைசியாக அவள் புல்கட்டைப் பஸ்ஸில் முதல் திணிக்க முயன்றாள்.

"ஏன் என்னது?"– கண்டக்டர் கேட்டான்.

"கோரைப் புல்லுங்க சார்"

''லக்கேஜ் எழுபத்தி அஞ்சு பைசா ஆகும். சம்மதமா? அப்புறம் ஏறிட்டு தகராறு பண்ணக்கூடாது".

"நாலாணா போட்டுக்குங்க, வழக்கமா சீட்டிஸி பஸ்ஸிலே அவ்வளவு தான் தர்ரது".

''உன்கூட பேரம் பேசிட்டு இருந்தா, எனக்கு டிரிப் எடுக்க முடியாது, நகரு நகரு, போலாம் ரைட்.'

அவளையும் புல்லுக் கடையும் விட்டு விட்டு பஸ் புறப்பட்டு விட்டது. தொடர்ந்து வந்த இரண்டொரு பஸ்ஸின் நிலையும் இதேதான்.

பொள்ளாச்சி செல்லும் நீண்ட சாலையைக் கொஞ்ச நேரம் உற்றுப்பார்த்தாள். "எழுபத்தி அஞ்சு பைசா லக்கேஜ் வேணுமாமில்லே" – அவள் வாய் முணுமுணுத்துக் கொண்டது. புல்லுக்கட்டை ரோட்டின் ஓரத்தில் நகர்த்தி வைத்துவிட்டு, ரோட்டிற்கு வடபுறமாக ஓடிக் கொண்டிருந்த ஆற்று வாய்க்கால் இறங்கி,

தண்ணீரை அள்ளிக் குடித்து விட்டு, கைகால் முகத்தை நன்றாக தேய்த்துக் கழுவிக் கொண்டு, சேலைத்தலைப்பினால் நன்றாக அழுத்தித் துடைத்துக் கொண்டாள்.

மீண்டும் குளித்து ஒருவாய் தண்ணீரை அள்ளிக்குடித்து வாயைக் கொப்பளித்து சத்தம் வர "தூ" வெனத் துப்பிவிட்டு நிமிர்ந்தாள். "எழு பத்தி அஞ்சு பைசா லக்கேஜி வேணுமாமே. வாரம் பூரா பாடுபட்டு சேக்கரதை இவனுக ளுக்குக் குடுத்துப் போட்டு நாம என்ன பச்சைத் தண்ணியைக் குடிச்சிட்டா உயிரோட இருக்கிறது".

மீண்டும் சாலைக்கு வந்து, கோரைப் புல் கட்டை தலைமீது எடுத்துக் கொண்டு, பொள் ளாச்சி செல்லும் அந்த ஐந்தரை மைல் சாலை யின் துவக்கத்தில் நின்று, நீண்டு செல்லும் பள பளப்பான அந்த கரியசாலையை, தான் துவக் கப்போகும் பாத யாத்திரையை எண்ணிப்பார்த் தாள். தலையைக் கழுத்துக்குள் அழுத்தும் கனம் தலையில் இருந்தாலும் தலைக்கும் வயிற் றுக்கும் உள்ள தூரத்தைவிட அந்த ஐந்தரை மைல் அவளுக்குத் தூரமாகத் தெரியவில்லை.

பொள்ளாச்சி அடையும்பொழுது கதிர வனின் கடுமை சற்றுக் குறைந்திருந்தது. ஓர ளவு சில்லென்று காற்று வீசிக் கொண்டிருந்தது. அவள் உடல், அப்போது ஆடையுடன் குளித் தவள்போல் வியர்வையால் நனைந்து விட்டிருந் தது. சந்தையின் நுழைவாசல் சுங்கக் கேட்டை அடைந்ததும் தலையில் இருந்த சுமையை இறக்காமலேயே, இடுப்பில் சொருகியிருந்த சேலைத்தலைப்பை வெளியே இழுத்து, அதன் முனையில் முடிந்திருந்த முடிச்சைப் பற்களால் கடித்து, அவிழ்த்து இருபத்துஐந்து பைசா நாண யத்தை எடுத்து, சந்தை சுங்கம் வசூக்கும் ஆளை நோக்கி வீசினாள். கறிக்கடையின் வாசல் காத்திருக்கும் நாய், தெறித்துவிழும் எலும்புத் துண்டை லபக் என்று கவ்வுவதுபோல, அந்தக் காசைப் பிடித்தான் சுங்கம் வசூப்ப வன்.ஆனால் அவன், நாயைப் போல விழு வதை அவ்வளவு அவசரமாகத் தின்பவன் அல்ல. அந்த லாவகத்திலும் அதை இருபத்து ஐந்து பைசா என்பதை உடனே தெரிந்து கொண் டான். உள்ளே நுழைந்த அவளை, ''ஏய் கோரைப்புல்லு நில்லு! இன்னும் இருபத்தி அஞ்சு பைசா எங்கே?"

"அவ்வளவுதாய்யா! வழக்கமாக கொடுக் கிறது'' சொல்க்கொண்டே நடந்தாள்.

"அதெல்லாம் முன்னே... இப்போ ஏப்ரல் ஒண்ணாம் தேதிக்கப்புறம் ஏலம் மாறிப் போச்சு! அம்பது பைசா கொடுக்கணும்" என்று கத்திக் கொண்டே அவள் பின்னால் வந்து, தலையி ருந்து புல்கட்டைப் பற்றினான்.

"யோவ் கையை எடுய்யா! ஆறுமைல் தலை நோவ கஷ்டப்பட்டு தூக்கிட்டு வந்திருக் கேன்".

அவன் புல்லை விட்டுவிட்டு அவள் முன்னால் வந்து நின்று கொண்டான். "காசைக் கொடுத்துட்டுப்போ"

"அதுதான் கொடுத்தேன்!"

"இருபத்தி அஞ்சு பைசா? இன்னும் இருபத்தி அஞ்சு பைசா?"

"என்னய்யா அக்கிரமமா இருக்குது! போன வருஷத்துக்கு முந்தின வருஷம் பதி னைஞ்சு பைசா இருந்தது. போன வாட்டி இரு பத்தி அஞ்சு பைசா கேட்டீங்க, கொடுத்தேன். இப்போது அம்பது பைசாவா! எனக்கு இந்த புல் லுலே என்ன கெடைக்கும்? எழுபத்தி அஞ்சு பைசா லக்கேஜ் கொடுக்கமுடியாமல் ஆறு மைல் நடந்தே வந்திருக்கேன்".

"இந்தா, இந்த கதையெல்லாம் வேண் டாம். எங்க மொதலாளி எட்டரை லட்சம் ரூபாய்க்கு ஏலத்திலே இந்த சந்தையை எடுத்திருக்கிறார். மரியாதையா அம்பது பைசா கொடு".

"உங்க மொதலாளி யாருக்குத் தேவையா எட்டரை லட்சத்துக்கு ஏலத்திலே எடுத்தாரு? எங்களைப் போல ஏழைபாழை வயித்திலே அடிக்கவா?"

"ஏய் என்ன கலாட்டா பண்ணறே? மரி யாதையா இன்னும் இருபத்தி அஞ்சு பைசா கொடுக்கறயா, இல்லே உன்னோட புல்லுகட் டைத் தூக்கி வெளியே எறியவா?" என்றதும், அவள் தலையில் இருந்த புல்லுக்கட்டை தொப் பென்று கீழே போட்டாள்.

''நீ மட்டும் ஆம்பிளையா இருந்தா புல்லுக்கட்டைத் தூக்கி வெளியே எறிஞ்சு பாரு. இது என்ன திருடிட்டு வந்ததுன்னா நெனச்சே? ஒரு வாரமா படாத பாடுபட்டு, ஆத்து ஓரத்திலே

கல்லுக் குத்தி, கைகாலெல்லாம் முள்ளுக்குத்தி ரத்தம் வர சேத்துனதாக்கும்" - அவள் குரல் ஓங்கியது.

அதற்குள் அங்கு கூடிவிட்டிருந்த கூட்டத்திருந்து ஒருவன், "ஏம்மா வெட்டிலே சத்தம் போடறே? நான் கூட இந்த ரெண்டு காக் கூடைக்கு அம்பது பைசா சுங்கம் கொடுத்துத் தான் கொண்டு வந்தேன், என்ன பண்றது?"

"நீ கொடுப்பேய்யா? நான் கொடுக்க முடியுமா? இன்னைக்கு அம்பது பைசாங்கிறான், நாளைக்கு ஒரு ரூபாய்ம்பான் கொடுக்க முடியுமா?" - என்றாள்.

''சுங்கம் வசூக்கிற கேட்டுக்குப் பக்கத்திலேயே தலைச்சுமைக்குப் பத்துப்பை சான்னு தான் முனிசிபாடிக்காரன் போர்டு வெச்சிருக்கான்" - யாரோ ஒருவன் கூட்டத் தோடு கூட்டமாகச் சொன்னான். இதை ஆமோதிப்பது போல மற்றொரு குரல் எழுந்தது. "ஆமாம் தலைச்சுமைக்குப் பத்து பைசாதான். அதிகமாகக் கேட்டால் ரிப்போர்ட் பண்ணலாம். நீ போயி ஆபீசரைப் பார்த்து ரிப்போர்ட் பண்ணம்மா".

''நான் எங்கெங்க இந்தப் புல்லுக் கட்டை விட்டுப் போட்டு, இந்த சந்தைக் கூட்டத்திலே அதெல்லாம் செய்யறது, இதை விக்கப் பாக்கறதே பெரும்பாடு. பத்து ரூபாய்க்கு மேலே பொறுமானமான இதை, ஏழெட்டு ரூபாய்க்கு விக்கறத்துக்குள்ளாறயே என் தா அந்து போகும். பெரும்பாடு. இதை வித்திட்டு ஊரு போயிச் சேர்ந்து கஞ்சிகாச்சி புள்ளை குட்டிகளுக்கு ஊத்த வேண்டாமா?"

இந்த நிலையில் கூட்டத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது.

ஒரு போலீஸ்காரர் நிலத்தில் தடியைத் தட்டி ஓசை எழுப்பியவாறே, ''ஏன் என்ன இங்கே வண்டிவாசி வர்ர வழியிலே கூட்டம்?" என்று அதட்டியவாறே கூட்டத்தினுள் நுழைந்து, நடுவில் புல்லுக்கட்டருகில் நிற்கும் அவளைப் பார்த்து பிரச்சினைக்கு அவள்தான் காரணமென் பதைக் கண்டுபிடித்து, "ஏன் பொம்பிளை! என்ன கலாட்டா! யாரது புல்லுக்கட்டு! உன்னுதா? உம்.. உம்... எடு.. எடு.." புல்லுக்கட்டை, குச்சியால் இரண்டு தட்டுத்தட்டி அதட்டினான். சுற்றி நிற்கும் கூட்டத்தைப் பார்த்து, ''என்னய்யா இங்கே வேடிக்கை? போங்கய்யா எல்லாம். கூட்டம் கூடாதீங்க. போங்க'' தடியை உயர்த்தி கூட்டத்தைக் கலைத்தார். சுங்கம் வசூப்பவன் மட்டும், அவர் அருகில் வந்து ஒரு கும்பிடு போட்டு "ஹி... ஹி நமஸ்காரம் ஏட்டய்யா! இந்த வருஷம் நம்ம கவுண்டருதான் சந்தையை ஏலத்துக்கு எடுத்திருக்கிறார்".

"ஓஹோ!"

கூட்டம் முற்றிலும் கலைந்துவிட்டது. ஜோப்பில் இருந்து ஒரு பீடியை எடுத்து பற்ற வைத்துக்கொண்டு புகையினை வெளியே தள்ளியவாறு சாவகாசமாகக் கேட்டார் "உம் அதுக்கென்ன இப்போ?"

"இந்த பொம்பிளை சுங்கம் அம்பது காசு கேட்டா தரமாட்டேன் என்கிறா".

"ஏ பொம்பிளெ அப்பிடியா?'

"முகத்தின்மீது படும் பீடிப் புகையை விலக்கிக் கொண்டே அவள், சென்றவாரம் வரை இருபத்தி ஐந்து காசுதான் கொடுத்து வந்ததாகவும், இப்போது திடீரென்று ஐம்பது காசு கேட்பதாகவும் கூறி முறையிட்டாள்.

அவள் சொல்வதையெல்லாம் கேட்டு விட்டு, வாதப்பிரதிவாதங்களைக் கேட்டு விட்டுத் தீர்ப்பு சொல்லும் நீதிபதி போல, நிதானமாக போலீஸ்காரர் "இதோ பாரம்மா சுங்கக் காசு பத்துப் பைசாவோ இருபத்தி அஞ்சு பைசாவோ இல்லே அம்பது பைசாவோ, முதல்லே கேட்கிறதைக் கொடுத்திட்டுப்போ. அப்புறமாப் போயி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கிட்டே ரிப்போர்ட் பண்ணு. அதுதான் முறை. வீணா கலாட்டா பண்ணாதே' என்றார் சாவதானமாக.

"சாமி நான் படிக்காதவ. அதிலும் பொம்பிளைச் சீவனுங்க. அதுக்கெல்லாம்எனக்கு முடியுமா? நான் போயி எங்கே அதிகாரிகளைத் தேடறது".

போலீஸ்காரருக்கு சற்றுக்கோபம் வந்துவிட்டது. "என்னைப்போயி தேடச் சொல்லறயா? எனக்கு அதுவா ட்யூட்டி நீ சரியான அடாவடி புடிச்ச பொம்பிளையா இருப்பே போருக்கே! நீ ஒன்னும் சரிபட்டு வரமாட்டே...".

அதற்குள் கலைந்து சென்ற கூட்டத்தி ருந்து மீண்டும் தலை காட்டிய இரண்டொருவர், "ஏம்மா வீணா தகராறு பண்ணி பொழப்பைக் கெடுத்துக்கறே? ஸாருதான் சொல்றாரே! பேசாம இன்னும் இருபத்தி அஞ்சு பைசா கொடுத்துட்டு போயேன்".

"அதென்னய்யா சட்டம்? போர்டிலேயே பத்து பைசா தான் வசூல் பண்ணனுமின்னு போட்டிருக்காம். ஆனா நானு இருபத்தி அஞ்சு பைசாவா கொடுத்திருக்கேன். அதுக்கு மேலே யும் கேட்டா இது என்னய்யா அக்கிரமம்? கேள்வி கேப்பாரே இல்லையா? நானென்ன ஏமாத்திட்டா போறேன்?" - இவள் உரத்த குர ல் வெடித்தாள். மேலும் கூட்டம் கூடியது.

"சரி... சரி... கத்தாதே பொம்பிளே! நீ கலாட்டாப் பண்ணினே உன்னை உள்ளே புடிச்சு போட்டுடுவேன். ஏதோ பாவம், பொம் பிளை ஆச்சேன்னு இப்போ உடறேன். பொழைச்சுப்போ, புல்லுக்கட்டைத் தூக்கிட்டு நடையைக் கட்டு. யோவ் சுங்ககாரரே! அந்தப் பொம்பிளையை விட்டுட்டு, உன் வேலையைப் போயி நீ பாரு... உம்...உம். நீங்கெல்லாம் போங் கய்யா. இங்கென்ன வெட்டிக்கூட்டம்" தலை யில் இருந்த தொப்பியைக் கழட்டி கர்ச்சீப்பால் முகத்தை துடைத்துக்கொண்டே கூட்டத்தைக் கலைத்து விட்டு நகர்ந்தார் போலீஸ்காரர். சுங்கம் வசூப்பவனும் அப்பால் நகர்ந்தான்.

கீழே கிடந்த கோரைப்புல் கட்டை தலை யில் வைத்துக் கொண்டு, "உம் இவ்வளவு பாடுபட்டுக் கொண்டுவர்றேன். உள்ளே வெலைக்கு வாங்கற பாவிக என்ன வெலைக்கு கேட்பானுங் களோ?" - சுமையுடன் அடுத்த போராட்டத்திற் காகச் சந்தையினுள் நுழைந்தாள் அவள்.

**- பொள்ளாச்சி அம்பலம்**

- *அரை சாண் வயிற்றுப் பிழைப்பிற்காகத் தினந்தோறும் போராட்டம் நடத்தும் அன் றாடக் கூலிகளின் வாழ்க்கைத் துன்பங் களை ஆசிரியர் இக்கதையில் எவ்வாறு சித்திரித்துள்ளார். திறனாய்வு செய்க.*

## சாதனையாளர்கள்

### கல்வி வேந்தர்

**டி.ஆர்.பச்சமுத்து**

(67, வேந்தர், எஸ்.ஆர்.எம், குழும நிறுவனங்கள்.)

இன்றைக்கு 40,000 மாணவர்கள் படிக் கும் 17 கல்வி நிறுவனங்களாகக் கிளை பரப்பி யுள்ள எஸ்.ஆர்.எம் கல்விக் குழுமம் 41 ஆண்டுகளுக்கு முன் நைட்டிங்கேல் என்ற சிறிய ஆரம்பப் பள்ளியாகத்தான் ஆரம் பமானது. அந்தப் பள்ளியை நிறுவிய மாந கராட்சிப் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்த டி.



ஆர்.பச்சமுத்து, இன்றைக்கு எஸ்.ஆர்.எம் நிகர் நிலை பல்கலைக்கழகத்தின் வேந்தர். புகழ் பெற்ற மாசாசூசெட்ஸ் தொழில் நுட்ப நிறுவனத் தின் பயிற்றுவித்தல் முறைகளைப் பின்பற்றும் இவரது கல்விக் குழுமம் சென்னை, தலைநகர் தில் மற்றும் திருச்சியில் செயல்பட்டு வருகி றது. ராஜஸ்தான், பஞ்சாப் மாநிலங்கள் மட்டு மின்றி மலேசியாவிலும் கிளை பரப்பத் திட்ட மிட்டுள்ளது. "வங்கிகளிடம் நம்பகத்தன்மை யைப் பெற்றிருப்பதே மூலதனம்" என்கிறார்.

**முதடம்** : டைம்ஸ் ஆஃப் இந்தியா ஆய்வின் படி, நாட்டிலேயே சிறந்த பல்துறை பல்கலைக் கழகம் மற்றும் நாட்டிலேயே சிறந்த தனியார் பொறியியல் பல்கலைக்கழகம் என இரண்டு வகைகளில் எஸ்.ஆர்.எம் முதடம் பெற்றுள்ளது.

### அச்சக மன்னன்

ஆர். சொக்கங்கம்

(62, தலைவர், ஸ்ரீனிவாஸ் ஃபைன் ஆர்ட்ஸ்)

தமிழகத்தின் தென்மூலையில் உள்ள சிவகாசியில் ஓசை இன்றி இயங்கிவருகிறது ஒரு நிறுவனம். ஆனால் நம்புங்கள்; அது உலகின் டாப் 5 அச்சுத்துறை நிறுவனங்களில் ஒன்று. அது, ஸ்ரீனிவாஸ் ஃபைன் ஆர்ட்ஸ். கார்ப்பரேட் உலகில் இந்தப் பெயர் மிகப் பிரபலம். வாடிக்கையாளர்களோ இதன் நைட்டிங்கேல் பிராண்ட் டைரிகள் மூலமாக இதை அறிவார்கள். உலகின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றாக இதனை வளர்த்திருக்கும் இதன் நிறுவனர் சொக்கங்



கம், 1960களில் வெறும் ரூ. 60 மாதச் சம்பளத்தில் வாழ்க்கையைத் தொடங்கியவர். இன்டர்மீடியட் வரை படித்த அவர், 1964 செப்டம்பரில் தனது நிறுவனத்தை ரூ. 1500 முதலீட்டில் தொடங்கியபோது அதனை எழுதுபொருட்களை வாங்கி, விற்கும் டிரேடிங் நிறுவனமாகவே தொடங்கினார். அதையடுத்து நோட்டுப் புத்தகங்கள், அகர்பத்தி பாக்கெட்டுகள் தயாரிப்பில் குதித்தது ஸ்ரீனிவாஸ் ஃபைன் ஆர்ட்ஸ். 25 ஆண்டுகளுக்கு முன்பாக டைரி தயாரிப்பில் இறங்க, பெரிய திருப்புமுனை ஏற்பட்டது. இன்று உலகெங்கும் புகழ்பெற்ற டைரி தயாரிப்பு நிறுவனமாக ஸ்ரீனிவாஸ் உருவாகியிருக்கிறது. தற்போது நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக தன் மகன் ராஜேஷை களத்தில் இறக்கிக் கலக்குகிறார் சொக்கங்கம். அண்மையில் 1,000 டாலர் விலையில் இவர்கள் வெளியிட்ட டைரிகள் அச்சுத்துறையையே அசர வைத்தன. இன்றைய தேதியில் நாட்டின் அனைத்து நகரங்களிலும் 7 வெளிநாடுகளிலும் கிளைகள், 800 ஊழியர்கள் என உலகெங்கும் வியாபித்து உள்ள ஸ்ரீனிவாஸ் ஃபைன் ஆர்ட்ஸின் வெற்றிக்குப் பின் இருப்பது “விடா முயற்சி” என்ற இரண்டு சொற்கள் தாம்.

**வெற்றியின் சூத்திரம்** : கடும் உழைப்பு, தரம்.

**லட்சியம்** : உலகின் நம்பர் ஒன் நிறுவனமாக உருவாக்குவது.

**சமீபத்திய முயற்சி** : சிவகாசியில் தொழிலக ஆடைகள் தயாரிப்பு நிறுவனத்தை ரூ 12 கோடியில் தொடங்கியிருப்பது.

**பொழுதுபோக்கு** : பேரக்குழந்தைகளுடன் விளையாட்டு.

**இளைய தலைமுறைக்குச் சொல்ல விரும்புவது** : “உருப்படியான முயற்சிகளையே செய்யுங்கள், தொடர்ந்து செய்யுங்கள், விடாமுயற்சியுடன் செய்யுங்கள்”.

**- கா. சு. துரையரசு**

### உலகம் சுற்றும் வாபன்

குவைத் ராஜா

(41, சேர்மன், பிமா இன்டர்நேஷனல் கம்பெனி)

அப்போது அவர் ஒரு நிறுவனத்தில் செக்யூரிட்டியாகப் பணிபுரிந்த ஏழை தந்தையின் மகன். இப்போது அவர் 140 மில்யன் டாலர் விற்றுமுதல் பார்த்திருக்கும் பிமா இன்டர்நேஷனல் கம்பெனியின் சேர்மன். 30 நாடுகளில் அவரது வர்த்தக சாம்ராஜ்ஜியம் விரிந்திருக்கிறது. சமீபத்தில் அவர் வர்த்தகம் துவக்கிய நாடுகள் ஈரான், சீனா, இங்கிலாந்து, அமெரிக்கா, கானாவில் தங்கச் சுரங்கமும் ஈரானில் எண்ணெய்க் கிணறும் சமீபத்திய வர்த்தகம். குவைத்தில் ஜிம் ஒன்றில் வேலைக்குச் சென்ற ராஜா, அதில் கிடைத்த பணத்தில் முதல் சொந்தமாகத் தொடங்கிய தொழில் ஸ்கிராப் பிசினஸ். அதில் ஒரு மில்யன் டாலர் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டது. இருந்தாலும், அந்தத் தொழிலை அவருக்குத் தந்த குவைத்காரரான முகமது அல்

ஃபஜி அவரைத் தட்டிக் கொடுத்து மீண்டும் அதே தொழிலைத் தந்தார். இந்த முறை நஷ்டமும் இல்லை; லாபமும் இல்லை. அப்போதிருந்து அதிர்ஷ்டக்காற்று அவருடைய பக்கம் திரும்பியது. உடனே கம்ப்யூட்டர் ஏற்றுமதி, லாஜிஸ்டிகஸ், அரிசி ஏற்றுமதி, எண்ணெய் கிணறு, தங்கச் சுரங்கம் என்று வர்த்தகத்தை விரிவுபடுத்தியிருக்கிறார்.

**முன்மாதிரி** : யாருமில்லை. நானே போராடி, விழுந்து, எழுந்து நிற்கிறேன்.

**திருப்புமுனை** : தனக்கு முதல் கான்ட்ராக்ட் தந்த குவைத்காரரான முகமது அல்ஃபஜி.

**வெற்றியின் தாரக மந்திரம்** : எதிலும் நம்பர் ஒன்னாக இருக்க வேண்டும் என்கிற முனைப்பு. அதற்காக கடினமாக உழைப்பது.

**உற்சாக டானிக்** : பில்கேட்ஸைவிட நீங்கள் பெரிதாக சாதிக்க வேண்டும் என்று மகன் பிமசுகனும் மனைவி சுபாவும் சொல்லும் வார்த்தைகள்.

**பிடித்த நாடு, பிடித்த இடம்** : தாய்நாட்டில் சொந்த ஊரான ராஜபாளையம்தான் பிடித்த இடம்.

**– சதாசிவம்**

### புதிய சிகரங்கள்

என். சங்கர்

(63, சேர்மன், சன்மார் குழுமம்)



எஞ்சினியரிங், கெமிக்கல், மெட்டல், ஷிப்பிங் என்று பல துறைகளில் 25 பிசினஸ்களில் கால் பதித்திருக்கிறது ரூ. 2,550 கோடி சன்மார் குழுமம். 1967–இல் அமெரிக்காவில் கெமிக்கல் எஞ்சினியரிங் படித்த என்.சங்கர் இந்தியா திரும்பி கெம்ப்னாஸ்ட் நிறுவனத்தில் பயிற்சியாளராகச் சேர்ந்தார். 72– இல் சன்மார் நிறுவனத்தை ஆரம்பித்தார். 1976– இல் அமெரிக்காவின் மிச்சிகனில் டியூரோமெட்டாக் நிறுவனத்துடன் கைகோர்த்துக் கொண்டது சன்மார். 77– இல் அப்பாவின் கெம்ப்னாஸ்டின் அதிகப் பங்குகளை வாங்கி அதனை கெம்ப்னாஸ்ட் சன்மார் என்று மாற்றினார். பி.வி.சி தயாரிப்புக்கு வழக்கமான பெட்ரோகெமிக்கலுக்குப் பதிலாகத் தொழிற்சாலை ஆல்கஹாலைப் பயன்படுத்தும் முதல் நிறுவனம் கெம்ப்னாஸ்ட் சன்மார்தான். நான்கு கண்டங்களில் 5 நாடுகளில் சன்மார் விரிவடைந்திருக்கிறது. எகிப்தில் மின்சாரச் செலவு குறைவு என்பதாலும் எதின் சால்ட் அதிகம் கிடைப்பதாலும் 850 மில்யன் டாலரில் பி.வி.சி தயாரிப்பு ஆலையை சன்மார் அங்கு ஆரம்பிக்கிறது. இந்த நிதி நெருக்கடியிலும் எகிப்து திட்டத்திற்காக ரூ 4,300 கோடி திரட்டிய அளவுக்கு அவர்தம் நிறுவனம் வலுவானது. தமிழ்நாடு கிரிக்கெட், டென்னிஸ் சங்கங்களின் தலைவராக இருக்கும் சங்கர் 1989ருந்து தென் இந்தியாவுக்கு டென்மார்க்கிற்கான கௌரவ கான்சல் ஜெனரலாகவும் இருந்து வருகிறார்.

**பெருமை** : கெம்ப்னாஸ்டின் மேட்டூர், கடலூர் ஆலைகளில் ஒரு துளி திரவம் கூட வெளிவிடப்படாமல் அவை மறுசுழற்சி செய்யப்படுகிறது. ரசாயனத் துறையில் முழு மறுசுழற்சி செய்யும் ஒரே நிறுவனம் கெம்ப்னாஸ்ட் சன்மார்தான்.

**வருத்தம்** : சுற்றுச்சூழலுக்குக் கேடு செய்வது பற்றித் தகவல்கள் வெளிவரும் அளவுக்கு மறுசுழற்சி செய்து தாங்கள் சுற்றுச்சூழலை நன்றாக வைத்துக் கொள்வது பற்றிச் செய்திகள் வருவதில்லை என்பது.

**பிடித்த இடம்** : ஆஸ்திரேயா, தென் ஆப்ரிக்கா.

**பிடித்த விளையாட்டு** : டென்னிஸ்

**– பானுமதி**

- *உழைப்பால் உயர்ந்த சாதனையாளர் ஒருவரை நேரில் கண்டு உரையாடுவதற்கான வினா நிரல் தயாரிக்க.*
- *உழைப்பால் உயர்ந்தவர்களின் வாழ்க்கை வரலாற்றினைத் திரட்டி ஒரு தொகுப்புத் தாயாரிக்க.*

# எழுக, எழுகவே!

## பாட்டாளிகளின் குரல்

**சங்கம் அமைத்திடுவோம்**

எங்கும் விவசாயச் சங்கம் அமைத்ததில்
அங்கம் வகித்திடுவோம் - இந்தத்
தங்க முயற்சிக்குப் பங்கம் விளைத்திடும்
தன்மையை வெட்டி மிதித்திடுவோம்
கங்குல் பகல்நின்று காடு திருத்திய
கைகள் உயர்த்திடுவோம் - என்றும்
எங்கள் உழைப்பினை எங்களுக்கே என
எக்காளம் ஊதிக் கிளப்பிடுவோம்!

ஊரைச் சுரண்டி உயர்ந்த மனிதரின்
உல்லாச வாழ்க்கையெல்லாம் - தின்னச்
சோறுமின்றித் தினம் கோயில் துஞ்சிடும்
தோழன் உதிர்த்த வியர்வையன்றோ?

கைப்பு நிலத்தையும் செப்பனிட்டுப் பயிர்
காத்துக் கதிர் வளர்த்தோர் - அதன்
கண்ட பலனைப் பறிகொடுத்து நின்று
கண்ணீர் வடிப்பதை நாம் சகியோம்

மண்வெட்டிக் கொண்டு வரம்பு கட்டிப்பெரும்
வாய்க்கால் வடிகால் வெட்டி - நிலம்
பண்பட்டபின் விதைகொட்டி உழைத்தவன்
பக்குவ மாக்கிப் பலன் பெறுங்கால்;
முன்பட்ட பாக்கி முதலுக்கும் வட்டிக்கும்
முற்றும் வரண்டிக் கொண்டு - அங்குத்
தென்பட்ட ஏழைகள் புண்பட்ட நெஞ்சினில்
தீ மூட்டும் செய்கைகளை

கண்கெட்டுப் போனதோ இன்னும் சகிப்ப
தேன்?
துன்புற்ற தோழர்களே - துள்ளி
மின்வெட்டு போலே பளிச்சென்று வாருங்கள்
மேதினிக் குண்மை விளக்கிடுவோம்

பொங்கும் தொழிலாளர்க் கின்னல் புரிந்திடும்
பன்மனப் போக்கிரிகள் - மங்கி
எங்கோ மறைந்தனர் என்றோ ஒழிந்தனர்
என்னுங் குரல்கள் எழுப்பிடுவோம்

பித்தேறிக்கத்தும் பெருநிலப் பேயரின்
சொத்தை முயற்சி யெல்லாம் - மக்கள்
சக்தியைக் கண்டு சரிந்து விழிப்பறை
சாற்றிக் கிளர்ந்து நிறைந்தெழுவோம்.

**- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார்**

- *"விருந்தில் பயன்படுத்தப்பட்டு வீசி எறியப்படும் காகிதக் குவளைகள் நாங்கள்" - அறிவு மதியின் இப்பாடல் வரிகளுக்கு இணையான வரிகளைப் பாட்டாளியின் குரல் பாடப்பகுதியில் கண்டறிந்து ஒப்பீட்டுக் குறிப்புத் தயாரிக்க.*



## உப்பு வயல்

தெருவில் கொத்தனார் வேலைகளுக்குச் சித்தாட்கள் போய்க் கொண்டிருந்தார்கள். தலையில் சும்மாடு கட்டி, வட்டுப் பெட்டிகளும் மட்டக்கம்புகளும் இருந்தன. வீடுகளுக்கு வெள்ளையடிக்கக் கம்பு மட்டைகளை வைத்துக் கொண்டு பையன்மார்கள் நின்று கொண்டிருந்தார்கள். கைவிரல்களில் பீடிகள் புகைந்து கொண்டிருந்தன. தலையில் முண்டாசு கட்டிக் கொண்டிருந்தார்கள். தெரு பைப்பில் தண்ணீர் போய் இருந்தது. ஓர் ஆளையும் காணும். வெறிச்சென்று கிடந்தது பைப். வரிசையாக உடைந்த சட்டி, பானைகள், தகரடப்பாக்கள். ஒரு சொறி நாய் யாரையோ பார்த்துக் கொலைத்தது. இந்நேரமெல்லாம் பெரியம்மா வந்திருப்பாள். இன்னும் காங்கல, என்னாச்சோ தெரியவில்லை. மணி எட்டரைக்கெல்லாம் பீங்கான் ஆபிஸ் ரோட்டு மேல நிக்கணும், அப்போதுதான் அளங்களுக்குப் போகிற லாரிகளைப் பிடிக்கலாம். ஒழுங்கா வேலைக்கி போய் சேர முடியும். ஒம்பது மணிக்கு மேலே போனால் வேலை போச்சு. ஒரு நாள் சம்பள இழப்பு, காலையில் இருந்து சாயங்காலம் வரைக்கும் உப்புப்பெட்டி சுமக்கணும். இதற்குள்ள நூறுதடவையாவது கங்காணி ஏச்சையும் பேச்சையும் கேட்டாகணும். விடாதே, விடாதே என்று வேனா வெயில்லே ஓடி ஓடி உப்புப் பெட்டி சுமந்தால், பிட்டி எலும்பு உடைஞ்சு போன மாதிரி வக்கும். சோர்ந்து போய் வீடு திரும்பும்போது 10 ரூபாய் காசு கிடைக்கும். இந்தக் காசுக்காகத்தான் இந்தப் பாடு. இந்தக்காசு ஒருநாள் கிடைக்காட்டியும் வீட்டுபாடு கஷ்டம்தான். ஒண்ணு ரெண்டு என்று சேர்த்த வைத்த காசுக எத்தனை நாளைக்கிக் காணும்? அளத்து வேலை செய்கிறவங்க வீடுகளுல்லே, மழைக்காலம் வந்துட்டா அவுங்க படுகிற கஷ்டத்தைப் பார்க்கப் பொறுக்காது. சொல் முடியாது. அடுப்பிலெ உலைப்பானை ஏறாது. மூணு நாளு நாலு நாளு என்று பொங்காமல் கிடப்பார்கள். ஒட்டோ ஒட்டு என்று வயிறு ஒட்டிப்போகும். ஏன் பிறந்தோம் என்று இருக்கும். படு பயங்கரம். அம்மா மாதிரி ஆட்க பாடு கேட்கவே வேண்டாம். பொறுப்பான ஆள் இல்லாமல், ஒருத்தியாக் கஷ்டப்பட்டு சாக வேண்டியது. படுகிற கஷ்டகாலங்களில் ஒடுவார்கள் ஓட்டம் கங்காணிகளைத் தேடிக் கொண்டு. கங்காணிகளின் கையைக் காலைப் பிடித்து, கெஞ்சாதக் குறையாகக் கெஞ்சி, ''அடுத்த தீபாவளி முட்டும் ஒங்கிட்டதான் பெட்டி சுமப்பேன், உப்பு வாருவேன்'' என்று எவ்வளவோ சொல்யும் கங்காணிமாருக கேட்க மாட்டாங்க. 'போம்மா... போ' என்பான். உதறி விட்டுப் போய் விடுவான். அதற்கு ஓராளை சிபாரிசு பிடிக்க வேண்டும். அவரு... 'ஏல.. மக்கா கொடுலே, மவளுக்கு கல்யாணம். மவனுக்கு



கல்யாணம். அவ ஒங்கையில்லதான் வேலை செய்வா, வேற எங்கையும் போக மாட்டா'. என்று எதையாவது ஒண்ண சொல், சிபாரிசு செய்த பிறகு, கங்காணி மனம் இரங்கும்.அவன் அளத்து முதலாளிக்கிட்டே கூட்டிக்கொண்டு போவான். முதலாளி ஏற இறங்க பார்ப்பான். "யம்மா... ஒழுங்கா வேலை செய்வியா?" என்று ஒரு அதட்டு அதட்டிக் கேட்பான்

''ஆம்மய்யா... ஒழுங்கா வேல செய்வேன்....'' எங்கணும் பணிவாக 'நோட்டு' எழுதுவான் கங்காணி. ஓடிப்போய் மனுஸ்டாம்பு வாங்கிக்கொண்டு வருவான். சாட்சி கையெழுத்துக்கு ஓராளைத் தேடணும். முதலாளி. கங்காணி. கையில்ல ஐன்னூறு ரூபாய் கொடுத்தால், அதுல அதுக்கு இதுக்கு என்று அம்பது ரூபாய், நூறு ரூபாய் என்று பிடித்துக் கொண்டு, மீதி பணத்தைக் கையில் கொடுப்பான். இனிமே வருகிற நாட்கள் செய்யப்போகும் உழைப்பை ஈடு வைத்த இந்தப் பணத்தை வாங்கிக் கொள்ள வேண்டும். இந்தப் பணத்தைச் சிக்





கனமாக வைத்து மழைக் காலத்தை ஓட்டணும். ஒண்ணுக்கும் வழியில்லை என்றால் இருக்கவே இருக்கு 'சிட்ட வட்டி'. சிட்ட வட்டி ரொம்பவும் மோசமானது. எல்லோருக்கும் நல்லா தெரியத் தான் செய்யும் என்ன செய்வது? நூறு ரூபாய் சிட்டைக்கு வாங்கினால், முதல் பத்து ரூபாய் எடுத்துக் கொண்டு தான் தொன்னூறு ரூபாயைக் கொடுப்பார்கள். வாரம் வாரம் பத்து பத்து ரூபாயாகப் பனிரெண்டு வாரங்கள் கட்ட வேண்டும். ஒரு வாரம் கட்டவில்லை என்றாலும் அடியாளு வந்து நிற்பான். "அய்யா இந்த வாரம் சரியாக வேலையில்லே'' அடுத்த வாரம் சேத்துக் கொடுக்கேன் ''என்றால் ''சரி சரி அடுத்த வாரம் சேர்த்து கொடு, இல்ல...." என்று கண்ணை உருட்டிக்கொண்டு போவான். அடுத்த வாரமும் கொடுக்கல்லன்னா அவ்வளவுதான். வீட்டுப் பொருள்களைத் தூக்கிக்கொண்டு போய் விடுவான். சிட்ட வட்டிக்கு முதல் வேண்டியதில் லை. இதற்கும் திரேகத்தை வளைக்கணும்.

**-ஸ்ரீதர கணேசன்**

- *தொழிலாளிகளுக்கு எதிராக சமூகத்தில் காணப்படும் சுரண்டல்களைத் திரட்டிப் பட்டியலிடுக. அதனடிப்படையில் அறிக்கை ஒன்று தயார்செய்க.*
- *தொழிலாளர்கள் சமூகத்தில் எந்தெந்த நிலைகளில் சுரண்டப்படுகிறார்கள் என்பது பற்றிய செய்திக் குறிப்பு ஒன்று தயாரிக்க.*

# விழித்திரு! விழித்தெழு!

## ஆன்லைன் மோசடி

**மாயாவிகள்!**

தீபாவளி பண்ட் மோசடி, சிட் பண்ட் மோசடி, வீடு கட்டித்தருவதாகச் சொல் மோசடி, சுனாமி நிதி மோசடி... இது போன்ற அசந்தால் ஆட்டையைப் போடும் சமாச்சாரங் கள் எல்லாம் உள்நாட்டு ஆசாமிகளுக்குக் கைவந்த கலை. ஆனால், முகம் காட்டாமல், திரை மறைவில் மாயாவி போல் மோசடி தாதாக் கள் வலம் வந்து லட்சக்கணக்கில் ஆட்டை யைப் போடுவதுதான் ஆன்லைன் மோசடி. இமெயில், இணைய தளங்கள்தான் இவர்களது மோசடிக்கு உதவும் வழிமுறைகள் உலக மெங்கும் இந்த இன்டர்நெட் மோசடி ஆசாமி கள், மறைமுகமாகக் கோடிக்கணக்கில் கரன்சி களைக் கொள்ளையடித்துக் குவிக்கின்றனர்.

இதுபோன்ற ஆன்லைன் மோசடி களைப் பற்றி சென்னைப் புறநகர் போலீஸ் கமி ஷனர் கூறிய அதிர்ச்சித் தகவல்கள்...

இன்டர்நெட்டில் உலகையே ஆராய லாம். நல்ல விஷயங்களுக்குப் பயன்படுத்தி னால், அதனால் எவ்வளவோ நல்லது நடக்கும். ஆனால் சில சமூக விரோதிகள் இன்டர் நெட்டைத் தவறான வழியில் பயன்படுத்தி, கோடிக்கணக்கில் பொதுமக்களின் பணத்தைக் கொள்ளையடிப்பதுதான் வேதனையான விஷ யம். இன்டர்நெட், இணையதளங்களை ஆன் லைன் மோசடி மன்னர்கள் தங்கள் கொள்ளைக் கூடாரமாகப் பயன்படுத்துவதுதான் வருந்தத் தக்க விஷயம். இவர்களைப் பிடித்துச் சட்டத் தின் முன் நிறுத்துவதும் அவ்வளவு சுலபமான காரியமல்ல. காரணம், இந்த ஆசாமிகளெல்லாம் நைஜீரியா, உகாண்டா, தென் ஆப்பிரிக்கா போன்ற வெளிநாடுகளில் இருந்து கொண்டு இந்த மோசடிகளை அரங்கேற்றுவதுதான்.

சமீபகாலமாக ஆன்லைன் மூலம் நடக் கும் கோடிக்கணக்கான பணமோசடிகள் பற்றி அதிகமான புகார்கள் வருகின்றன. வங்கிகளி ருந்து அனுப்பியது போன்ற தோற்றத்துடன் வங்கியின் தகவல்களைச் சரி செய்வதாகக் கூறி, ஏடி. எம். கார்டு பாஸ்வேர்ட், வங்கிக்கணக்கு எண் போன்றவற்றைத் தெரிந்துகொண்டு அந்த நபரின் வங்கிக் கணக்கிருந்து நெட் பேங்க் கிங் மூலம் பணத்தை டிரான்ஸ்பர் செய்து ஏமாற்றி விடுகின்றனர். உங்கள் இமெயில் முக வரிக்கு அமெரிக்காவில் உள்ள புகழ்பெற்ற லாட்டரி நிறுவனத்தில் இருந்து ரூ. 25 லட்சம் பரிசு விழுந்துள்ளதாகவும், அதனை இந்தியா வில் உள்ள உங்கள் வங்கிக் கணக்குக்கு அனுப்ப வேண்டுமென்றால் சுங்கவரி போன்ற செலவுகளுக்குப் பணம் அனுப்புமாறு வரும் இமெயில்களை நம்பி ஏமாந்து பணம் அனுப்பி பலரும் மோசம் போய்விடுகின்றனர். இமெயில் இது போன்று வரும் போயான தகவல்களுக்குப் பதில் அளித்து பல லட்சம் ரூபாய் ஏமாந்து போகின்றனர்.

இது இன்னொரு வகை மோசடி!

சென்னையைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவரது செல்போன் எண்ணுக்கு, உலக நோக் கியா நிறுவனத்தில் ரூ. 5 கோடி லாட்டரி (பத்து லட்சம் பவுண்ட் டாலர்கள்) விழுந்துள்ளதாகவும், மேலும் விவரங்களுக்கு ''தி வேர்ல்டு நோக்கியா" என்ற இணையதளத்தில் விவரங் களைத் தெரிந்துகொள்ளும் படியும், அந்தத் தொழிலதிபருக்கு ஒரு எஸ்.எம்.எஸ். செய்தி வந்தது. 5 கோடி ரூபாய் என்றதும் மகிழ்ச்சியில் திளைத்த தொழிலதிபர் அவசர அவசரமாக இணையதளத்தில் தொடர்புகொண்டார்.

"உங்கள் செல்போனுக்கு வந்த எஸ்.எம். எஸ். செய்தி உண்மைதான். ஐந்து கோடி ரூபாய்க்கான சுங்க வரி, வருமான வரி செலவு களை மட்டும் நீங்கள் செலுத்தினால் போதும், உங்கள் பரிசுத்தொகையை எங்கள் ஏஜென்ட் டேவிட் வில்சன் உங்கள் வீடு தேடி வந்து தரு வார், கீழ்க்கண்ட செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு பேசுங்கள்" என்று ஒரு செல் போன் எண்ணைக் குறிப்பிட்டிருந்தனர். செல் போன் ஆசாமியிடம் பேசிய போது "கஸ்டம்ஸ், இன்கம்டாக்ஸ் பார்மாட்டிசுக்கு ரூ. 13 லட் சத்தை நீங்கள் உடனடியாக கட்டினால் ரூ. 5 கோடி உங்களுக்கே!" என அதே ரீலையே

விட்டுள்ளான். அதை உண்மை என நம்பிய தொழிலதிபர், பதிமூன்று லட்சத்தை அந்த நபர் கொடுத்த வங்கிக்கணக்கில் செலுத்தினார். சொன்னபடியே மறுநாள் டேவிட் வில்சன் என்ற நபரும் நேரில் வந்து பணப்பெட்டியைக் கொடுத்துவிட்டுச் சென்றார். தொழிலதிபர் ஆர் வமுடன் பெட்டியைத் திறந்து பார்த்தபோது அத் தனையும் கட்டுக்கட்டாக கறுப்புக் காகித கட்டுக் களாக இருந்தன. அதிர்ந்து போன தொழிலதிபர், "என்ன இது கறுப்பு நோட்டுக்களைத் தந்துள் ளீர்கள்" என்று டேவிட் வில்சனிடம் செல்போ னில் தொடர்புகொண்டு கேட்டதற்கு, "போலீஸ் ரெய்டு அதிகமாக இருக்கிறது. அதனால்தான் அப்படி கொடுத்துள்ளோம். நல்ல நோட்டாக மாற்ற வேண்டும் என்றால் டில்க்குச் சென்று ஒரு சொல்யூஷன் வாங்க வேண்டும். சொல் யூஷனில் கறுப்பு நோட்டுக்களைக் கழுவினால் கரன்சியாக மாறிவிடும். அந்த சொல்யூஷனை வாங்க மேலும் ரூ. 32 லட்சம் செலுத்துங்கள்" என்று கூறியுள்ளார். அப்போதுதான் தொழில திபர் உஷாராகி என்னிடம் புகார் அளித்தார்.

இது பற்றி சைபர்கிரைம் போலீசார் மூலம் விசாரணை நடத்தியபோது அந்தக் கும் பல் நைஜீரியாவைச் சேர்ந்தவர்கள் என தெரிந் தது. ''ஒலபாஜி'' என்ற நைஜீரியா வாபர் சென்னை கீழ்ப்பாக்கத்தில் தங்கியிருந்தது தெரியவந்ததும், அவரை மடக்கிப்பிடித்துக் கைது செய்தோம். லேப்டாப் கம்ப்யூட்டர் மூலம் அந்த வாபர் பலருக்கும் வலை விரித்து மோசடி செய்தது வெளிச்சத்துக்கு வந்தது.

இது மட்டுமின்றி இன்னும் விதவித மான மோசடிகளும் ஆன்லைனில் அரங்கேறி வருகின்றன.

வங்கிகளிருந்து "செக்யூரிட்டி அலர்ட்" என்றும், உங்களது நெட்பேங்க்கிங் வசதியில் பிரச்சினை என்றும், அதைச் சரிசெய்ய "ப்ளீஸ் ஃபாலோ தி ங்க் டு ரிசால்வ் திஸ் பிராப்ளம்'' என்றும் வரும் இமெயில்களை "க்ளிக்" செய்து ஏமாந்து போகவேண்டாம். "உங்களுக்கு நிறைய போயான இமெயில்கள் வரும், அவற்றை நம்ப வேண்டாம்" என வங்கிகள் எச்சரிக்கை செய்வது போன்று வரும் இமெயில்களையும் நம்பாதீர்கள். இமெயில் உபயோகிப்பவர்களிடம் இருந்து உங்களைத் தேர்ந்தெடுத்திருப்பதா கவும் உங்கள் "பிஎம்டபிள்யூ கார்" பரிசு விழுந் திருப்பதாகவும், அதை இந்தியாவுக்கு அனுப்ப ஷிப்மென்ட் சார்ஜ் ஆக லட்சக்கணக்கில் பணம் அனுப்புமாறும் வரும் இமெயில்களைக் கூட நம்பி பணம் அனுப்பி ஏமாறாதீர்கள்.

வெளிநாட்டில் கோடீஸ்வரன் இறந்து விட்டதாகவும், அவர் வங்கியில் நிறைய பணம் டெபாசிட் செய்துள்ளதாகவும் அவருடைய பெயரும் உங்களுடைய பெயரும் ஒத்துள்ளதா கவும், அந்தப் பணத்தை உங்கள் பெயருக்கு மாற்றித்தர ஆகும் செலவுக்கு பணம் அனுப் புங்கள் என்றும் வரும் இமெயில்களை நம்பி பணம் அனுப்பாதீர்கள். உங்களை லண்டனில் வசிக்கும் பெண்மணி தத்து எடுத்துக் கொள்வ தாகவும், அதற்குரிய ஆவணங்கள் பெற வேண் டும் என்றும் சொல் உங்கள் வங்கிக்கணக்கு விவரங்களை கேட்டால் இமெயில் உண்மை யான விவரங்களை அனுப்பாதீர்கள்.

நீங்கள் வீட்டிருந்தபடியே வேலை பார்த்துப் பணம் சம்பாதிக்கலாம் என்றும், அதற் காக வங்கிகளில் கணக்கு ஆரம்பித்து கணக்கு எண், பாஸ்வேர்ட் எண் ஆகியவற்றைக் கொடுக்கும்படியும், உங்கள் வங்கிகணக்கிற்கு வரும் பணத்திருந்து பத்து சதவீதம் கமி ஷனை நீங்களே எடுத்துக் கொண்டு மீதமுள்ள பணத்தை வெளிநாட்டு வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்குமாறும் வரும் இமெயில் களைக் கண்டு ஏமாற வேண்டாம். இவை எல் லாம் மோசடிகளின் உள் மாற்றங்கள். திருடனாய் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது''. ஆகவே மக்கள் இதுபோன்ற மோசடி ஆசாமிகளிடம் இருந்து தப்பித்துக் கொள்ள விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்" எனத் தெரிவித்தார்.

போயான இமெயில்களை நம்பி ஏமாற வேண்டாமே!

**– மு.ஹ. அமீர் ஹம்சா.**

- *ஆன்லைன் மோசடிக்கு எதிராக ஒரு விளம்பரச் சுவரொட்டி தயாரிக்க.*

## சிக்கான் அடிமைகள்

**மனதிற்கினியவளே,**

இயந்திரங்களோடு வாழ்ந்து வாழ்ந்து மனிதர்கள் மனமும் இயந்திரமாகிவிட்டது. நான் வேலைக்குச் சென்று சுமார் இரண்டு ஆண்டுகள் தனிப்பட்ட முறையில் இனிமையாகச் சென்றுள்ளன. ஆனால் என் சக ஊழியர்களையும் மற்ற அலுவலகத்தில் பணிபுரியும் கணிப்பொறி வல்லுனர்களையும் காணும்போதெல்லாம் பரிதாபமே மிஞ்சுகிறது.

பொறியியல் கல்லூரி முடித்துவிட்டு சுமார் இருபத்தி ஒன்று / இருபத்தி இரண்டு வயதில் பத்தாயிரம் முதல் முப்பதாயிரம் வரை சம்பாதிக்க நேர்கிறது. என்னதான் குடும்பச்சுமை பாரம் தனக்கு இருந்தாலும் இத்தனை நிறைய காசு பல இளசுகளிடம் சீரழிவிற்காகவே உருவெடுத்துள்ளது. தான் சம்பாதித்த பணத்தை எந்த வகையில் செலவு செய்வதற்கும் அவனுக்கு உரிமை உண்டு. ஆனால் அதுவே அவனை மெல்ல மெல்ல அழித்து வருகிறது என அவன் அறிவதில்லை. பணத்தை எவ்வாறு நிர்வகிப்பது என்பது தெரிவதில்லை பாதிப் பேருக்கு.

மற்ற தொழில்முறையிருந்து மிகவும் மாறுபட்டது இந்தக் கணிப்பொறித் தொழிற்சாலை. மணிக்கணக்கில் நேரம் காலம் பார்க்காமல் வேலை செய்ய நேரும். அத்தனை போட்டி நிறைந்துள்ளது. எட்டுமணி நேரம் வேலை பார்க்க வேண்டிய மனிதன் பதினாறு பதினேழு மணி நேரம் வேலை செய்ய நேரும். இதனால் முப்பத்தைந்து வயதிலேயே ஐம்பது வயது வயோதிகம் தாக்கிவிடுகிறது. சோர்வு, சுறுசுறுப்பு குறைதல், கண்பார்வை குறைதல், முதுகுவ என்று ஏராளமான புதிய புதிய பிரச்சினைகள் முளைத்துக்கொண்டே இருக்கின்றன.

எங்கோ படித்த குட்டிக் கதையொன்று நினைவுக்கு வருகின்றதே. ஓர் இளைஞர் வெளிநாட்டிற்குச் சென்று வேலை செய்வதில் தீவிரம் காட்டினான் எதற்கு என்றதற்கு அப்பா தன் வாழ்நாளில் மிகவும் கஷ்டப்பட்டார்; குடும்பம் அதே போலத் துன்பப்படக் கூடாது என்றானாம். நேரம் பாராமல் வேலை செய்தான். அம்மா இறந்ததாகத் தகவல் வந்தது. திரும்பிவர முடியவில்லை. தங்கைக்குத் திருமணம்; போட்டோவை அனுப்பி வையுங்கள் என்றானாம். இப்படியே பல ஆண்டுகள் கழித்து தன் அப்பாவும் இறந்துவிடுகிறார். அப்போதும் வர முடியவில்லை.

தாய்நாட்டிற்கு இன்னும் சில ஆண்டுகள் கழித்து திரும்ப நிரந்தரமாக வர நிர்ப்பந்தம் எழுந்தது. சம்பாதித்த அனைத்துப் பணம் கொண்டு வீடு ஒன்றினை வாங்கினான். ஆனால் தன் குடும்பத்தை இழந்து விடுகிறான். நண்பர்களைத் தொலைத்துவிடுகிறான். முடிவில், “அப்பா இரண்டு அறை வீட்டில் வாழ்ந்தார். நான் மூன்று அறை வீட்டில் இருக்கிறேன். ஒரு அறை அதிகம் வேண்டுமென இழந்தது ஏராளம்” என்று கதை முடியும். எத்தனை கண்கூடான உண்மை இது. பணத்தைத் துரத்திக் கொண்டு நிம்மதி, சந்தோஷம், சமூகம், குடும்பம், நட்பு இவை இழப்பதற்கு மனமில்லை. அரக்கப் பறக்க வேலை செய்துவிட்டு கிடைக்கும் ஒரு நாள் இரண்டு நாளை எப்படிச் செலவு செய்வது என விழித்துக்கொண்டிருக்கிறார்கள். மது அருந்துவதும் புகைப்பதும்தான் சந்தோஷம் / ஆனந்தம் என நினைக்கிறார்கள். குதிரைக்குக் கடிவாளம் போட்டது போல தானுண்டு தன் வேலையுண்டு என வாழத் துவங்கிவிட்டனர். கணிப்பொறி வல்லுனர்கள் மட்டுமல்ல ஒட்டு மொத்த நகர்ப்புறமும் இப்படித்தான் உள்ளது.

உதாரணமாக வீட்டை வாடகைக்குக் கேட்கப் போகிறான், அவர் வேண்டுமென்றே ஆயிரம் ரூபாய் அதிகமாகக் கேட்பார். இவனும் சரி என்று சம்மதித்து முன்பணத்தையும் கொடுத்துவிடுகிறான். இந்தச் சம்பவத்தில் யார் மீதும் தவறில்லை என நினைக்கத் தூண்டும். ஆனால் அந்த இளைஞன் செய்தது ஒரு சமூகக் குற்றம். விலையை ஏற்றியதால் பாதிக்கப்படப் போவது அதே ஊரில் வசிக்கும் மத்தியதர மக்கள்தான். அவனால் அந்த விலையைத் தர முடிந்தது. தருகிறான். இதிலென்ன குற்றம் என்ற கேள்வி நியாயம்தான். மனிதன் தனித்து வாழும் ஜீவனல்ல. ஒரு சமூகத்தின் அங்கம். தன் செயல் மற்ற சமூகத்தை பாதிக்காதவாறும் பார்த்துக்கொள்வது அவன் கடமை. இது வீட்டு வாடகையில் ஆரம்பித்து, ஆட்டோ பணம், துணிமணிகள், வீட்டு வேலை. அங்காடிப் பொருட்கள் வரை எல்லாம் உயர்த்தப்பட்டு

விடுகின்றன. எதிர்த்துக் குரல் கொடுத்தாலோ இவன் சண்டைக்காரன் என முத்திரை குத்தி விடுகிறது இந்தச் சமூகம். மேலும் நல்ல பையன்- பெண் என்றால் அமைதியாகப் போ; சமூகப் பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்கிவிடு; போராடாதே எனச் சொல்த் தருகின்றனர் பெற்றோர்.

சரி, இத்தனை பிரச்சினைகள், ஆதங்கம் இருக்கும். பின்னரும் எதற்கு அங்கே நீடிக்கிறீகள் எனக் கேட்பது தெரிகிறதம்மா. இன்னும், தொழில் முறையில் பல நுணுக்கங்களைக் கற்க வேண்டும். ஆரம்பப் படிகளில்தான் இருக்கிறேன். நான் கூறியது அனைத்தும் தொழிலைச் சாரா விஷயங்களே. பிரச்சினைகளைக் கண்டு ஓடி ஒளிந்தேன் ஒரு காலக்கட்டத்தில். காலம் எனக்கு நம்பிக்கையும் தெளிவும் ஊட்டியுள்ளது. பிரச்சினைகளைச் சந்திக்கத் தயார் நிலையில் எப்போதும் இருக்கின்றது மனம். கணிப்பொறி வல்லுனர்கள் வாழ்வியல் முறையில் சின்ன மாற்றமாவது செய்வது என உறுதியோடு இருக்கிறேன்.

ஒரு கற்பனை உலகத்தில் மிதந்து கொண்டிருக்கிறான். அவனைத் தட்டி எழுப்ப வேண்டும். இதனை உள்ளுக்குள் இருந்து தான் செயல்படுத்த வேண்டும். இளமைக்காலங்களில் எத்தனை அதிசயங்களை நிகழ்த்தலாம். புத்திக் கூர்மையையும் உடல் உழைப்பினையும் ஒரு சிறு பங்காவது நாட்டிற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் செலவிட வேண்டும்.

**– விழியன்.**

- *''புத்திகூர்மையையும் உடல் உழைப்பினையும் ஒரு சிறு பங்கேனும் நாட்டிற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் செலவிட வேண்டும்.'' இவ்வாறு ஆசிரியர் விழியன் கூறக் காரணம் என்ன? கலந்துரையாடிக் குறிப்பு தயாரிக்க.*
- *'உழைப்பாளர் தினத்தை' முன்னிட்டு இன்றைய உழைப்பாளர்களின் நிலை பற்றிய வானொலி நாடகம் தயாரிக்க.*
- *எல்லா நிலைகளிலும் சமத்துவத்தையும், சமாதானத்தையும் வலியுறுத்தும் நாடகம் ஒன்றை எழுதி நடிக்கவும்.*

அலகு
6

# மொழி முகங்கள்

***மொழி இல்லையெனில் சிந்தனை விழி இல்லை;***
***இனம் தழைக்க வழி இல்லை .***

## சொல்லோவியம்

### மொழி

மொழி
உயிரின் நறுமணம் !
காலம் செதுக்கி
மாந்தனுக் களித்த
ஒச் சிற் பம் !
ஆதி மனிதனின்
உதடு தொடங்கி
அறிவின் முகடு தொட்டு
இன்று வரை
முதன்மையாகி நிற்பது
மொழி !
மொழி எனும் உன்னதம்
முகிழ்த்தது எப்படி?
மாந்த வாழ்வில்
காலம்தன் நெடுவயிற்றில்
கருவுற்று வளர்த்து
ஈன்று புறம் தந்த
ஈடற்ற குழந்தை
மொழி !
தொன்மைக் காலத்தில்
தூர்ந்த இருட்டில்
ஆடையில்லா மாந்தன்
அச்சத்தை உடுத்தி
அலைந்தபோது
அவனின்
குரல்வளைக் குள்ளிருந்து
வெடித்துக் கிளைத்தது
மொழி !
இருட்டு தொலைந்ததும்
திரட்டுப் பாலென
கிழக்கு வெளுத்து
ஒளிப் பூச் செண்டு
உதித்தது கண்டு
மாந்தனின் உள்ளத்தில்
மகிழ்ச்சி வெள்ளம்
மடை திரண்டோட
சொற்கூடி நா சுழன்று
அவைக் கூத்தின் பெருமுழக்காய்
உருவெடுத்தது
மொழி !
பெரு நதியின்
கரையோரத்தில்
இனக் கூடாரத்தை
ஏற்படுத்தியது
மொழி !
இனத்தின் கலம்பகமாய்
பண்பாட்டின் அறிவகமாய்
பார்கூட்டும் செழிப்பகமாய்
வேர் நீண்டு கிடக்கிறது
மொழி !
வெறும் கருவியே மொழியென்று

கருதும் இதயங்களே

வாய்பிளந்து பாலையிலே

வறண்டு கிடக்காதீர் !

மொழி இல்லையெனில் சிந்தனை

விழி இல்லை

இனம் தழைக்க

வழி இல்லை.

மொழி

உயிரின் நறுமணம் !

**- கவித்துவன்**

- *'மொழி' கவிதையைப் போன்று மொழியின் சிறப்பினை எடுத்துரைக்கும் புதுக்கவிதை ஒன்று எழுதுக.*

## இலக்கிய மொழியும் பொதுமொழியும்

இலக்கிய மொழி எவ்வாறு பொது மொழியிருந்து வேறுபடுகிறது என்று பார்ப் போம். பேச்சு மொழி பேசுவோனுக்கும் கேட் போனுக்கும் இடையில் நிகழ்கிறது. கேட்போன் பேசுவோனின் மொழியை மட்டுமன்றி அவனு டைய உடல் அசைவுகளையும் பார்க்கிறான். கருத்துப் பரிமாற்றம் எளிதாகவும் விரைவாகவும் நடைபெறுகிறது. ஆனால் எழுத்து மொழி அல் லது இலக்கிய மொழி வேறொரு தளத்தில் இயங்குகிறது. இலக்கிய மொழி பொது மொழி யி ருந்து திரிபானது. பொது மொழியி ருந்து வேறுபடுகிற அல்லது திரிகிற தன்மைதான் இலக்கிய மொழிக்கு ஒரு தனித்தன்மையை அளிக்கிறது. நம்முடைய அன்றாடப் பேச்சு இயற்கையாக நிகழ்கிறது. நம்முடைய கருத்துக் களை வெளியிடுவதில்தான் நாம் முக்கியக் கவ னம் செலுத்துகிறோம். நம்முடைய பேச்சும் உணர்ச்சி மயமாக அமைவதுண்டு. இலக்கியம் சொல்லுகின்ற கருத்துக்கு முக்கியத்துவம் அளிப்பதை விட ஒன்றைச் சொல்லுகின்ற முறைக்குத்தான் முதன்மை அளிக்கிறது. ஆகையால் அன்றாடப் பொது மொழியிருந்து இலக்கிய மொழி பல நிலைகளில் மாறுபடுகி றது. இலக்கிய மொழி கையாளும் கவிதைகளில் காணப்படும் பல கூறுகள் பொது மொழியின் கூறுகளிருந்து பல நிலைகளில் திரிந்திருக்கும். அத்தகைய திரிபுகள் ஓர் எல்லைக்குள் உட் பட்டே இருக்கும். அவற்றை நாம் இங்கு சுருக் கமாகப் பார்ப்போம்.

எழுத்து மொழி வகைகளுக்குள் கவிதை, உரைநடை ஆகிய இரண்டையும் முதல் பார்ப்போம். உரைநடைகளுக்குள் பல வகை இருந்தாலும் பொதுவான சில தன்மை களை உரைநடையில் நாம் காணலாம். கவிதை காதுக்கு விருந்து, உரைநடை கண்ணுக்கு விருந்து. கவிதை ஓசைகளின் நயத்தைச் சார்ந் திருக்கிறது. கவிதை மொழியின் முக்கியக் குணாம்சம் ஓசைகளின் இனிமை. ஆகையால் தான் கவிதைகளில் எதுகை, மோனை போன் றவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஓசைக ளின் ஒழுங்கு ஒரு பக்கம் காதுக்கு இனிமை பயந்தாலும் இன்னொரு பக்கம் நினைவில் வைத்துக் கொள்வதற்கு எளிமையானது.

**மானம் பெரிதென்று வாழும் மனிதர்களை**

**மானெனச் சொல்வ தில்லையா?**

இந்த வரிகளில் வரும் ஓசை ஒழுங்கு காதுக்கு இனிமையாக உள்ளது; நினைவில் எளி தாக நிற்கிறது. இதே போன்று நாம் பின்வரும் வரிகளையும் உணரலாம்.

**மாபெரும் சபைதனில் நீ நடந்தால் - உனக்கு**

**மாலைகள் விழ வேண்டும் - ஒரு**

**மாற்றுக் குறையாத மன்னவன் நீ - என்று**

**போற்றிப் புகழ வேண்டும்.**

கண்ணதாசனின் இந்த வரிகளில் இசை துள்ளி விளையாடுகிறது. ஓசைகளின் ஒழுங்கு கவிதைகளுக்கு ஓர் இனிமையை அளிக்கிறது. சில கவிதைகளில் இந்த ஓசை ஒழுங்கு உணர் வுகளை வெளிப்படுத்துவதாகவும் கூறுவார்கள். சான்றாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வரிக ளைப் பார்ப்போம்.

**மழலைத் தருமொழியிற் சிலவடுகும் சிலதமிழும்**

**குழறித்தரு கருநாடியர் குறுகிக் கடை திறமின்**

**- கங்கத்துப்பரணி - கடை திறப்பு**

இந்த வரிகள் நமக்குக் குடிபோதையில் உள்ளவர்களின் நிலையை உணர்த்துவது போல் உள்ளன. ஓசைகளின் ஒழுங்கு உணர்வுகளை

வெளிப்படுத்தும் முறையில் அமைந்துள்ளன. மென்மையைக் குறிக்க மெல்ன ஒகள் பயன்படுத்துவதையும் நாம் கவிதைகளில் காண் கிறோம். கம்பராமாயணப் பாடல் ஒன்று அடிக்கடி எடுத்துக்காட்டப்படுவதை நாம் பார்க்கலாம்.

**அஞ்சொள மஞ்ஞையென யன்னமென மின்னும்**

**வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்**

சூர்ப்பநகையின் நடையினை இவ்வரி கள் விவரிப்பதாகத் திறனாய்வாளர்கள் கூறுவார் கள். மெல்லொகள் இங்கு மிகுதியாகப் பயன் படுத்தப்படுகின்றன. ஒகளின் ஒழுங்குமுறை அல்லது சில ஒவகைகள் மிகுதியாகக் கையா ளப்படுதல் சில உணர்வுகளோடு தொடர்புபடுத் தப்படுகிறது. ஒநிலையில் ஒரு குறிப்பிட்ட ஒவகைகள் சில உணர்வுகளை வெளிப்படுத் தத் தெரிவு செய்யப்படுகின்றன. தெரிவு என் பது முக்கியமான ஒரு செயல்பாடு. ஒ நயங் களை உணர்ந்து சொற்களைத் தெரிவு செய்வ துதான் கவிஞனின் ஆற்றலை வெளிப்படுத்து கிறது. இவ்வாறே ஒரு பொருளைக் குறிக்கக் கூடிய பல சொற்கள் இருப்பினும் ஒவ்வொரு சொல்ன் தேர்வும் ஒவ்வொன்றின் தன்மை யைக் காட்டுகிறது. சான்றாக வீடு என்ற சொல் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. மனை என்ற சொல்ன் பயன்பாடு அது பயன்படுத் தப்படும் உரைக்கட்டு இலக்கிய தன்மையைக் காட்டுகிறது. இதுபோன்று பல சொற்களை நாம் காட்டலாம். செப்பு, கூறு, சொல் போன்ற சொற்களும் வினா, கேள்வி போன்றவையும் நிலா, நிலவு, மதி, சந்திரன், திங்கள் போன்ற வையும் இவை பயன்படுத்தப்படும் உரைக் கட்டின் தன்மையைச் சுட்டுகின்றன.

தொடரியல் நிலையிலும் இலக்கிய மொழி எவ்வாறு பொது மொழியிருந்து வேறு படுகிறது என்பதைக் காட்டுவோம். தமிழைப் பொறுத்தவரை ஒரு வாக்கியத்தில்

**எழுவாய் + செயப்படுபொருள் + வினை**

என்பது சொற்கள் வரும் வரிசைமுறை. ஆனால் தமிழில் இவ்வரிசை முறை மாறுபட்டு வந்தால் இலக்கியச் சுவையைக் கூட்டலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள திருக்குறளைப் பார்ப் போம்.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக.**

இக்குறளின் வரிசைமுறை உரைநடைத் தமிழில் கற்பவை கசடறக் கற்க, கற்றபின் அதற் குத் தக நிற்க.

வினைச் சொற்கள் வாக்கியத்தின் முதல் வந்துள்ளன. வினையடை வினைக்கு முன்பு வந்துள்ளது. ஒரு வாக்கியத்திற்குள் சொல்லப்படும் செய்திகளுக்குள் எதற்கு முக்கி யத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதைச் சொல் வரிசை தீர்மானிக்கிறது. இதன் அடிப் படையில் கம்பராமாயண வரியைப் பலர் விவரித்திருக்கிறார்கள்.

கண்டனன் கற்பினுக் கணியை

எச்சத் தொடரின் வரிசைமுறை கூட மாறலாம். நிபந்தனைத் தொடர்களில் காரணத் தொடர் முன்பும் காரியத் தொடர் பின்பும் வரு வது முறை.

நீ படித்தால், தேர்வில் கட்டாயம் வெற்றி பெறலாம்.

வெற்றி பெறுவது என்ற காரியம் நடை பெறப் படிப்பது என்பது காரணமாக அமைந் துள்ளது. இம்முறை மீறப்படுவதை நாம் திருக் குறளில் பார்க்கலாம்.

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**

**நற்றாள் தொழாஅ ரெனின்**

இதனுடைய பொதுவான அமைப்பு பின்வருமாறு பொது மொழியில் அமைந் துள்ளது.

வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின் கற்றதனால் ஆய பயன் என்கொல்?

இங்குத் தொடர்களின் அமைப்பு முறையே மாற்றப்படுகிறது. இக்கூறுகள் அனைத்தும் பொது மொழியிருந்து மாறு பட்டவை. மேலும் கவிதைகளில் எழுவாயைப் பின்னுக்குத் தள்ளுவது பொதுவாகக் காணக் கூடிய கூறு. உணர்ச்சி மிக்க உரைநடைகளில் நாம் இதனைக் காண்கிறோம்.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**

**பகவன் முதற்றே உலகு**

எழுத்தெல்லாம் என்பதும் உலகு என்பதும் எழுவாய்த் தொடர்கள். இத்தொடர்கள் வாக்கியங்களின் இறுதியில் வருகின்றன. இவ்வாறு எழுவாயும் வினையும் வரிசைமுறை மாறி வருவதைக் கவிதைகளிலும் இலக்கிய மணம் நிரம்பிய கட்டுரைகளிலும் நாம் மிகுதியாகப் பார்க்கலாம்.

நாம் இப்பொழுது மொழியின் பொது விதிகளை மீறுவதால் எவ்வாறு இலக்கியச் சுவை வெளிப்படுகிறது என்பதைக் காணலாம். பேசு என்ற வினையைப் பயன்படுத்தும்போது வாய் என்ற சொல்லைப் பயன்படுத்துவது இயற்கையானதல்ல. வாயால் பேசினான் என்ற தொடரில் வாய் என்பது மிகைக் கூறு. பேசினான் என்று சொன்னாலே வாயால் பேசினான் என்பதுதான் பொருள். பேசு என்ற சொல்ன் பொருள் மாறுபாட்டைக் கையால் பேசினான், கண்களால் பேசினாள் போன்றவற்றால் நாம் உணர முடியும். இங்குப் பேசு என்ற வினையோடு எந்தத் தொடர்கள் வரலாம் என்ற கட்டுப்பாடு இத்தொடர்களால் உடைக்கப்படுகிறது. இவ்விதி மீறல்கள் உருவகப் பொருளையும் இலக்கிய வரிகளையும் உருவாக்குகின்றன. இதற்குச் சில சான்றுகளை நாம் பார்ப்போம். இவ்விதி மீறல்களும் ஒரு எல்லைக்குள்தான் நடக்க வேண்டும். இவ்வெல்லை மீறப்படும் போது உருவாகும் வாக்கியங்கள் வழுவானவையாக அமைந்துவிடும். கால் பேசும் என்றோ, மேஜை பேசும் என்றோ' ஒருவர் சொன்னால் நாம் இவ்வாக்கியங்களை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறோம்.

நீ இங்கே சுகம்

நான் அங்கு சுகமா?

இவை ஒரு திரைப்படப் பாடன் வரிகள். இந்த வரிகளுக்குள் இலக்கியச் சுவை இருப்பதால்தான் இவை நம்மைக் கவர்ந்திழுக்கின்றன. பொதுவாக நான் என்ற சொல் அருகிலுள்ள இடத்தைச் சுட்டும். இங்கு என்பதோடுதான் வரும். அதேபோல் நீ என்ற சொல் தூரத்திலுள்ள இடத்தைச் சுட்டும். நாம் கடிதம் எழுதும்போது நான் இங்கு நலம். நீ அங்கு நலமா? என்று எழுதுகிறோம். இந்த வரிகளில் இந்தக் கட்டுப்பாடு உடைக்கப்படுகிறது. இவ்விதி மீறல் அழகிய கவிதை வரிகளை உருவாக்குகிறது. அதேபோல இன்னொரு வரியையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு பட்டாம்பூச்சி நெஞ்சுக்குள்ளே சுற்றுகின்றதே

நெஞ்சுக்குள்ளே என்பதற்குப் பதிலாக வீட்டுக்குள்ளே என்று மாற்றினால் இந்த வரி தன் கவிதைத் தன்மையை இழந்து பொதுவான மொழியின் வாக்கியமாக மாறிவிடும். இந்த விதி மீறல் கவிதை வரியைப் படைக்கிறது. முன்பு நாம் குறிப்பிட்டதுபோல இந்த விதி மீறல்கள் ஓர் எல்லைக்குள் இருக்க வேண்டும். இதனைக் கவிஞர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஒரு புதுக்கவிதையின் வரியைப் பார்ப்போம்.

கைகளால் பேசி கண்களால் கேட்டு

பொது மொழியில் வாயால் பேசி காதால் கேட்டு என்று அமையும். மேலே காட்டிய வரிகளில் தெரிவு விதிகள் மீறப்பட்டுள்ளன. இந்த மீறல்கள்தான் வாய் பேச முடியாதவர்களின் சித்திரத்தை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது. விதிமீறல்கள் இங்கு ஒரு அழகிய உருவகத்தை நமக்குப் படைத்தளிக்கிறது. இலக்கியத்தைச் சுவைப்பதற்கு எப்படி மொழியியல் ஆய்வுக் கருவிகள் நமக்குப் பயன்படக் கூடும் என்பதை நாம் இதுவரை விளக்கினோம்.

**– கி. அரங்கன்**

- *இக்கட்டுரையின் அடிப்படையில் கவிதை நடைக்கும் உரைநடைக்கும் இடையேயான வேறுபாட்டைச் சுட்டிக் காட்டுக.*

## பேசும் வார்த்தைகள்

நாம் யார் என்பதைக் காட்டிக் கொடுக்கும் கண்ணாடி எது தெரியுமா? நாம் பேசும் வார்த்தைகள் தாம்.

வார்த்தைகள் எப்போதுமே நமக்கு எஜமானர்களாக இருக்கக் கூடாது. நாம்தான் வார்த்தைகளுக்கு எஜமானாக இருக்க வேண்டும்.

ஒருவரை மேதையாக்குவதும் வார்த் தைகள் தாம். முட்டாளாக்குவதும் வார்த்தைகள் தாம்.

**இனிய உளவாக இன்னாத கூறல்**

**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று**

என்றான் வள்ளுவன். கனி இருக்க யாராவது காயை விரும்புவார்களா? அதைப் போலத் தான் ஒரு மொழியில் நல்ல நல்ல சொற்கள் இருக்க பயனற்ற சொற்களைப் பயன்படுத்து வதா? என்கிறான் வள்ளுவன்.

கூடுமானவரையில் நல்ல வார்த்தைகளை நாம் தேர்ந்தெடுத்து பயன்படுத்தினால், அது நமக்கும் பயன் விளைவிக்கும். நம் வார்த்தைகளால் மற்றவர்க்கும் நன்மை கிடைக்கும்.

வார்த்தைகளைப் பயன்படுத்துவதில் சிக்கனம் மிகவும் அவசியம். வாழ்க்கையில் சிக்கனம் நம்மை உயர்த்தும். அதைப் போலத் தான் வார்த்தைச் சிக்கனமும் நம் மீதான மதிப்பை மேன்மையுறச் செய்யும்.

பிறகு ஏன் வார்த்தைகளை நம்மையும் அறியாமல் கொட்டி விடுகிறோம் என்றால் உணர்ச்சிக்கு அடிமையாவதுதான் காரணம். ஆகவே உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. அங்கே அறிவுக்கு வேலை கொடுத்தால், வார்த்தைகள் நம்மை மீறி வரவே வராது.

பாலைத் தரையில் கொட்டினாலும் அள்ளி விடலாம். ஆனால் வார்த்தைகளைக் கொட்டினால் அள்ள முடியுமா? முடியாது.

அவசரத்தில் சில நேரங்களில் வார்த்தைகளை நாம் கொட்டி விடுகிறோம். பிறகு நிதானமாகச் சிந்தித்துப் பார்க்கும்போது நாம் ஏன் அவரசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டி விட்டோம் என்று நினைத்து வருந்துகிறோம்.

வருத்தம் நமக்கு மட்டுமல்ல, நமது வார்த்தைகளால் தாக்கப்பட்டவருக்கும் வருத்தம். இது தேவைதானா? என்பதை அவ்வப்போது மனதுக்குள் நாம் அசை போட்டுக் கொண்டால், ஒரு முறை செய்யும் தவறை, மறுமுறை செய்ய மாட்டோம்.

எனக்குத் தெரிந்த ஒரு சில குடும்பங்களில் கணவன் – மனைவி பிரிவுக்கு அவர்கள் பயன்படுத்திய வார்த்தைகளே காரணமாகி இருக்கின்றன.

மற்றவர்கள் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்க மாட்டேன் என்றால் அங்கே நியாயங்களுக்கு இடமிருக்காது. பிறர் சொல்வதையும் நாம் காது கொடுத்துக் கேட்க வேண்டும். அப்போது தானே அவர்கள் சொல்லுகிற கருத்து என்ன என்பதை நம்மால் அறிந்துக் கொள்ள முடியும். இல்லை நான் சொல்வதை மட்டுமே கேள் என்றால் அங்கே ஒரு தெளிவான முடிவு பிறக்காது.

எந்தவொரு முடிவுமே கூடி விவாதித்த பிறகு எடுக்கப்பட்டால்தான் நல்ல முடிவாக இருக்க முடியும். நாட்டுக்குத் திட்டம் போடும் போது தான், கூடி விவாதித்து முடிவெடுக்க வேண்டும் என்பதில்லை. வீட்டுக்கும் அது பொருந்தும்.

ஒவ்வொருவருக்கும் ஒரு கருத்து இருக்கலாம். தப்பில்லை. ஆனால் ஒருவர் சொல்கிற கருத்து பெரும்பான்மையோரின் கருத்துக்கு ஏற்புடையதாக இருக்கிறதா என்பதைத்தான் பார்க்க வேண்டும். அந்தக் கருத்தைத் தான் நடைமுறைப்படுத்த வேண்டும். அதுதான் சிறந்த முடிவாக இருக்க முடியும்.

குடும்பத்தில் கணவன்–மனைவி இடையே விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவம் இருக்க வேண்டும். முரட்டுப் பிடிவாதம் குடும்பத்தைத் தரை தட்டிய கப்பலாக்கி விடும். ஆகவே நாம் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையையும் அறிந்து, புரிந்து பேச வேண்டும். வார்த்தைகள் இருக்கிறதே என்று கொட்டி விடக் கூடாது.

மார்க்கெட்டுக்குப் போகிறோம். காய்கறிகளை வாங்கும்போது, எவ்வளவு அக்கறையோடு ஒவ்வொன்றாகத் தேர்ந்தெடுத்து வாங்குகிறோம். கடைக்காரன் போடுவதையெல்லாம் அப்படியே வீட்டுக்கு எடுத்து வந்து விடுவதில்லை. சாதாரண காய்கறிகளுக்கே இவ்வளவு பெரிய அக்கறையைச் செலுத்தும் நாம், நமது வாழ்க்கையை, எதிர்காலத்தை நிர்ணயிக்கிற நம் மீதான மதிப்பையும் மரியாதையையும் காப்பாற்றிக் கொள்வதற்கு நாம் எவ்வளவு எச்சரிக்கையாக வார்த்தைகளைப் பயன்படுத்தவேண்டும் என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டாமா?

தென்றலும் காற்று தான். புயலும் காற்று தான். ஆனால் இரண்டுக்கும் வித்தியாசம் இருக் கிறது. தென்றல் நம்மை வருடும் போது ஆனந்தமாக இருக்கிறது. புயல் அடிக்கும் போது அதன் முன் எதுவும் நிற்பதில்லை. அடித்துச் செல்லப்பட்டு விடுகிறது.

அப்படியானால் நமக்குத் தேவை யானது தென்றலா, புயலா?

நாம் சொல்லும் வார்த்தைகள் பிறரைத் தென்றலாக வருட வேண்டும். புயலாகத் தாக் கக் கூடாது. நம் நாவில் இருந்து விழும் வார்த் தைகள் பூமாரி பொழிவது போல் இருக்க வேண் டும். மற்றவர்களைப் பொசுக்கி விடுவது போல நெருப்புத் துண்டுகளாக வந்து விழக் கூடாது.

இந்தச் சமுதாயத்தில் நல்லவர்களும், கெட்டவர்களும் நிறைந்திருப்பது போல ஒரே மொழியில் தான் நல்ல வார்த்தைகளும், தீய வார்த்தைகளும் பொதிந்து கிடக்கின்றன. வாழ்க் கையில் நல்லவர்களைத் தேர்ந்தெடுத்து நாம் பழகுவது போல, நாம் பேசும் மொழியிலும் நல்ல வார்த்தைகளையே தேர்ந்தெடுத்துப் பேசுவோம்.

**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை நாடி இனிய சொன்.**

நல்லதை நினைத்து இனிய சொற் களையே நாம் பயன்படுத்துவோமானால், தீயவை மறைந்து அங்கு நன்மையே பெருகும்.

ஆகவே நாம் பேசும் வார்த்தைகளால் உயர்வோம். வார்த்தைகள் நம்மை உயர்த் தட்டும். வாழ்த்துகள் குவியட்டும்.

**வசந்தி ஈஸ்வரப்பன்**

பெண்மணி இதழ் - 2008

- *'பண்பாட்டு வளர்ச்சியில் மொழியின் பங்கு' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்த உரை தயார் செய்க.*

# மொழியும் சமூகமும்

## மொழி நம் சொத்து

உயர்தனிச்செம் மொழியென்றே, உலகோர் போற்ற
உன்னதமா மொழிகளுக்குத் தலைமை ஏற்ற
இயசைகூத் தென்னும்முத் தமிழாய் வாய்த்தே
எக்காலம் தோன்றியதென் றறிய வொண்ணா
வியத்தகுமா வளம்நிறைந்த இலக்கி யங்கள்
விதவிதமாய் இலக்கணங்கள் காப்பி யங்கள்
நயமுள்ள தொகைவகைநூல் தொடர்ந்து மேலும்
நாடொறும் வளர்கின்ற மொழிநம் சொத்து!

யாதும்ஊர் யாவருமே கேளிர் என்றும்
யாமார்க்கும் குடியல்லோம் அஞ்சோம் என்றும்
நாதனவன் யாவர்க்கும் ஒருவன் என்றும்
நட்பதுவே சிறப்பான உறவாம் என்றும்
நீதிகற்பு இருபாலார் ஒழுக்கம் என்றும்
நிலையான உலகத்தின் பொதுக்க ருத்தை
ஓதிவைத்த உயர்தமிழை உயிராய்ப் போற்றி
உலகத்தை ஒழுக்கத்தால் உயர்த்து வோமே!

உள்ளபல சொத்தெல்லாம் ஒழியும் தன்மை!
ஒருவனுற்ற கல்வியொன்றே ஒழியாச் செல்வத்
தெள்ளுதமிழ்த் தாய்முலைப்பால் உண்ட மக்கள்
தேவையில்லை எனத்தாயை ஒதுக்கல் வெட்கம்!
தள்ளிவைக்கும் தனையரையும் விரும்பும் தாயாய்
தமிழுள்ளாள்! அவள்பெற்ற மக்கள் என்று
சொல்வதற்கும் தயங்குவோர்க்குச் 'சொரணை' ஏற்று
சொந்தத் தாய் மணிக்கொடியைத் தூக்குவோமே!

**– கவிமுரசு பூவை அமுதன்**

- *மொழி நம் சொத்து என்னும் கவிதையை வாசித்து **மொழியும் சமூகமும்** என்னும் தலைப்பில் சொற்பொழிவுக் குறிப்பு எழுதுக.*

### உம்மைத்தொகை

காய்கனி, கபிலபரணர், சேர சோழ பாண்டியர்

இவ்வெடுத்துக்காட்டுகளை விரித்துப் பொருள் கொண்டால் காயும் கனியும், கபிலரும் பரணரும், சேரரும் சோழரும் பாண்டியரும் எனப் பொருள் தரும். இச்சொற்களில் உம் என்னும் இடைச் சொல் மறைந்து(தொக்கி) வருகிறது. இவ்வாறு வரும் தொகைச் சொற்களை உம்மைத்தொகை என்பர்.

- *பாடப்பகுதியில் இடம்பெறும் உம்மைத்தொகைச் சொற்களைத் திரட்டித் தருக.*

## வண்ணம் தந்த எண்ணங்கள்

சமீபத்தில் என் நண்பன் ஒருவனின் மகனுக்குப் பெண் பார்க்க நானும் சென்றிருந் தேன். பெண்ணைப் பார்த்தோம். நல்ல நிறம்; நல்ல அழகு; நல்ல படிப்பு. ஐந்து நிமிடம் பேசிய திருந்தே நல்ல குணமுடையவளாகத் தான் இருப்பாள் என்பதையும் புரிந்துகொண்டோம். இருபதினாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிற வள் என்றாலும் அவளது பேச்சிலும் நடத்தையி லும் அடக்கமும் ஒடுக்கமும் தெரிந்தன. வந்தி ருந்தவர்களில் ஒருத்தர் ஆண் பெண் நட்சத் திரங்களை ஒத்துப்பார்த்து அடிப்படையில் பொருத்தம் இருப்பதாகவும் கூறினார். சஜ்ஜி, பஜ்ஜி, சொஜ்ஜி, ஜிலேபி எல்லாம் சாப்பிட்டு விட்டு, வீட்டுக்குப் போய் பிறருடன் கலந்தா லோசித்து உடனே பதில் சொல்கிறோம் என்று கூறிவிட்டு வீடு திரும்பினோம். சில நிமிட நேரம் எல்லோரும் மௌனமாகவே இருந்தார் கள். திடீரென நண்பரின் மனைவி, ''ஏங்க, பொண்ணு நல்லாத்தான் இருக்கா, நல்ல வேலையும் இருக்கு, ஆனா நல்ல வண்ணம்!'' என்று பேசத்தொடங்கினாள். எல்லோருக்கும் அந்த கருத்து சரியாகவே பட்டது. வண்ணம் என்பதற்கு முதல் எனக்குப் பொருள் புரிய வில்லை. தடித்த உடல்வாகு அல்லது பருமன் என்பதைத்தான் அவ்வாறு குறிப்பிட்டார்கள் என்பதைப் பின்னர் தெரிந்து கொண்டேன். அப்போது வண்ணத்தைப் பற்றிய சில எண்ணங்கள் எனக்குள் எழுந்தன.

'நீல வண்ண கண்ணா வாடா' என்ற பாட லடி முதல் நினைவுக்கு வந்தது. இங்கே வண் ணம் என்பது நிறத்தைக் குறிக்கின்றது.

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருமழிசையாழ்வாரின்,

**''கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி**
**மணிவண்ணா நீகிடக்க வேண்டா''**

எனத் தொடங்கும் பாடலை யாவரும் அறிவர். இங்கும் மணிவண்ணன் என்பது 'நீலமணி போன்ற நிறம் கொண்டவன்' என்ற பொருளில் வந்துள்ளது. 'வீட்டுக்கு வண்ணம் பூசவேண்டும்' என்று சொல்வதுண்டு. இங்கு வண்ணம் என்பது பல்வேறு நிறங்களைத்தரும் சாயம் என்ற பொருளில் அமைகின்றது. பல்வேறு நிறங் களைக் கொண்ட பூச்சியை 'வண்ணத்துப்பூச்சி' என்றுதானே சொல்கின்றோம்! வர்ணம் என்ற வடமொழிச் சொல்ன் தமிழாக்கம்தான் வண்ணம் என்ற சொல்லா என்பது சிந்தனைக் குரியது.

**"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை**
**கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்**
**பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை**
**இருந்ததே"**

என்ற பாடல் சைவர்கள் திருமணங்களின்போது மகிழ்ச்சியுடன் பாடும் ஒரு பாடல். பெண் ணொரு பாகனாய் இருக்கும் இறைவனைச் சுட்டிக்காட்டி, இந்த உலகத்தில் நல்லபடி வாழமுடியும் என்ற ஆர்வத்தை ஊட்டி, பிறகு நல்ல கதி அடைவதற்கு எவ்வகையான குறையும் இல்லை என்று நம்பிக்கையை அளிக்கும் பாடல் இது. இங்கு நல்லவண்ணம் என்னும் சொற்றொடர் 'நல்லபடியாக' என்ற பொருளில் அமைகின்றது. வண்ணம் 'படி' என்னும் துணைவினையின் பொருளைப் பெறுகின்றது.

**"தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து"**

என்னும் குறட்பாவிலும் (561) வண்ணம் என்பது 'படி'(செல்லா வண்ணம் – செல்லாதபடி) என்னும் பொருளில் வருகின்றது.

திருமண அழைப்பிதழ்களில் இறுதி யாக, 'இவ்வண்ணம்', 'அவ்வண்ணம்' என அச் சிட்டு, அழைப்போரின் பெயரையும் முகவரி யையும் கொடுத்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள். இங்கு இப்படிக்கு, அப்படிக்கு என்ற பொருளில் அல்லது இவ்வாறு, அவ்வாறு என்ற பொருளில், இவ்வண்ணமும் அவ்வண்ணமும் வருகின்றன.

'ஒரு முன்மாதிரியாகக் கொள்ளும் வண் ணம் அவரது வாழ்க்கை அமைந்துள்ளது,' 'ஒவ்வொருவரும் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்ற வண்ணம் நடந்துகொண்டனர்'. 'பிறருக்குத் தெரி யாதவண்ணம் காரியத்தை முடித்து விட்டான்' என்றெல்லாம் சாதாரணப் பேச்சுவழக்கில் சொல்லக் கேட்டிருக்கிறோம். இங்கெல்லாம், 'முறையில்' அல்லது 'வகையில்' என்ற பொரு ளில் வண்ணம் வந்துள்ளது.

வாழ்த்துச் செய்திகள் வந்தவண்ணம் உள்ளன, அவன் நேற்று மாலையிருந்து தூங்கியவண்ணம் இருக்கிறான், கோடைக் காலத்தில் தண்ணீரைக் குடித்தவண்ணம் இருக் கிறோம். இவையும் அவ்வப்போது நாம் கேட்ப வைதாம். இங்கு வண்ணம் 'மிகுதி' என்ற பொரு ளைத் தருகின்றது. மேலும் 'வாறு', 'கொண்டே' (வந்தவாறு, தூங்கியவாறு, குடித்தவாறு, வந்து கொண்டே, தூங்கிக்கொண்டே) என்ற பொருளி லும் வருகின்றது.

இவ்வாறெல்லாம் வண்ணத்தின் பொரு ளைச் சொல்யவண்ணம் இருக்கலாம். ஆனா லும் கம்பனின் மிகச் சிறந்த ஒரு பாடலோடு இதை நிறைவு செய்வோம்.

**''இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனி இந்த உலகுக்கு எல்லாம்**

**உய்வண்ணம் அன்றிமற்று ஓர்துயர் வண்ணம் உறுவதுண்டோ**

**மைவண்ணத்து அரக்கிபோரில் மழைவண்ணத்து அண்ணலே உன்**

**கைவண்ணம் அங்குக் கண்டேன் கால்வண்ணம் இங்குக் கண்டேன்'' (481)**

என்பது அப்பாடல். ''அகலிகை கல்லுருவத் தைப் பெற்ற நிகழ்ச்சி இவ்வாறு நடந்தது. நீ அவதரித்த பின்னர், இவ்வுலகத்தில் தோன்றிய எல்லா உயிர்களும் துன்பத்திருந்து விடுதலை பெறுவதன்றி, துன்பமடைவது என்பது உள்ளதா குமோ? ஆகாது. மேகத்தின் கரிய நிறத்தைப் பெற்ற இராமனே! மைபோன்ற கருநிறத்து அரக்கியாகிய தாடகையுடன் நீ போரிட்ட அவ் விடத்தில் உன் கைத் திறமையைப் பார்த்தேன். இவ்விடத்தில் உன் கான் திறமையைப் பார்த் தேன்" என்பது இப்பாடல் பொருள். கைவண் ணம் என்பதற்குக் கையின் ஆற்றல் அல்லது வீரம் என்று பொருள் கொள்ளலாம். கால்வண் ணம் என்பதற்குக் கான் திறன், பெருமை, புனிதத்தன்மை என்றெல்லாம் பொருள் கொள் ளலாம். இந்த இடத்தில் வண்ணம் என்பதற்கு 'பருமன்' என்று பொருள் கொண்டாலோ? சிரிப்புத்தான் வரும். வண்ணத்தின் எல்லாச் சூழ் நிலைப் பொருளையும் வெளிப்படுத்தும் வண்ணம் கம்பர் அச்சொல்லைப் பயன்படுத்தி யிருப்பது படித்து இன்புறத்தக்கது. கம்பனின் மொழித்திறனை எடுத்துக்காட்டும் வண்ணம் இப்பாடல் அமைகின்றது. இது போன்ற எண் ணற்ற சொற்கள் இலக்கியங்களில் காணப்படு வது தமிழ் மொழிக்கு மேலும் மெருகூட்டுகிறது.

**– கேரளத்தமிழ் (2006)**

- *'வண்ணம்' எனும் சொல்லைப் போன்று இலக்கியங்களில் காணப்படும் பொருள் மாற்றத்திற்குக் காரணமான சொற்களைத் திரட்டி, ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் குறுங்கட்டுரை தயாரிக்க.*

## எதிரெதிர் குணங்கள்

(ஒரு சனிக்கிழமையின் சாயங்காலம்

அன்னூர் பஸ் ஸ்டாண்ட்)

அன்றைக்குச் சந்தை நாள் என்பதால் ஏகப்பட்ட கூட்டம் கோவை காந்திபுரத்திருந்து வந்து நின்ற 45-சி பஸ்ஸிருந்து பயணிகள் முட்டி மோதி இறங்கிக் கொண்டிருந்தனர். அவர்களோடு போட்டி போட்டுக் கொண்டு ரொம்பவும் பிரயத்தனப்பட்டு, பஸ்ஸுக்குள் ஏறுகிற பயணிகளைக் கண்டக்டர் கன்னாபின் னாவென்று திட்டிக் கொண்டிருந்தார்.

ஏய்யா... பஸ்ஸுக்குள்ளெ இருக்குற வங்க எறங்குன பொறுகுதான் ஏறித் தொலைங் களே...! இப்பிடி அடிச்சுப் புடிச்சு உள்ளெ ஏறு னா... உங்களுக்கு என்ன தங்கப்பதக்கமா பரிசு குடுக்கப்போறாங்க...?

...மைக் வெச்சுட்டுக் கத்துனாக்கூட இப்ப இருக்குற அவசரத்துல இவுக காதுகல்லெ விழாது. பெரிசு, சிறுசு எல்லாமே சரியாத்தான் இருக்குது, அங்கெ பாரு... பஸ் சீட்ல உட்கார எடம் பிடிக்கப் படுகிற பதட்டத்தை..

ம்.. ஹூம்...! இன்னமும் பத்து வண்டி போட்டாக் கூட இவுங்களுக்குப் பத்தாது....

இது தவிர பஸ்ஸின் இரண்டு பக்கத்து ஜன்னல்களின் வழியாகப் பைகளையும், தோளில் போட்டிருந்த துண்டுகளையும் உள்ளே வைத்துத் தங்களின் இருக்கைகளை அட்வான்ஸ் புக்கிங் பண்ணிக் கொண்டிருக்கிற அன்பர்களும் நிறையப்பேர்.

இந்தக் கூட்டமெல்லாம் ஒரு வழியாக

ஏறி முடிக்கட்டும். கடைசியாக கொஞ்சம் நிற்ப தற்கு மட்டும் இடம் கிடைத்தாலும் கூடப் போதும்; பிறகு ஏறிக்கலாம் என நான் இன்னும் பஸ் ஸ்டாண்டிலேயே நின்று கொண்டிருந்தேன்.

ஏனுங்க... சார்! டைம் என்ன ஆச்சு...?

ஆறு, இருபது ஆச்சுங்க...

அப்ப... இன்னும் கால் மணி நேரமாகும். இந்தப் பஸ் பொறப்படுறதுக்கு...

சிகரெட்டைப் பற்ற வைத்தபடி கண்டக்டர்....

எல்லாரும் சில்லறையா வச்சுக்குங்க, பஸ்ல ஏறிட்டு சில்லறையில்லைன்னு நோட்டைக் குடுத்தீங்கின்னா.... அப்புறம் நடுவழியிலே தயவு தாட்சண்யம் எதும் பார்க்காம எறக்கி வுட்டுருவேன். மனசிலெ வெச்சுக்குங்க... என்று சொல்க் கொண்டிருந்தார்.

பஸ்ஸில் இன்னமும் சீட்டில் இடம் பிடிப்பதற்கும், நிற்பதற்கும் பயணிகளுக்குள் ஆர்ப்பரிப்பும் ஓய்ந்தபாடில்லை. நான் உள்ளே நுழைந்து நின்று கொண்டேன்.

மத்தியானம் மானம் இருந்த வெக்கையைப் பார்த்தீங்களா...? பொசுக்கிப்போட்டுது, ராத்திரிக்குக் கண்டுஷனா மழை வருமுங்க...

வருட்டும்! ஆரு வேண்டாமுங்குறாங்க.

போனவாட்டி நா அன்னூர் சந்தைக்கு வந்தப்பொ ஒண்ணே கால் ரூபா டிக்கிட்டு. இப்பொ ஒண்ணரை ரூபா ஆயிப்போச்சு வெலவாசி போற போக்கெப் பாருங்க...

எனுங்க... இது கோயமுத்தூருக்கு எத்தினி மணிக்குப் போயிச் சேருமுங்க...?

என்னுங்க... வெலவாசிங்களா...-

அட நீங்க டமாஷ் பண்றீங்க நா இந்தப் பஸ்ஸெக் கேட்டனுங்க...

அதெல்லாம் கரெக்டா சொல்ல முடியாதுங்க. எப்படியும் எட்டு எட்டரைக்கு மேல ஆகிடும்..

கையில் இரண்டு பைகள் சகிதம் சௌகரியமாய் இடம்பிடித்து வெற்றிலை மென்று கொண்டு இரண்டு பெருசுகள் நாட்டு நிலைமையை அலசிக் கொண்டிருந்தன.

எனக்கும் இரண்டு சீட்டுகளுக்கு முன்னதாக ஒரு சச்சரவு வேறு கிளம்பிக் கொண்டிருந்தது.

எந்திரின்னா எந்திரி. அதுதா மரியாதை எவ்வளவு பாடுபட்டு நா இந்தச் சீட்டுல துண்டைப் போட்டு வெச்சிட்டு உள்ளெ வந்திருக்கிறேன். நீ உம்பாட்டுக்குச் சாவுகாசமா வந்து



துண்டெ எடுத்துட்டு எடம்புடிச்சு உக்கார்றயெ... நா ஏமாளியா...?

பெரியவருக்கு வயது அறுபதைத் தாண்டியிருக்கும். குரலை உயர்த்திச் சத்தம் போட்டார்.

அய்யா வீணாக் கத்தாதே. இந்தச் சீட்டு உம்பேருக்கு என்ன ரெஜிஸ்டரா பண்ணியிருக்கு? கம்முனு அடுத்து சீட்டுல உக்காரு இல்லீனா உன்ர சௌகரியப்படி நின்னுக்க...

இது முப்பதுக்குள் வயது மதிக்கும்படியான இளைஞர் ஒருவனின் எதிர் வீச்சு.

அவன் சீட்டில் உட்கார்ந்து கொண்டு இப்படிச் சொன்னதைக் கேட்ட பெரியவருக்கு கோபம் முட்டிக் கொண்டு விட்டது. துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு...

ரெண்டெழுத்துப் படிச்சிட்டானுகனா பெரிய திமிருக. இல்லாத சட்ட விட்டமெல்லாம் பேசறது. இப்படி ஜம்பமா உட்கார ரோசனை இருக்குறவன் கஷ்டப்பட்டுத்தா எடம் புடிக்கோணும். பெரிய தொரை கணக்கா வந்ததீமே, எவனாச்சும் எடம் புடிச்சு வெச்சிருந்தான்னா வசதியா உக்காந்துக்குவானுக.. என்றார்.

ய்யோவ்... வார்த்தையெ அளந்து பேசு. அவனிவன்னு மரியாதெ கெட்டதனமா பேசுனீனா அப்பறம் நெறையா வாங்கிக் கட்டிக்குவே...

நீதா... இப்ப என்ன பண்ண வேணுங்கறே..? சொல்லு.

நீதா என்ன பண்ண வேணுங்கறே...?

இருவருக்கும் சுதி அதிகமாகிக் கொண்டுதானிருந்தது.

சரி.... ஏறியாச்சு இனி ஊரு போய்ச் சேருவோம்னு ரெண்டு பேரும் கம்முனு இருங்களே, கை வெச்சு அடிச்சுக்குவீங்க போல இருக்கு...

சிலர் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர்.

... இல்லீங்க. இவ ஏறுனவன் என்ர துண்டெ ஏனுங்க அக்கட்டால எடுத்து எறிஞ்சுட்டு உக்கார்றானாமா...?

ய்யோவ்.. அப்பவே சொல்லீட்டே... அவனிவன்னு பேசாதே.. இறுக்கிக் கட்டீட்டு இரு...

ஆமா... நா கட்டறதுக்குத் துணியில்லாம நிக்கறே. நீ வேட்டி எடுத்துட்டு வந்து குடு. கட்டிக்கிறேன்...

பெரியவரே... நீங்க கொஞ்சம் அந்தப் பேச்சே வுட்டுத் தொலைச்சுட்டு அதோ முன்னால சீட்டுல எடம் இருக்குது போயி உட்காருங்க...

இப்படிச் சொல் அவரைப் பிடித்து உட்கார வைத்துவிட்டு என்னைப்பார்த்து...

இனியாவது சண்டை ஓயட்டும் இல்லீனா... இன்னிக்குப் பஸ் பொறப்படுறதுக்கு ராத்திரியாயிடும் என்றார் பயணி ஒருத்தர்.

முன்பகுதியில் டிக்கெட் கொடுத்து முடித்து விட்டுப் பின்புறப் பகுதிக்கு வந்த கண்டக்டர் விசில் அடித்ததும் பஸ் புறப்பட்டது.

அன்னூரைக் கடந்து ஒரு பர்லாங் தாண்டியிருக்கும்.

போச்சாதுன்னு கம்முனு இருந்துட்டேன். வேற எவனாச்சுமா இருந்தா, இவுனுகளெத் தூக்கி வெளியே வீசிட்டில்லெ மறுஜோ பார்த்திருப்பான். பெரியவர் ஆரம்பித்தார்.

அய்யோவ்... தூக்கி விசுறுதுன்னா உன்னெ வெகு நேரத்துலயே நாந்தூக்கி வீசியிருப்பேன். பாவம் வயிசானவராச்சேன்று பொறுத்திட்டிருந்தா நீ மறுபடியும் சீண்டிட்டே இருக்குறே...

உன்னைய எவண்டா சீண்டுனான்? உன்ரெ வாயைக் கட்டீட்டு கெட.

உன்ரெ வாயெ நீ இறுக்கிக் கட்டிட்டு உக்காரய்யா...

நா என்ர வாய்லெ பேசுவேன் சும்மா இருப்பேன். அது என்ர இஷ்டம். நீயார்ரா அதெல்லாம் கேக்கறதுக்கு...?

பின்னெ ஏ தொணதொணன்னு என்னைச் சண்டைக்கு இழுக்கிறே?

ஆமா நாந்தா வந்து இழுத்தே?

ய்யோவ், கேணத்தனமா கத்திட்டே இருந்தீனா இனி மரியாதை கெட்டுப் போயிரும் சொல்லீட்டேன். போவுட்டும்னு அமைதியா இருந்தா ஒரேயடியா ஏறிக்கிட்டே இருக்கிறயே...

பயணிகளில் முக்கால் பகுதிப் பேருக்கு இவர்களின் இந்தச் சச்சரவு, எதில் போய் முடியுமோ எனும் ஐயத்தில் உச்சக்கட்டத்தில் இருந்தது.

இவர்களைச் சமாதானப்படுத்துவது சற்றுக் கடினமான காரியமாகவே எனக்கும் தோணியதால், மேற்கொண்டு நடப்பதைக் கவனித்துக் கொண்டு மட்டுமே இருந்தேன்.

டிக்கெட்டைக் கொடுத்து முடித்துவிட்டு ஏனுங்க.. உங்க ரெண்டு பேருக்கும் இன்னமும் சண்டை ஓயலையா..? என்று கேட்டுக் கொண்டு என்ட்ரி போடுவதில் ஈடுபட்டிருந்தார் கண்டக்டர்.

பஸ்ஸிருந்த எல்லோருமே அந்த இரண்டு நபர்களையும் வெறுப்போடு பார்க்கிற படி நிலைமை இருந்தது.

கோவில்பாளையம் எறங்குற டிக்கெட்டுக இருக்கா...?

நிறுத்துங்க.... நிறுத்துங்க...!

அதுவரை பாதித்தூக்கத்தில் இருந்து, சட்டென்று விழித்ததுபோல் மூன்று பேர் கூடைகளையும், பைகளையும் எடுத்துக்கொண்டு, பஸ்ஸை விட்டு இறங்கினர்.

இப்போது...

பெரியவரும் அந்த இளைஞனும் பிரம்மை பிடித்தவர்களைப் போல் உட்கார்ந்து கொண்டிருந்தனர். ஒருவழியாய் இவர்களின் வாதப் பிரதிவாதங்கள் முடிந்து விட்டன என்கிற எண்ணத்தில் மற்றவர்கள் இருந்தனர்.

சரவணம்பட்டியை, பஸ் நெருங்கிக் கொண்டிருந்தது. பெரியவர் தன் இருக்கையிருந்து பின்பக்கம் திரும்பி கலங்கிய கண்களோடு அந்த இளைஞனிடத்தில் என்னவோ சொல்லுவதுபோல் எனக்குக் கேட்டது.

அதை ஊன்றிச் செவி மடுத்தேன்.

இரண்டொரு நிமிட மௌனத்திற்குப் பிறகு அவர் அவனிடம்...

தம்பீ... நாஞ் சொல்றதை கவனத்துல நல்லா நீ வெச்சுக்க. சிறு வயிசு உனக்கு. இன்னமும் எத்தனையோ காலம் பொழைக்கப் போறவன். இப்படி வீண் வார்த்தைகளை வீசி, பெருஞ் சண்டைகள்ல மாட்டிக்காதே..!

இது நா வரைக்கும் நாம்பெத்த பசங்ககூட என்னெ இப்படி எடுத்தெறிஞ்சு கீழ்த்தரமாப் பேசுனது கெடையாது நீயும் என்ர மகனைப் போலன்னு நெனச்சுக்க...

அவர் இறங்க வேண்டிய ஸ்டாப் வந்து விட்டதால் அவனுடைய கைகளைப் பற்றி இப்படிச் சொல்விட்டு சீட்டிருந்து எழுந்து போனார்.

சரி... சரி... பரவாயில்லை. போங்க பெரியவரே...! உங்களெ எங்க அப்பாவைப் போலன்னு நெனைச்சுக்கறேன்.. அவன் கூறிய விதத்தில் மனசுக்குள்ளிருந்து அழுத்தமும் வருத்தமும் ஒருசேர வெளியே ததும்பத் தயராயிருந்ததை உணர்ந்தேன்.

இந்த யோசனையும், அனுசரிப்பும் பயணத்தின் துவக்கத்திலேயே இவர்களுக்கு இருந்திருந்தால் இப்படிக் கடைசியில் ஒரேயடியாய்க் கலங்கவும் வேண்டாம். வீணாகச் சஞ்சலப் படவும் வேண்டாம் என எண்ணியபடி இவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

**-சூரியகாந்தன்**

- *'மொழி பண்பாட்டையும் சமூகத்தையும் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடி' என்னும் கருத்து இக்கதையில் எவ்வாறு வெளிப்படுகிறது? திறனாய்வு செய்க.*
- *அன்றாடம் நீங்கள் பயன்படுத்தும் வட்டார வழக்குச் சொற்களைக் கண்டறிந்து பட்டியலிடுக.*

# மொழியின் எதிர்காலம்

## குடிபெயர்ந்த தமிழரிடையே தாய்மொழிப் பயன்பாடு

தமிழகத்திருந்து வெளியேறித் தென்னாசிய நாடுகள், தென்கிழக்காசிய நாடுகள், மேற்கத்தியத் தீவுகள், ஆப்பிரிக்க நாடுகள் அண்மைக்காலத்தில் மேல்நாடுகள் ஆகியவற்றில் குடியேறியுள்ள தமிழர்களது சரியான எண்ணிக்கை நமக்குக் கிட்டவில்லை. கிடைக்கின்ற சில எண்ணிக்கைகளிலும் முரண்பாடுகள் காணப்படுகின்றன. மக்கள் தொகையே சரிவரக் கிடைக்காத நிலையில் அவர்களது தாய்மொழிப் பயன்பாடு பற்றிய ஆய்வுகளையும் நாம் எதிர்பார்க்க முடியாது. கிடைக்கிற ஒரு சில தகவல்கள் குடிபெயர்ந்த தமிழர்களின் தாய்மொழிப் பயன்பாடு மிகவும் அருகிவருவதையோ முழுக்கவும் தாய்மொழியை இழந்து விட்ட நிலையையோதான் காட்டுகின்றன. தமிழகத்தில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் தெலுங்கர்கள், கன்னடர்கள், சௌராட்டிரர்கள் போன்ற சிறுபான்மைச் சமூகத்தினர் தங்களது தாய்மொழியை இன்னும் இழந்துவிடாமல் வீட்டு மொழியாகப் பயன்படுத்தி வரும்போது குடிபெயர்ந்த தமிழர்கள் தங்கள் தாய்மொழியை மிக விரைவாக இழப்பதற்குரிய காரணங்கள் சரிவர இனங் காணப்படவில்லை என்றே தோன்றுகிறது.

மொழி, நாடு, மதம் முதலானவை ஒரு இனம் தன்னை இனங்காட்டிக்கொள்வதற்குப் பயன்படுத்தும் அடையாளங்களாகக் கருதப்படுகின்றன. எனினும், இவற்றுள் மொழியே மிகப் பல இனங்களின் அடையாளமாகக் கொள்ளப் படுகிறது என்று ஜோனதன் பூல் குறிப்பிடுகிறார். கனடா நாட்டுச் சமுதாயங்களிடையே அவர் நடத்திய ஆய்வின் முடிவாக இதனைக் கண்டார். மாக்ஸ்முல்லர், மொழியை மனித மனத்தின் சுய சரிதை என்று வர்ணித்தார். தேசியம் என்பதும் மொழித் தேசியம் என்பதும் ஒன்றே என்ற கிலெய்ப், தேசிய அடையாளத்திருந்து மொழியை எப்போதும் பிரிக்க முடியாது என்கிறார். மனிதன் தன்னுடைய மனித அடையாளத்தை நிறுவிக்கொள்ள மொழி அவசியம் தேவை என்கிறார் லெபர்மான். ஏகாதிபத்திய நாடுகள் மற்றொரு நாட்டை உருக்குலைக்க முயன்ற போதெல்லாம் அவை மேற்கொண்ட முதல் தாக்குதலும் இறுதித் தாக்குதலும் மொழியின் மேல்தான். மொழியை வென்றுவிட்டால் அது அனைத்தையும் வென்ற மாதிரிதான் என்கிறார் பாபி ஜோன்ஸ். உரிமை இழந்த நாடுகள் தேசிய ஒற்றுமையைத் தூண்டுவதற்குப் பயன்படுத்திய ஆயுதம் மொழியே என்றும் சமூக மொழியியலார் குறிப்பிடுவர்.

இம்முடிவுகளெல்லாம் குடிபெயர்ந்த மக்களுக்குப் பொருந்துமா என்பதைப் பல சமூக மொழியியலார் ஆராய்ந்துள்ளனர். பல நேரங்களில் அத்தகைய சமூகத்தினர் தங்கள் மொழியை அடியோடு இழந்து விடுவதையோ, அல்லது ஏதாவது ஒரு தேவைக்கு மட்டும் பயன்படுத்துவதையோ கண்டுள்ளனர். பல ஐரோப்பிய நாடுகளிருந்து குடிபெயர்ந்து இஸ்ரேல் நாட்டுக்குக் குடியேறிய யூதர்களது தாய்மொழிப் பயன்பாட்டை ஆராய்ந்த ஹாஃப்மன், ஃபிஷர்மன் ஆகிய இருவரும் இதற்கான பல காரணங்களைத் தந்துள்ளனர். ஒரு நிலையான அரசும், ஹீப்ரு மொழியைக் கற்பதனால் விளைந்த பொருளாதார மேம்பாடு முதலானவையும் இக்குடியேறிகள் தங்களது தாய்மொழியை விரைவிலேயே இழப்பதற்குக் காரணமாயின. கடுமையான போட்டிகள் நிறைந்த ஒரு சமுதாயத்தில் நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு வேண்டிய சில தேவைகளும், தமது தாய்மொழியைக் கைவிட்டு ஹீப்ரு மொழியை மேற்கொள்வதற்குக் காரணமாயின. குடியேறியபோது இருந்த வயதும் ஒரு முக்கிய காரணமாகிறது. சோவியத் ரஷ்யாவில் குடியேற்றம் மற்றும் மொழி பற்றிய ஆய்வு நடத்திய லூயிஸ், சிறிய தேசியக் குழுக்கள் விரைவிலேயே தாய்மொழியை இழக்கக்கூடும் என்றும், கட்டாயக் குடிபெயர்வுகள் விரைவிலேயே மொழிப்பற்றை வீழ்த்திவிடும்

என்றும் குறிப்பிடுகின்றார். ஹாஃப்மனும், ஃபிஷர்மனும் நெருக்கமான குடியிருப்புகள் மாற்றத்தைத் தாமதிக்கலாம் என்கின்றனர். மேலும் பன்மொழியம், ஓர் இனம் தனது தாய் மொழியைத் தக்கவைத்துக் கொள்ளத்தக்க நல்ல சூழலல்ல என்றும் அவர்கள் கருது கின்றனர். நகர்ப்புறச் சூழலை விட கிராமப்புறச் சூழல் தாய்மொழி மற்றும் இனப்பற்றைக் காப்ப தற்குத் துணை செய்யவல்லது என்று லூயிஸ் கருதுகிறார்.

சமூக மொழியியலார் மேற்கண்ட ஆய்வு களிருந்து கீழ்க்காணும் முடிவுகளுக்கு வரு கின்றனர். ஓர் இனத்தின் அடையாளச் சின்னங்களில் மொழியே பெரிதும் போற்றப்ப டுகிறது. எனினும், ஓர் சமூகம் குடிபெயரும் போது அக்குடியேற்றம் தாய்மொழிப் பயன் பாட்டின் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்து கிறது. அந்நிலையில் தாய்மொழிப் பயன்பாடு குறைந்து அடியோடு இழக்கப்படுமானால் அவ் வினத்தின் அடையாளச் சின்னமும் மாறலாம். இக்கட்டுரை மொரீசியஸ்சுக்கு குடிபெயர்ந்து சென்ற தமிழர்களைப் பற்றி மட்டுமே பேசுகிறது.

மொரீசியஸ் தலைநகர்ப் பகுதியான போர்ட் லூயியை நிர்மாணித்தவர்கள் பாண்டிச் சேரிப் பகுதியிருந்து சென்ற கிறித்துவத் தமிழர்களே என்று நம்பப்படுகிறது. எனவே, தொடக்க காலத்திருந்தே கிறிஸ்துவர்கள் நகர்ப்புறவாசிகளாகவே இருந்துள்ளனர். இந்துத் தமிழர்களைவிட மிக விரைவில் இக்கிறித் துவத் தமிழர்கள் தங்கள் தாய்மொழியை இழந்த தற்கு இதுவே காரணமாகலாம்.

கிறித்துவத் தமிழர்கள் தங்களது தாய்மொ ழிப் பயன்பாட்டை விரைவாக இழந்தமைக்கு இன்னொரு காரணமும் கூறப்படுகிறது. மொரீ சியஸ் வரலாற்றின் ஒரு கால கட்டத்தில், கிறித் துவச் சடங்குகளின் வழியிலான திருமணங்கள் மட்டுமே பதிவு செய்யப்படுவதற்கு உரி யவையாக இருந்தன. இதனால் கட்டாய மத மாற்றம் நடைபெற வழி ஏற்பட்டது. இதே காலத்தில் இந்தியாவிருந்து மொரீசியசுக்குப் பெண்கள் குடியேறுவதில் சில தடைகள் இருந்தன. மிகக் குறைந்த பெண்களே குடியேற அனுமதிக்கப்பட்டனர். 1834-க்கும் 1840-க்கு மிடையே 25,000- க்கும் மேற்பட்ட இந்தியர் கள் மொரீசியசுக்குக் குடியேறினர். ஆனால் அவர்களுள் 901 பேர் மட்டுமே பெண்கள். திரு மணம் செய்ய விரும்பிய இந்திய ஆண்க ளுக்குத் தேவையான இந்தியப் பெண்கள் கிடைக்கவில்லை. இந்திய ஆண்கள், கறுப்பு இனப் பெண்களைத் திருமணம் செய்தனர். விளைவாக, முலாட்டோ எனப்படும் கலப்பினம் பெருகியது. கிறித்துவத் தமிழர்களும் இத்த கைய சமூக மாறுதலுக்கு உள்ளானார்கள். தமிழ் மொழியின் பயன்பாடு குறைவதற்கு இதுவும் ஒரு காரணமாயிற்று.

இந்துத் தமிழர்கள் அளவு மீறிய சமயப் பற்றாளர்கள். நூற்றுக்கணக்கான கோவில்க ளைக் கட்டியுள்ளனர். தீமிதி, காவடி போன்ற வற்றைப் பரந்த அளவில் கொண்டாடுகின்றனர். அத்தகைய சமயப்பற்றையே தமிழ்ப்பற்று என்று எண்ணுகின்றனர். மொழியை இழந் தாலும், சமயத்தை இழக்காததால் தாங்கள் மட்டுமே உண்மையான தமிழர்கள் என நம்பு



கின்றனர். இன அடையாளச் சின்னமாக, மொழி யைக் கைவிட்டுவிட்டு மதத்தையே இன்று அவ்விடத்தில் வைத்துப் போற்றுகின்றனர்.

கிறித்துவர்கள் தங்களது தாய்மொழி யைப் படிக்காததற்கு என்ன காரணம் இருக்க முடியுமென்று சஞ்சீவி துரைராஜ் என்னும் பாதியார் விளக்க முயல்கிறார். தொடக்கப்பள்ளி களில் மாணவர்கள் தங்களது சமயக்கல்வி அல்

லது தாய்மொழிக்கல்வி ஆகிய இரண்டில் ஒன்றை மட்டுமே தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டுமென்ற நிலையுள்ளது. சமயக்கல்வியைக் கற்பதற்கு வேறு வாய்ப்பு எதுவுமே இல்லாத காரணத்தால் கிறித்துவர்கள் வேறு வழியின்றித் தாய்மொழியைக் கற்க முடியாமல் போகிறது என்பது அவரது விளக்கம். கிறித்துவத் தமிழர்களும், மொழியை விட மதத்திற்கே முதடம் தருகிறார்கள் என்பதே உண்மை. இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. பள்ளிகளில் பயன்படுத்தப்படும் தமிழ்ப் பாட நூல்கள் அனைத்துமே இந்து மதக்கடவுள்களையும், திருவிழாக்களையும் பற்றி மட்டுமே பேசுகின்றன. மதச்சார்பின்மை என்பதற்கு அங்கு இடமில்லை. எனவே கிறித்துவத் தமிழரின் அத்தகைய பாடங்களைப் பயில்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. இரு மதத்தினருமே தங்களது மதத்தைக் காரணம் காட்டித் தாய்மொழிப் பயன்பாட்டைப் பெரிதும் குறைத்து விட்டனர்.

மொத்தத்தில் தமிழன் என்ற இனம் தனக்கென ஒரு அடையாளச்சின்னத்தை இழந்துவிட்டது. இந்திய-மொரீசிய கத்தோக்கக் கழகத்தின் கணிப்புப்படி அத்தீவில் சுமார் 20,000 கிறித்துவத் தமிழர்கள் உள்ளனர். இந்த எண்ணிக்கை சரியானதா என்பது தெரியவில்லை. சரியாக இருந்தாலும் எதிர்காலத்தில் ஒருபோதும் இவர்கள் பிற தமிழர்களோடு சேர்த்து எண்ணப்படப் போவதில்லை. தாய்மொழியைப் பயன்படுத்துவதில் காணப்பட்ட ஆர்வமின்மை, இன்று மொரீசியஸ் தமிழர்களை ஒன்றுசேர முடியாத இரு பிரிவுகளாகப் பிரித்துவிட்டது. இந்நிலை இந்துத் தமிழர்களிடையேயும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. தாய்மொழியை இழந்து, அதனிடத்தில் மதத்தை ஏற்றுக்கொண்ட இந்துத் தமிழர்கள், மொரீசியஸ் அரசு விதிகளுக்கேற்ப இந்துக்களேயன்றி தமிழர்கள் என்று கணக்கிடப்படப் போவதில்லை.

தாய்மொழிப் பயன்பாட்டை இழந்த மொரீசியஸ் தமிழர்கள் தங்களது தனித்தன்மையையும் மதத்தின் பெயரால் இழக்கத் தயாராக உள்ளனரா என்பதைக் காலம் மட்டுமே கணிக்க முடியும்.

தாய்மொழி தெரிந்திருந்தாலும் பிறர் முன்னிலையில் அதனைப் பயன்படுத்துவதற்குக் கூச்சப்படுகின்ற ஒரு விதமான தாழ்வு மனப்பான்மையும் இங்குள்ள தமிழரிடையே காணப்படுகிறது. தமிழ் கற்க வரும் தமிழ் மாணவர்கள், தமிழ்நாட்டில் இருக்கும் தாத்தாவுக்குத் தமிழில் இரண்டு வரி கடிதம் எழுதத் தெரிந்தால் போதும் என்ற அளவில் மட்டும் தான் தாய்மொழிப் பயன்பாட்டை மேற்கொள்ள விரும்புகின்றனர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடிமகனாக மாறவேண்டும் என்ற ஆர்வம் பலரிடமும் காணப்படுவதால் எங்களுக்கு எதற்குத் தமிழ் என்று எண்ணுகிற போக்கும் பல இளைய தலைமுறையினரிடம் காணப்படுகிறது. மற்ற நாடுகளைப் போலல்லாது இந்நாடு மிகவும் பரந்துபட்ட நாடாக இருப்பதனால் தமிழ்க்குடியேறிகளிடையே நெருக்கமான உறவும், தகவல் தொடர்பும் இல்லாமற் போனது ஒரு குறிப்பிடத்தக்க காரணமாகலாம்.

மொரீசியஸ் நாட்டுத் தமிழர்களுக்கும் இந்நாட்டுத் தமிழர்களுக்குமிடையே காணப்படும் ஒற்றுமை, மொழியை இழந்துவிட்டு அந்த இடத்தில் மதத்தை வைக்கின்ற போக்காகும். இந்நாட்டிலும் கோவில்கள் கட்டுவதற்குப் பல லட்சக்கணக்கான டாலர்கள் செலவழிக்கப்படுகின்றன. இந்து மதம் தங்கள் அனைவரையும் ஓரினமாகக் காட்டிவிடும் என்று நம்புகின்ற போக்கு வளர்ந்து வருகின்றது. இப்போக்கு வளருமானால், பிற நாடுகளில் நிலவும் நிலையைப் போன்று தாங்களும் பிற இந்துக்குழுக்களோடு சேர்க்கப்பட்டுத் தம்முடைய தனித்தன்மை அழிக்கப்பட்டு விடும் என்ற உண்மையைப் பலரும் புரிந்து கொள்ளவில்லை.

ஒரு அறச் செயலுக்காக நன்கொடை அளிக்கும் வேளையில் ஒரு பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை நிறுவுவதற்கு பணம் அளிப்பீர்களா அல்லது ஒரு கோவில் கட்டுவதற்கு அளிப்பீர்களா என்ற கேள்வியை ஒரு ஆய்வில் கேட்டபோது மூன்றில் ஒரு பங்கு தமிழர்கள் மட்டுமே தமிழ்த்துறை நிறுவுவதற்கு என்று கூறினர் (நீதிவாணன், 1996). தாய்மொழிப் பயன்பாட்டை பற்றி இத்தமிழர்கள் பெரிதும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

தாய்மொழிப் பயன்பாட்டை விரைவாகக் குறைத்து, காலப்போக்கில் அதனை இழந்துவி டுகின்ற இப்போக்கு, தமிழ்க் குடியேறிகளிடம் மட்டுமே காணப்படுகின்றதா அன்றி இது தமி ழனின் இயல்பான குணமா என்பதனை நாம் இன்னும் சிந்திக்கத் தொடங்கவில்லை. குடிபெ யர்ந்த தமிழர்களது இப்பண்பு கடல் கடந்ததும் திடீரென்று எங்கிருந்து வருகிறது என்பது புல னாகவில்லை. இது தமிழனது இயல்பான குண மாக இருக்குமானால் தமிழன் தனது மொழியின் மீது தீராத காதல் கொண்டவன் என்று நாம் நம் புவது ஒரு பெரும் மாயையாகத்தான் இருக்க முடியும். ஓர் இனக்குழு வின் தனித்தன்மையை விளக்கும் அடையாளச் சின்னமாகப் பெரிதும் மொழியே இருக்க முடியும் என்று சமூக மொழி யியலார் கருத்து தமிழரைப் பொறுத்த அளவில் மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**- ஜெ. நீதிவாணன்**

- ***கேரளத்தில் தமிழர்களும் தமிழ்மொழிப் பயன்பாடும்*** *என்னும் தலைப்பில் கள ஆய்வு செய்து அறிக்கை தயாரியுங்கள்.*

## மொழியும் பண்பாடும்

தனி மனிதனையும் சமுதாயத்தையும் இணைக்கின்ற பாலம் மொழி. சமுதாயத்தை விடுத்துத் தனி மனிதனுக்கு மொழி தேவை யில்லை. மொழி இல்லையேல் சமுதாயம் இல்லை. தனி மனிதனும் மொழியும் இணை கின்ற நிலையிலேயே சமுதாயம் உருவாகவும், மனிதன் பகுத்தறிவுள்ள உயிராகவும் வழி ஏற்ப டுகிறது. சமுதாய அமைப்பிற்கு மொழி தேவை யாக அமைவதோடன்றி மனிதனின் தனிப் பட்ட வளர்ச்சிக்கும் மொழியே ஆதாரமாகிறது. மனிதன் தன்னை வளர்ப்பதின் மூலம் சமுதா யத்தை உருவாக்குவதும், சமுதாயம் உருவாவ தின் மூலம் தான் வளருவதும் மொழி ஒன்றால் மட்டுமே நடைபெறமுடியும். மேலும், மொழி வாயிலாக மட்டுமே சமுதாயத்தின் ஓர் அங்க மாக மனிதன் இயங்க முடியும். இவ்வாறு ஒவ் வொரு தனி மனிதனும் சமுதாயத்தில் அங்க மாகி ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு ஒரு சமுதாயத்தை உருவாக்குகின்றனர். இச்சமுதா யத்தில் ஒருவருடைய எண்ணத்தின் வெளிப் பாட்டை இன்னொருவர் புரிந்துகொள்வதற் கேற்ற ஒரு வழிமுறை பொது அமைப்பில் வரையறுக்கப்பட்டுப் பின்பற்றப்படுகிறது. அதுவே மொழி. அம்மொழி வழங்குகின்ற சமு தாயத்தையே பேசும் சமுதாயம் (Speech Community) என்கிறோம்.

எட்வர்டு சாபிர் என்ற அறிஞர் மனிதனு டைய மொழி வளர்ச்சிக்கு அவன் வாழுகின்ற சமுதாயம் முக்கிய பொறுப்பாகிறது என்று நம் புகிறார். இவர், மனிதனுக்கு மொழி இயற்கை யாகவே கைவரப் பெறுகிறது என்ற கொள் கையை வன்மையாக எதிர்க்கிறார். மனிதன் இயற்கையாகவே வளர்ந்து இயற்கையாகவே பேசக் கற்றுக்கொள்வதில்லை. பிறக்கும்போதே மனிதன் சமுதாயத்தின் மடியில் பிறக்கிறான். அவனைப் பொறுத்த வரையில் அவனுடைய மொழி வளர்ச்சிக்கு அவன் தன்னைச் சமுதா யத்திடம் ஒப்படைத்து விடுகிறான். சமுதா யத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் மொழி யைக் கற்பதற்குரிய மாதிரியாகவே அவனுக்குத் தோற்றம் அளிக்கின்றனர். எனவே, மனிதனின் மொழி வளர்ச்சியில் சமுதாயத்தின் பங்கு மிக வும் குறிப்பிடத்தக்கது.

இயற்கையாகவே மனிதனின் உடல் உண்டாகும் வளர்ச்சிக்கும் மாறுதலுக்கும் சமு தாயம் காரணம் ஆவதில்லை. குழந்தை நடை பழகும்போது பெற்றோரின் துணையையோ அல்லது மற்றவர்களின் உதவியையோ நாடுவது இல்லை. பிறப்பிலேயே அமைந்துவிட்ட தசை யுறுப்புக்களின் அமைப்பில் குழந்தை இயல்பா கவே நடக்க ஆரம்பித்துவிடுகிறது. இம்முயற் சிக்குக் குழந்தையின் சமுதாயச் சூழ்நிலை எந் தவிதத்திலும் பொறுப்பு ஆகாது. நடை பழகு வது குழந்தைக்கு இயல்பாகவே கைவரப்பெறும் பழக்கம். ஆனால் மொழி அவ்வாறன்று. குழந் தையின் மொழி வளர்ச்சிக்கு அதனுடைய சூழ் நிலையே முக்கிய காரணம். அச்சூழ்நிலையி ருந்து ஒரு குழந்தையைப் பிரித்து வளர்த்து வந்தால் அக்குழந்தை நடக்கப் பழகிவிடலாம்; ஆனால், பேசிப் பழகத் தெரியாது என்கிறார் சாபிர்.

எவ்வாறு சமுதாயத்தை விடுத்து மொழிக் கு வாழ்வில்லையோ அதேமாதிரி பண்பாட்டை விடுத்தும் மொழிக்கு வாழ்வில்லை. மானிடவி

யலார் மனிதனை மொழி, இனம், பண்பாடு என்ற முப்பிரிவின் கீழ் ஆராய்ந்து வருகின்றனர். இவை ஒன்றோடொன்று இணைந்து நிற்பவை என்பதோடு ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று ஆதாரமாகிறது என்றும் கூறலாம். மனிதன் இல்லையேல் மொழி இல்லை; மொழி இல்லையேல் சமுதாயம் இல்லை; சமுதாயம் இல்லையேல் இனம் இல்லை; இனம் இல்லையேல் பண்பாடு இல்லை.

இனமும் மொழியும் ஒன்றையொன்று பிரித்து நோக்க முடியாதவை. இதன் பொருள், ஒரு குறிப்பிட்ட மொழி ஒரு குறிப்பிட்ட இனத்தோடு மட்டுமே இணைந்து நிற்க வேண்டும் என்ற நியதி உடையது என்பது அன்று. இனம், பண்பாடு ஆகியவற்றை விட்டு ஒருமொழி வெவ்வேறு இனங்களையும் பண்பாடுகளையும் ஆக்கிரமிக்கும் வல்லமை வாய்ந்தது. அது மட்டுமன்றி, பண்பாட்டில் சில மாற்றங்களையோ வளர்ச்சியையோ உண்டாக்கும் வமையும் பொருந்தியது. எடுத்துக்காட்டாக, கி.பி. 1600–இல் இந்திய மண்ணில் காலடிவைத்த ஆங்கிலேய இனமும் மொழியும் இன்று இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் வியாபித்துள்ளது. ஆங்கிலேய இனம் நிரந்தரமாக இந்தியாவில் நிலைபெற்று விடவில்லை. இருந்தாலும், ஆங்கிலேயருடைய மொழி இந்திய சமூகத்தின் மத்தியில் ஆங்கிலேய இனமும் இந்திய இனமும் கலந்த ஓர் இனத்தை உருவாக்கிவிட்டதை உணருகிறோம். ஆங்கிலேயர் இந்நாட்டை விட்டு அறுபது ஆண்டுகள் ஆயினும் நாற்பது ஆண்டுகளாக வேகமாக வளர்ந்து வருகின்ற ஆங்கில மொழியையும் பண்பாட்டையும் பார்க்கிறோம். பெருவாரியான தமிழர்களின் குடியேற்றத்தால் இலங்கையில் சிங்கள இனத்தவரும், பர்மாவில் பர்மிய இனத்தவரும், மலேயாவில் மலாய் இனத்தவரும் தத்தம் மொழிகளில் தமிழ் மொழியின் குறைந்தபட்ச ஊடுருவலையும், தமிழனுக்கே உரித்தான பண்பாட்டின் சில அம்சங்கள் தம் பண்பாட்டோடு கலந்துவிட்டமையையும் உணர்கின்றனர்.

இவ்வாறு இனம், பண்பாடு ஆகியவற்றிற்கு அப்பால் வளருகின்ற ஒருமொழி பேசுவாரின்றி இறந்துபோதலும் உண்டு. எடுத்துக்காட்டாக, சமஸ்கிருத மொழியைக் குறிப்பிடலாம். இந்திய நாட்டிலேயே ஒரு காலத்தில் பேசப்பட்டு வந்த இம்மொழியை இன்று பேசுவார் யாருமில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் இலத்தீன் மொழிக்கு முறையான இலக்கணம் தோன்றுவதற்கு சமஸ்கிருதம் அடிப்படையாக இருந்தது. ஆனால், இன்றோ இம்மொழி இலக்கண ஆசிரியர்களுக்கும் மொழியியல் அறிஞர்களுக்கும் இலக்கண அறிவின் புகடமாக மாத்திரமே இருக்கிறது. இவ்விலக்கண ஆசிரியர்களும் மொழியியல் அறிஞர்களும் சமஸ்கிருத மொழியைப் பேசுகின்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கிவிட முடியாது.

சமஸ்கிருத மொழியின் இவ்வழிவிற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்தால் இரண்டு முக்கிய காரணங்கள் தெளிவாகும். இலத்தீன் மொழி இலக்கண வளம் பெற்று வளர்ந்த காலத்தில் உயர்தனி மொழியாகக் கருதப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வரலாற்று ஒப்புமை மொழியியல் வளர்ந்தபோது மொழியை இலக்கண ரீதியாகக் கற்பிக்கும் முறை தோன்றியது. இலத்தீன்மொழி இலக்கண வளத்தோடு இருந்ததால் அம்மொழியைக் கிறித்தவக் கோயில்களில் கற்பித்து வந்தனர். நாளடைவில் இம்மொழி வேதமொழியாகக் கருதப்பட்டுக் கிறித்தவக் கோயில்களுக்கு மாத்திரமே உரிய மொழியாக ஆக்கப்பட்டது. இதனால், மொழியைப் பேசுவோர் அருகினர். காலப்போக்கில் இலத்தீன் மொழியைப் பேசுவோரே இல்லாமற் போயினர். இந்நிலையே சமஸ்கிருத மொழிக்கும் நம் நாட்டில் ஏற்பட்டது. வேதமொழியாக ஒரு குறிப்பிட்ட இனத்தவரால் மட்டும் சமஸ்கிருத வேதங்கள் பாராயணம் செய்யப்பட்டு வந்தன. சமுதாயத்தின் கீழ் நிலையில் உள்ளவர்களின் பார்வைக்குக் கூட எட்டாமல் மறைக்கப்பட்டும் வந்தது. வேற்று இனத்தவர்கள் வேதங்களைப் பார்ப்பதையே இவர்கள் பாவமாகக் கருதினர். இவ்வாறு பிறர் பார்வையிருந்து மறைக்கப்பட்டு வந்ததால் வேதங்களுக்கு 'மறை' என்ற பெயரும் தமிழில் வழங்கலாயிற்று.

இரண்டாவது முக்கிய காரணமாக இன்னொன்றைக் குறிப்பிடலாம். இலத்தீன் மொழி இலக்கணத்திலும், கிரேக்கமொழி இலக்கணத்திலும் பொதுவாகப் பயின்று வந்த சில சமஸ்கிருத சொற்களைக் காலப்போக்கில் இலக்கண ஆசிரியர்கள் அகற்ற ஆரம்பித்தனர். தமிழ் மொழியிலும் பயின்று வந்த சமஸ்கிருத சொற்கள் பல இவ்வாறு மெதுவாக அகற்றப்பட்டு

வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். சமுதாயத்திலும் அரசியல் சூழ்நிலையிலும் ஏற்படுகின்ற முக்கியமான மாற்றங்களும் வளர்ச்சியும் இதற்குக் காரணமாகின்றன. மொழியைப் பேசுவோரும் குறைந்து, பிறமொழிகளில் பெற்றிருந்த இடத்தையும் சமஸ்கிருதமொழி இன்று இழந்து வருகிறது. சமுதாயத்தை விடுத்து ஒருமொழி வாழமுடியாது என்பதையே சமஸ்கிருத மொழியின் இந்நிலை தெளிவாக்குகிறது.

மனிதர்களிடையே இருக்கின்ற பல்வேறு இனவேறுபாடுகள் மொழி வேறுபாடுகளுக்குப் பொறுப்பாகிறது என்று நாம் நம்புகிறோம். இந் நம்பிக்கைக்கு எந்தவித ஆதாரமுமில்லை. மொழி, இனவேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு மனித மனத்தில் வளர்கிறது. இவ்வளர்ச்சிக்கு



மனிதன் வாழுகின்ற சமுதாயமே முக்கிய பொறுப்பு ஏற்கிறது. ஏனெனில், கற்கப்படவிருக்கின்ற மொழியின் மாதிரியைக் குழந்தைக்கு அச்சமுதாயமே வழங்குகிறது. அதனால் எந்தக் குழந்தையும் எந்த மொழியையும் இன வேறுபாடுகளுக்கு அப்பால் கற்றுக்கொள்ள முடியும். கற்றுக்கொள்வதோடு அம்மொழியைத் தாய்மொழியாக உடையவர்களைப்போல் எழுதவும் பேசவும் முடியும்.

இனத்திற்கும் மொழிக்குமிடையே உள்ள நெருக்கத்தைவிடப் பண்பாட்டிற்கும் மொழிக்குமிடையே உள்ள நெருக்கம் மிகவும் கெட்டியானது. எடுத்துக்காட்டாக, ஒரு மொழியின் இலக்கியங்களை எடுத்துக்கொள்ளலாம். ஒரு மொழிக்கே உரித்தான இலக்கிய நடை, யாப்பு, அணி போன்றவற்றின் வளர்ச்சி அம்மொழியையும் அம்மொழிப் பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகிறது. இதற்குச் சமமான மொழிநடையையோ அல்லது யாப்பு, அணி போன்றவற்றையோ மற்றொரு மொழியில் காணமுடிவதில்லை. மேலும் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் ஒரு கருத்தை வழங்கும் சொல் இன்னொரு மொழியில் மொழியாக்கம் பெறும்போது பல பிரச்சினைகளை உருவாக்குவதை நாம் அறிவோம். அப்பண்பாட்டிற்குச் சமமான பண்பாடு மற்றொரு மொழியினத்தவரிடையே இல்லை என்பதுடன் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் வழங்கும் சொல்லும் மற்றொரு மொழியில் மொழியாக்கம் பெறுவது கடினமா

கிவிடுகிறது என்பதையே இது காட்டுகிறது.

மொழியைப் பண்பாட்டின் ஒரு கூறு என்றே கூறலாம். ஓர் இனத்தவரின் பண்பாட்டை அறிய உதவுகின்ற பல்வேறு கருவிகளுள் மொழியும் ஒன்று. ஓர் இனத்தவரின் பண்பாட்டின் எல்லையையும், அப்பண்பாடு மற்ற எல்லைகளுக்குப் பரவி இன்னொரு பண்பாட்டாலும், கடன் வாங்கப்பட்ட பண்பாட்டாலும் மாறும் முறைமையையும் மொழியை ஆராய்வதன் மூலம் தெரிந்து கொள்ளமுடியும். ஓர் ஆதிகால இனத்தவரின் கட்டட முறையையோ வாழ்க்கை முறையையோ தெரிந்துகொண்டு அவர் தம் பண்பாட்டை விளக்குவதைப்போல் மொழியாலும் பண்பாட்டைத் தெரிந்துகொள்ள முடியும்.

இவை எல்லாவற்றையும்விட ஓர் இனத்தவரின் பண்பாட்டை நேரடியாகப் புரிந்து கொள்ள மொழி மிகவும் உதவுகிறது. ஹரப்பா சிந்து சமவெளி அகழ்வாராய்ச்சிகள் இன்று பல உண்மைகளைத் தெளிவாக்கி இருக்கின்றன. மொழியைப் பற்றியும் சில சான்றுகள் சிந்து சமவெளி அகழ்வாராய்ச்சியில் கிடைத்தபோது அவர் தம் பண்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் பல ஆதாரங்கள் கிடைத்தன. சமீபகாலத்தில் நடத்தப்பட்ட மொழியாராய்ச்சி ஒன்று இராமாயணத்தில் பேசப்படுகிற இலங்கைமாநகரம் இன்றைய இலங்கை அன்று என்று தெரிவிக்கிறது. இவ்வாராய்ச்சியை மேற்கொண்ட பேராசிரியர் சங்காயா இராமாயணத்திலுள்ள சொற்கள் பிறந்த காலத்தையும் அவை வழங்கி வந்த இடங்களையும் ஆதாரமாகக்கொண்டு வேறு பல உண்மைகளையும் இவ்வாராய்ச்சி மூலம் தந்துள்ளார். இதைப்போல சங்க இலக்கியங்களில் பயின்றுவரும் சொற்களை அடிப்படையாகக் கொண்டு பண்டைக் காலத்தவரின் பண்பாட்டை அறியும் முறையில் எத்தனையோ தமிழ் நூல்கள் இன்று நம்மிடையே உள்ளன. மேற்கூறிய இத்தகைய ஆராய்ச்சிகளும் நூற்களும் மனிதப்பண்பாட்டை அறிந்துகொள்ள மொழியும் முக்கியமானதொரு கருவி என்பதைப் புலப்படுத்துகின்றன.

ஒரு மொழியின் பொருண்மைக் கூறை விளக்குவதற்கு அம்மொழி பேசுவோரின் பண்பாட்டைப் பற்றிய அறிவு முக்கியமானது என்று கருதுகிறார் கிரீன்பெர்க் என்ற மொழிநூலறிஞர். எத்தனையோ சொற்கள் பண்பாட்டை விளக்குவனவாகக் காணப்படுகின்றன. இதனாலேயே ஒரு மொழியின் சொல்லகராதியைத் தொகுக்கும்போது அகராதித் தொகுப்பாளரும் பண்பாட்டு மானிடவியலாரும் இணைந்து ஈடுபட வேண்டும் என்று அவர் வயுறுத்துகிறார்.

**சு. இராசாராம்**

- *'மொழி, பண்பாட்டையும் சமூகத்தையும் பிரதிபலிக்கும் கண்ணாடி' என்னும் கருத்தை இக்கட்டுரையின் அடிப்படையில் நிறுவுக.*
- *'மொழி கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு கருவி மட்டும்தானா?' விவாதிக்க.*

# அருஞ்சொற் பொருள்

### அ

அகல் - கலம்
அ க ட ம் - பரந்த உலகம்
அகவயம் - உள்நோக்கு
அங்கை - உள்ளங்கை
அடுக்கல் - மலைச்சாரல், மலைப்பக்கம்
அமர்க்களம் - போர்க்களம்
அமரத்தன்மை - அழியாதநிலை, தெய்வத்தன்மை
அமோகம் - மிகுதி
அரக்குதல் - அழுத்தித் தேய்த்தல்
அரண் - பாதுகாப்பான கோட்டை
அரியல் - கள்
அல்லல் - துன்பம்
அல்லவை - தீயவை
அலகை - பேய்
அவனி - உலகம்
அளம் - உப்புவயல்
அறை - பாத்தி

### ஆ

ஆசமனம் - தன்னை அடக்குதல்
ஆட்டையைப்போடுதல் - திருடுதல்
ஆண்டை - பண்ணையார், ஆளும் வர்க்கத்தினர்
ஆதுரம் - பேராசை
ஆயாசம் - மனத்தளர்ச்சி, கலைப்பு
ஆர் - அத்தி
ஆரூடம் - ஜோதிடம், ராசிபலன்
ஆ - பசு

### இ

இகல் - பகை
இடையறவு - இடைவிடாமல்
இணர் - பூங்கொத்து
இரவி - சூரியன்
இரும் - கருமை
இலச்சனை - சின்னம்
இழுக்கு - இழிவு
இறை - வீட்டிறப்பு, அரசன்
இன்னல் - துன்பம்
இன்னாத - துன்பமான

### உ

உண்டி - உணவு
உதிரம் - இரத்தம்
உபாசகர்கள் - துதிப்பவர்கள்
உவரி - கடல்
உழல்தல் - வருந்துதல்
உழை - பக்கம்
உளை - பிடரிமயிர்
உளைச்சல் - வருத்தம், நோவு

### ஊ

ஊத்தை - நாற்றம்
ஊர்மதி - ஊர்வாயாக
ஊறு - தீமை, வருத்தம்

### எ

எறி - வெட்டு

### ஏ

ஏகாதிபத்தியம் - சர்வாதிகாரம்
ஏ தி - அகதி, அனாதை

### ஒ

ஒரைச்சது - காரமாக இருந்தது
ஒறுப்பது - தண்டிப்பது

### ஓ

ஓங்கல் - மலை
ஓதி - மகளிர் கூந்தல்

### க

கங்கணம் - மேற்கையில் (தோளில்) அணியும் வீரவளை
கடுவன் - ஆண்குரங்கு
கணிசம் - அளவு
கதிரவன் .- சூரியன்
கபாலம் - மண்டை
கம்பலை - ஓசை
கயம் - நீர்நிலை
க ய ன ம் - மீன்வகை
கர்ண பரம்பரை - தொன்மையான பாரம்பரியம்
கரி - யானை
கலம்பகம் - கலவை
க - வறுமை
க ம ா - குதிரை
கவந்தம் - தலையில்லாத உடல்
கவின் - அழகு
கவுள் - கன்னம்
கழிபடர் - மிக்க துன்பம்
களத்தியர் - உழத்தியர்
களமர் - உழவர்

### கா

காங்கல - காணவில்லை
காசினி - உலகம்
காப்புரிமை - பதிவு உரிமை
காரணி - காரணக்கரு
காரைச்சுவர் - சுண்ணாம்புக் கலவையால் கட்டப்பட்ட சுவர்

கானம் - காடு
கானல் - மணல்பகுதி, கடற்கரைச் சோலை

**கி**

கிரயம் - விலை
கிளை - சுற்றம்

**கு**

குஞ்சியது - குன்றியது
குட்டம் - நீர்நிலை
குடி - ஊர்
குரம்பை - சிறு குடில்
குரல் - கதிர்
குருகு - கொக்கு
குறுக்கு - முதுகு

**கே**

கேவல் - விம்மிஅழுதல்

**கொ**

கொடிச்சி - குறிஞ்சி நிலப்பெண்
கொடுங்கால் - வளைந்த கால்
கொண்டல் - மேகம்
கொழு - கலப்பையின் நுனிப்பகுதி
கொழுநர் - கணவர்

**கோ**

கோடு - கொம்பு
கோலோச்சுதல் - ஆட்சிபுரிதல்

**ச**

சண்டிக்கருக்கா - மணியில்லாத நெல், பதர்
சம்மன் - உத்தரவு
சர்வே - அளவீடு
சமம் - போர்
சமர் - போர்
சருகு - உலர்ந்த இலை

**சா**

சாணி கருக்கா - சிந்திய நெல்
சாத்தியம் - இயலும் தன்மை
சாந்துணையும் - சாகும்வரையும்
ச ா - நெல்
சாவதானமாக - நிதானமாக
சாற்றுதல் - சொல்லுதல்

**சி**

சிட்டா வட்டி - அதிக வட்டி (கந்து வட்டி)
சித்தாந்தங்கள் - கொள்கைகள்
சித்தாள் - கையாள், கூயாள்
சிரத்தையாக - கவனமாக, கருத்துடன்
சிரேஷ்டர் - மேலோர், மேன்மையுடையவர்
சிலை - வில்
சினை - கிளை

**சீ**

சீமை - வெளிநாடு

**சு**

சுங்கம் - வரி
சுண்டச்சிவப்பு - சுண்டினால் சிவக்கும்படியான வளர்ச்சியைக் குறிக்கும்
சும்மை - ஆரவாரம், மோசடி
சுயபச்சாதாபம் - சுய இரக்கம், தன்னிரக்கம்
சுவீகரித்தல் - ஏற்றுக்கொள்ளுதல்

**சூ**

சூர் - அச்சம், வீரம்

**செ**

செங்களம் - சிவந்த போர்க்களம்
செரு - போர்
செருத்தல் - பால்மடி
செற்றிய - செறிந்த

**சொ**

சொக்குபவர் - மயக்குபவர்
சொக்கப்பனை - எரிக்க அமைக்கப்படும் பனை ஓலைகளைக் கொண்ட அமைப்பு.
சொத்தை - வீண்
சொகுசு - ஆடம்பரம்

**சோ**

சோழி - சிறு சங்கு

**ஞெ**

ஞெமிடி - கசக்கி

**த**

தகை - குணம், தகுதி, அன்பு
தடக்கை - பெரிய கை
தடாரி - உடுக்கை
தடாலடியாக - உடனடியாக இயல்புக்கு மாறான பேச்சும் செயல்பாடும்
தண்டலை - சோலை
தண்ணுமை - முழவு, மத்தளம்
தரிசு - வெற்று நிலம்
தருக்கர் - திமிர் பிடித்தவர், செருக்கு மிகுந்தவர்

**தா**

தார் - மாலை
தானை - படை

### தி

திகில் - திடுக்கிடச்செய்யும்; அச்சம்
திடல் - மைதானம்
திரங்கல் - வாடுதல்
திரேகம் - உடல்

### தீ

தீனமாய் - மெதாய்

### து

துஞ்சுதல் - தூங்குதல்
துப்பு - வமை; உணவு
துமித்து - வெட்டி, அறுத்து
துரங்கம் - குதிரை
துவம்சம் - நாசம்
துளங்காமை - வருந்தாமல்
துன்றிய - நிறைய

### தூ

தூங்கும் - தொங்கும்
தூர்த்துவிட்ட - நிரப்பப்பட்ட

### தெ

தெரியல் - பூமாலை
தெரிவு - தேர்வு

### தொ

தொடை - தொடுத்தல்
தொரவு - துரவு
தொழுதி - கூட்டம்
தொன்மை - பழைமை

### ந

நள் - நடு, இரவு

### நி

நிணம் - தசை, கொழுப்பு
நிதர்சனமான - நேரடியான
நிருதர் - அரக்கர்
நிரை - வரிசை
நிலப்பிரபுத்துவம் - ஜமீந்தார் முறை

### நீ

நீரியல் அறிஞர்- நீரை ஆராயும் ஆராய்ச்சியாளர்

### நு

நுனை - நுனி

### நெ

நெருநல் - நேற்று
நெற்குதிர் - நெல் சேமிக்கும் பெட்டி, பத்தாயம்

### நே

நேயம் - நேசம், அன்பு

### ப

பகழி - அம்பு
பங்கம் - பழுது, குற்றம்
பசலை - இரத்தசோகை, பொன்னிறம்
படப்பை - கொல்லை
படிமம் - பாவை
பணை - மூங்கில்
பதலை - ஒருவகை பறை
பயிரவி - பத்திரகாளி
பரி - குதிரை, பரிமாண வளர்ச்சி
பரிச்சயம் - பழக்கம், அறிமுகம்
பழனம் - வயல்
பழுக்கிய - பழுத்த
பறி - மீன் பிடிக்கும் கருவி
பனைவெண்தோடு - பனை ஓலை

### பா

பாசடை - பசிய இலை
பாசனம் - நீர் பாய்ச்சும் முறை
பாண்டம் - பாத்திரம்
பாணி - முறை
பார் - உலகு
பார்ப்பு - பறவைக் குஞ்சு
பால்ய மணம் - குழந்தைத் திருமணம்

### பி

பிட்டி எலும்பு - இடுப்பு எலும்பு
பிடரி - கழுத்தின் பின்புறம்
பிராது - புகார்
பிராந்தியம் - பிரதேசம்
பிராஸீனிய - தொன்மையான

### பீ

பீள் - இளங்கதிர்

### பு

புணரி - கடல், கலந்து
புரவி - குதிரை
புராதனம் - பழைமை
புலவு - புலால், மாமிசம்
புழல் - உள்துளையுடைய
புறவு - காடு, முல்லை நிலம்
புவனம் - உலகம்

### பூ

பூஞ்சக்கருக்கா - நெல்பதர்
பூஞ்சனம் - பூஞ்சை
பூஞ்சை - மெந்த, நோஞ்சான்

### பெ

பெயல் - மழை

### பே

பேரிகை - போர்ப்பறை

### பை

பைங்கூழ் - இளம்பயிர்
பைது - ஈரம்

### பொ

பொக்கிஷம் - கருவூலம்
பொருமல் - குமுறல், திக்குமுக்காடல்
பொருவோன் - போர் செய்பவன்

### போ

போகம் - விளைச்சல்

### ம

மஞ்ஞை - மயில்
மடை - நீர்பாயும் வழி
மண்டலம் - நாற்பது நாட்கள்
மணை - சிறு பீடம்
மந்தி - பெண் குரங்கு
மரப்பத்தாயம் - நெல் சேமிக்கும் மரப்பெட்டி
மருங்கு - பக்கம்
மருட்சி - அச்சம், அதிர்ச்சி கலந்த நிலை
மல்லல் - வளப்பம்
மலைதல் - சூடுதல்
மள்ளர் - வீரர்

### மா

மாக்கள் - மக்கள்
மாய்மாலம் - வித்தை, பாசாங்கு
மார்வாரிகள் - இந்தியாவிலுள்ள ஓர் இனத்தவர். (மராத்திய மாநிலம்)
மானாவாரிப்பயிர் - முறையற்ற பயிர்; மழையால் விளையும் பயிர்

### மி

மிடைந்து - கட்டப்பட்ட
மின் - மின்னல்
மின்தாள் - இணையத்தில் வெளிவரும் நாளிதழ்

### மு

முதிர்வு - மூப்பு
முந்நீர் - கடல்
முரண் - மாறுபாடு
முன்றில் - முற்றம்
முனைய - முயல

### மூ

மூடாக்கு முறை - தந்திர முறை
மூதின் மகள் - மறக்குடி மகள்

### மெ

மெய்ம உவகை - உடம்பு பூரித்ததற்கு காரணமான மகிழ்ச்சி

### மே

மேதினி - உலகம்

### வ

வசக்கி - வசப்படுத்தி
வடிகால் - கால்வாய்
வண்ணம் - நிறம், அழகு, வடிவு
வயவர் - வீரர்
வயிர் - மூங்கில்
வயிரம் - வீரம்
வரண்டி - சுரண்டி
வலைஞர் - மீனவர்
வன்மம் - வன்முறை,

### வா

வாக்கப்படு - வாழ்க்கைப்படு
வாசி - குதிரை
வாய்தா - வழக்கைத் தள்ளிவைத்தல்
வாளி - அம்பு

### வி

விடை - எருது
விண்டுரைத்தல் - விளக்கியுரைத்தல்
வியாக்கியானம் - விளக்கம்
விலங்கி - மாறுபட்டு
விழுமியம் - நற்பண்பு

### வெ

வெகுஜனம் - பொதுமக்கள்
வெரீஇய - அஞ்சிய
வெளிது - வெண்மையான ஆடை

### வே

வேழம் - யானை
வேறல் - வெற்றி கொள்ளுதல்

### வை

வைகலும் - நாள்தோறும்
வைத்தூறு - வைக்கோற் போர்

### யா

யாமம் - நடு இரவு

### ஜோ

ஜோப் - சட்டைப்பை